

# மகாமகம் 2016

## சிறப்பு மலர்



T.22867




திருவையாறு ஐயாறப்பர் கோயில் நுழைவு வாயில்

# மகாமகம் – 2016

## மலர்க்குழு

டாக்டர் **என். சுப்பையன்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர், தஞ்சாவூர்

திரு. இரா. ஜெய்னுலாப்தீன்,
மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும்
நிருவாக அலுவலர் (பொ.) தஞ்சாவூர்

திரு. கி. கணேசன்,
மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்
(கணக்குகள்) தஞ்சாவூர்

திரு. ஆர். ராஜசேகர், சுற்றுலா அலுவலர், தஞ்சாவூர்

திரு. எஸ். ரவிச்சந்திரன், வட்டாட்சியர், சத்திரம், தஞ்சாவூர்

திரு. தங்கதுரை, காப்பாட்சியர், தொல்லியல்துறை, தஞ்சாவூர்

திரு. எஸ். சிவக்குமார், காப்பாட்சியர், கலைக்கூடம், தஞ்சாவூர்

திரு. சிவாஜி ராஜா து. போஸ்லே, ஆயுள் உறுப்பினர்
சரசுவதி மகால் நூலக ஆளுமைக்குழு, தஞ்சாவூர்

திரு. பாபாஜி ராஜா போன்ஸ்லே, அறங்காவலர்,
அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்

## மலர் பதிப்புக்குழு

முனைவர் எஸ். சுதர்ஷன், நூலகர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

திரு. மணி. மாறன், தமிழ்ப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

முனைவர் ஆ. வீரராகவன், சமஸ்கிருதப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

திரு. டி. ரவி, தெலுங்குப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

திருமதி. எல். அனிதா, சமஸ்கிருதப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | மகாமகம் 2016 |
| பதிப்பாசிரியர் | : | மலர்க்குழு |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 571 |
| ISBN | : | 978-93-85343-09-4 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2016 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 266 |
| படிகள் | : | 1000 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு<br>மற்றும் ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | லேமினேசன் அட்டை |
| பொருள் | : | கட்டுரைகள் |
| விலை | : | ரூ. 300/- |


இம்மலரில் வெளிவந்துள்ள கட்டுரைகளின் கருத்துக்களுக்கு கட்டுரையாளர்களே பொறுப்பாவார்கள், வெளியீட்டாளரோ, மலர்க்குழுவினரோ பொறுப்பாகமாட்டார்கள்.

# பதிப்புரை

**டாக்டர் என். சுப்பையன்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

பழம்பெரும் பாரதத்தின் பண்பாட்டினையும், பாரம்பரியத்தையும் பறைசாற்றும் வகையில் தரணி போற்றும் தஞ்சையில் திரும்பும் கோணமெல்லாம் கோயில்களின் கும்பங்கள் தெரியும் தனிச்சிறப்பு கொண்ட கும்பகோணத்தில் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் மகத்தானத் திருவிழாவான மகாமகம்-2016ஆம் ஆண்டில் நிகழவுள்ளது.

இந்துக்களின் புனித நீராடல் நதிகளில் நடப்பதற்கு மாற்றாகக் குளத்தில் நீராடுவது என்ற நிகழ்வு நவக்கிரகத் தலங்கள் அனைத்தும் கொண்ட கோயில் நகரமாம் திருக்குடந்தையில் மட்டுமே நடக்கும் அரியதொரு நிகழ்வாகும். கங்கை, யமுனை உள்ளிட்ட புண்ணிய நதிகள் தங்களின் பாவங்களைப் போக்குவதற்குக் கிடைக்கப்பெற்ற வரமே மகாமகக் குளமாகும்.

**இன்றைய நிகழ்வு நாளைய வரலாறு** என்பது உலகறிந்ததே. அவ்வகை நிகழ்வுகளில் அரிதான நிகழ்வாக 2016ஆம் ஆண்டில் கொண்டாடப்படும் மகாமகத்திருவிழா அதன் புராண வரலாறு, குடந்தையின் வரலாறு குறித்த செய்திகளை மலராக தொகுத்து வெளியிடுவது என்பது தலையாயக் கடமையாகும். இவ்வகையில் இச்சிறப்பு மலர் உருவாக்கத்திற்குத் தங்களின் படைப்புகளான கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள், வரலாற்றுக் குறிப்புரைகள், மகாமக நிகழ்வுகள், நெஞ்சில் நிறைந்த நினைவுகள் மற்றும் அரிய தகவல்கள் பலவற்றை அள்ளித்தந்த அறிஞர்களுக்கும், மாணவச்செல்வங்களுக்கும் மனமிகு வாழ்த்துக்களையும் மேலும் இத்திருவிழாவிற்கு அரும்பணியாற்றிய அனைத்து பணியாளர்களுக்கும், காவல்துறையினருக்கும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும், மகாமகம் மலர்க்குழுவினருக்கும் மற்றும் மலர்ப் பதிப்புக் குழுவினருக்கும், மலர் வெளியிட நிதி நல்கிய அரசுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மலரும் மகாமகமும் சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# உள்ளுறை


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | மகாமகம் - மகாகவி சுப்ரமணிய பாரதியார் | 1 |
| 2. | குடந்தைக் கும்பேசுரர்-தொ.மு.பாஸ்கரத்தொண்டைமான் | 5 |
| 3. | மகாமக அந்தாதிக் கும்மி-இரா. ஜெய்னுலாப்தீன் | 11 |
| 4. | தாராசுரத்து ஐராவதேசுவரர்-கி. கணேசன் | 21 |
| 5. | பாரததேசம் போற்றும் மகாமகம் ஒரு தேசியத் திருவிழா-எஸ்.சுதர்ஷன் | 27 |
| 6. | நற்சூதராம் மூர்க்கரும் குடந்தைப் பதியும்-மணி. மாறன் | 31 |
| 7. | குடந்தையில் கோயில் கொண்ட குல குரு-ஆ. வீரராகவன் | 37 |
| 8. | வரலாற்று நோக்கில் மகாமகத் திருவிழா-டி. ரவி | 39 |
| 9. | கும்பகோண கோயில்களின் புராணம்-எல். அனிதா | 43 |
| 10. | Philosophy, Religion and Saiva Siddhanta-T.N.Ramachandran | 47 |
| 11. | மகாமகத் தீர்த்த யாத்திரை-புலவர் வே. மகாதேவன் | 53 |
| 12. | குடந்தைக் கீழ்க்கோட்டத்துக் கூத்தனார்-குடவாயில் பாலசுப்ரமணியன் | 57 |
| 13. | 18ஆம் நூற்றாண்டு ஆவணச்செய்திகளில் மகாமகத் திருவிழாவும்-<br>மராட்டிய மன்னர்களின் பங்களிப்பும்- கலாஸ்ரீதர் | 63 |
| 14. | சங்க இலக்கியம், திருமுறை உணர்த்தும் குடந்தை-மோ.கோ.கோவைமணி | 67 |
| 15. | இசைக்கலை வளர்ச்சியில் திருக்குடந்தை- சண்முக. செல்வகணபதி | 75 |
| 16. | சிவகுருநாதன் செந்தமிழ் நூல்நிலையம் - பா. ஜம்புலிங்கம் | 83 |
| 17. | குடமூக்கில் பழையாறை- பு. இந்திராகாந்தி | 89 |
| 18. | தஞ்சைக் கலைக்கூடம்-எஸ். சிவக்குமார் | 93 |
| 19. | தஞ்சை மாவட்டத்தில் வைணவத் திருத்தலங்கள்-ஆர்.இராஜசேகரன் | 97 |
| 20. | குவலயம் போற்றும் குடந்தை மாநகர்-பொ. திராவிடமணி | 101 |
| 21. | உருத்திராக்கம்-புலவர் வீ. சொக்கலிங்கம் | 105 |
| 22. | நாட்டியக்கலை வளர்ச்சியில் குடந்தை- செ. கற்பகம் | 109 |
| 23. | ஒட்டக்கூத்தரும் குடந்தையும்-கோ. ஜெயாகணேசன் | 117 |
| 24. | குடந்தையின் கருவூலங்கள்-மரு. ச.அரங்கராசன் | 125 |
| 25. | சிவாலய அமைப்பும், பிரதிஷ்டா மூர்த்திகளும்-எஸ். நாராயணசாமி | 131 |
| 26. | குடந்தை திருச்சேறையில் சாளுக்கிய சோழன் விக்கிரமனின்<br>கல்வெட்டுக்கள் ஒரு பார்வை-கோ. தில்லை கோவிந்தராஜன் | 135 |
| 27. | மகாமகத்தில் தமிழ்த்தாத்தா-இரா. சுப்பராயலு | 141 |
| 28. | குடந்தை சாரங்கபாணி திருக்கோயிலும் ஆழ்வார்களும்-அ. தட்சிணாமூர்த்தி | 145 |
| 29. | சிவரகசியத்தில் குடந்தை-ப. வெ. நாகராஜன் | 151 |
| 30. | எல்லை இல்லாத ஈசன் மகாமகத்து நேசன்-கவிஞர் வீ.கே. கஸ்தூரிநாதன் | 155 |
| 31. | தண்ணீர் தவம் - இராகவ்-மகேஷ் | 159 |
| 32 | மாணவர்களின் வரைகோட்டு ஓவியங்கள் | 161 |
| 33. | சேஷாசல நாயுடு யாத்த மகாமக அலங்காரம்-பி. விஜயலட்சுமி | 165 |
| 34. | கும்பகோணம் மகாமகத்தில் வடமொழி நாடகங்கள்-என்.ஸ்ரீனிவாசன் | 171 |
| 35. | பழையாறைப் பெருநகர்-ஜி. சிவகுரு | 173 |
| 36. | கோயில் நகரம் குடந்தை-எஸ். தேவதாஸ் | 177 |
| 37. | அறவழி காட்டும் திருமடங்கள்-வி. பர்வதம் | 181 |
| 38. | மகாமகத் தொடக்கமும் அதன் சிறப்பும்-மூ. நேரு | 189 |
| 39. | மகாமகக் குளத்தை நிர்மாணித்த கோவிந்த தீட்சிதர்-பி. ரவிதீட்சிதர் | 193 |
| 40. | திவ்விய பிரபந்தப் பாசுரங்களில் குடந்தை-பா. நடராஜன் | 195 |
| 41. | தஞ்சை மாவட்ட தேவாரத் தலங்கள்-க.மனோகரன் | 199 |
| 42. | கும்பகோண மகாமகத் திருவிழாவில் காணும் ஆன்ம நேய ஒருமைப்பாடு-சம்பத் நிரங்காரி | 205 |
| 43. | கும்பேசர் குறவஞ்சி நாடகம் ஒரு பார்வை-கு. டேனியல் | 209 |
| 44. | தஞ்சை மாவட்ட ஆட்சியரலுவலக அருங்காட்சியகம்-ம. சங்கரநாராயணன் | 213 |
| 45. | மகிமை மிக்க மகாமகம்-சி. பாபாஜிராஜா பான்ஸ்லே | 217 |
| 46. | இந்தியாவும் புனித நீராடலும்- சிவாஜிராஜா து. போஸலே | 221 |
| 47. | 11 ஆண்டுகளில் மகாமகம்-மலர்க்குழு | 225 |
| 48. | தீர்த்தங்களும் மண்டபங்களும்-மலர்க்குழு | 227 |
| 49. | மகாமகம் 2016-திட்டப்பணிகள் - டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., | 231 |
| 50. | சரசுவதி மகால் நூலகத்தின் வளர்ச்சியும், மகாமகப் பங்களிப்பும்-மலர்க்குழு | 249 |

# இலச்சினை

பன்னிரெண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் புனித நீராடல் விழாவான மகாமகப் பெருவிழா 2016ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ம் தேதி நடைபெறுகின்றது. இம்மகாமக விழாவி முக்கிய நிகழ்வுகளை வெளிப்படுத்தும் விதமாக, இலச்சினை (LOGO) உருவாக்கப்பட்டுள்ளது.

நடைபெறுகின்ற மகாமகத் திருவிழாவிற்கான பொது இலச்சினையாக கோபுரதரிசனம் கோடிப்புண்ணியம் என்ற சொல்லாட்சியை வெளிப்படுத்தும் விதத்திலும், குடந்தை நகரில் திரும்பும் திசையெலாம் கோபுரம் காட்சியளிப்பதை குறிக்கும் விதத்திலும், கும்பேசர் கோயிலின் வானுயர்ந்த கோபுரத்தின் தோற்றத்தையும் அதன் எதிரில் புனித நீராடலுக்குரிய தீர்த்தக் குளத்தின் அழகு மிளிரும் தோற்றத்தினையும் குளத்திற்கும் கோபுரத்திற்கும் மத்தியில் சக்தியும் சிவனுமாக விளங்கும் பிறையைத் தலையில் சூடி கழுத்தில் பாம்பு நடனமிட இடக்கையில் சங்கு ஊதும் தோற்றத்துடனும் வலக்கையில் சூலம் ஏந்திய நிலையிலும் காணபடும் சிவபெருமானும், அழகே உருவான அன்னை பார்வதி தன் கரத்தில் மலர் ஏந்தியவளாக அமைந்த ஓவியம் ஒளிவட்டத்திற்குள் அமைக்கப்பட்டு உள்ளது.

வட்டத்திற்குக் கீழே நீரலைகளுக்கு இடையே மிக அழகாக தமிழிலும், ஆங்கிலத்திலும் மகாமகம் என்ற சொல் அமைக்கப்பட்டு இருமொழிகளிலும் இரண்டு இலச்சினை உருவாக்கப்பெற்றுள்ளது. தமிழ் இலச்சினையில் **மனிதம் வளர புனிதம் சேர்ப்போம்** என்ற சொல்லாட்சியும் ஆங்கில மொழியில் அமைந்த இலச்சினையில் **Gain virtues to hail humanity** என்ற சொற்றொடரும் சிறப்பு கருதி சேர்க்கப்பட்டுள்ளது. இலச்சினையில் மகாமகம் என்று குறிப்பிடும் அந்த எழுத்தின் உள்ளே சைவத்தையும், வைணவத்தையும் குறிக்கும் விதமாக திருநீறும், திருமண் காப்பும் தனித்து தெரியும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்து மதத்தின் இருபெரும் பிரிவுகளான சைவமும், வைணவமும் தழைத்தோங்கிய திருக்குடந்தை இது என்பதை சொல்லாமல் சொல்லுகிறது இந்த இலச்சினை. இச்சொல்லுக்கு கீழாக மகாமகப் பெருவிழா நடைபெறும் மாதத்தையும், தேதியையும், ஆண்டையும் குறிப்பிடும் விதமாக 2016 பிப்ரவரி 13-22 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



மகாகவி பாரதி தன் கைப்பட எழுதியது – நகல்

# மகாமகம்

**மகாகவி சுப்ரமணிய பாரதியார்**

**24 பிப்ரவரி 1921 ரௌத்திரி மாசி 13**

இந்திரனை தேவதேவன் என்பர். மற்ற மனிதருக்கு வானவர் எப்படியோ, அப்படி வானவர்க்கவன் என்பது குறிப்பு. வடமொழியில் வால்மீகி, காளிதாஸர்களையும், தமிழில் கம்பனையும் புகழேந்தியையும், இங்கிலீஷ் ஷெல்லியையும், "கவிகளின் கவி" என்று சிறப்பித்துச் சொல்லுகிறார்கள். அதாவது, மற்ற மனிதருக்குக் கவிகளால் எத்தனை புதிய சுவை கிடைக்கிறதோ, அத்தனை புதிய சுவை கவிஞருக்கு அவ்வால்மீகி முதலியவர்களிடம் கிடைக்கிறதென்பது குறிப்பு.

அதுபோல கும்பகோணத்திலுள்ள அமிர்த வாவிகள் என்று சொல்லப்பட்ட பொற்றாமரைக் குளம், மஹாமகக்குளம், இவ்விரண்டும் புண்ய தீர்த்தங்களுக்குப் புண்யதீர்த்தமென்று புராணம் சொல்லுகிறது. அதெப்படியெனில் முற்காலத்தில் ஒன்பது தீர்த்த தேவதைகளும் ஈசனிடத்தில் சென்று, "கடவுளே உலகத்திலுள்ள பாவிகளெல்லாரும் எங்களிடம் வந்து மூழ்கித் தங்கள் பாவங்களையெல்லாம் எங்களுக்குக் கரைத்து விட்டுவிட்டுப் புண்யாத்மாக்களாகிச் செல்லுகின்றனர். நாங்கள் சம்பாதிக்கும் இந்தப் பாவங்களுக்கெல்லாம் விமோசனம் அருள் புரிய வேண்டும்" என்று ப்ரார்த்தனை செய்தனர். அவர்களிடம் கருணை பாவித்து எம்பெருமான், "புண்ய தீர்த்தங்களே! பாவங்களாலே தீண்டப்படாத அமிர்த வாவிகள் இரண்டு நான் கும்பகோணத்தில் சமைத்திருக்கிறேன். அவற்றில் சென்று ஸ்நானம் புரிந்தால் உங்களுடைய பாவங்கள் விலகிவிடும்" என்று கட்டளை புரிந்தார்.



மகாகவி பாரதியார் தன் குடும்பத்தினருடன்

மகாகவி சுப்ரமணிய பாரதியார் (1921-ஆம் ஆண்டு மகாமகத்தின் போது எழுதிய கட்டுரை)

பன்னிரண்டு வருஷங்களுக்கொருமுறை இங்கு கங்கை முதலிய தீர்த்த தேவதைகள் வந்து ஸ்நானம் புரியும் சமயமாகிய மஹாமக புண்ய காலம் நேற்று (செப்.22) செவ்வாய்க்கிழமையன்று கும்பகோணத்தில் கொண்டாடப்பட்டது. லக்ஷக்கணக்கான ஹிந்துக்கள் நேற்று அதில் ஸ்நானம் செய்திருப்பார்கள்.

ஆனால் இத்தனை பேர்களும் ஸர்வ பாபரஹிதர்களாய்ப் பரம சுத்தத் தன்மையெய்திவிடுவார்களோ என்று சில மதப் பற்றில்லாதார் ஆக்ஷேபிக்கலாம். தீர்த்த ஸ்தலங்கள், புண்ய க்ஷேத்ரங்கள், எல்லா மதஸ்த்தர்களுக்கும் பொதுவாக அமைந்திருக்கின்றன. யூதர்கள் யெருஸலேமைப் புண்ய க்ஷேத்ரமென்கிறார்கள். கிருஸ்தவர்கள் யெருஸலேம், நஜரேத், ரோமாபுரி முதலிய பல பல புண்ய க்ஷேத்ரங்களைக் கொண்டாடுகிறார்கள். முஸ்லீம்கள் மக்கம், மதீனம், யெருஸலேம் முதலிய கணக்கற்ற க்ஷேத்ரங்களைக் கொண்டாடுகிறார்கள். பௌத்தர்கள் கயை முதலிய ஆயிரக்கணக்கான புண்ய க்ஷேத்ரங்களைப் போற்றி வருகிறார்கள்.

ஆனால், மதப்பற்றுடையோர், அஃதற்றோர் என்னும் இரு திறத்தாரும் உணர்ந்து கொள்ளும்படி, இதுபோன்ற தீர்த்த யாத்திரைகளின் தத்துவத்தை இங்கு விளக்குவோம். இவற்றில் பாவமழிந்து புண்யத் தன்மை பெற வேண்டுமானால், உண்மையான நம்பிக்கையிருக்க வேண்டுமென்று நம்முடைய புராதன ஹிந்து சாஸ்த்ரங்கள் மிகத் தெளிவாக வற்புறுத்தியிருக்கின்றன. உண்மையான மனக்கோளின்றி கங்கையில் முழுகினாலும், மஹாமகத்தில் மூழ்கினாலும், பாபகர்மந்தொலையாதென்று சாஸ்த்ரங்கள் தெளிவுபடத் தெரிவிக்கின்றன. இனிமேல் நாம் பாவம் பண்ணுவதில்லை யென்ற மனோ நிச்சயம் வேண்டும்.

**தீர்த்த யாத்திரையின் அர்த்தமும் பயனும்**

இந்தத் தீர்மானந்தான் பரிசுத்தத் தன்மை கொடுக்கிறது. ஒருவன் இந்த க்ஷணமுதல் பாவம் செய்வதில்லை யென்று மனவுறுதி செய்து கொள்ளுதலாகிய அக்நி மயமான செய்கையாலேயே அவன் அதுவரை செய்த பாவமெல்லாம் எரித்துவிடப்படுகிறது. "ஞானாக்னிஸ் ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதேர்ஜுன" என்று பகவத்கீதையில் கடவுள் சொல்லியிருக்கிறார். பாவத்தை இனிச் செய்யவில்லையென்ற தீர்மானம் உண்மையாக இருக்கவேண்டும். ஞானமே அவ்வளவுதான். அதைக் காட்டிலும் பெரிய ஞானம் கிடையாது. சிலர் தவத்தால் ஞானமெய்த நாடுகிறார்கள். சிலர்

தானத்தால், சிலர் ஆராய்ச்சியால், சிலர் தியானத்தால், சிலர் பூஜையால் ஞானமெய்த முயலுகிறார்கள். ஆனால் எல்லா வழிகளும் உண்மையான வழிகளே. இவையெல்லாம் ஞானத்தைத் தரும். ஆனால் எந்த வழியாலே தரும்? பாவத்தைத் தீர்த்துவிடுதலாகிய வழியிலே தரும். அவற்றால் பாவம் நீங்கும். அதனால் மோக்ஷம் அல்லது அறிவு மயக்கம் தெளியும். அதிலிருந்து ஞானமுண்டாகும். ஞானமாவது எல்லாம் கடவுள் மயமென்ற அனுபவம். பாவமாவது தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பம் விளைவித்தல். இங்ஙனமே, புண்யமாவது தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பக் கலப்பில்லாத சுத்தமான இன்பம் விளைவித்தற்குரிய செய்கையென்பது சாஸ்த்ர கோடிகளின் பரம ஸித்தாந்தம். எல்லாம் ஆத்மா எல்லாம் கடவுள் ஆதலால், எல்லாம் தான் என்ற ஞானத்தால் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் குணம் நீங்கிவிடும். அதாவது பாவம் போய்விடும். நியாயம் புண்யம், அநியாயம் பாவம், ஹிதம் புண்யம், அஹிதம் பாவம், ஸத்யம் புண்யம், அஸத்யம் பாவம், திருப்தி புண்யம், துக்கம் பாவம்.மரணமாவது பாவத்தின் கூலியென்று கிறிஸ்தவ வேதம் சொல்லுகிறது.

“இங்ஙனம் பாவத்தைத் துறந்துவிட விரும்புவோனுக்கு மனோ நிச்சயமும், ஞான உதயமும் கதியாயின், பணச்செலவு செய்து ரயிலேறிக் கும்பகோணத்துக்கும், காசிக்கும், ராமேசுவரத்திற்கும் ஏன் போக வேண்டும்?'' என்று சிலர் வினவக் கூடும்.

மன மாறுதல்கள் சாசுவதமான இடத்தே விரதங்கள் என்று கூறப்படும். பெரிய சாசுவதமான ஸங்கல்பங்கள் விரதங்களௌனப்படும். இந்த விரதங்கள் மனிதருடைய நினைப்பில் நன்றாக அழுந்தும் பொருட்டு ஆன்றோர் உலகமெங்கணும் இவற்றுக்குச் சில சடங்குகள் வகுத்திருக்கிறார்கள். கல்வி தொடங்கப் போகிறபோது ஒரு சடங்கு நடத்தப்படுகிறது. விவாகம் பண்ணும்போது மிகவும் கோலாகலமான கிரியைகள் நடக்கின்றன. புதிய வீட்டில் குடிபுகும்போது ஒரு சடங்கு நடத்துகிறோம். இவற்றின் நோக்கம், நாம் ஏதேனும் அமங்களத்தை நீக்கி மங்களத்தை சாசுவதமாக உடைமையாகச் செய்து கொள்ள வேண்டுமென்பதேயாம். நான் மேலே கூறியபடி மரணம் பாவத்தின் கூலி என்று கிறிஸ்தவவேதம் சொல்லுவதைக் கருதுமிடத்தே மங்களமனைத்திலும் அமங்களமானது பாவமென்று விளங்குகிறது. எனவே மங்களங்களிற் சிறந்தது புண்யமென்பதும் வெளிப்படையாம்.இப்படிப்பட்ட பாவத்தைக் களைந்து புண்யத்தைப் போர்த்துக் கொள்வதாகிய ராஜ விரதத்துக்கு ஒரு சடங்கு வேண்டாவோ ? அவ்விதச் சடங்கே மஹாமக முதலிய புண்ய தீர்த்த யாத்திரையென்க.

*******

## ஆயகலைகள் 64

ஆடல், இசைக்கருவி மீட்டல், ஒப்பனை செய்தல், சிற்பம் வடித்தல், பூத்தொடுத்தல், சூதாடுதல், சுரதம் அறிதல், தேனும் கள்ளும் சேகரித்தல், நரம்பு மருத்துவம்,சமைத்தல், கனி உற்பத்தி செய்தல், கல்லும் பொன்னும் பிளத்தல், கரும்புச்சாற்றில் வெல்லம் எடுத்தல், உலோகங்களில் மூலிகை கலத்தல், கலவை உலோகம் பிரித்தல், உலோகக்கலவை ஆராய்ந்து அறிதல், உப்பு உண்டாக்குதல், வாள் எறிதல், மற்போர் புரிதல், அம்பு தொடுத்தல், படை அணிவகுத்தல், முப்படைகளை முறைப்படுத்தல், தெய்வங்களை மகிழ்வித்தல், தேரோட்டல், மட்கலம் செய்தல்,மரக்கலம் செய்தல், பொற்கலம் செய்தல், வெள்ளிக்கலம் செய்தல், ஓவியம் வரைதல், நிலச் சமன் செய்தல், காலக்கருவி செய்தல், ஆடைக்கு நிறமூட்டல், எந்திரம் இயற்றல், தோணி கட்டல், நூல் நூற்றல், ஆடை நெய்தல், சாணை பிடித்தல், பொன்னின் மாற்று அறிதல், செயற்கைப் பொன் செய்தல், பொன்னாபரணம் செய்தல், பொன் முலாமிடுதல், தோல் பதனிடுதல், மிருகத்தோல் உரித்தல், பால் கறந்து நெய்யுருக்கல், தையல், நீச்சல், இல்லத் தூய்மையுறுத்தல், துவைத்தல், மயிர்களைதல், எள்ளில் இறைச்சியில் நெய்யெடுத்தல், உழுதல், மரம் ஏறுதல், நீர் கொணர்தல், நீர் தெளித்தல், இரும்பாயுதம் செய்தல், மிருக வாகனங்களுக்குத் தவிசு அமைத்தல், குழந்தை வளர்ப்பு, தவறினைத் தண்டித்தல், பிறமொழி எழுத்தறிவு பெறுதல், வெற்றிலை பாக்கு சித்தப்படுத்தல், மேற்கூறிய கலைகளை உள்வாங்கும் விரைவு, வெளிப்படுத்தும் நிதானம்.

– மலர்க்குழு

# குடந்தைக் கும்பேசுரர்

கலைமணி **தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்,**

லண்டன் டைம்ஸ் பத்திரிகையோடு தொடர்புடைய ஆங்கிலேயர் ஒருவர் இந்தியாவுக்கு வருகிறார். கிட்டத்தட்ட நூறு வருஷங்களுக்கு முன்பு தூத்துக்குடியில் கப்பலில் இறங்கி மதுரை எல்லாம் கடந்து மெயில் ரயிலிலே சென்னைக்குப் பிரயாணம் செய்கிறார் முதல் வகுப்பிலே. அந்த முதல் வகுப்புப் பெட்டியிலே ஒரு தமிழ்ப் பிரமுகரும்



கும்பேசர் கோயில் . குடந்தை

பிரயாணம் செய்கிறார். இருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொள்ளவில்லை. இரவு பத்துப் பதினோரு மணிக்கு ரயில் தஞ்சையைக் கடந்து செல்கிறது. தமிழ்ப் பிரமுகர் கும்பகோணத்தில் இறங்கி விடுகிறார். ஆங்கில நண்பரோ சென்னை செல்கிறார். சென்னை எழும்பூர் சென்றதும் பார்த்தால், கும்பகோணத்தில் இறங்கியவர் தம் பெட்டியை ரயிலில் விட்டுவிட்டு, ஆங்கிலேயரது பெட்டியை எடுத்துக்கொண்டு நடந்திருக்கிறார். அவர் வேண்டுமென்று செய்திருக்கமாட்டார். ஏதோ பெட்டிகள் ஒரே விதமான பெட்டிகளாக இருந்திருக்கவேண்டும். பெட்டிகள் மாறிவிட்டன. ஆங்கிலேயர் தம் பெட்டியைப் பெற எவ்வளவோ முயன்று பார்த்தார் கிடைக்கவில்லை. இந்த ஏமாற்றத்துடனே தம் தாய்நாட்டுக்குத் திரும்பினார். லண்டன் சென்று சேர்ந்ததும், கும்பகோணம் பிஸினஸ் என்ற தலைப்பிலே தாம் பெட்டியைப் பறிகொடுத்த விவரத்தை லண்டன் டைம்ஸ் பத்திரிகையிலே எழுதினார். அன்று முதல் கும்பகோணத்துக்கு ஓர் அவப்பெயர்.

கும்பகோணம் என்றாலே ஏதோ தகிடுதத்தம் செய்கிற ஊர் என்றாகிவிட்டது ஏதாவது ஏமாற்றுக் கச்சவடம் செய்கிறவர்களைப் பார்த்து 'என்ன கும்பகோண வேலையைக் காட்டுகிறாய்?' என்று சொல்கின்ற பழக்கமும் வந்துவிட்டது. ஏன் கும்பகோணம் என்றாலே ஏமாற்றுதல் என்ற பொருளை ஆக்ஸ்போர்ட் அகராதிக்காரர்களும் எழுதி வைத்துவிட்டார்கள். கும்பகோணம் இப்படிப் பிரபலமடைந்துவிட்டது சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலே. ஆனால் கும்பகோணம் எவ்வளவு கற்பகோடி காலமாகப் புராணப் பிரசித்தி, சரித்திர பிரசித்தி எல்லாம் பெற்ற ஊர் என்பதைக் கும்பகோண மாகாத்மியத்தைப் புரட்டிப் பார்த்தவர்கள் அறிவார்கள்.

கும்பகோணம், தஞ்சை ஜில்லாவில், தலை நகராம் தஞ்சையை விடப் பெரிய ஊர். அந்த நகரின் மத்தியிலே காவிரி ஓடுகிறது. அந்தக் காவிரியின் கரையிலே நெல்லும் வாழையும் செழித்து வளர்கின்றன. அங்கேதான் தென்னிந்தியக் கேம்பிரிட்ஜ் என்ற பெயர் பெற்ற சர்க்கார் கலாசாலை இருக்கிறது. சர். பி. எஸ். சிவசாமி அய்யர், சர். சி. பி. ராமசாமி அய்யர், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் முதலிய பேரறிஞர்கள் படித்த கல்லூரி அது. கணித மேதை ராமானுஜம் படித்ததும் அங்கேதான் என்பார்கள். காஞ்சி காமகோடி பீடத்தின் தலைமைக் காரியாலயமும் இங்கேதான். கும்பகோணம் என்றாலே அறிவின் பிறப்பிடம், மேதைகளை வளர்க்கும் பண்ணை என்றெல்லாம் புகழ். கும்பகோண வக்கீல் என்றாலே வல்லடி வழக்கில், அகடவிகட சாமர்த்தியத்தில் எல்லோரையும் விஞ்சியவர்கள் என்ற பிரபலம். இவையெல்லாம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்தியாவில் காலூன்றியபின் கும்பகோணம் பெற்ற பெருமையாகும். ஆனால் பக்த கோடிகளிடையே அது கோவில்கள் நிறைந்த ஊர் என்றுதான் பிரசித்தம். தமிழ்நாட்டில் தெய்வ மணம் கமழும் திருநகராக இருப்பது காஞ்சி. அதற்கு அடுத்த ஸ்தானம் வகிப்பது கும்பகோணம் என்னும் குடந்தையே. ஆனால் காஞ்சியைப் போல் இங்கு சிவனும் விஷ்ணுவும் ஊரைப் பங்குபோட்டுக் கொள்ளவில்லை. எல்லோரும் அடுத்து அடுத்தே வாழ்கிறார்கள்.

ஊருக்கு நடுவில் சாரங்கபாணி என்றால் அவரைச் சுற்றியே கும்பேசுரர், சோமேசுரர் எல்லாம். இவர்கள் தவிர சக்ரபாணி, கோதண்டராமர் வேறே. இன்னும் குடந்தைக் கீழ்க்கோட்டத்தார், குடந்தைக் காரோணத்தார் வேறே. மேலும் வீதிக்கு ஒரு கோயில், தெருவுக்கு ஒரு கோபுரம் என்று ஊர் முழுவதும் கோயில்களாக நிரம்பிக் கிடக்கும் தலம் அது. இந்தத் தலத்தையும் இங்குள்ள மூர்த்திகளையும் விடப் பிரபலமானது அங்குள்ள தீர்த்தம். பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை இந்த கும்பகோணத்தில் நடக்கும் மகா மகத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். பலர் அங்குள்ள மகாமகக் குளத்தைப் பார்த்தும் இருப்பீர்கள். இந்த மகாமகத் தீர்த்தம் எப்படி ஏற்பட்டது என்று முதலில் தெரிந்து கொள்ளலாமே.

மாசி மாதத்தில் மக நட்சத்திரம் விசேஷமானது. அதிலும் குரு சிம்ம ராசியில் இருக்கும் காலம் மிக மிக விசேஷமானது. அப்படி வருவது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையே. அந்த மகாமக தினத்தன்று கங்கை, யமுனை, சரஸ்வதி, சரயு, கோதாவரி,

நருமதை, சிந்து, காவேரி, வேகவதி என்னும் ஒன்பது நதிகளுமே இங்கு கூடுகின்றன. பாவதாரிகளான மக்கள் எல்லாம் இந்நதிகளிலே தனித் தனியாக மூழ்கித் தங்கள் பாவங்களைக் கழுவிக் கொள்ள, அந்த மக்கள் பாவங்களையெல்லாம் ஏற்பது காரணமாக இந்த நவகன்னியருமே பாபகாரியங்களாக மாறுகின்றனர். சிவபெருமானை வணங்கி இந்தப் பாபங்களைப் போக்கிக்கொள்ளும்வகை வேண்ட, அவரும் இந்தக் காவிரிக் கரையில் உள்ள தீர்த்தக் கட்டத்துக்கு குரு சிம்மராசியில் இருக்கும் நாளன்று வரச்சொல்கிறார். அன்று இங்குள்ள மகாமகக் குளத்துக்கு நவ கன்னியரும் வந்து சேர்ந்து கூடிக் கும்மாளமிடுகின்றனர். அந்தக் கும்மாளத்தோடு கும்மாளமிட்டுக் குளிக்கும் மக்களின் பாவமுமே கரைந்து விடுகிறது என்பது வரலாறு. இத்தகைய பிரசித்தி உடைய தீர்த்தம் இருக்கும் கும்பகோணத்திற்கே செல்கிறோம் நாம் இன்று.

கும்பகோணம் போக, எந்த ஊரில் இருந்தும் டிக்கட் வாங்கலாம். நேரே ரயில்வே ஸ்டேஷனில் போய் இறங்கலாம். ஸ்டேஷனைக்கூட இப்பொழுது விஸ்தரித்துக் கட்டி வைத்திருக்கிறார்கள். ஸ்டேஷனில் இறங்கியதும் வண்டிபிடித்துக் கொள்ளலாம். ஊருக்குள் செல்ல இரண்டு வழி உண்டு. ஒன்று வட பக்கமாகவும், மற்றொன்று தென்பக்கமாகவும் செல்லும். நாம் தென் பக்கமாகச் செல்லும் பாதையிலேயே போகலாம். கும்பகோணத்தில் நாம் முதல் முதல் காண வேண்டியது மகாமகக் குளந்தானே. வண்டியில் ஏறி நான்கு பர்லாங்கு தூரம் கடந்ததுமே நாம் மகாமகக் குளக்கரை வந்து விடுவோம்.

இந்தக் குளம் பெரியகுளம். கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து ஏக்கர் விஸ்தீர்ணத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. நல்ல படிக்கட்டுகளுடன் கட்டப்பட்டிருக்கிறது. இதன் நான்கு கரைகளிலும் பதினாறு சிவ சந்நிதிகள் இருக்கின்றன. இக்குளத்தின் மத்தியில் ஒன்பது கிணறுகள் இருக்கின்றன. இந்த ஒன்பது கிணறுகளில்தான், முன்சொன்ன நவகன்னியர் மகாமகத்தன்று எழுகிறார்கள் என்ற நம்பிக்கை. இந்தத் தீர்த்தத்துக்கு இந்தப் புனிதம் ஏற்பட்டதற்குக் காரணம் இதில், அமுதம் தங்கியது என்று ஒரு வரலாறு. அந்த வரலாற்றிலே தான் இந்தத் தலத்தின் பெயராம் குடமூக்கு. அத்தலத்தில் உள்ள மூர்த்தியாம் கும்பேசுரரைப் பற்றிய தகவல்கள் நமக்குக் கிடைக்கும்.

பிரம்மதேவருக்கு அவருடைய சிருஷ்டித் தொழிலுக்கு உதவியாக இருந்திருக்கிறது, இறைவன் அருளிய அமுதக்குடம். அந்தக் குடத்தைப் பத்திரமாக அவர் மகாமேரு பர்வதத்தில் வைத்திருக்கிறார். பிரளய காலத்தில் உலகமே பிரளயத்தில் முழுகியபோது, இந்தக் குடம் வெள்ளத்தில் மிதந்திருக்கிறது. வெள்ளம் வடிகிறபோது, இந்தக் குடம் ஓர் இடத்திலே வந்து தங்கி இருக்கிறது. பிரமனது வேண்டுகோளின்படி, சிவபெருமான் கும்பத்திலிருந்து தோன்றிய பெருமான் ஆனதினாலே கும்பேசர் என்ற பெயர் பெற்று அங்கே நிலைக்கிறார். ஊருமே கும்பகோணம் என்று பெயர் பெறுகிறது.

குடத்திலிருந்து சிந்திய அமுதம் வழிந்த இடத்திலேதான் மகாமகக் குளம் இருக்கிறது. அதனால்தான் அங்கு பெருகும் தீர்த்தத்திற்கு அத்தனை மகிமை, ஆதலால் நாமும் ஒரு முழுக்குப் போடலாம் அங்கே. அதற்குத் துணிவு இல்லாதவர்கள் மகாமகக்

குளத்து நீரைத் தலையில் தெளித்துக் கொண்டே கிளம்பிடலாம் ஊரில் உள்ள கோயில்களைக் காண. ஒருநாளை சிவனுக்கு என்றும் ஒருநாளை விஷ்ணுவுக்கென்றும் ஒதுக்கி வைத்து விடலாம். முதலில் மகாமகக் குளத்தின் வடகரையில் உள்ள குடந்தைக் காயோரோகணத் தாரையே வணங்கிவிட்டு மேல் நடக்கலாம். இவரையே காசி விசுவநாதர் என்று மக்கள் அழைக்கிறார்கள்.

இராவணாதி அரக்கர்களை வதம் செய்யப் புறப்பட்ட ராமன் அத்தொழிலை நன்கு நிறைவேற்றத் தம்மிடம் ருத்திர அம்சம் இல்லை என்பதைக் காண்கிறார். அந்த அம்சம் பெறவேண்டிக் காவிரிக் கரையிலே காசி விசுவநாதரைப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்கிறார். ராமன் விரும்பிய வண்ணமே ராமனது உடலில் சிவன் ஆரோகணிக்கிறார். அதனால் இராவண வதம் முட்டின்று முடிகின்றது என்பது புராணக்கதை. ராமனது காயத்தில் ஆரோகணித்தவர் ஆதலால் காயாரோகணர் என்ற பெயர் பெறுகிறார். இந்த காயாரோகணத்தார் சந்நிதி மேற்கு பார்த்து இருக்கிறது. சிறிய கோயில்தான் கோயிலில் நுழைந்ததும் வடபுறம் உள்ள ஒரு மண்டபத்தில் நதிகளாகிய நவகன்னியரும் நின்று கொண்டிருக்கிறார்கள். தல முக்கியத்துவம் வாய்ந்தவளான காவிரி வாயிலுக்கு நேரே நின்று கொண்டிருக்கிறாள். மற்றவர்கள் பக்கத்துக்கு நால்வராக ஒதுங்கிக் கொள்கிறார்கள். எல்லாம் சுதையாலான வடிவங்களே.

மகாமக உற்சவத்தில் எழுந்தருளச் செய்வதற்காகச் செப்புச் சிலை வடிவிலும், இந்த நவ கன்னியரைச் சிறிய உருவில் சமீப காலத்தில் செய்து வைத்திருக்கிறார்கள். இந்தச் செப்புப் படிமங்கள் ஒதுக்குப் புறத்தில் ஒளிந்து கொண்டிருக்கும். அவர்களைத் தேடித்தான் பார்க்க வேண்டும். இனிக் கோயிலுள் இருக்கும் விசுவநாதரையும். விசாலாக்ஷியையும் வணங்கலாம். இந்தக் கோயிலுக்கு சம்பந்தர் வந்து காயாரோகணத்தாரைப் பாடிப் பரவி இருக்கிறார். சம்பந்தர் குறிப்பிடாத மகாமகத் தீர்த்த விசேஷத்தைச் சேக்கிழார் கூற மறக்கவில்லை. பூமருவும் கங்கை முதல் புனிதமாகப் பெருதீர்த்தம் மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடுங் கோயில் என்றல்லவா பாடுகிறார்.


குடந்தை கோயில் வரைபடம்

இந்தக் குடந்தைக் காயாரோகணத்தாரைக் காண மறந்தாலும். இவரது கோயிலுக்கு மேற்கே ஒரு பர்லாங்கு தூரத்தில் உள்ள குடந்தைக் கீழ்க் கோட்டத்தாரைக் கண்டு தரிசிக்காமல் மேல் நடத்தல் கூடாது. இது ஒரு கலைக்கோயில்.

இங்குகோயில் கலையின் பலபடிகளைப் பார்க்கலாம். இங்கு கோயில் கொண்டிருக்கும் நாகேசுவரனை இந்திரனும், சூரியனும் வழிபட்டதாக ஐதீகம். இந்திரன்

வழிபட்டானோ என்னவோ? சூரியன் இன்றும் வழிபடுகிறான். ஒவ்வொரு வருஷமும் சித்திரை மாதம் 10, 11, 12 தேதிகளில் காலை ஆறு மணிக்கெல்லாம் கோயில் வாயில், கொடி மரம், நந்தி, பலிபீடம் எல்லாவற்றையும் கடந்து சூரியன் கருவறைக்குள் புகுந்துவிடுகிறான். அந்த அறையை ஒளிமயமாக ஆக்குவதோடு தன் ஒளியாகிய கரங்களினாலே லிங்கத் திருவுருவத்தைத் தழுவி வழிபடுகிறான். இந்த வழிபாடு ஓர் அற்புதக் காட்சி. இக்காட்சி அமையும் வகையில் கட்டிடம் கட்டிய சிற்பிகளுக்கு நமது தலை தானாகவே வணங்கும். இன்னும் வெளி முற்றத்தைக் கடந்து நடந்தால் கல்தேர் போல் அமைந்த ஒரு பெரிய மண்டபத்தைப் பார்ப்போம். அதுதான் நடராஜர் சந்நிதி. அந்தக் கல்தேர் சக்கரங்கள், அதனை இழுக்கும் குதிரைகள் எல்லாம் அழகானவை. உள்ளே சென்றாலோ, அறம் வளர்த்தாள் தாளம் ஏந்த அதற்கேற்ப நடனமிடும் நடராஜர் திருக்கோலத்தைக் காணலாம். கோயிலுள் சென்று நாகேஸ்வரனை வணங்கி வலம் வந்தால் எண்ணரிய கலைச் செல்வங்களை மாடக்குழிகளில் காணலாம். கல்லிலே வடித்த கட்டழகியும் அவள் பக்கத்திலேயே முற்றும் துறந்த பௌத்த பிக்ஷுவும் நிற்பார்கள்

மேற்கு நோக்கிய மாடத்திலே அழகான அர்த்தநாரீசுரர் வடிவம். இக்கோயில் ராஜராஜன் காலத்துக்கும் முந்தியது என்று பறைசாற்றிக் கொண்டு நிற்கும். கலை உலகிலேயே ஓர் அற்புத சிருஷ்டி அது. இடப்பாகத்தில் இருக்கும் பெண்ணின் இடையைப் பெரிதாக்கி அதற்கேற்றவாறு ஒரு நெளிவு கொடுத்துச் சிற்பி அச்சிலா உருவத்தைச் சமைத்திருப்பது பார்த்துப் பார்த்து அனுபவிக்கத் தக்கது. வடபாகத்துக் கோஷ்டங்களிலோ பிரம்மா, துர்க்கை எல்லாம். இதோடு ஒரு பொந்துக்குள்ளே அழகிய பிக்ஷாடனர் ஒருவர். இந்த நாலைந்து சிலைகளை மட்டும் பார்த்துவிட்டால் போதும், சிலைகளைச் செய்தமைத்த கலைஞர்களுக்கும் வணக்கம் செய்துவிட்டுத் திரும்பலாம் நாம். வரும் வழியிலே தெற்கு நோக்கிக் கோயில் கொண்டிருக்கும் பெரிய நாயகியையும் வணங்கலாம்.

அவகாசம் இருந்தால், பிரகாரங்களில் உள்ள மற்றச் சுற்றுக் கோயில்கள் அங்குள்ள மூர்த்திகளையும் கண்டு தரிசிக்கலாம். இக்கோயில் வாயிலிலிருந்து வடக்கே வந்து மேற்கே திரும்பி நடந்தால், ஒரு சிறு கோபுர வாயிலில் கொண்டுவந்து விடும். இதுதான் ஏழைச் சோமேசர் கோயில். இவர் ஏழை என்பதைக் கோயில் தெற்குச் சுவரில் உள்ள விளம்பரங்களே சொல்லும். இங்கு காணவேண்டிய கலை அழகுகள் ஒன்றும் இல்லைதான். இங்குள்ள சோமேசர், தேனார்மொழியாள் இருவரையும் வணங்கிவிட்டு இன்னும் மேற்கு நோக்கி நடந்து இடையில் உள்ள பொற்றாமரைக் குளத்தையும்

கடந்தால் இத்தலத்தின் பிரதான சிவன் கோயிலான கும்பேசுரர் சந்நிதிக்கு வந்து சேரலாம். பெரிய கோயிலில், ஆண்டவன் கும்பவடிவிலே லிங்கத் திருவுருவாக அமைந்திருக்கிறார். இவருக்குத் தங்கக் கவசம் சாத்தியே அபிஷேகம் முதலியன நடக்கின்றன. உடைந்த கும்பத்தின் துண்டுகளைச் சேர்த்து அமைக்கப்பட்ட திருவுருவந்தானே.

இங்குள்ள அம்பிகை மந்திர பீடேசுவரி மங்களாம்பிகை என்று அழைக்கப்படுகிறாள். வணங்குபவர்களுக்குச் சர்வ மங்களத்தையும் அளிக்க வல்லவள் என்று நம்பிக்கை. அம்பாள் சந்நிதிக்கருகில் வேட வடிவங்கொண்ட சிவபெருமான் வேறே எழுந்தருளியிருக்கிறார். இவருக்குப் பூஜை முதலியன நடைபெறுகின்றன. இக்கோயில் துவஜ ஸ்தம்பத்துக்கு அருகில் லக்ஷ்மி நாராயணப் பெருமானும் இடம்பிடித்து உட்கார்ந்திருக்கிறார். இங்குள்ள சிலா உருவங்களில் தக்ஷனைத் தன் காலால் மிதித்து மடக்கித் தலை கொய்யும் வீரபத்திரனின் நிலை அச்சம் தருவதொன்று, ஆனால் ஐயகோ! வீரபத்திரனின் கையிரண்டும் பின்னமுற்றல்லவா கிடக்கிறது. சம்பந்தர் காயாரோகணத்தாரை மட்டும் பாட, அப்பர் கீழ்க்கோட்டத்தாரை மட்டும் பாட, இந்தக் கும்பேசுரர் மட்டும் இருவராலும் பாடப்பெற்றிருக்கிறார். அதிர்ஷ்டக்காரர்தான்.



விபீடணன் பட்டாபிஷேகம்
இராமசாமி கோயில்- குடந்தை

**நங்கையாள் உமையாள் உறைநாதனார்**
**அங்கையாளோடு அறுபதம் தாள்சடைக்**
**கங்கையாள் அவள் கன்னி எனப்படும்**
**கொங்கையாள் உறையும் குடமூக்கிலே**

என்பதுதான் அப்பர் தேவாரம்.

இத்தலத்தில் இப்படிப் பாடப்பெற்ற மூவர் மாத்திரமே இருக்கிறார்கள் என்றில்லை. இன்னும் அபிமுகேசுரர், ஆதி விசுவேசுரர், பாணபுரி ஈசுவரர், காளகஸ்திநாதர், ஏகாம்பரநாதர் எல்லோருமே இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே மகாமக ஸ்நானத்துக்கு வந்தவர்கள் போலும். இனி, இத்தலத்தில் உள்ள விஷ்ணு கோயிலைக் காணப்புறப்படலாம்.

*****

# மகாமக அந்தாதிக் கும்மி

**இரா. ஜெய்னுலாப்தீன்,** எம்.எஸ்ஸி.,

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் தமிழ் அச்சுநூற் பிரிவில் வரிசை எண் 2008-ல் மகாமக அந்தாதிக்கும்மி என்ற மிகச்சிறிய நூலென்று பாதுகாத்து வைக்கப்பட்டு உள்ளது. இந்நூலில் 50 அந்தாதிப் பாடல்களும், நான்கு கடவுள் வாழ்த்து மற்றும் காப்புச் செய்யுள்களும் உள்ளன. நூலாசிரியர், அச்சிட்ட இடம், ஆண்டு போன்ற விவரங்கள் ஒன்றும் அறியமுடியவில்லை. ஆகவே இந்நூல் செய்திகளை பாதுகாப்பு நோக்குடன் சிறு குறிப்புடன் வெளியிடப்படுகிறது. கவிஞர் இப்பாடலில் சுந்தரதாதார்யன் பாதங்காப்பாம் எனக் குறிப்பிட்டுள்ளார். எளிய பாடல்களில் கன்னியா தீர்த்தமென்பதற்கு விவரம் அமிர்த சரசென்பதற்கு விவரம், ஞானவான் சரித்திரம், கும்பகோணம் என்பதற்கும் கும்பேசரென்பதற்கும் விளக்கம், ஏமவாகுவின் மனைவிக்கு வேதாளம் நீங்கியது, சுதர்மாவும் வீரவர்மாவும் புத்திரனையடைதல், அஸ்தி என்பவள் பரிசுத்தமான கதை முதலிய செய்திகள் மங்களத்துடன் நிறைவு செய்யப்பட்டுள்ளது.



மகாமகக்குளம் - குடந்தை

**இரா. ஜெய்னுலாப்தீன்,** எம்.எஸ்ஸி., மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது.) மற்றும் நிருவாக அலுவலர், சரசுவதி மகால் நூலகம். தஞ்சாவூர்

மகாமக வைபவம் மாநிலத் தன்னிலே
பாமிகு தமிழினில் கும்மிபாட
நாமக டன்னோடு நான்முகன் போற்றிடும்
கோமள வல்லிதன் கொழுநன் காப்பாம் 1

அம்புவி தனக்கோ ரழகு மகுடமாம்
கும்பகோண மெனுங் குடந்தை தன்னில்
கம்பீர மாமகக் கும்மியது சொல்ல
சம்பு சதாசிவன் தானுங் காப்பாம் 2

வேலைசூ ழுலகினில் மேலான குடந்தையில்
சீலஞ்சேர் மாமகச் செழிப்பு ரைக்க
வாலை சரஸ்வதி வந்தென் னாவினின்று
பாலனஞ் செய்வாளே பாங்குடனே 3

அந்தாதிக்கும்மி யருந்தமிழ் தன்னிலே
விந்தையா மாமக மேன்மை சொல்ல
அந்தணர் போற்றிடும் அருந்தவ மேற்றிடும்
சுந்தர தாதார்யன் பா தங்காப்பாம் 4

## அந்தாதி

மன்னிய மாமகம் மாநிலத் தன்னிலோர்
பன்னிரண் டாண்டிற் கொருமுறையாம்
வன்னியாம் சூரியன் கும்பத் திருந்திட
பன்னிய குருமதி பார்த்திடுநாள் 1

பார்த்திடு நாளதிற் குடந்தையின் மாமக
தீர்த்தமது தன்னிற் றோய்ந்திடவே
பார்த்திப ரெல்லோரும் பயபக்தி தன்னோடு
யாத்திரை செய்வாரின்ன கரணுக 2

இன்னகர் தன்னிட வன்னியாந் திசையிலே
சொன்னதோர் மகாமகத் தீர்த்தத்தையே
கன்னியா தீர்த்தம் கனவமுத தீர்த்தம்
பொன்னன் தீர்த்தம் பகுதீர்த்த மென்பார் 3

தீர்த்த மதனுள்ளே தோன்று மெண்டிசையிலும்
நேர்த்தி யாய்த் திக்குப் பாலர்களும்
சீர்த்தி யாய் நின்றங்கு சோபனமாகவே
பார்த்திபர் தங்கட்கு பலனளிப்பார் 4

பலனது என்னாளும் பாரினிலித் தீர்த்தம்
நலமுடன் றோய் வோர்க்கு நன்றளிக்கும்
மலமறு மாமக மானாளிற் றோய்வோர்க்கு
பலபல பஞ்சமா பாதகம் போம் 5

## கன்னியா தீர்த்த மென்பதற்கு விபரம்

பாதக மனைத்தையும் பாரினிற் றீர்த்திடும்
தீதறு தீர்ந்த வகைக ளெல்லாம்
மாதுரு வாகியே வந்தங்கு நின்றார்கள்
மாதவர் தன்னிட சன்னதியில் 6

மாதவரே யருள் போதகரே தேவ
சாதகரே குருநாதரே நீர்
தீதுருபாவங்கள் சேர வனைத்தையும்
சேதஞ்செய்யும் வகை செப்புமென்றார் 7




### திருக்குடமூக்கு

*ஆரெரி யாழியானு மலரானும*
*ளப் பரிய*
*நீரிரி புன்சடைமே னிரம் பாமதி*
*சூடி நல்ல*
*கூரெரி யாகி நீண்ட குழ கன்குட*
*மூக் கிடமா*
*ஈருரி கோவணத்தோ டிருந் தானவ*
*னெம்மிறையே (3435)*

***அக்கினிபோல் ஒளிரும் சக்கராயுதப்படையுடைய திருமாலும், பிரமனும் அளக்கமுடியாதவனாய், கட்டுப்படுத்தமுடியாமல் பெருக்கெடுத்த கங்கையைப் புன்சடைமேல் தாங்கி, இளம்பிறைச் சந்திரனைச்சூடி, நல்ல நெருப்புப் பிழம்பு போல் ஓங்கி நின்ற அழகனான சிவபெருமான், திருக்குடமூக்கு என்னும் திருத்தலத்தில் தோலும், கோவண ஆடையும் அணிந்து வீற்றிருந் தருளுகின்றான். அவனே யாம் வணங்கும் கடவுள் ஆவான்.***

தேவாரம்-திருஞானசம்பந்தர்

செப்புமதைக் கேட்ட திருவுரு நாதரும்
ஒப்புடன் வந்தவர்க் கருள்புரிந்து
இப்புவி தன்னிலே ஏர்குடந்தைசென்று
நுட்பமா மாமக நாளதிலே 8

மாமக நாளதில் மன்னிய குடந்தையில்
மாமக தீர்த்தத்தி லாடிய பின்
கோமள வல்லிக் குறைவிட மாகிய
ஏமதீர்த்த மதிலாடிடுவீர் 9

ஆடுவீர்க் குடந்தைக் கலங்கார மாகவே
சூடு மாலையாய் காவிரியில்
நாடிய பாவங்கள் நாசமாகிவிடும்
வாடிய மங்கைகாள் மனமகிழ்வீர் 10

மனமகிழ் வீரென்று மாதவர் சொல்லலும்
இனம் பிரியாம லெல்லோரும் சென்று
குணமுடன் குடந்தையிற் குருசிங்கமேறவே
தினவரு மென்றங்குத் தேறிநின்றார் 11

தேறிய கும்பத்தில் செகச் சோதியாகிய
சூரிய பகவானும் சேர்ந்தபின்பு
பூரண கலைமதி பொங்கு சிங்கமோ
நாரிய ரெல்லோரும் புனல் குடைந்தார் 12

புனல் குடைந்தவப் பொழுதது தன்னிலே
புனிதரா யெல்லோரும் பொறுமை யொடு
கனதவம் செய்தவர் கைகொள்ளும் பொறுமையைத்
தினமொன்று தன்னிலே சேர்ந்தோ மென்றார் 13

சேர்ந்திவர் கன்னிகைத் தேகங் கொண்டின்னீரில்
தோய்ந்ததாற் கன்னிகா தீர்த்த மென்றும்
வாய்த்ததோர் அமிர்த தீர்த்தப்பேர் வந்ததை
ஆய்ந்த பேருரைத்ததை யறிந்து சொல்வேன் 14

### அமிர்தசரசென்பதற்கு விபரம்

அறிந்துமே நான்முகன் ஆதிபகவனைச்
சிறந்தடி பணிந்து தான் தோத்தரித்து
பரந்த விப்பாரினைப் பரவைதான் மூடிடப்
பொருந்தும் பிரளயம் போந்திடுமே 15

போந்திடப் பாரினில் பீஜவகை யெல்லாம்
சேர்ந்துமே நாசமாய்த் துலைத்திடுமே
ஏந்தும் வகை யெனக்கே தேனுமோதுவீர்
பாந்தட் பரிவனே பணிந்தே னென்றார் 16

பணிந்த வன்நான் முகந்தன்னைப் பரமனும்
குணமுடன் குடமொன்று கொண்டதிலே
நனிபீஜவகை யெல்லாம் நல்லமுதமாக்கி
நினைவுடன் குடமதில் நிரைப்பு மென்றார் 17

நிரைப்பிய குடமதை நூலதனாற் சுற்றி
தருப்பை புரிநூலும் சாத்திய பின்
திருப்பொலி குடவாயைத் தேங்காயதால் மூடி
பொருப்பதின் தென்பாகம் வையு மென்றார் 18

வையுமென்று சொன்ன வார்த்தையது கேட்டு
துய்யனான் முகனும் தோத்தரித்து
நொய்ய பீஜமெலாம் நுண்ணமுத மாக்கி
செய்யமேரு தென்பாகம் வைத்தார் 19

வைத்தவர் மேருவின் வன்முடி தான்சென்று
மெய்த்தவச்ச மாகி மேவி நிற்க
உத்தபிரளய மோர் மாரி பொழிந்திட
சுத்த ஜலமாகத் தோன்றிட்டதே 20

ஜலமது பெருகவே ஜலமனைத்தும் மூழ்கிச்
சிலநாளிற் சின்மலை மூழ்கியது
குலவறை மீதிட்ட கும்பத்திடை செல்லச்
சலமதில் மிதந்ததே தண் குடந்தான் 21



## கல்லணை

காவிரியையும் கொள்ளிடத்தையும் இணைக்கும் வாய்க்கால் உள்ளாறு என்பதும். இதன் அருகில் கொள்ளிடத்தில் நீர்மட்டம் காவிரியின் நீர்மட்டத்தைவிடத் தாழ்வாக உள்ளதும். கல்லணை இல்லாவிடில் காவிரிநீர் அனைத்தும் கொள்ளிடத்தில் பாய்ந்து வீணே கடலில்தான் கலக்கும். காவிரிநீர் கடுகளவும் வீணாகாது பாசனத்திற்குப் பயன்படச் சோழர்கள் கட்டியத் தொன்மையான அணையே கல்லணை ஆகும்.

மிதந்த குடந்தெற்கில் வெகுதூரம் வருகவும்
உதகம் வற்றிப் பாரில் உற்றுநிற்க
பதறுங் கிராதனாய் பார்ப்பதி பாகனும்
சிதறமுத கடம் தேடலுற்றார் 22

தேடி வருமந்த சிவபிரான் குடமதை
நாடி யொருகணை நய்ய வெய்தார்
வீடிய வக்கணை வன்குட வாய்பாய
ஓடியதே சுதை யோஜனைக்கே 23

ஓடிய வமுதம் உற்ற பொற்றாமரை
கூடிய மாமகக் குளமதிலும்
நாடியே தங்கிய நற்காரண மதால்
சூடினாரமுத சரசெனப் பேர் 24

அமுத கடமதில் ஐம்முகக் கடவுளும்
அமர்ந்து பரஞ்சோதியாகி நின்று
எமதடைக் கலமாகின்ற வடியார்க்கு
உடையுடன் தரிசனந் தருவோ மென்றார் 25

## கும்பகோணமென்பதற்கும் கும்பேசரென்பதற்கும்

தருவோமென்று சொல்லித் தானுமக் கடத்தின்
உருவங் கொண்ட வொரு காரணத்தால்
திருவமுத கடாச ரெனப்பேரும்
திருக் குடந்தையென ஊரின் பேராம் 26

பேரா மாமகப் புண்ணிய தீர்த்தத்தில்
நீராட நேர்பலன் நேர்ந்துரைப்பேன்
தீராவினைகளைத் தீர்ப்பதுடன் பின்னும்
கோரிய வரங்களைக் கொடுத்திடுமே 27

கொடுத்திடுமே வரன் கொழுநரர் சுரருக்கும்
தொடுத்திடும் விரதத்து நாரியர்க்கும்
விடுத்திடும் நாரியர் வந்தி வகைகளை
மடுத்திடும் பஞ்சமா பாதகத்தை 28

## ஞானவான் சரித்திரம்

பாதகத்தைத் தீர்த்த பழையகதை யொன்று
மாதவர் சொன்னதை மகிழ்ந்துரைப் பேன்
தீதினிற் சிந்தையைச் செல்லவிடாமலே
காது கொடுத்திதைக் கண்டு கொள்வீர் 29

கண்டு கொள்வீர் தவக்கண்வரின் மரபினில்
உண்டாகிய யக்கிய சீலரென் போர்
பண்டை முறைப்படி பைங்கூர்ம யாகத்தால்
அண்டர்க் கவிர்ப்பாக மளிப்போ மென்று 30

அளிப்போ மென்று சொல்லி யக்கணம் சங்கர்ப்பம்
களிப்பாகச் செய்தவர் கான் முளையை
விளித்து நீகச்சபம் விரைவினிற் கொணர்வாயேல்
சுளுவினில் யாகத்தைச் செய்வோ மென்றார் 31

செய்வோமென்று சொன்ன தந்தைசொல்தான் கேட்டு
செய்யதோர் ஞான வான் சுறுசுறுப்பாய்
வெய்ய வருணனை வேண்டியவணிற்க
நொய்ய வினையதால் நேரவில்லை 32

நேராமனாட் சென்று நேர்கூர்மம் வருமுன்னே
தீராத பசிதாகத் தீம்பதனால்
பேராம் சீலவதி பதியக்கிய சீலரும்
மாறாத பதவியை மகிழ்ந்தடைந்தார் 33

பதவியையடைந்ததன் மாதா பிதாவையும்
பதறி ஞான சீலன் பார்த்தழுது
சிதறாமற் கிரியைகள் சீராக முடித்திட்டுச்
சதிராக நைமிசம் சாரலுற்றார் 34

சாரவு நான்மறைத் தேர்ந்தவ ரெல்லோரும்
ஆராமந் தனுள் எடங்கி நின்று
பேரான பாதகன் பேய்முகங் கண்ணினில்
நேராத படிக்கிங்கு நிற்போ மென்றார் 35

என்றவர் பாதத்தில் ஏமதண்ட மெனச்
சென்றடி பணிந்து தோத்தரித்து
எந்தனிட பாபம் எவ்விதந் தீருமோ
அந்தவகை யெனக்கருள் புரிவீர் 36

அருள்புரிவீ ரென்று வந்தணன் சொல்லவே
அருந்தவரவிமுக நோக்கிச் சொல்வார்
பொருந்திய ஊழ்வினை போந்திப் பிறவியில்
வருந்திய தென்றுமே வகுத்துரைத்தார் 37

வகுத்ததோர் பாதகம் வலியற்றுப் போகவே
தகுத்ததோர் சாந்தி நீர் தயைபுரிவீர்

தொகுத்த புராணங்கள் சோர்வறக் கற்றோரே
புகுந்தேன் சரணென்றான் பாதத்திலே 38

பாதத்தில் வீழ்ந்ததோர் பக்குவ ஞானிக்கே
ஏதுரைப்போ மென்று யேங்கி யிந்த
பாதகத் தனக்குப் பிராயச்சித்த மெங்கும்
ஓதவில்லை யென்று மோர லுற்றார் 39

ஓர்ந்தவர் சொன்னார்கள் உற்ற கும்பகோணம்
தேர்ந்த தோரமுதத் தீர்த்தங்களில்
சார்ந்துமே மாமக நாளது கண்டுநீர்
தோய்ந்திடவே பாபந் தீர்ந்திடுவீர் 40

பாபந் தீருமென்ற பரிசுத்த வார்த்தையை
நேமமாய்க் கேட்டவன் வன்னொடி தன்னிலே
கோப மடக்கியே கும்பகோணஞ் சென்று
மாமகத் தன்னி னீராடலுற்றான் 41

உற்றதோர் ஞானவான் உறுபாப நீங்கவே
சற்றுங் குறைவன்றித் தாரணியில்
நற்றவந் தன்னோடு நற்குழவி யோடும்
மற்றுங் குறைவின்றி வாழ்ந்திருந்தான் 42

**ஏமவாகு மனைவி வேதாளம் நீங்கியது**

வாழ்ந்திருந்தான் யேமவாகுவெனும் வேந்தன்
வேதாளம் பிடித்த மனைவியோடு
மாழ்கிய மனத்தனாய்ப் பூசுரரைக் கண்டு
தாழ்ந்தொரு சாந்திதான் சாற்று மென்றான் 43

என்றதோ ரரசனை யோர்தவந் தோர்களும்
சென்றுமே கங்கையிற் றோய்க வென்றார்
நன்றென்று சென்றவர் கங்கையில் மூழ்கவும்
சென்றன ரமுத மாவா வியிலே 44

அமுதமாவாவி யிளருங் கரைச் சேரலும்
குமுறிய வேதாளம் சுலோசனையை
தமியேனைக் கரையேற்றி தந்ததாய் நீயென்று
அமர வடிவொடு அறைய லுற்றான் 45

அறைந்த வன்றன்னை நீயாரென்று வினவலும்
உறைந்த வேதாள நான்னுன்னருளால்
துறந்து நானக்கதி தொல்லுல கோரெற்ற
சிறந்த தோர் சொர்க்கம் சேர்வே னென்றான் 46

என்றவந் தன்னைநீ எங்கள் வரவையும்
நன்றாகச் சொல்லென நயந்திரப்ப
தொன்றுசேர் பாவங்கள் துலையவின் னீராடச்
சென்றன ளுங்களைச் சேர்த்தே கங்கை 47

**சுதர்மாவும் வீரவர்மாவும் புத்திரனை யடைந்தது**

சேர்ந்த கீர்த்தியுடை திரல்வீர வர்மாவும்
தேர்ந்ததோர் வேதியன் சுதன்மனுமே
ஓர்த்தின் னீராடியே உற்றதோர் மகப்பேறு
நேர்ந்தார்க ளென்பதை நெடியோர் சொன்னார் 48

**அஸ்தி என்பவள் பரிசுத்தமான கதை**

நெடியமா காலமாய் நீள்பாப மியற்றிய
கொடிய வஸ்தியென்ற குறைநடையாள்
வடிவாய மாமக வாவிநீ ராடமின்
இடையாகி மங்கள ரூபமுற்றாள் 49

**மங்களம்**

மங்களம் மாமகக் கும்மி □ படித்தோர்க்கும்
மங்கள மிதனைப் பாடினோர்க்கும்
மங்கள மிக்கும்மி கேட்போரனை வோர்க்கும்
மங்களம் மன்னிய மறையோர்க்குமே. 50



*தீபத்தில் ஒளி எப்படி வேறுபாடு பார்க்காமல் உயர்ந்தவன் தாழ்ந்தவன், புழு, பறவை, மரம், மற்ற நீர்வாழ் பிராணிகள், நிலம்வாழ் விலங்கினங்கள் இவற்றின் மீது படுகின்றதோ அப்படியே தன் மனது ஒரு தீபமாக எல்லாரையும் தழுவுவதாக பிரகாசிக்க வேண்டும்.*

***சந்திரசேகரேந்திர ஸ்வாமிகள்***
***மஹாபெரியவாள்***

# வீரசைவம்

வீரசைவம் என்பது வீரம் என்னும் ஆகமத்தில் கூறியுள்ள சைவ நெறியாகும். இருபத்தெட்டுச் சிவாகமங்களின் இறுதிப் பகுதிகள் வீரசைவக் கொள்கைளையும், சடங்குகளையும் கூறுவதால், வீரசைவம் என்பது ஆகமாந்தாந்தின் ஓர் அம்சமாகும். இது சைவ சமயத்தின்ன்று பிறந்ததாயிருப்பினும் தன் இயல்புடைய ஒரு சமயக் கொள்கையே. இலிங்க உருவத்தில் சிவனைப் பரதெய்வமாக வழிபடுவது சைவத்துக்கும் வீர சைவத்துக்கும் பொதுவான கொள்கையாகும். ஆயினும் சைவமும் வீரசைவமும் வழிபடக் கையாளும் முறைகள் வேறுபடுவன. சைவர்கள் இலிங்கத்தைக் கோயிலில் வைத்து வழிபடுவர். வீரசைவர் அதனைக் கைத்தளத்தில் வைத்து வழிபடுவர். தத்துவ நூல்கள் முப்பத்தாறு என்று கூறுவதும் இரண்டுக்கும் பொதுவானது. ஆனால் சைவ மதம் அவற்றை உலக உற்பத்தி முறையில் விளங்குகிறது. வீரசைவ மதம் உளவியல் முறையிலேயே விளங்குகிறது.

பிரபஞ்சத்தில் காணப்படும் நிகழ்ச்சிகளுக்கு எம்மட்டுக் கடவுளையே சக்தி அதாவது சித்–சக்தி காரணம், எம்மட்டு ஆன்மாக்களின் செயல்கள் காரணம் என்பதைக் குறிப்பதிற் சைவ சமயத்தினர் நான்கு பிரிவினராகக் காணப்படு கின்றனர். சிவன் காரணமாயிருப்பதற்கும், ஆன்மாக்களின் செயல்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று பாசுபதப் பிரிவினர் கூறுவர். சிவனே பரம காரணமா யிருப்பினும் அவன் காரணமாயிருப்பதற்கும் ஆன்மாக்களின் செயல்களுக்கும் சம்பந்தமில்லாமலில்லை. என்று சிந்தாந்தப் பிரிவினர் கூறுவர். சிவசக்தியைத் தவிர வேறு காரணம் எதுவும் இல்லை என்று பிரத்யபிஞ்ஞானப் பிரிவினர் கூறுவர். வீரசைவம் அல்லது இலங்காயதப் பிரிவினர் கொள்கையை ஏற்றுக் கொள்வதோடு சித்சக்தியேதான் பிரபஞ்சத்தையும் ஆன்ம கோடிகளையும் ஆட்டுவிக்கும் அருட்சக்தியாகும் என்று வற்புறுத்துகின்றனர்.

சைவ சமயக் கொள்கையும் வீரசைவ மதக்கொள்கையையும் வேறுபடுத்துவற்காகவே வீர என்னும் அடைமொழி சேர்க்கப்பட்டிருக்கிறது. வீரசைவத்திற்கு வெளிப்பொருளும் உட்பொருளும் உண்டு. கடவுளுடைய நிலை அம்சத்தையும் அசைவு அம்சத்தையும் இணைப்பதாகிய சக்தி விசிஷ்டாத்வைதமே வீரசைவத்தின் உட்பொருள், உடம்பில் இலிங்கத்தைத் தரித்துக்கொண்டு ஒன்றான கடவுளை வழிபடுமாறு கூறுவதே வீரசைவத்தின் வெளிப்பொருள். வீரசைவம் வருணாசிரமத்தையும், வேத சடங்குகளையும் ஏற்றுக்கொள்வதில்லை. அதன் பிரதானமான சடங்கெல்லாம் பிறக்கும்போது ஒவ்வொரு குழந்தைக்கும் குரு செய்யும் இலிங்க தீட்சை ஒன்றேதான்.

– மலர்க்குழு

# தாராசுரத்து ஐராவதேவரர்

**கி. கணேசன்,** பி. காம்.,

தல யாத்திரை செய்வதென்பது இந்த நாட்டுக்கே உரிய நல்ல பழக்கங்களில் ஒன்று. மற்ற நாடுகளில் உல்லாச யாத்திரை போவதுண்டு. தல யாத்திரை அவர்களுக்குத் தெரியாதது. மற்ற நாடுகள் இருக்கட்டும், நம்முடைய பாரத நாட்டிலே கூட வடநாட்டுக்குப் போனால் தீர்த்த யாத்திரை தான் நன்றாகச் செய்யமுடியும். ஏதோ அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாகச் சில தலங்கள் உண்டு. அவற்றிற்கும் எத்தனையோ சிறப்புக்கள் இருக்கின்றன. இருந்தாலும் அங்கே போனால், மற்றவர்கள் துதிப்பதைக் கொண்டும் மனத்தில் மதிப்பும் பக்தியும் உண்டாகி வழிபட வேண்டும். ஆனால், தமிழ்நாட்டுத் தலங்கள் அப்படியா இருக்கின்றன? கோவிலின் தோற்றமே நம்மைப் பிரம்மிக்க வைத்து விடுகிறது. எத்தனை மேல்நாட்டினர்கள் தஞ்சாவூர் பெரியகோயிலைக் கண்டு வியப்படைந்து சிலையாய் நின்றிருக்கிறார்கள்.

அந்த வகையில் வரலாற்று ஆர்வலனான எனக்கு நான் மிகவும் விரும்பி பலமுறைப் படித்த நூல் கலைமணி தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எழுதிய



தாராசுரம் வரைகோட்டு ஓவியம்

**கி. கணேசன்,** பி. காம்., மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்கு)
தஞ்சாவூர்

காவிரிக் கரையிலே என்ற கட்டுரைத் தொகுப்பு நூலாகும். (வேங்கடம் முதல் குமரி வரை என்ற தொடரின் முதல் நூல் பாலாற்றின் மருங்கிலே, இரண்டாம் நூல் பொன்னியின் மடியிலே, மூன்றாவது நூலே காவிரிக் கரையிலே நூலாகும்) இந்நூல் கும்பகோணத்திலிருந்து தொடங்கி கொங்குநாட்டுத் தலங்கள்வரை சென்று 33 கட்டுரைகளில் முடிவுறுகின்றது. இதில் நான் மிகவும் ரசித்து படித்து மகிழ்ந்த கட்டுரையே கீழே காணப்படும் கட்டுரையாகும்.

திருக்குடந்தை மான்மியம் என்று ஒரு புத்தகம். அதில் தாராச்சுரப் படலம் என்று ஒரு படலம். அப்படலத்தில் ஒரு வரலாறு. தாரன் என்று ஓர் அசுரன். அவன் தேவர்களை அடக்கி ஆள விரும்புகிறான். அதற்குச் சிவபெருமானை நோக்கித் தவம் புரிகிறான். அவன் மாத்திரம் என்ன அவனுடைய மனைவியர் நூறு பேருமே இறைவன் திருவடிகளைப் பூசிக்கின்றனர். அவர்கள் எல்லாம் விரும்பிய சிவலோக வாழ்வை அளிக்கிறார் இறைவனும். பலம் மிக்க அந்தத் தாரன் என்ற அசுரன் பூசித்த தலம் தாரேச்சுரம் என்று பெயர் பெறுவதாயிற்று. தாரன் மாத்திரம் என்ன அவன் மகன் மேகதாரனும் அத்தலத்திலிருந்தே அரசாண்டு சாயுஜ்ஜியம் பெற்றிருக்கிறான் என்று மான்மியம் கூறுகிறது.

ஆனால், சரித்திரம் இதை ஒத்துக் கொள்வதில்லை. தாராசுரம் என்ற பெயர் வந்ததற்குச் சரித்திரம் கூறும் காரணம் வேறு. சோழ மன்னனான இரண்டாம் ராஜராஜன் இங்கிருந்து அரசாண்டிருக்கிறான். அவன் ஆண்ட காலம் கி.பி. 1146 முதல் கி.பி. 1163 வரை பதினேழு வருஷங்கள். அவனே இரண்டாம் குலோத்துங்கன் புதல்வனான பரகேசரி ராஜராஜன், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் வரை இவன் ராஜ்யம் பரவியிருக்கிறது. கொங்குநாடு, கங்கநாடு எல்லாம் இவன் ஆட்சிக்கு உட்பட்டு இருந்திருக்கின்றன. இவன் முதலில் கங்கை கொண்ட சோழபுரத்தையே தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கிறான். பின்னர் பழைய பழையாறையை 'எண்டிசைத் தேவரும் புகுதும் ராஜராஜபுரி' என்றே தன் பெயரால் அழைத்திருக்கிறான்.

அவன் காலத்தில் போர் ஒன்றுமே நடக்கவில்லை. ஆனால், தமிழ், சமஸ்கிருதம் கற்பதிலும், கலை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டியிருக்கிறான். 'முத்தமிழுக்குத் தலைவன்' 'ராஜ பண்டிதன்' என்ற விருதுப்பெயர்கள் பெற்றிருக்கிறான். அந்தப் பழையாறை வட்டத்தில் வடகீழ்ப் பகுதியில் ஒரு கோயில் எடுப்பித்து அதை ராஜராஜேச்சரம் என்று அழைத்திருக்கிறான். அங்கு பிரதிஷ்டை செய்த இறைவனை ராஜராஜேச்சுரமுடையார் என்றே வணங்கி யிருக்கிறான்.

**ஒரு மருங்குடைய நாயகி**
**ஒற்றை வெள்விடை ஊர்திமேல்**
**இரு மருங்கு மழை தொழ**
**எழுந்தருள் இராசராசபுரி ஈசனே**

என்று அவனது அவைக்களப் புலவர் ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் இந்த இறைவனைப் பாடியிருக்கிறார். இந்த ராசராசபுரி ஈசுவரரே புராணம் பாடியவர்களால்

ஐராவதேசுவரர் என்று பாராட்டப்பட்டிருக்கிறார். ராஜேசுவரமே நாளடைவில் ராராசுரம் என்று திரிந்து பின்னர் தாராசுரம் ஆயிற்று. இது தலத்தைப் பற்றிச் சரித்திரம் கூறும் செய்தி. நாம் சரித்திரத்துக்கே மதிப்புக் கொடுக்கலாம். அதையே நம்பலாம். இந்தத் தாராசுரம் என்ற தலத்தில் உள்ள ஐராவதேசுவரரைக் காணவே இன்று செல்கிறோம் நாம்.

தாராசுரம் செல்வது மிகமிக எளிது. கும்பகோணத்துக்கு அடுத்த தென்பக்கம் இருக்கும் தாராசுரம் ஸ்டேஷனில் இறங்கினால் அங்கிருந்து கூப்பிடு தொலைவிலேயே கோயில் இருக்கிறது. கோயிலை இனம் கண்டு பிடிப்பதும் எளிது. கலசம், ஸ்தூபி எல்லாம் இல்லாத விமானத்தோடு அந்த வட்டாரத்தில் இருக்கும் கோயில் இது ஒன்றுதான். இதை அடையாளமாக வைத்துக்கொண்டு கோயில் வாயில் வந்து சேர்ந்துவிடலாம். கோயில் எடுப்பித்த காலத்தில் பல பிரகாரங்கள் எல்லாம் எடுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அதில் ஒரு மதில் சிதைந்து கோயில் வாயிலுக்குக் கிழக்கே இன்றும் இருக்கிறது. இடிந்து கிடக்கும் அந்த மதிலைப் பார்த்தே அது எவ்வளவு கம்பீரமாக எழுந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

துர்வாச முனிவர் சாபத்தால் தேவேந்திரனது ஐராவதத்தின் நிறம் மாற அதனால் மனக்கவலையுற்ற ஐராவதம் இத்தலத்துக்கு வந்து இங்குள்ள இறைவனைப் பூசித்துப் பேறுபெற்றிருக்கிறது. அன்று முதல் இறைவனே ஐராவதேசுவரர் என்ற பெயரில் நிலைத்து விடுகிறார். மேலும் முனிவர்களது கோபத்துக்கு ஆளாகிய அந்த யமதருமனுக்கு வெம்மை நோய் வர, அந்நோய் தீர அவன் பல தலங்களுக்குச் சென்று அலைந்து கடைசியாக இங்கு வந்து சிவபெருமானின் திரிசூலம் ஊன்றிய இடத்தில் தோன்றிய திருக்குளத்தில் மூழ்கி வெம்மை நோய் தீர்த்தான் என்று புராணம் கூறும்.

இந்தப் புராண வரலாறுகளைத் தவிர வேறு சிறப்பான வரலாறு இந்தக் கோயிலைப்பற்றி இல்லைதான். ஆனால், கோயில், கோயில் அமைப்பு, அங்குள்ள சிற்பச் செல்வங்கள் எல்லாம் ஒரு நாளில் பார்த்து அனுபவித்து விட்டுத் திரும்பிவிடக் கூடியவை அல்ல. பல நாட்கள் அங்கே தங்கியிருந்து ஒவ்வொன்றையும் அங்குலம் அங்குலமாகப் பார்த்துக் களிக்கவேண்டியவை. ஆதலால் கொஞ்சம் ஆற அமரவே இருந்து பார்க்கலாம். இச்சிற்ப வடிவங்களையெல்லாம்.

கோயில் வாயிலில் நுழைந்ததும் நேரே கருவறைக்குச் சென்றுவிட முடியாது. கோயில் ஒரு சிறிய அளவில் மாடக்கோயிலாக இருக்கும். கோயில் மாடத்தில் ஏறத் தெற்கு நோக்கிக் கொஞ்சம் நடந்து, அதன் பின்னரே மேற்கு நோக்கிப் படிகளில் ஏறவேண்டும். தெற்கு நோக்கி நடக்கும்போதே கிழக்கே பார்த்த ஒரு மாடத்தில் ஒரு கற்சிலை நிற்கும். பார்த்ததும் அதனை அர்த்தநாரியின் வடிவம் என்று கருதுவோம். இடப்பக்கம் மாத்திரம் விம்மிப் புடைத்திருக்கும் மார்பகத்தைக் கண்டு. கொஞ்சம் கூர்ந்து நோக்கினால் அவ்வுருவுக்கு மூன்று தலைகள் இருப்பதும் தெரியும். .

சிறிது சிந்தித்தால் தேவர் மூவரையும் அவர்களுடன் பராசக்தியையும் சேர்த்து அமைத்துக் காட்டிய விசுவரூபம் என்று தெரியும். இப்படி ஒரு அற்புதமான சிலை வேறு

எந்தக் கோயிலிலும் இல்லை. அற்புதம் மாத்திரம் அல்ல, நல்ல அழகான சிலையும் கூட. அந்தச் சிலையின் அழகிலேயே மெய்மறந்து விடாமல் மேலும் நடந்து தெற்கு நோக்கிப் படி ஏறினால் ராஜகம்பீரன் மண்டபம் வந்து சேரலாம். பிறகு ராஜகம்பீரன் மண்டபத்துத் தூண்களை, சுவரை, விதானத்தை யெல்லாம் பார்த்தால் அப்படியே மலைத்து விடுவோம். ஒரு அங்குல இடங்கூட விடாமல் அத்தனை இடத்தையும் சிற்ப வடிவங்களாலேயே நிறைத்திருக்கிறான் இரண்டாம் ராஜராஜன். நர்த்தன விநாயகரே அவனது முத்திரையாக அமைத்திருக்கிறார். சிற்பிகள் ஒரு அங்குல விநாயகர் முதல், ஒரு முழ விநாயகர் வரை (பலர் நடனம் ஆடிக்கொண்டே) தூண்களை நிறைத்திருக்கிறார்கள். இன்னும் அத்தூண்களில் செதுக்கியிருக்கும் அழகு, அத்தூண்களில் வடித்திருக்கும் வடிவங்கள் எல்லாம் எவ்வளவோ வரலாறுகளைச் சொல்லும். இந்த மண்டபத்தின் வட பகுதிக்கே அழைத்துச் செல்ல விரும்புகிறேன். அங்கு தெற்கு நோக்கிய சந்நிதி வாயிலில் சாமரம் ஏந்தி நிற்கும் பெண்கள் இருவர், அவர்களோடு யாதொரு தொடர்பும் கொள்ளாத ஒரு சிற்ப வடிவம் உச்சிஷ்ட கணபதி ஒன்றும் இருக்கும். இவை சாதாரணமானவை.

இனி மேற்கு நோக்கிக் கோயிலுள் நுழைய விரும்பினால் நாம் உடனே போய்விட முடியாது. மூன்று அற்புதமான சிலைகள் வழி மறிக்கும். வாயிலுக்குத் தென்பக்கத்தில் உள்ள அன்னபூரணி, வடபக்கத்தில் உள்ள அதிகார நந்தி, கண்ணப்பர் எல்லாம் நான்கு அடி உயரத்தில் உள்ள அழகிய கற்சிலைகள். அதில் அன்னபூரணி ஓர் உயிர் ஓவியம். கையிலே அவள் அமுத கலசம் ஏந்தி நிற்கிற ஒயில் ஒன்றே போதும். அவளைப் பிரார்த்தித்துக் கொண்டே கோயிலுள் நுழையலாம். நேரே கருவறைக்கே செல்லலாம். கருவறை வாயிலிலே கல்லில் ஒரு சிலை.

செம்பிலே ஒரு படிமம். முன்னையது கார்த்திகேயன், பின்னையது போக சக்தி அம்மன், இரண்டும் பார்த்துப் பார்த்து அனுபவிக்கத் தகுந்தவை. இவர்களைக் கண்டு களித்தபின் ஐராவதேசுவரரையும் வணங்கிவிட்டு வெளியே வந்து ஒரு சுற்றுச் சுற்றலாம். ராஜகம்பீரன் மண்டபத்தின் உள் தோற்றத்தைப் பார்த்தோம். முன்னால், வெளித்தோற்றம் ஒரு தேர் போலவே இருக்கும். தேர்ச்சக்கரங்கள் உருளும், குதிரைகள் ஓடும், மேலும் ஒவ்வொரு வரிசையிலும் எண்ணிறந்த சிற்ப வடிவங்கள், யாழ்வரிசைகள் எல்லாம் மிக்க அழகோடு அமைந்தவை. மேலும் நடந்தால் ஒரு மாடத்தில் அக்கினி உட்கார்ந்திருப்பார். இன்னொரு மாடத்தில் வீரபத்திரர் ஆடிக்கொண்டிருப்பார். திரிபுவனத்தில் கண்ட சரபர் வேறே ஒருசிறு கோஷ்டத்துள் இருப்பார்.



தலைவியும் குறத்தியும்

இவை தவிர யானை சிங்கம் போர், யானையின் மத்தகத்திலே பாய்ந்து அதனைக் கிழிக்கும் சிங்கம் எல்லாம் தத்ரூபம். இன்னும் சிற்ப உலகிலே எண்ணிறந்த வித்தியாசங்கள். ஒரே வடிவிலே யானையும், எருதும் என்றெல்லாம். இக்கோயில் வடபக்கத்து மண்டபத்திலேதான் பிக்ஷாடனரும், அவருடைய அழகில் மயங்கிய ரிஷிபத்தினிகளும் இருந்திருக்கிறார்கள். இவர்களோடு திரிபுராந்தகர், கஜசம்ஹாரர் எல்லாம் நல்ல கல்லுருவில் ஆஜானுபாகுவாக நின்றிருக்கிறார்கள். இவர்கள் தலையில் மண்டபங்கள் விழுந்து விடக்கூடாதே என்று பக்குவமாக அவர்களை அடிபெயர்த்துத் தஞ்சையில் உருவான கலைக்கூடத்துக்கே கொண்டு சென்றிருக்கிறார்கள். தஞ்சை செல்லும்போது அவர்களைப் பார்த்துக் கொள்ளலாம்.

இத்தனையும் பார்த்துவிட்டோமே, இங்கே அம்பிகை கோயில் இல்லையா? என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. அம்பிகையாம் தெய்வநாயகிக்குத் தனியாக ஒரு கோயில் வடக்கே நூறு கஜ தூரத்தில் இருக்கிறது. இது நிரம்பப் பெரிய கோயில் அல்ல. சிற்ப வடிவங்கள் நிறைந்ததும் அல்ல. செல்வத்தையெல்லாம் தான் அள்ளிக் கொட்டி விட்டானே, ஐராவதேசுவரர் கோயிலிலேயே.

இக்கோயிலில் 52 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளுள் பெரும்பாலானவை இரண்டாம் ராஜராஜன், இரண்டாம் ராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன், வீரபாண்டியன் காலத்தியவையாகும். இவைகளை ஆராயுமிடத்து, இக்கோயில் இரண்டாம் ராஜராஜனால் கட்டப்பட்டுப் பின்னர் மூன்றாம் குலோத்துங்கனால் செப்பனிடப்பட்டிருக்கவேண்டும். கோயில் திருமாளிகைச் சுற்றுப் பகுதியில் கீழ்ப்புறம் இக்கோயிலை எழுப்பிய இரண்டாம் ராஜராஜன் அவனுடைய பட்டமகிஷி புவனமுழுதுடையாள் இவர்களது சிலைகள் இருந்திருக்கின்றன. அவர்களையுமே எடுத்துச் சென்று விட்டார்கள் இந்தத் தஞ்சைக் கலைக்கூடத்தார். கோயிலின் கருவறையின் புறச்சுவரில் 63 நாயன்மார் வடிவங்களும், சைவ ஆச்சாரியார் 108 வடிவங்களும் இருக்கின்றன. பெரியபுராண வரலாறுகளை ஆராய்பவர்க்குப் பெரிதும் பயன்படும்.

ஐராவதேசுவரர் பாடல்பெறும் பாக்கியம் பெற்றவர் அல்லர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்த புலவர்களுக்கோ தலங்களில் அக்கறை இல்லை. அவர்கள் அக்கறை எல்லாம் அரசர்களிடத்தே. அதனால் அவர் பாடல் பெறாமலேயே நின்றுவிட்டார். ஆனால், அவரை உருவாக்கிய ராஜராஜன் பாடல் பெற்றவன். அதுவும் அவனது தந்தையின் அவைக்களப் புலவராக இருந்த ஒட்டக்கூத்தராலேயே ராஜராஜன் உலாவிற்கு கண்ணிக்கு ஆயிரம் பொன் வீதம் பரிசுக் கொடுத்திருக்கிறான் அரசன். இதுதவிர, இவனுக்கும் இவனது மனைவிக்கும் நேர்ந்த பிணக்கைத் தீர்க்கவும் பாடியிருக்கிறார் அவர். இதைப்பற்றி ரஸமான வரலாறு, இரண்டு நல்ல பாடல்கள் நமக்குக் கிடைக்கின்றன. அரசி அரசனோடு ஊடி அக்கோபத்தில் தன் அந்தப்புர வாயிலை அடைத்துக்கொள்கிறாள். அரசன் போய்க்

கதவைத் தட்டினால் திறக்கிற வழியாகக் காணோம். அவைப்புலவர் ஒட்டக்கூத்தர் போகிறார்.

நானே இனி உனை வேண்டுவதில்லை
நளின மலர்த்
தேனே ! கபாடம் திறந்திடுவாய்
திறவா விடிலோ
வான் ஏறு அனைய இரவி
குலாதிபன் வாயில் வந்தால்
தானே திறக்கும் நின் கைத்
தலம் ஆகிய தாமரையே.

என்று பாடுகிறார். தேவியோ இன்னும் கொஞ்சம் கோபமுற்று, ஆ! அப்படியா சங்கதி? நானா திறப்பேன்! ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாழ், என்று மற்றொரு தாழ்ப்பாளையும் போட்டுக் கொள்கிறாள். அரசியுடன் வந்த சீதளக் கவிஞனான புகழேந்தி வருகிறார் பின்னால்,

இழை ஒன்ற இரண்டு வகிர்செய்த
நுண்ணிடை ஏந்து வன்னைக்
குழை ஒன்று இரண்டு விழி அணங்கே !
கொண்ட கோபமென்னோ !
மழை ஒன்று இரண்டு கை
மானாபரணன் உன்வாயில் வந்தால்
பிழை ஒன்று இரண்டு பொறாரோ ?
குடியில் பிறந்தவரே !

என்று பக்குவமாய்ப் பாடுகிறார். கதவைத் திறக்கிறாள் அரசி. ஊடல் தீர்கிறது அவளுக்கு. இவ்விரண்டு பாட்டும் எந்தச் சோழ மன்னனைப் பற்றியது என்று பாட்டிலிருந்து தெரியவில்லை. அதனால் பரவாயில்லை. குலோத்துங்கனைப் பற்றி இருந்தால் என்ன ? சுவையோடு அனுபவிக்கத் தகுந்தவைதானே.

*****

# பாரத தேசம் போற்றும் மகாமகம் ஒரு தேசியத் திருவிழா

முனைவர் **S. சுதர்ஷன்,**

வானில் மின்னும் எண்ணிறந்த நக்ஷத்திரங்களினூடே இரவு பொழுதை அலங்கரிக்க சந்திரனும், பகல் பொழுதை ப்ரகாசிக்கச் சூரியனும் தனிச்சிறப்புடன் ஒளி விடுவதைப் போல பாருக்குள்ளே நல்ல நாடான நம் பாரத பூமியில் தமிழகமும் அதனுள் தஞ்சை மாவட்டத்தில் திகழும் கும்பகோணமும் ஒளிவீசித் திகழ்கின்றன.

மேலும் நம் பாரதநாடு மூன்று திசைகளிலுமுள்ள கடலின் மூலம் இயற்கை (சிப்பிகளையும்) முத்துக்களையும், பவளத்தையும் வாரி வழங்கி நாட்டிற்கு நலம் பல நல்கி வருகின்றது. இதனால்தான் நம் நாட்டை மக்கள் அனைவரும் வானுலகில் சிறந்ததொரு புண்ணிய பூமியாகக் கருதுகிறார்கள். இந்த பாரத தேசம் எஞ்சியுள்ள நான்காவது திசையில் இமயமலையை அரணாகக் கொண்டுள்ளது. இந்த மலையடிவாரத்திலுள்ள குகைகளில்தான் ரிஷிகளும்., முனிகளும் வசித்து தவம் பல செய்து உயர்ந்த வலிமை பெற்று அழியா வாழ்வுடன் திகழ்கின்றனர். இம்மலைச் சரிவுகளிலிருந்து (பனிகள் கரைந்து) தோன்றும் நீர்ப்பெருக்கு கீழிறங்கி பல கிளைகளாகப் பிரிந்து நதிகளாக ஓடி சமவெளிகளை செழிக்கச் செய்கிறது. அதாவது இந்த நீர்ப்பாசனத்தால்



நாயக்க அரசிகள்-இராமசாமி கோயில், குடந்தை

முனைவர் **S. சுதர்ஷன்,** நூலகர், சரசுவதி மகால் நூலகம். தஞ்சாவூர்

தானியங்கள் அனைத்தும் நன்கு விளைகிறது. விளையும் பொருட்கள் நதிகளைக் கடந்துச் சென்று வியாபாரம் செய்யப்பெற்று செல்வ பலம் பெற்றனர் நாட்டு மக்கள். நதிக்கரை ஓரங்களில்தான் பல நகரங்களும், ஆலயங்களும் தோன்றி வளர்ந்தன எனில் அது மிகையாகாது. இப்படிப்பட்ட இந்த பாரத தேசம் கோடிக்கணக்கான பலதரப்பட்ட மக்களையும், பிராணிகளையும், ஜீவராசிகளையும் பொறுமையுடன் தாங்கி நிற்கிறது என்பது பெருமையாகும். இந்நாட்டு மக்கள் பலமொழிகளைப் பேசினாலும் அனைவரின் ஆத்மா ஒன்றுதான் அதுபோல அவர்கள் பக்தியின் மூலம் அடையவிழையும் பிறவா நிலை என்னும் வீடுபேறும் ஒன்றுதான்.

இப்பூவுலகிலுள்ள அனைவரும் (சுகமான) இன்பமான வாழ்வு வாழவும், வாழ்வின் நிறைவில் வீடுபேறடைய வேண்டும் என்பதற்காகவும் பல வழிகளையும், வழிபாடுகளையும் மேற்கொள்கின்றனர். அனைத்திற்கும் அடிப்படையாகத் திகழும் புறத்தூய்மை நீரால் அமையும் என்பார் திருவள்ளுவப் பெருந்தகை. இவ்வுலகில் நீர் இயற்கையின் வரப்பிரசாதம் எனினும் நதிகள் பல புண்ணிய தலங்களைக் கடந்து ஓடிவருவதால் புண்ணிய நதி எனப்பெயர்

**த்ரிராத்ரம் ஜாஹ்னவீதீரே பஞ்சராத்ரம்து யாமுனே !**
**ஸத்ய : புனாது காவேரி பாபமாமரணாந்திகம் ||**

அதாவது மூன்று நாட்கள் கங்கை நதியிலும், ஐந்து நாட்கள் யமுனை நதியிலும் நீராடினால் போகும் பாவங்கள், காவேரி நதியில் நீராடிய உடனேயே நமது பாபங்கள் அனைத்தும் நம்மைவிட்டு அகலும் என்பது சான்றோர் வாக்கு. மேற்படி புண்ணிய நதிகளில் ஒன்றான காவிரி நதி ஓடிப்பாய்ந்து வளம் பல நிறைந்துள்ள நாடு சோழ வளநாடு. இது பல மாவட்டங்களைத் தன்னுள் கொண்டது. அவற்றுள் நன்செய் வளத்தையும், நெஞ்சையள்ளும் கலை வளத்தையும் கொண்டதுடன் இம்மாவட்டத்தில் தோன்றிய இலக்கிய, இலக்கண, கணித, வானியல் மற்றும் இசை வல்லுநர்களையும் வளர்த்து உலகம் போற்றும் மேதைகளாகத் திகழ வைத்த தஞ்சை மாவட்டத்தில் காவிரியும், அரிசிலாறும் புதுப்புனலூட்ட பொலிவுபெறும் நகரம் கும்பகோணமாகும். இந்த நகரத்திற்குத்தான் தங்களை புனிதமாக்க கங்கை, யமுனை, நர்மதா, சரஸ்வதி, காவிரி, கோதாவரி, துங்கபத்ரா, கிருஷ்ணா, சரயு ஆகிய ஒன்பது நதிகளும் கன்னிப்பெண்களாக உருவமெடுத்து வந்து சிவபெருமானிடம் வேண்டி நின்றனர். சிவபெருமானும் அருள்பாலித்த இடம் மகாமகக் குளக்கரை. இந்த ஒன்பது நதிகளும் இக்குளத்தில் சங்கமமாகின்றன என்பது கும்பகோணபுராணம் கூறும் செய்தியாகும்.

சூரிய பகவான் கும்பத்தில் இருக்கும்பொழுது சூரியனை சிம்மத்திலிருக்கும் சந்திரனும், குருவும் பார்க்கும் காலம் (அ) நாள் மகாமகம் என்று சான்றோர்களால் கொண்டாடப்பட்டு நம்மாலும் தொடரப்பட்டு வருகிறது. இந்நிகழ்வு பன்னிரண்டு ஆண்டிற்கு ஒருமுறை நிகழும் என்பதில் கோள்களைக் கணக்கிடும் ஜ்யோதிஷர்களுக்கும், வானியல் வழி கோள்களைக் கணக்கிடும் அறிவியல் அறிஞர்களுக்கும் வேறுபாடில்லை. இது மாசி மாதம் மக நக்ஷத்திரமும், பௌர்ணமி திதியும் கூடிய நன்னாளில் வ்ருஷப லக்னத்தில் தொடங்கப்பெறும். இப்படிப்பட்ட சிறப்பான நாளில் புனித நீராடுதல் என்னும் பழக்கம் பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சிறப்பான மகாமகத் திருநாளில் கும்பகோணத்திலுள்ள மகாமகக் குளத்திற்கு பல தேசத்து மக்களும் வந்து புனித நீராடுவதுடன் நாமும் நீராடி புறத்தூய்மை பெறுவதோடு, அகத்தூய்மையும் பெற்று வாழ்வில் அஷ்டைச்வர்யங்களையும் அடைந்து நிறைவில் (மோக்ஷம்) வீடுபேறு அடைவோமாக.

*****



பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

*முற்றாத மூங்கிலை எளிதில் வளைக்கலாம். முற்றின மூங்கிலைப் பலவந்தமாக வளைக்க முயன்றால் ஒடிந்து போகும். அதுபோல் இளமையான மனதை ஈசுவரனிடம் செல்லும்படித்திருப்புவது எளிது.

*உலகத்தில் பரிபூரணமடைந்தவர்கள் இருவகையினர். உண்மையை அறிந்து, பின், பிறரைப் பற்றிய சிந்தனையேயில்லாமல், தாம் மட்டும் அந்த உண்மையை அனுபவித்துக் கொண்டு மௌனமாக இருப்பவர்கள் ஒருவகையினர். பெற்ற உண்மையைத் தாம் மட்டும் அனுபவிப்பதில் சந்தோசடையாமல் நம்மோடு உண்மையை அனுபவிக்க வாருங்கள் என்று மற்றவர்களையும் கூவியழைக்கும் சுபாவமுடையவர்கள் மற்றொரு வகையினர்.

–பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

# மனோரா கோட்டையும் உப்பரிகையும்

சோழநாட்டு துறைமுக நகரங்களுள் மல்லிப்பட்டினமும் ஒன்று. விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயரின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டின் அரசப் பிரதிநிதியாக இருந்த சாளுவ நாயக்கர் என்பவர் பெயரால் இவ்வூர் இப்பெயர் பெற்றது.

பிரதாசிம்மன் காலம் முதல்(1739—1763) மராட்டியர் ஆங்கிலேயருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தனர். ஐரோப்பியப் போரில் நெப்போலியன் போனபார்ட் தோற்கடிக்கப்பட்டது மராட்டியருக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது.



ஆ ங் கி லே ய ரு டை ய வெற்றியையும் நெப்போலியனின் தோல்வியையும் கண்டு மகிழ்ந்தார் மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோஜி. இந்த வரலாற்று நிகழ்ச்சிக்கு நினைவுச் சின்னம் ஒன்றை இவ்வூரில் கி.பி.1818ஆம் ஆண்டில் சரபோஜி உருவாக்கினார்.

30 மீட்டர் உயரமுள்ள இக்கோபுரம் எட்டு அடுக்குகளைக் கொண்டதும் சிறு கோபுரம் எனப் பொருள் தரும் மினாட் என்று ஆங்கிலச் சொல்லால் குறிப்பிடப் பட்ட இக்கட்டிடம் காலப் போக்கில் மனோரா என்று பெயர் பெற்றது. இது கலங்கரை விளக்காகப் பயன்படுத்தப்பட்டது மட்டுமின்றி கீழ்ப் பகுதி ஆயுதக் கிடங்காகவும் பயன்படுத்தப்பட்டது.

வட்டவடிவ அகழியின் உள் கற்கோட்டையும் அதற்குள் செல்ல இரு வழிகளும் மேற்கு நோக்கி ஒரு வாயிலும் உள்ளன.

மனோரா கோட்டையும் உப்பரிகையும் கட்டப்பட்ட பின் இவ்வூர் சரபோஜிராஜன் பட்டினம் என்று அழைக்கப்பட்டு வந்தது. இப்போது மனோரா தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் உள்ளது.

தஞ்சாவூரிலிருந்து 65 கி.மீ. தூரத்திலும் பட்டுக்கோட்டையி லிருந்து 13 கி.மீ. தூரத்திலும், புதுக்கோட்டையிலிருந்து 72கி.மீ. தூரத்திலும் இவ்வூர் அமைந்துள்ளது.

— மலர்க்குழு

# நற்சூதராம் மூர்க்கரும் குடந்தைப்பதியும்

**மணி. மாறன்.**

சைவ சமயம் பழமையும் பெருமையும் வாய்ந்தது. பரந்து விரிந்த சிறந்த கொள்கைகளைக் கொண்டது. இது அல்லது என்னும் பிணக்கு இன்றி அனைத்துச் சமய உண்மைகளையும் ஏற்ற பெற்றி தழுவிப் போற்றிக் கொள்ளுவது. அன்பு நெறியினையே அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய சைவ சமயத்தைச் சார்ந்த சைவ நன்மக்களால், அருட்பெருஞ் சான்றோர்கள் எனப்பெரிதும் போற்றி வழிபடப்பெற்ற அறுபத்து மூவர் ஆகிய அடியவர் பெருமக்களே நாயன்மார் எனப்பட்டனர். நாயன்மார் நம் தமிழகத்தில் தோன்றியவர்கள், வாழ்ந்தவர்கள், அவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு காலங்களில் தோன்றிய சான்றோர்களாவர். பல்வேறு குலத்தினராய் இவர்கள் திகழ்ந்த போதும், நற்பண்புகளின் உறைவிடமாய் விளங்கியவர்கள் உயர்ந்த கொள்கைகளையும், சிறந்த குறிக்கோளினையும் உடையவர்கள்.

அடியவர்க்கு அன்பில்லார், ஈசனுக்கு அன்பில்லார், எவ்வுயிர்க்கும் அன்பில்லார், நமக்கும் அன்பில்லார் என்னும் உண்மை உணர்ந்தவர்கள். அதனால் இறைவனிடத்தும் அடியவரிடத்தும், எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண் டொழுகியவர்கள். கொண்ட



மூர்க்க நாயனார்

**மணி. மாறன்.** தமிழ்ப் பண்டிதர், சரசுவதி மகால் நூலகம். தஞ்சாவூர்

கொள்கையில் உறுதி தளராத உள்ளம் படைத்தவர்கள். தம் கொள்கையினை நிலைநிறுத்திக் காப்பாற்ற உயிரையும் துறக்கும் துணிவு மிக்கவர்கள். தத்தமக்கு ஏற்ற தொண்டினை ஏற்றுக் கொண்டு,அதனை எவ்வாறேனும் இடையூரின்றி செய்து முடித்தவர்கள். ஆண்மையும் அருளும் மிக்கு கொண்டு பூசுகின்ற நீறுபோல் உள்ளத் தூய்மையும் ஒருங்கு அமைந்தவர்கள். ஐம்பூதங்களும் தம் நிலையில் கலங்கினும், இறைவன் தாள் மறவாதவர்கள்.

ஓடும் செம்பொன்னும் ஒன்றாகவே கொள்ளும் உணர்வினர். கூடும் அன்பினில் கும்பிடவே அன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினர். ஈர அன்பினர். யாதும் குறைவிலார். அவர்களுக்கு ஆரம் கண்டிகை, ஆடையும் கந்தையே, ஈசன் பணி அன்றி வேறு எதிலும் நேசம் கொள்ளாதவர்கள். அருமையாம் நிலையில் நின்று அன்பினால் இன்பம் ஆர்ந்தவர்.

இத்தகைய சைவ நாயன்மார்தம் அருமை பெருமைகளை நம்மால் அளவிடமுடியாது. அவர்களின் தூய சிறந்த அரும்பெறல் வாழ்க்கை, நம் அனைவருக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்தகு சான்றோர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்து நாமும் அவர்களைப் போல நடந்து நம்முடைய வாழ்வினையும் பொருள் பொதிந்ததாக ஆக்கிக்கொள்வோம். அத்தகைய சான்றோர்களுள் ஒருவராகிய மூர்க்க நாயனாரின் வாழ்வும் குடந்தையோடு அவர்கொண்ட தொடர்பும் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.

மூர்க்கநாயனார் பற்றிக் குறிப்பிடும் சுந்தரமூர்த்தி நாயனார், தன் திருத்தொண்டத் தொகையில்,

**நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன் (5)**

என்று கூறி இவரின் சிறப்புரைக்கின்றார்.

நம்பியாண்டார் நம்பி தன் திருத்தொண்டர் திருவந்தாதியில்,

**தண்டலை சூழ்திரு வேற்காட்டூர் மன்னன் றகுகவற்றாற்**
**கொண்டவல் லாயம்வன் சூதரை வென்றுமுன் கொண்டபொருண்**
**முண்டநன் னீற்ற னடியவர்க் கீபவன் மூர்க்கனெனன்பர்**
**நண்டலை நீரொண் குடந்தையின் மேவுநற் சூதனையே (38)**

என்கிறார். இதன் பொருள் சோலைகள் சூழ்ந்த திருவேற்காட்டின் தலைவர், முன் தான் ஈட்டிய பொருளை எல்லாம் திருநெற்றியில் நல்ல நீற்றினை உடைய சிவனடியார்களுக்கு வழங்கி வந்தார். பின் வறுமை சூழவே திருவேற்காட்டூரின்றும் குடந்தையிற் சென்று சேர்ந்தார். நண்டுகள் அலைதற்கிடமாகிய நீர்வளமுடைய திருக்குடந்தைப் பகுதியில் தக்க சூதாடுதலில் ஈடுபட்டு வரும் பொருளினைக் கொண்டு அடியார்களுக்கு அமுதளித்து வந்தார். இதனாலே இவர் மூர்க்கர் என்றழைக்கப்பெற்றார் என்கிறது. தொகை நூல் நாயனாரது பெயரினை எடுத்துரைத்தது. வகை நூல் ஊரும் பெயரும் சரித வரலாறும் திருத்தொண்டின் திறமும் எடுத்துக்கூறியது.

இதன் விரிவை அருண்மொழித்தேவர் என்னும் சேக்கிழார் நாயனார் அருளிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் பன்னிரண்டு செய்யுட்களில் விரித்துரைக்கின்றது.

மன்னிப் பெருகும் பெருந்தொண்டை வளநாடதனில் வயல்பரப்பும்
நன்னித் திலவெண் டிரைப்பாலி நதியின் வடபா னலங்கொள்பதி
அன்னப் பெடைகள் குடைவாவி யலர்புக் காட வரங்கினிடை
மின்னுக் கொடிக டுகிற்கொடிகள் விழவிற் காடு வேற்காடு (3618)

இயற்கைவளம் குன்றாத, பெருமை மிகு மக்களையும், மங்கலத்தையும் கொண்ட நாடு திருவேற்காடு என்கிறது. வேல மரங்களின் அடர்த்தி பற்றியும், முருகப்பெருமான் திருக்கை வேல் பற்றியும் வந்த பெயர் வேற்காடு என்பதாக,

செம்பொற் புரிசைத் திருவேற்கா டமர்ந்த செய்ய சடைக்கற்றை
நம்பர்க் கும்பர்க் கமுதளித்து நஞ்சை யமுது செய்தவருக்
கிம்பர்த் தலத்தில் வழியடிமை யென்றுங் குன்றா வியல்பில்வருந்
தம்பற் றுடைய நிலை வேளாண் குலத்திற் றலைமை சார்ந்துள்ளார். (3619)

சிவபெருமானிடத்துச் செய்யும் வழியடிமைத்திறம் என்றும் குன்றாத இயல்பில் வரும் பற்றுடையது வேளாளர் குலம்.

கோதின் மரபிற் பிறந்துவளர்ந் தறிவு கொண்ட நாட்டொடங்கி
ஆதி முதல்வர் திருநீற்றி னடைவே பொருளென் றறிந்தானார்
காத லடியார்க் கமுதாக்கி யமுது செய்யக் கண்டுண்ணும்
நீதி முறைமை வழுவாத நியதி பூண்ட நிலைமையார் (3620)

தூய வடிசி னெய்கன்னல் சுவையின் கறிக ளவையமைத்து
மேய வடியார் தமைப்போற்றி விருப்பா லமுது செய்வித்தே
ஆய பொருளு மவர்வேண்டும் படியா லுதவி யன்புமிக
ஏயு மாறு நாடோறு மினைய பணிசெய் தின்புற்றார். (3621)

மெய்ப்பொருளை அடைவதற்குரிய வழிகளுள் சிறந்தது சிவனடியார்களுக்கு அமுதூட்டி வழிபடுதலும் ஆகும். அடியாரை ஊட்டி மகிழும் நியமத்தினை நியதியாக மேற்கொண்ட பெரியோர் தம் உடைமை முழுவதும் இழந்தாலும், உள்ளனவற்றை எல்லாம் விற்றும் அப்பணியினைத் தொடர்வர். ஈந்துவக்கும் இன்பம் என்பது வள்ளுவர் வாக்கு.

இன்ன செயலி னொழுகுநா ளடியார் மிகவு மெழுந்தருள
முன்ன முடைமை யானபொருண் முழுது மாள வடிமையுடன்
மன்னு காணி யானநில மற்றுமுள்ள திறம்விற்றே
அன்ன மளித்தே மேன்மேலு மாரா மனத்தா ராயினார். (3622)

அங்க ணவ்வூர் தமக்கொருபற் றடியார் தங்கட் கமுதாக்க
எங்குங் காணா வகைதோன்ற விலம்பா டெய்தி யிருந்தயர்வார்
தங்கும் வகையாற் றாமுன்பு கற்ற தன்மை நற்சூதாற்
பொங்கும் பொருளாக் கவுமங்குப் பொருவா ரின்மை யினிற்போவார் (3623)

பெற்ற மேறிப் பலிக்குவரும் பெருமா னமருந் தானங்கள்
உற்ற வன்பாற் சென்றெய்தி யுருகு முள்ளத் தொடும்பணிந்து
கற்ற சூதா னியதியாங் கரும முடித்தே கருதாரூர்
செற்ற சிலையார் திருக் குடந்தை யடைந்தார் வந்து சிலநாளில் (3624)

இருளாரு மணிகண்ட னடியார்க்கின் னமுதாக்கப்
பொருளாய மெய்துதற்குப் புகழ்குடந்தை யம்பலத்தே
உருளாயச் சூதாடி யுறும்பொருள்வென் றனநம்பர்
அருளாக வேகொண்டங் கமுதுசெய்வித் தின்புறுவார். (3625)

முற்சூது தாந்தோற்று முதற்பணய மவர்கொள்ளப்
பிற்சூது பலமுறையும் வென்றுபெரும் பொருளாக்கிச்
சொற்சூதான் மறுத்தாரைச் சுரிகையுரு விக்குத்தி
நற்சூதர் மூர்க்கரெனும் பெயர்பெற்றார் நானிலத்தில் (3626)

சூதினில்வென் றெய்துபொருள் துரிசற்ற நல்லுணர்விற்
றீதகல வமுதாக்கு வார்கொள்ளத் தாந்தீண்டார்
காதலுட னடியார்க ளமுதுசெயக் கடைப்பந்தி
ஏதமிலா வகைதாமு மமுதுசெய்தங் கிருக்குநாள் (3627)

நாதன்ற னடியார்க்கு நல்லடிசி னாடோறும்
ஆதரவி னாலமுது செய்தவித்தங் கருளாலே
ஏதங்கள் போயகல விவ்வுலகை விட்டதற்பின்
பூதங்க ளிசைபாட வாடுவார் புரம்புக்கார் (3628)

வல்லார்க டமைவென்று சூதினால், வந்தபொருள்
அல்லாருங் கறைக்கண்ட ரடியவர்க டமக்காக்கும்

நல்லார்நற் சூதரா மூர்க்கர்கழ னாம் வணங்கிக்
கொல்லார்சீர்ச் சோமாசி மாறர் திறஞ்சொல்லுவாம் (3629)

சூது என்பது ஐம்பெரும் பாதகங்களுள் ஒன்றாகும். அதனையும் பயன்படுத்தும் வகையினால் நற்சூதாகும் நிலையும், அதுவே வீடு பேற்றிற்கு வழியாகும் நிலையும் உண்டு. சூதாடுதல் ஓர் கலை அதனைப் பயில்வதால் கேடில்லை. ஆனால், பயன்படுத்தும் வகையால் கேடுவரும். மூர்க்க நாயனார் தங்கும் வகையால் தான் முன்பு நற்சூது கற்றிருந்தார். தனக்கு உடைமைகளிலிருந்த போது அச்சூதினைப் பயன்படுத்தவில்லை. வறுமையுற்றபோது அடியார்களுக்கு அமுது ஊட்டி, பின்னர் தாம் உண்ணும் நியதி தவறாமல் இருக்கும் பொருட்டு சூதாடுதல் மூலம் பொருள் ஈட்டினார். அதுவே வீடு பேறடையக் காரணமாக அமைந்தது. சிவன் பதிகளிலும், விழாக்களிலும் சூதாடுதல் மிகப்பெரும்பாவம். அது அறவே விலக்கத் தக்கதாகும். ஆனால், சூதாடுதலால் வரும் பொருளை சிவனுக்கும், அடியார்க்கும் பயன்படுத்துதல் நன்மையினையே பயக்கும்.

மூர்க்கநாயனார் செய்த சிவத்தொண்டு நாள்தோறும் தன் இல்லம் நாடி வரும் அடியார்களுக்கு வாழை இலை போட்டு அதில் வகை வகையான காய்கறிகள் வைத்து, அன்னமளிப்பதேயாகும். இப்படி நல் உணவு படைத்து அவர்கள் அனைவரும் உண்டபின்னர் தாம் கடைசியாக உணவருந்துதலையே வழக்கமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

தொண்டை நாட்டில் பாய்ந்து, அந்நாட்டினை வளமிக்கதாக வைத்திருக்கக் கூடிய பாலாற்றின் வடகரையில் அமைந்துள்ள திருவேற்காடு எனும் ஊரில், மிகப்பெரும் செல்வ வளம் பொருந்திய வேளாளர் மரபில் தோன்றியவர்தான் மூர்க்க நாயனார். பொதுவாக மனிதர்களின் இயல்பே மேலும், மேலும் செல்வம் சேர்த்தல், தனக்கு மட்டுமின்றி எதிர்காலத் தலைமுறைக்கும் வேண்டும் என்று ஏராளமான பொருளைச் சேர்த்தலே என்ற நிலையிலிருந்து சற்றே விலகி ஆதி முதல்வர் திருநீற்றின் அடைவே பொருள் என்பதை உணர்ந்தவராய், தன் முன்னோர் தேடிய பொருளையும், தான் தேடிய பொருளையும் வைத்துக்கொண்டு அடியார்களுக்கு அமுதூட்டி மகிழ்ந்தார்.



மூர்க்க நாயனார் – தாராசுர சிற்பக்காட்சி

அமுது வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்றதால் கைப்பொருள் இழந்தார். பின் நிலம், வீடு உள்ளிட்டவற்றையும் விற்று முதலாக்கி அப்பொருள் கொண்டு அமுது படைத்தார். அதுவும் இழந்த நிலையில் தான் முன்பு கற்ற சூதாடுதல் மூலம் பொருளீட்டி உணவளித்தார். உள்ளூரில் சூதாட யாரும் இல்லாத நிலையில், ஊரைவிட்டே கிளம்புவதென முடிவு செய்தார். தன் சொந்த ஊரினை விட்டுக் கிளம்பி திருக்குடந்தைத் தலத்திற்கு வந்து சேர்ந்தார். வரும் வழியில் இருந்த ஊர்களிலெல்லாம் சிவதரிசனை செய்து கொண்டே குடந்தை வந்தார். வந்த அவர் "புகழ்க் குடந்தை அம்பலத்தே உருளாய சூதாடி உறும்பொருள் வென்றன நம்பர் அருளாகவே கொண்டு அங்கு அமுது செய்வித்து இன்புறுவார்" எனச் சேக்கிழார் பெருமான் சுட்டுவதற்கேற்ப, அங்கிருந்த அம்பலத்தே (இன்றைய குடந்தை பெரியமடம்) சென்று சூதாடினார். அதன் மூலம் கிடைத்த பொருளைக் கொண்டு அடியார்களுக்கு அன்னம் அளித்து வந்தார்.

சூதாட்டத்தின்போது முதலில் தாம் தோற்பது போல் பொர்ருள் இழந்து நடிப்பார். பின்னர் தொடர்ந்து ஆடப்படும் சூதில் இவரே வெற்றி பெற்று பெரும் பொருளைக் கைக்கொள்வார். தோற்றவர்கள் யாராவது பொருள் தர மறுத்தால் அவர்களை மிரட்டி உதைத்து சுரிகை (கத்தி) யால் குத்தி தண்டித்துப் பொருளைக் கைப்பற்றுவார். இதனாலேயே இவருக்கு மூர்க்கர் என்ற பெயர் வந்தது. இப்பெயர் இவரின் செயலால் ஏற்பட்ட காரணப்பெயராகும். அச்சூதினால் வந்த பொருளை தாம் தீண்டாமலும், பிற காரணங்களுக்குச் செலவிடாமலும் சிவனடியார்களுக்கு அமுது படைக்கவே பயன்படுத்தியதால் அச்சூது நற்சூது எனப்பட்டது. அதனால் அவர் செய்த செயல் அவரைப் பற்றாது என்பது சைவ சித்தாந்தக் கருத்தாகும். அத்தகைய சிவத்தொண்டு செய்த மூர்க்க நாயனாரை இறைவன் ஆட்கொண்டருளிய செய்தியினையும் சேக்கிழார் பெருமான் அழகுறச் செப்பியுள்ளார். வீரசைவ மடமாகிய குடந்தை பெரியமடத்தோடு அவர் வரலாறு இணைத்துப் போற்றப்பெறுகின்றது. மூர்க்க நாயனாரைப் போற்றும் விதத்தில் அமைக்கப்பெற்ற அவரின் திருவுருவச்சிலை, குடந்தை பெரிய மடத்தில் உள்ள வீரபத்திர சுவாமி கோயில் வளாகத்தில் இன்றும் உள்ளது. இரண்டாம் இராஜராஜசோழன் எடுத்த தாராசுரம் திருக்கோயிலில் மூர்க்கநாயனார் சூதாடுதலும், அதனால் பெற்ற பொருள்கொண்டு அடியார்க்கு உணவிட்டு உபசரித்தலுமாகிய காட்சிச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

*****

# குடந்தையில் கோயில் கொண்ட குலகுரு

**முனைவர் ஆ. வீரராகவன்,**


நாயக்க மன்னரும் தேவியரும் -குடந்தை

குடந்தை எனும் குடமூக்கில் கோயிலாய்க் கொண்டு திகழ்பவர் கோமளவல்லி நாயிகா உடனுறை ஸ்ரீசார்ங்கபாணி ஸ்வாமி. பொற்றாமரைக்குளம் அங்குள்ள புண்ணிய தீர்த்தம். மகத்தன்று மகாமகக் குளத்தில் நீராட்டம் போலே பொற்றாமரைக் குளத்தில் நீராடுதலும் சிறப்பு வாய்ந்த ஒன்று. அந்த பொற்றாமரைக் குளத்தினை திருமங்கை ஆழ்வார்-- **பேர் பாடித் தண்குடந்தை நகரும் பாடி பொற்றாமரைக்கயம் நீராடப்போனாள் பொருவற்றாள் என்மகளும் பொன்னும் அஃதே** என்று திருநெடுந்தாண்டகப் பாடல் வழி போற்றியுள்ளார். அத்திருக்குளத்தில் ஆண்டுதோறும் மாசிமகத்தில் குடந்தை சார்ங்கபாணி ஸ்வாமியின் தெப்பத்திருவிழா நடைபெறுகிறது. தை மாதம் சார்ங்கபாணியின் நாயிகையான கோமளவல்லி நாச்சியார் பொற்றாமரைக் குளத்தில் தைப்பொங்கல் மறுநாள் கனுபிடி வைக்கிறார். குடந்தையில் கருவறை மூர்த்தி ஆராவமுதன், அரவணையில் கண் துயில்பவன். அவரை திருமழிசை ஆழ்வார்---

**நடந்தகால்கள் நொந்தவோ ? நடுங்கு ஞாலமேனமாய்**
**இடந்த மெய்குலுங்கவோ ? விலங்கு மால்வரைச்சுரம்**
**கடந்தகால் பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள்**
**கிடந்தவாறெழுந்திருந்து பேசு வாழி கேசனே**
என்று பாடினார்.

அந்த குடந்தைக்கிடந்தான் அல்லது சார்ங்கபாணிப் பெருமாளின் நாயிகையான கோமளவல்லி நாச்சியார் திருக்கோயில் முன்பு தஞ்சை நாயக்க மன்னர்களின் குலகுரு கோயில் கொண்டுள்ளார். அய்யா குமாரதாததேசிகன் என்பது அவர் பெயர்.

அவர் சடமர்ஷணகோத்திரம், நாத-யாமுன-ஸ்ரீசைலபூர்ண குருகாதீசர் முதலான பரம தேசிகர்களின் (ஔரஸ) பெண் வம்சத்தில் ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமியின் பௌத்திரனாகவும் வேங்கட தேசிகனுக்கு திருக்குமாரராகவும் வைகாசி ரோஹிணியில்

**முனைவர் ஆ. வீரராகவன்,** சம்ஸ்க்ருத பண்டிதர். சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

பிறந்தார். அவர் தஞ்சை நாயக்க மன்னரின் குலகுருவாகவும், ஆஸ்தான வித்வானாகவும் எழுந்தருளியிருந்தார். அவரைப்பற்றி நீலகண்டதீக்ஷிதர் தன் கிரந்தத்தில் ஷட்தர்சினி ப்ரவீணா; குமாரதாததேசிகா: என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர் சுதர்சன அனுக்ரஹத்தால் ஜ்ஞானை ஐச்வர்யத்தைப் பெற்றவர். பாரிஜாதாபஹரணம், நிக்ஷேபரக்ஷாவ்யாக்யா, ஸ்ரீபாஷ்யவ்யாக்யா, விசிஷ்ட்டாத்வைதசரணி, பஞ்சகாலக்ரியா தீபிகா, உஷாஅநிருத்தம், ராமாயண கதாசாரம், ஸூத்ரகல்பபாஷ்யம், வ்யாகரணதீபிகா, கணாதபரிபாடீ, கபிலதந்த்ரசாரம், அபயபிரதானஸார உரை போன்றவை அவர் இயற்றிய நூல்கள். (தேசிகன் 7வது நூற்றாண்டு நிறைவு மலர்-1968, ப.எண்.470) அவரை திருக்குடந்தை ஆராவமுதனின் நாயகியார் ஸ்ரீகோமளவல்லி நாச்சியார் திருச்சந்நிதி முன்பு இன்றும் நாம் கண்டு வணங்கலாம். அவருக்குப் பின் அந்த குரு ஸ்தானத்தை அலங்கரித்த ஸ்ரீ லக்ஷ்மீநாராயணர் என்பவரால் ஸ்ரீஅய்யா குமார தாததேசிகனின் திருக்கோயில் ஸ்ரீகோமளவல்லித்தாயார் கனவில் கொடுத்த கட்டளையின் பேரில் அவருக்கு அங்கே கோயில் நிறுவப்பெற்றது. ஸ்ரீ லக்ஷ்மீநாராயணர் தமது குருவின் கடாக்ஷத்தால் பேறு பெற்றதை நினைத்து அய்யா குமாரதாததேசிக சம்பாவனை, "அய்யாகுமார தாததேசிகன் வைபவபிரகாசிகை" என்ற இரண்டு குறுநூல்களை இயற்றியுள்ளார். அவை இரண்டும் ஸ்ரீஅய்யாகுமாரதாததேசிகன் இயற்றிய பாரிஜாதாபஹரண நாடகத்தின் முன்னுரையில் (ப.எண்.21-24ல்) காணக்கிடைக்கின்றன.

நாயக்க மன்னர்களின் உதவியால் ஸ்ரீகுமாரதாததேசிகன் பழுதடைந்த சோழ திவ்யதேசங்களையெல்லாம் புனருத்தாரணம் செய்தார். ஆதலால் ஸ்ரீகுமாரதாத தேசிகனுக்கு ஆலயம் தோறும் முதல் மரியாதையும் தஞ்சை விண்ணாற்றாங்கரை ஸ்ரீநீலமேகஸ்வாமி சந்நிதிக்கு அருகில் வசிப்பிடமும் ஏற்படுத்தப்பட்டன. அவர் ஒவ்வொரு ஆண்டும் வசந்தருதுவில் (சித்திரை- வைகாசி மாதங்களில்) ஸாங்க தர்சபூர்ண மாசம், ஜ்யோதிஷ்டோமம், உக்த்யம், அதிராத்ரம், அப்தோர்யாமம், ஷோடசீ, வாஜபேயம், அக்னிசித்யம், பௌண்டரீகம் போன்ற யாகங்களைப் புரிந்தார் இவையாவும் தஞ்சை, விண்ணாற்றாங்கரை ஸ்ரீநீலமேகப்பெருமாள் கோயிலிலே நடைபெற்று வந்ததால் ஸ்ரீநீலமேகப்பெருமாளுக்கு கண்டருளப் பண்ணிய பிரசாதத்தையே வேள்விகளுக்கு அவியுணவாக அளித்து மகிழ்ந்தார் ஸ்ரீஅய்யாகுமாரதாத தேசிகன். இவரது காலத்தில் பல்வேறு அக்கிரஹாரங்கள் தோற்றுவிக்கப் பட்டன. அவற்றுள் ரகுநாதபுரம் (இப்பெயரில் நிறைய ஊர்கள் உள்ளதால் குறிப்பிட்ட அக்கிரஹாரம் எது என்று ஆய்ந்தறிய வேண்டும்.) பௌண்டரீகபுரம் (ஒப்பிலியப்பன் கோயிலுக்கருகில் அமைந்த ஏனாதி மங்கலம்) என்பன சோழ நாட்டில் திகழ்பவை.

*****

# வரலாற்று நோக்கில் மகாமகத் திருவிழா

டி. ரவி,

**திருக்குடந்தை வரலாறு**

படைத்தலையும், அழித்தலையும் செய்யும் சிவபெருமான் இப்பூலோகத்தையும் பிரளயத்தால் அழித்திட விரும்பியபோது சிருஷ்டி கர்த்தாவான பிரம்மதேவர் சிவபெருமானை அணுகி வேதசாஸ்திரங்களும், உயிர் அணுக்களும் (சிருஷ்டி பீஜமும்) இப்பிரளயத்தால் அழிந்து போய் விடாது அவற்றைக் காப்பது உமது கடமை என எடுத்துரைத்தார். பிரம்ம தேவனின் நல்லெண்ணைத்தை உணர்ந்து சிவபெருமான் அமிர்தத்தை நீராக்கி மண்ணால் ஒரு குடம் செய்து குடத்தை அமிர்தத்தால் நிரப்பினார். அமிர்தம் நிரம்பிய குடத்திலுள்ள வேதங்களையும் சிருஷ்டி பீஜத்தையும் அடக்கி குடத்தின்மேல் மாவிலை, வில்வம், தேங்காய், பூணூல் இவற்றைச் சார்த்தி மேரு சிகரத்தில் இருத்திவிடக் கட்டளையிட்டார். சிவபெருமானின் வேண்டுகோளின்படி பிரமதேவர் அவ்வாறே செய்து முடித்தார்.



இராமசாமி கோயில் – குடந்தை

சிவபெருமானின் கட்டளைப்படி பிரளயம் ஏற்பட்டது. இப்பிரளயத்தில் அமிர்தம் நிரப்பி வைக்கப்பட்ட ‘பூர்ண கும்பம்’ வெள்ளத்தில் சிதைந்து அழியாது மிதந்துகொண்டே தென்னிந்தியாவிற்கு வந்து ஒரு இடத்தில் தங்கியது. பிரளயத்தின் காலம் முடிந்தது. வெள்ளத்தின் அழிவுகளும் தேங்கிய தண்ணீர் தேக்கங்களும் நீங்கின. மிதந்து சென்று தங்கிவிட்ட அமிர்த குடத்தைக் காண பிரமதேவரும், அவரைப் பின்தொடர்ந்து விண்ணுலகத்தேவர்களும் உடன்வர அக்குடமுள்ள இடத்திற்கு வந்தடைந்தனர். இதை அறிந்த சிவபெருமான் வேடன் போல் மாறுவேடம் பூண்டு அமிர்த குடம் தங்கியுள்ள இடத்திற்கு சென்றார். தான் வைத்திருந்த அம்பினால் இந்த அமிர்தகுடத்தின் வாயைத் தகர்த்தெறிந்தார். குடம் சிறு சிறு துண்டுகளாகச் சிதைவுற்றது. இக்குடத்தின் ஒவ்வொரு பாகம் விழுந்த இடம் திருத்தலங்களாக ஆகின. குடத்தின் மூக்கு விழுந்த இடம் “திருக்குடந்தை” எனப்பெயராகியது. இக்குடத்தின் மற்றொரு பாகமாகிய குடத்தின் வாயில் விழுந்த இடம் குடவாயில், மாவிலை, வில்வம், பூணூல் விழுந்த இடமெல்லாம் சிவத்தலங்களாக ஏற்பட்டன. இத்தகு சிறப்புக்குரிய தலங்களே இன்றைய கும்பகோணத்தைப் புகழ்பெறச் செய்துவருகின்றன.

டி. ரவி, தெலுங்கு பண்டிதர். சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

## சோழர்காலத்தில் மாசிமகம்

சோழர் ஆட்சிக் காலத்தில் மகாமகத் திருவிழா நடைபெற்ற நிகழ்ச்சி பற்றிய சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் மாசிமகம் திருவிழா சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது. முதலாம் இராஜராஜசோழனின் (985-1014) 9ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று திருச்சி மாவட்டம் திருநெடுங்களம் என்ற ஊரிலுள்ள நெடுங்களநாத சுவாமி கோயிலின் கணேசர் சந்நிதியில் இடம்பெற்றுள்ளது. இதில் மாசி விழாவிற்கு வருகின்ற சிவபக்தர்களுக்கு உணவளிக்க வேண்டி நிலம் தானம் செய்யப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. எனவே சோழர் காலத்தில் மாசிமகம் விழா சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது என்பதை அறியமுடிகின்றது. பொதுவாக மாசிமகம் விழா அனைத்துக் கோயில்களிலும் நடைபெற்று வரும் மரபுள்ளது. ஆனால் மகாமகத்திருவிழா பற்றிய சோழர்காலக் கல்வெட்டு இதுகாறும் கிடைக்கப்பெறவில்லை.

## கிருஷ்ணதேவமகாராயரும் மகாமக விழாவும்

கும்பகோணத்தில் நடைபெற்று வரும் மகாமகத் தீர்த்தவிழா எப்பொழுது தொடங்கப்பெற்றது என்பதற்குத் தெளிவான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் விஜயநகரப் பேரரசின் மாமன்னன் கிருஷ்ணதேவமகாராயர் காலக் கல்வெட்டுக்கள் மகாமகத் திருவிழா நடந்த செய்திகளைத் தெரிவிக்கின்றன.

மாமன்னன் கிருஷ்ணதேவமகாராயர் கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகத் திருவிழாவைக் காண வருகைபுரியும் பொழுது அரிகண்டபுரம் எனும் நாகலாபுரம் என்ற திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள வேதாரண்ய சுவாமி கோயிலுக்கு வந்து சென்றதை இக்கோயிலின் வடக்குக் கோபுர கல்வெட்டுக் கூறுகிறது. இக்கல்வெட்டுக்குரிய காலம் கி. பி. 08-01-1524 ஆகும்.


கங்காதேவி

## இரகுநாத நாயக்கரும் மகாமகக் குளமும்

தஞ்சையை ஆண்ட இரகுநாத நாயக்க மன்னர் (1614-1633) மகாமகக் குளத்தின் கரையில் சோடச மகாதானங்கள் என்னும் மிகப்பெரிய பதினாறு வகையான தானங்களைச் செய்துள்ளார். இம்மன்னரால் வழங்கப்பெற்ற பதினாறு தானங்களுக்கும் பதினாறு மண்டபங்களைச் சிற்பக்கலைச் சிறப்புடன் அமைத்த பெருமை இம்மன்னரைச் சாரும். இம்மண்டபங்களை இணைக்கும் பதினாறு கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. இக்கோயில்கள் அனைத்தும் பதினாறு திசைகளைக் கொண்ட கோணத்தைப்பெற்றுள்ளன. இதன் வடிவமைப்பு மிகத் துல்லியமாக வானசாத்திரக் கணக்கின்படி அமைகின்றன என்பது சிறப்பாகும். இங்கு

அமைந்துள்ள பதினாறு மண்டபங்களில் ஒன்று காசி விசுவநாதர் கோயில் முன்பாக மகாமகக் குளத்தின் ஒரு முனையில் மிகப்பெரிய அளவில் கட்டப்பட்டுள்ளது. பல்வேறு கலை வடிவங்களுடனும் உயர்ந்த விதானத்தையும் பெற்றுள்ள இம்மண்டபம் "துலா புருஷ மண்டபம்" என்றழைக்கப்படுகின்றது. இம்மண்டபத்தில் இரகுநாத நாயக்க மன்னன் துலாத் தட்டமைத்து, பொன் தானம் அளித்துள்ளான் என்பதை இம்மண்டபத்து உட்புற விதானத்தின் சிற்பக் காட்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. இம்மண்டபத்தில் துலாக்கோல் அமைந்துள்ள தட்டின் கற்பகுதியில் மன்னன் இரகுநாத நாயக்கர் அமர்ந்திருப்பது போன்று மறுதட்டில் பொன் குவிக்கப்பட்டக் காட்சியையும் செதுக்கியுள்ளனர். இதே போன்று மற்ற பதினைந்து சிறிய மண்டபங்களிலும் அந்தந்த தானத்திற்குரிய காட்சிகள் இடம்பெறுகின்றன.

**மராட்டிய மன்னரும் மகாமக விழாவும்**

தஞ்சை மராட்டிய மன்னர்கள் மகாமக விழாவை சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர். விழாக் காலத்தின்போது மன்னர் தம் குடும்பத்தார் களுடன் கும்பகோணம் சென்று மகாமகப் புனித தீர்த்தத்தில் நீராடி வருவது வழக்கமாகும். மன்னர் ஷாஜி தனது தாய் தீபாம்பாளுடனும், சகோதரர்களான முதலாம் சரபோஜி, துளஜா என்கிற துக்கோஜி ஆகியோருடன் கும்பகோணம் சென்றுள்ளார். மன்னர் இவ்விழாவிற்கு செல்லும்போது அவருடன் தஞ்சை அரண்மனை அவைக்களப் புலவர்களையும் அழைத்துச் சென்றுள்ளார் எனும் ஆவணக்குறிப்பு கிடைக்கின்றது. அவ்விழா நாளில் மன்னர் அவர்தம் குடும்பத்தினர், அரசவைப் புலவர்கள், பொதுமக்கள் ஆகியோர் முன்னிலையில் 'அத்புத பஞ்சரம்' என்ற நாடகம் நடித்துக் காண்பிக்கப் பட்டது. மராட்டிய அரண்மைனைப் பெரும்புலவர் ராமபத்ரதீக்ஷிதரின் மாணவரான நாராயணன் என்னும் புலவரால் இந்நாடகம் இயற்றப்பட்டது. இந்த நாடகத்தின் தலைவனாக ஷாஜி மன்னரையே அமைத்துள்ளனர். 'லீலாவதி ' என்ற பெண்ணுக்கும் மன்னர் ஷாஜிக்கும் இடையே ஏற்பட்ட காதல் திருமணம் பற்றி விளக்குவது இந்த நாடகமாகும். இதன் வாயிலாக மகாமக விழாவின்போது நாடகம் நடைபெற்றது என்ற செய்தி கிடைக்கின்றது.

மகாமகத் திருவிழாவிற்கு வருகின்ற மக்களுக்கு உணவு இருப்பிடம் அளிப்பதற்காக இக்குளத்தின் அருகே ஒரு அன்னசத்திரம் கி.பி.1785இல் கட்டப்பட்டிருந்துள்ள செய்தியை மோடி ஆவணம் கூறுகின்றது

**தேசிய விழா**

பல்லாயிரம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புடைய இந்தியாவில் இந்துக்களின் புனித நீராடுதல் விழா தொன்மையான வரலாற்றுப் பின்புலத்தைப் பெற்றுத் திகழ்கின்றது.

மொழி, இனம், மதம் என்னும் குறுகிய வட்டங்களைக் கடந்து இந்துக்களின் இந்திய விழாவாக மகாமகம் அமைகின்றது. குரு சிம்ம ராசியில் வரும் ஆண்டில்தான் வட இந்தியாவில் பிரயாகையில் 'கும்பமேளா விழா' சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.



ஐராவதீச்வரர் கோயில் – தாராசுரம்

## முப்பத்திரண்டு அறத்தின் பெயர்கள்

ஆதுலர்சாலை, ஓதுவார்க்குணவு, அறு சமயத்தோர்க் குணவு, பசுவுக்குவாயுறை, சிறைச்சோறு, தின்பண்டம், மகச்சோறு, மகப்பெறுவித்தல், மகவளர்த்தல், மகப்பால், அறவைப் பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், வண்ணார், நாவிதர், வதுவை, பூணூல், நோய், மருந்து, கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், சுண்ணம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தர், மடம், தடாகம், கா, ஆவுரிஞ்சுநடுதறி, யேறு விடுத்தல், விலைகொடுத்துக் கொலையுயிர் மீட்டல்,

–சேந்தன் திவாகரம்

# கும்பகோணம் கோயில்களின் புராணம்

எல். அனிதா,

**பட்டீச்சரம்**

பட்டீச்சுரத்திற்குக் கிழக்கே ஒருமைல் தொலைவில் வைப்புத் தலமாகிய முழையூர் இருக்கிறது. காமதேனுவின் கன்றாகியப்பட்டி என்பது வழிபட்டுப் பேறு பெற்றமையால் இத்தலம் இப்பெயர் பெற்றது. ஸ்ரீராமருக்குச் சாயைஹத்தி தீர்த்த தலம். மார்கழி அமாவாசையன்று இந்த ஐதீகம் நடைபெறுகின்றது. கோயிலிலுள்ள நந்தி சற்று விலகியுள்ளது.

இத்தலத்தில் வேறொரு வீதியில் சக்திமுற்றம் என்னும் தலம் இருக்கிறது. இராப்பட்டீச்சரம், பேரூர்ப்பட்டீச்சரம் என வேறு இரண்டு தலங்கள் இருப்பதால் வேறுபாடு அறிவதற்கு இது பழைய பட்டீச்சரம் என்று கூறப்படும். பழசை (பழையாறு) சோழர்களுடைய தலைநகரங்களுள் ஒன்று. சுந்தரசோழர் முதலானவர்கள் இந்நகரத்திலிருந்து அரசாண்டதாகத் தெரிகின்றது. இதிலுள்ள அரசர்கள் மீதுள்ள பாடல்கள் பல வீரசோழிய உரையில் மேற்கோளாகக் காணப்படும். பழையாறைக்குள் முழையூர், வள்ளலார் கோயில் (கட்டுமலை இது) வடதளி, திருமேற்றளி, திருச்சத்தி முற்றம், அரிச்சந்திரபுரம், பாற்குளம் முதலிய சிவதலங்களும், தக்ஷிண துவாரகை என வழங்கப்படும். கோணப்பெருமாள் கோயில் முதலிய பல தலங்களும் உண்டு.



பட்டீச்சரம் கோயில்

எல். அனிதா, சம்ஸ்க்ருத பண்டிதர். சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

திருவலஞ்சுழியும், தாராசுரமும் இந்நகரத்தில் அடங்கியனவென்றே கூறுவர். மிகப்பெரியதாகவும், செல்வமுள்ளதாகவும் விளங்கியது பட்டீச்சுரம். இத்தலத்தைச் சுற்றியுள்ள இடங்களில் எல்லாம் பழைய சரித்திரத்தை விளக்கும் சின்னங்கள் நிரம்பியிருக்கின்றன. பட்டீச்சரத்தின் வடக்குவீதியும், திருச்சத்தி முற்றத்தின் தெற்குவீதியும் ஒன்றே. அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் அவருக்குப் பட்டம் அளித்தவரும் முதல் மந்திரியாயிருந்தவருமாகிய கோவிந்ததீக்ஷிதர் அவதரித்த ஊர் பட்டீச்சரம்.

**பாற்குளம்**

இது பட்டீச்சரத்திற்கு ஈசான மூலையில் ஒரு நாழிகை வழி தூரத்திலுள்ளது. இதன் தீர்த்தம் மிக்க வெள்ளை நிறமும், மிக்க சுவையும், மிக்க குளிர்ச்சியும் உள்ளது. இதில் திருச்சத்திமுற்றத்து ஸ்வாமி தை மாதம் ரதசப்தமியில் தீர்த்தம் கொடுப்பதுண்டு.

இத்தலம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், முத்துப்பந்தர் பெற்ற தலம். அவருடைய கோலத்தைச் சிவபெருமான் காணுதற்பொருட்டு அவர் கட்டளைப்படி நந்திதேவர் விலகினார்.

பட்டீச்சுரம் கோயிலின் திருமாளிகைப் பத்தியில் மேற்குக் கோடியில் எழுந்தருளியுள்ள விநாயகருக்கு மதவாரணப்பிள்ளையார் என்பது திருநாமம்.

பட்டீச்சரம் முதலிய பல தலங்களைத் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கிற பழையாறை என்னும் பெயர் பட்டீச்சரத்திற்குத் தலைமை பற்றி வழங்கும். இவ்வாலயத்தின் இறைவன் பட்டீசுரர், தேனுபுரீஸ்வரர் என அழைக்கப்பெறுகிறார். இறைவி பல்வளை நாயகி என அழைக்கப்பெறுகிறார்.

**கொட்டையூர்**

இத்தலம் மார்க்கண்டேயர் முதலியோரால் பூசிக்கப்பட்ட தலம், சோழ விநாயகர் திருவலஞ்சுழியில் காவிரியில் இறங்கின.ஏரண்ட முனிவர் இங்கு வெளிவந்தார். அவருடைய திருவுருவம் கோயிலில் உள்ளது. அப்பர் ஸ்வாமிகள் இவ்வூரையும் திருவலஞ்சுழியையும் சேர்த்துப் பாடியுள்ளார்.

இவ்வூர் முன்பு ஆமணக்கங்காடாக இருந்தது. ஸ்வாமி ஆமணக்குக் கொட்டைச் செடியின் கீழிருந்து தோன்றியமையால் கொட்டையூர் என்று பெயர். சோழ மன்னருக்கு ஓருருவில் கோடி லிங்கமாகத் தரிசனம் கொடுத்ததால் ஆலயத்துக்குக் கோடீச்சுரம் என்ற பெயரும் வந்தது. இலிங்கத்தில் ஏறத்தாழ சிறிய லிங்கங்கள் உள்ளன. ஹேரண்டபுரம் என்பது இத்தலத்தின் வடமொழிப்பெயர். முற்காலத்தில் அத்திரி முனிவரின் புத்திரரான ஆத்திரேய முனிவர், இந்த ஹேரண்டவனத்தில் சுயம்புவாக எழுந்தருளியிருக்கும் கோடீசுவரர் என்ற திருப்பெயரோடு விளங்கும் சிவபெருமானைக் குறித்துத் தவம் புரிந்து கொண்டிருந்தார். அதனால் அவர் தங்கியிருந்த இந்த இடம் காரணமாக ஹேரண்ட

முனிவர் என்று அழைக்கப்பட்டார். இவரே இத்தலத்திற்கு மேற்கேயுள்ள திருவலஞ்சுழி என்ற க்ஷேத்திரத்திற்கருகில் அந்தர்வாகினியாய் (கீழ்நோக்கி) ஒரு பிலத்தின் வழியே சென்று மறைந்த காவிரியை உலகுக்கு மீண்டும் அளிக்கக் கருதி தம்மையே பலியாக அர்ப்பணம் செய்துகொண்டு, அந்தப் பிலத்தில் காவிரியுடன் வெளிவந்தார். இம்முனிவர் காவிரியுடன் வெளிவந்த இடம் மேலைக்காவிரி என்பர். இம்முனிவர் பெருமான் வலஞ்சுழிநாதர் என்ற பெயருடன் திருவலஞ்சுழி என்ற தலத்தில் இலிங்காகாரமாகக் காட்சியளிக்கின்றார். தேவியின் பெயர்: பந்தாடியம்மை, கந்துகக் கிரீடாம்பிகை என்பது வடமொழிப் பெயர். இங்குள்ள உற்சவ விநாயகமூர்த்தி உபயதேவிகளுடன் விளங்குகின்றார். திருவலஞ்சுழியிலும் இம்மாதிரி உபய தேவியர்களுடன் விளங்கும், விநாயகமூர்த்தம் ஒன்று உள்ளது. இத்தலத்திலுள்ள காவிரி நதியின் தீர்த்த கட்டத்திற்குக் கோடி தீர்த்தம் என்று பெயர்.

இத்தலத்தைப்பற்றி சரித்திர சம்பந்தமாக கி. பி. 7ஆம் நூற்றாண் டிலிருந்து பல குறிப்புக்கள் கிடைக்கின்றன. இத்தலம் இன்னம்பர் நாட்டுக் கொட்டையூர் எனச் சோழ சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பொழுது கோயிலில் மூன்று சோழ சாசனங்கள் காணப்படுகின்றன. அவைகளில் இரண்டு மூன்றாங் குலோத்துங்கனது காலத்தவையும், ஒன்று இரண்டாம் இராசாதிராசன் காலத்ததும் ஆகும். மூன்றாங்குலோத்துங்கன் காலத்துச் சாசனங்கள் இரண்டும் தனித்தனியே இரு பெண்பாலர்களால் கோயில் ஆராதனைகளுக்கு வேண்டிய பாத்திரங்களும், பூஜை திரவியங்களும் அளிக்கப்பெற்ற விவரங்களைத் தெரிவிக்கின்றன. மூன்றாவதாகிய இரண்டாம் இராசாதிராசன் காலத்துச் சாசனம் இந்தக் கோயிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் நடந்து வந்த வசந்த உற்சவத்தில் ஆறாந்திருநாளன்று செய்யவேண்டிய சில ஆராதனைகளுக்காக ஒருவரால் விடப்பெற்ற நிலத்தின் விவரங்கள் அடங்கியுள்ளன.


தாராசுர தூண் சிற்பம்

இத்தலம் திருநாவுக்கரசு சுவாமிகளது பதிகம் பெற்றுள்ளது. இப்பதிகம் திருவலஞ்சுழி இத்தலம் ஆகிய இரு தலங்களையும் சேர்த்துக் கூறுகின்றமையால் மேற்கண்ட இரு தலங்களுக்கும் உள்ள புராண சம்பந்தம் இனிது விளங்கும். இக்கோயில் இரண்டாங் கோபுர வாயிலில் மனுநீதி கண்ட சோழன் தன் மைந்தனைத் தேர்க்காலில் வைத்து இடறுகின்றவாறு ஒரு சிறிய திருஉருவம் அமைக்கப்பெற்றுள்ளது. மிக்க அழகாக இருக்கிறது. இத்தலம் சம்பந்தமாக சிவக்கொழுந்து தேசிகர் கோடீச்சுரக்கோவை என்று

ஒரு பிரபந்தம் பாடியுள்ளார்.

கந்தார் கொட்டையூர் கடவுள் கோடீசர்
பந்தாடு நாயகி பகர்கோடி தீர்த்தம் (சிவ)

**திருவியலூர்**

கும்பகோணத்திற்குக் கிழக்கே நான்கு (கிலோமீட்டர்) மைல் தொலைவில் உள்ளது. திருமங்கலக்குடியில் திருப்பணி செய்து இறந்து போன ஓர் அடியவரை இத்தலத்திற்குக் கொண்டு வரும்போது அவர் திருமங்கலக்குடித் தேவியாரின் அருளால் உயிர்த்தெழுந்தார் பிரமன், விஷ்ணுசர்மா என்பவருக்குப் புத்திரனாகித் தவம் புரிந்து தம்முடன் பிறந்த எழுவருடன் சிவராத்திரியில் இலிங்கமூர்த்திக்குள் புகுந்தனர். அச்சடைகள் இன்றும் இலிங்கத்தின் முடியில் காணப்பெறுகின்றன. அகத்தியர் சிவராத்திரி தோறும் பூஜிப்பதாக ஐதீகம். திருவிசை நல்லூர் என வழங்கப் பெறும் திருஞானசம்பந்தர் பாடிய இத்தலம் ஆகும்.

**திரு(-)ஆப்பாடி**

திருஆப்பாடி இத்தலம் ஆடுதுறை இரயில்வே நிலையத்திற்கு அருகில் இருக்கிறது. திருப்பனந்தாளுக்குத் தென்மேற்கே ஒருமைல் தொலைவில் இருக்கிறது. மண்ணியாற்றின் தென்கரையிலுள்ளது.

இங்கிருந்த இடையன் ஒருவன் பாலைக் கறந்து வீட்டுக்குக் கொண்டு போகும்போது வழியில் தினந்தோறும் கால் தடுக்கிப் பால் வழிந்தது கொண்டு வருதலையுணர்ந்து கையிலிருந்த கொடுவாளால் அவ்விடத்திலோச்ச அங்கிருந்து இரத்தம் வெளிப்படக் கண்டு மனமிரங்கிப் "பாலுகந்தநாதரே" என்று தொழ, சுவாமி அவனுக்கு அருள் செய்த இடம் திருநாவுக்கரசர் பாடிய தலம்.

இலிங்கத்தின் பக்கத்தில் சண்டேசருள்ளார். சுவாமிக்குப் பூசையானவுடன் இவருக்குப் பூசை நடக்கின்றது. வேறிடத்தில் இல்லை. மகாசிவராத்திரியில்தான் இவருக்குப் பட்டம்.

கோயில் மிகப் பழமையானது. சுவாமியின் வடமொழி திருநாமம் க்ஷீரபுரிநாதர், அம்பிகை பிரகந்நாயகி. ஆத்தி பழைய மரம் ஸ்ரீ சண்டிகேசுவரர் மணலில் லிங்கம் அமைத்துப் பூசித்த தலம். ஆத்தி மரத்தடியில் ஒரு சிவலிங்கம் சாய்ந்திருக்கிறது. இந்த தலத்தில் சண்டிகேசுவரர் இருவருளர். தேரடிப் பிள்ளையார் என்று ஒரு பிள்ளையார் இருக்கிறார். திருத்தேர்விழா நடைபெற்றதாகத் தெரிகிறது. சிவராத்திரி அமாவாசை சண்டிகேசர் முக்தி அடைந்த தினம் அன்று. பிரமோற்சவ தீர்த்தம், அம்பிகையின் திருவுருவம் மிகச் சிறந்த அமைப்புடையதாக இருக்கிறது. இங்கே கோப்பெருஞ்சிங்கனுடைய சாசனம் ஒன்று இருக்கிறது. இங்கே கந்தசஷ்டியில் சுவடி எடுக்கும் வழக்கம் இருக்கிறது. சிவாலயத்திற்கு ஒரு வேலி நிலம் இருக்கிறது.

அர்த்த மண்டபத்துக்கும், மகாமண்டபத்துக்கும் மத்தியில் உள்ள சுவாமிக்குத் தீபாராதனை செய்தவுடன், சண்டேசருக்குத் தீபாராதனை செய்யப்பெறுகிறது. சண்டீசனார் திருஅவதாரம் செய்த உடலுடன் சிவபெருமான் திருவடியில் வீற்றிருந்த தலம் ஆகும்.

# PHILOSOPHY, RELIGION AND SAIVA SIDDHANTA

**Dr. T.N. Ramachandran**

Chambers's Twentieth Century Dictionary lists out the meanings of the word 'Philosophy' as follows:s

"(Orig.) Pursuit of wisdom and knowledge: the science of being as being; the knnowledge of the causes and laws of all things: the principles underlying any department of knowledge reasoning: a particular philsophical system: calmness of temper."



Rishabandhakar

From the meanings given above, it is clear that philosphy is not at all associated with religion in the West In the East in general and India in particular, the nexus between philosophy and religion is inescapable. Philosophical thinking in the Indian context demands a different type of understanding. The Indian point of view should first be understood before one begins to deal with any type or branch of Indian philosophy. The one and only book which has the above view as its basis is Prof.K.Sivaraman's work titled: 'Saivism in Philosophical Perspective' (Motilal Banarsidass, Delhi, 1973).

This work opens with an announcement which sounds more like an admonition than like a dictum simpliciter. "The 'philosophy' in the Philosophy of Saiva Siddhanta requires an understanding of the nature of the general ethos of philosophical thinking in the Indian setting. The original source out of which systematic thinking developed in India is an attitude to life describable as 'religious' in the broadest sense of the term." Though the author describes it 'as religious' in the broadest sense of the term." the point that is stressed is that it is 'religious' palpably religious. This idea is made clear by him when he says: "Philosophical reflection (in India) was confronted from the very outset with a world of meaning which is religious."

What indeed is 'religion' in the Indian context ? Unless we come by the right perspective, all our efforts will bear no fruit at all. Prof. Sivaraman's approach supplies the key. He says: "By religion we refer to an element in the structure of consciouisness itself, not an item or enterprise of

**Dr. T.N. Ramachandran,** Thanjavur.

culture which arrives at some stage in its history under certain favourable conditions. Religion stands for the basic dispositional attitude, containing an understanding of life and the world in terms of their dimension of depth, which may be described as holy or sacred. As a basic structural characteristic of human existence itself, religion is indifferent to culture and epoch though exercising a profound impact on them."

So much has to be said about the word 'religion' in the Indian context, because the very great religon of India, namely Hinduism is more misunderstood than understood. Hinduism is not a religion in the strict sense of the word, but a galaxy of religions. It comprises a bewildering variety of faiths, each disagreeing with the other, and yet bearing the common label 'Hinduism'. Even Saivism is not a single system but a commonwealth of different systems- a federation of faiths. Many and various are the philosohical doctriness differing from each other on fundamental issues. "It embraces" says Dr. Sivaraman "every shade of philosophic thought from monism to pluralism, from idealism to realism that are maintained by its different schools and sub-schools."

Philosophical reflection is to be understood as a function of religion. The meaning of religious life is to be grasped in terms of structure rather than history and culture. The rise or beginning of philosophy is other than the simple chronological rise and development of a belief or theory. "All reductive explanations in terms of circumstances of time, place and individual influences appear quite inept in the case of Indian philosophical thinking." In the generality of Indian philosophy a concept of philosophy is implied. This requires to be understood and appreciated in contradistinction to science and even culture, civilization and the life of the people, race or nation. This does not mean that science, culture, etc., do not affect philosophy. They do. In abstracting philosophy from the general culture of a nation and especially from the matrix of pre -philosophy from which it has emerged, one may truly run the risk of obscuring the significance of its problems and ideals.

The bard who composed Comus was all admiration for philosophy, Thus he sang:

"How charming is divine philosophy!
Not harsh, and crabbed as dull fools suppose,
But musical as is Appollo's lute,
And a perpetual feast of nectared sweets,
Where no crude surfeit reigns."

So it is that Dr. Sivaraman says that a philosophical doctrine has a timeless quality about it, a fundamental unalterableness of its quest. This quest coincides with the unaltering core of human nature itself. Yet time and what it brings into being are important factors. Philosophical systems are,

truly speaking, only systems of interpretations. The claim of the interpreter is pre-eminentaly a product of time and history. Rival philosophical systems of Indian religious thought are only seemingly static. They exist side by side, as it were, beginninglessly. They are equally structures in time. They influence each other in their diffenent stages of development. Yet they retain a perceivable self-identity. Modifcations or changes in the doctrinal growth of a philosophical system cannot be ignored. Historical sequence is also important. Saiva Siddhanta is a philosophical or rather a theo-philosophical system. The ancient Gnostics were Siddhantins of a sort.

One should be more concerned with Saiva Siddhantam as a living and ever-vivifying system than with its antiquity. No doubt, it is an ancient system. The words of St.Umapati who follows Kalidasa in his sacred steps, are fraught with significance.

"தொன்மையவா மெனுமெவையு நன்றாகா இன்று
தோன்றியநூ லெனுமெவையுந் தீதாகா -" *(சிவப்பிரகாசம்-12)*
(Ancientness confers not merit on works;
Nor is flaw attached to works newly writ.)

Saiva Siddhantam is a living religion. Its temples are not show-pieces of museum. They flourish the world over.The practicing of Saivism may not appear to be pronounced. But it is lived. The issues raised by it are live ones of great consequence for the thought and life of its practitioners. It is therefore as much contemporary in its relevance as it is ancient and traditional. An enquiry into the begining of Saiva Siddhanta should not be an archaeological search for the origin or cult of a belief. It should rather be an enquiry into that primordial situation out of which philosophy in its characteristic form as a view and a way of life as delineated by Saiva Siddhanta, has arisen.

The Philosophical question in the Indian context implies paradoxically, the conviction of possessing an adequate notion of the object of the quest; of thought having already reached its goal. In this sense, it is akin to poetry, which according to Prof. K.R. Srinivasa Iyengar, communicates even before it is read.

Indian Philosophy is not a free adventure without any idea of the destination to be reached. The goal of the philsophical quest is in a sense present from the very beginning of the quest. It is present and yet does not render the quest superfluous. It guides the quest. To be able to ask for something one must have that partially. It cannot otherwise be the object of a quest. The quest for meaning already betrays, in some measure, being imbued with meaning. The philosopher has and has not that which he seeks.

The quest, in the context, is the quest for the transcedent. Experience is analysed with the sole object of discriminating the real from the apparent, the true from the false.

*பொய் காட்டிப் பொய்கற்றிப் போதானந்தப் பொருளாம்*
*மெய் காட்டும் மெய்கண்டாய் - (உண்மை விளக்கம்-1)*

(O Meykandaa who shows the false as false, removes it|
And demonstrates that which is the Truth-
the Bliss of Gnosis...)

Plilosophical consciousness may be identified with the disposition to pierce the surface, to penetrate appearances and realize the real. The quest for transcendence constitutes the governing motive of reflection but the initial impulse to this activity may come from a source deeper than a mere philosophic disposition. The discrimination between the true and the false may itself be in the service of providing urgency to a more basic urge or mode of consciousness.

Reality is apprehended by mystical or religious consciousness. "*என் புத்தி வட்டத்திடைப் புக்கு நின்றானையும் பொய் என்பனோ?*" - *அப்பர்* (How can I deny Him who barged into and abides in the mandala of my consciousness ?)

Perception of the 'real' is marked by an immediate spontaneity. The feeling of reality is unmistakably mainfest in the core of heart, nay, in the soul. The saint is already in communion with the source of life and value. He does not come upon it or fumble into it through appraisal born of reflection. Faith in the presence of a supreme will, the intuitive awareness with which one apprehends the ground of all positivity, is not a question of intellectual inference or speculative reasoning. Faith is 'fides' not 'fiducia'. Reflection or idealization is only in the service of enlivening, deepending and in one word, "realising' this experience of 'co-presence' or 'communion'. St. Sundarar said:

"*கற்றைச் செஞ்சடையான் உளன்; நாம் உளோம்.*"

(The Lord of the dense and ruddy matted-hair IS; So are we.)

Yes, the Lord and His devotee live in advaitic union. This is, for the realized soul, an experiential beatitude.

No one has gained and lived this beatitude as the unlettered forester Kannapar has done. Siva took upon Himself the task of expounding this beatitude to Sivagochaarya. His archaka.

"அவனுடைய வடிவுஎல்லாம் நம்பக்கல் அன்பு என்றும்
அவனுடைய அறிவுஎல்லாம் நமை அறியும் அறிவு என்றும்
அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனியவாம் என்றும்
அவனுடையநிலை இவ்வாறு, அறி நீ" என்று அருள்செய்தார்.

(His entire form is pure love for us only;
All his knowledge is Gnosis that truly construes Us;
All his deeds are absolutely sweet to Us; such is his state.
know it to be so, even so.)

The Periya Puranam, be it known, is Applied Saiva Siddhanta.

*****



நாகேசுவரன் கோயில்

## ஆகமம்

(தொன்றுதொட்டு வரும் அறிவு என்பதாகும். கடவுள் வழிபாட்டை இரகசியம், மந்திரம், மூர்த்தி, ஆலயம் ஆகியமுறைகளில் விவரித்துக்கூறும் தொகுதி) கடவுள் பெயரை வைத்து ஆகமம் பல வகைப்படும்.

### சிவ ஆகமம்

ஆன்மாக்கள் மலத்தை அகற்றி இன்பம் பெறும் மார்க்கத்தை குறித்துச் சிவன் அருளிய நூலே

பெரியோர்கள் தம் உடலையே ஆலயமாகக் கொண்டு தம்மையே இறைவனாக வழிபடுவர்.

ஏனையோர் வழிபடும் ஆலயம் என்பதன் பொருள் ஆன்மாக்களை இறைவனிடம் லயிக்கும்படி செய்யும் இடம் என்பதாகும்.

சிவாலயத்தில் இறைவன் உள்ள இடம் மூலஸ்தானம். அங்கு லிங்கமே காணப்படும் சிவன் ஒருவனே பரமாத்மா. அதனால் அவனுக்கே லிங்கம் உரியது என்று சைவாகமம் கூறும்.

### வைணவ ஆகமம்

கோயில்கள் மற்றும் வீடுகளில் வைத்து வணங்கும் விஷ்ணு விக்ரகத்தின் தத்துவம் மற்றும் வழிபாட்டு முறைகளைக் கூறும் சமஸ்கிருத நூலாகும்.

விக்ரஹ நிர்மாண முறைகள் பிரதிஷ்டை செய்யும் விதிமுறைகள், நாடோறும் செய்ய வேண்டிய வழிபாட்டு முறைகள், விழாக் காலங்களில் வழிபடுவோரிடம் காணப்பட வேண்டிய தகுதிகள் வழிபடுவோரின் புண்ணிய பலன்களை விரிவாகக் கூறுகிறது.

இந்நூல் எண் நூற்றியெட்டு என்பர். அவைகள் சங்கிதைகள் என்றும் கூறப்பெறும். (தந்திரம் என்பது முறை என்று பொருள்படும்)

இவை அனைத்தும் பாஞ்சராத்திரம் ஆகும்.

### சாக்தாகமம்

சக்தி சம்பந்தமான கொள்கைக்கு சாக்தம் என்று பெயர்.

சக்திவழிபாடு வேதங்களில் கூறப்பட்டிருக்கிறது.

மொகஞ்சதாரோவில் பூமியின்கீழ் அகப்பட்ட தாய்த் தெய்வத்தின் விக்கிரகங்களாலும் இதன் பழமை தெரிய வருகின்றது.

சாக்த மதம் இந்தியாவில் மட்டுமின்றி ஐரோப்பாவிலும் கிறிஸ்துவ மதம் ஏற்படுவதோடு முன்பே இருந்ததாகப் பல பிரமாணங்களால் தெரிகின்றது.

– மலர்க்குழு

# மகாமக தீர்த்த யாத்திரை

புலவர் **வே. மகாதேவன்**

மகாமக தீர்த்தத்தில் மகாமக நாளில் குளிப்பது மிகவும் விசேஷம். இலட்சக்கணக்கான மக்கள் கூடும் நாளில் சாஸ்திர முறைப்படிக் குளிப்பது என்பது யாராலும் இயாலாத செயலாகும்.

மகாமக வருடம் துவங்கியதிலிருந்து அதாவது சிம்ம குரு காலத்தில் உள்ள எல்லா நாட்களிலும் புனித நீராடலாம். மாசி மாதத்தில் குளிப்பது மிகவும் விசேஷம்.



தெட்சினாமூர்த்தி

மற்ற வருடங்களில் மாசிமாத மக நட்சத்திர நாள், சித்திரைப் பிறப்பு, கார்த்திகைச் சோமவார நாட்கள் , அமாவாசை, பௌர்ணமி, சூரிய சந்திர கிரகண நாட்கள், உத்தராயனம், தட்சிணாயனம், விஷுபுண்ய காலம், கிருஷ்ணபட்ச (தேய்பிறை) அஷ்டமி, சிவராத்திரி, சுக்ரவாரம், கபிலா சஷ்டி ஆகிய நாட்களில் குளிப்பது விசேஷம்.

மகாமக தீர்த்தமாடுவது எப்படி? அதற்கு என்னென்ன விதிமுறைகள் என்பனவற்றைப் புராண நூல்கள் சொல்கின்றன. ஸ்நானம் செய்வது எப்படி? தானம் செய்வது எவ்வாறு? என்பதனைக் கும்பகோணம் பற்றிய புராண நூல்கள் விவரித்துள்ளன. நூல்கள் கூறிய செய்திகளோடு ஆசாரங்கள், அனுஷ்டானங்கள் ஆகியவற்றையும் குடும்ப வழக்கப்படிக் கடைப்பிடிக்க வேண்டும்.

மகாமக தினத்தில் நூல்களில் சொல்லப்பட்டுள்ள விதிகள் அனைத்தையும் பின்பற்றுவது என்பது கடினமான காரியம். எனவே மகாமக நாளுக்கு முன்னரே விதிப்படி நீராடலாம். மகாமகத்தன்று தீர்த்தவாரியில் மட்டும் கலந்துகொண்டு அருள் பெறலாம்.

**யாத்திரை தொடங்குவதற்கு முன்னால்....**

மகாமக யாத்திரை தொடங்குவதற்கு முன்னால் வழக்கப்படிச் செய்யும் தினசரி வழிபாட்டை வீட்டில் செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னால் **புண்யாஹவசனம்** என்னும் சடங்கினைச் செய்து அந்தத் தூய நீரால் ஆசமனம் செய்து தூய்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். அந்த நீரை வீட்டில் தெளிக்கவேண்டும். அதன்பின் ‘பஞ்சகவ்யம்’ உட்கொள்ள வேண்டும். அந்தணருக்கும், சிவனடியார்களுக்கும் அன்னமிட வேண்டும். புத்தாடைகள் அளிக்க வேண்டும். குலகுருவை வணங்கிப் புறப்படவேண்டும்.

புலவர் **வே. மகாதேவன்,** சென்னை.

அவரவர் தம்தம் ஆச்ரம நிலைக்கேற்ப அனுக்ஞை (அனுமதி) பெறுதல் வேண்டும். மனைவி, கணவனிடமும், மகன் தாய் தந்தையிடமும் அனுமதி பெறுவது 'அனுக்ஞை' எனப்படும். திருமணமானவர்கள் தம்பதியராகத் தீர்த்த யாத்திரை புரிவதே விசேஷமானதாகும்.

வாகனங்களில் வராமல் நடந்தே வருதல் வேண்டும் என்று புராண நூல்கள் சொல்கின்றன. இந்த விதிமுறையை நகர எல்லையை மிதித்த பின்னாலாவது தவறாமல் பின்பற்றுவது நல்லது. நிலைவேறுபாடும், கர்வமும் அகற்றச் சமநிலை அளித்துத் தெய்வ வழிபாடு செய்ய இது உதவும்.

வழிப்பயணத்தில் கும்பகோண மகாத்மியத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு பயணம் புரிதல் வேண்டும். அடுத்தவருடன் பேசுவது, பாடல்களைக் கேட்பது முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

உணவில் நியமங்களைப் பின்பற்றுவது முக்கியம். சில வகை உணவுகள் தவிர்க்கப்படுவதும் அவசியம். சுவையான உணவு, வெற்றிலைப் பாக்கு, இலாகிரி உபயோகித்தல், இனிய பட்சணங்கள் உண்ணுதல், இரவு உணவு ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். நகங்கள் வெட்டுதலையும், முகச்சவரம் செய்துகொள்ளுதலையும் நீக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு ஒரே ஒருபொழுது மட்டும் உணவு உட்கொள்வது மிகவும் உத்தமம். பயண காலத்தில் திருவைந்தெழுத்தை ஜபிப்பதும், குருவைப் பூஜிப்பதும் நல்லது. வழக்கப்படி செய்யும் இருவேளை பூஜைகளுடன் நண்பகல் பொழுதிலும் நீரில் மூழ்கி அனுஷ்டானமும், பூஜையும் புரிவது மிகவும் உத்தமம். இரவில் பாயில் படுத்துறங்கக் கூடாது. சயன சுகம் தவிர்க்க வேண்டும் என்பதற்காகவே இரவில் பாயில் படுக்காதீர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்படி மிகப்பல நியமங்களை நூல்கள் சொல்கின்றன. உடல் நலம், நேரம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு முக்கியமானவற்றை மட்டுமாவது பின்பற்றுவது நல்லது. மொத்தத்தில் தீய சிந்தனை, தீய பழக்கங்கள், தீய குணங்கள் முற்றிலும் நீக்கப்படுவதும் தூய சூழலில் பயணத்தை அமைத்துக் கொள்வதும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டிய விஷயங்களாகும்.

**நகரில் நுழையுமுன்**

கும்பகோணத்தில் நுழையும் முன் பஞ்சக் குரோசத் தலங்களைத் தரிசிப்பதும், அஷ்டாதச தலங்களைத் தரிசிப்பதும் முக்கியமான ஒன்றாகும்.

**பஞ்சக் குரோசத் தலங்கள்**

வடக்கே உள்ள காசி மாநகரம் பஞ்சக் குரோசத் தலம் எனப்படும். தெற்கே இருக்கும் கும்பகோணமும் பஞ்சக்குரோசத்தலம் என்று புராண நூல்கள் எல்லாவற்றிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

அமிர்தகுடம் உடைந்தபோது அதிலிருந்த அமிர்தம் ஐந்து குரோசம் எல்லைப் பரப்பில் பெருகித் தங்கியது. அந்த ஐந்து குரோச எல்லைப் பரப்பில் அமைந்துள்ள தலம் குடந்தை. குரோசம் என்றால் இரண்டரை நாழி என்று பொருள். சுமார் 1மணி நேரம் ஒரு குரோச காலமாகும். சுமார் 5 மணி நேரம் நடந்தால் அமையும் சுற்றளவில் உள்ள நிலப்பரப்பு பஞ்சக் குரோசம் எனப் பொருள்படும். ஒரு குரோச தூரத்தில் ஒரு ஊர், இப்படி 5 ஊர்கள் தரிசிக்க வேண்டியவை.

பஞ்சக் குரோசத் தலத்தை அடையும் பக்தர்களிடம் இருக்கும் பாவங்கள் 'உன்னைவிட்டு நான் சென்று விடுகிறேன், சென்று விடுகிறேன்' என்று அலறுகின்றனவாம். அதனால் அதற்கு 'குரோசம்' என்ற பெயர் வந்தது என்றும் சொல்கிறது க்ஷேத்ர மாகாத்மியம் (இதன்படி குரோசம் என்றால் அலறுதல் என்று இங்கு அர்த்தம்)

**அமிர்தம் பெருகிய ஐந்து குரோசத் தலங்கள் பின்வருமாறு:-**

1. திருவிடைமருதூர் (மத்யார்ஜுனம்)
2. திருநாகேஸ்வரம் (சண்பகாரண்யம்)
3. தாராசுரம் (உருத்ராக்ஷாரண்யம்)
4. சுவாமிமலை (குகாசலம்)
5. கருப்பூர் (திருப்பாடலவனம்)

இந்த ஐந்து தலங்களிலும் ஒவ்வொரு பகல் இருந்து தரிசித்த பின்னால் யாத்திரையைத் தொடர்வது மிகவும் விசேஷம். ஒரே நாளில் ஐந்து தலங்களையும் தரிசிப்பதும் உண்டு. இத்தலங்களைத் தரிசித்த பின்னால்தான் குடந்தை நகருக்குள் நுழைதல் வேண்டும்.



தாராசுரம்

**பதினெட்டு (அஷ்டாதச) ஸ்தலங்கள்**

பஞ்சக்குரோசத் தலங்களையும் அவற்றுக்கு அருகில் இருக்கும் இன்னும் 13 தலங்களையும் சேர்த்துப் பதினெட்டுத் தலங்களை 'இரண்டாம் ஆவரணத் தலங்கள்' என்று சொல்வார்கள். குடந்தை நகரக் கோவில்களை முதலில் வணங்கி, மகாமக தீர்த்தமாடவேண்டும். அதன்பின் மீண்டும் நகரின் வெளியில் இருக்கும் இந்தப் பதினெட்டுத் தலங்களையும் வணங்கி மீண்டும் கும்பகோணத்தில் இருக்கும் சார்ங்கபாணியை வழிபட்டு ஊர் திரும்ப வேண்டும் என்ற புராணக் கருத்தும் உண்டு.

இந்தச் செய்தி மீனாட்சி சுந்தரம்பிள்ளை அருளிய திருக்குடந்தைப் புராணத்தில் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

...எங்கள் கும்பேசரைச் சூழப்
பூரண மருதர் முதல் பதினறுவர் பொலிந்து இனிது
அமர்வர் எஞ்ஞான்றும்.

என்பது குடந்தைப் புராணம். திருவிடைமருதூர் மருதவாணர் உட்பட 16தெய்வங்கள் புடைசூழ இருப்பவர் கும்பேசுவரர். இந்த 16 தலங்கள் மிகவும் புனிதமானவை, மங்களத்தில் மங்களமானவை. அவற்றைத் தினந்தோறும் வணங்கினால் எல்லா வகையான யோகங்களும் கிடைக்கும் என்கிறார் அவர்.

சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீட்சிதர் இத்தலங்கள் 18 என்கிறார். பவிஷ்யோத்ர புராணம் முதலான சில புராண நூல்களில் இக்குறிப்பு இருக்கிறது.

**அத்தலங்களின் பெயர்கள் பின்வருமாறு:-**

1. திருவிடைமருதூர் (பஞ்சக் குரோசத் தலங்களில் ஒன்று)
2. திரிபுவனம்
3. தர்ப்பாரண்யம் (பைரவ ஷேத்திரம்-அம்மா சத்திரம்)
4. திருநாகேஸ்வரம் (பஞ்சக் குரோசத் தலங்களில் ஒன்று)
5. இரக்தகதலிவனம் (செவ்வரம்பை - ஐயாவாடி
6. கண்ணுவபுரம் (சிவபுரம்)
7. இலாங்கவாரண்யம் (சாக்கோட்டை)
8. அமுதஸ்தானம் (மருதாநல்லூர்)
9. பஞ்சாக்ஷரபுரம் (பட்டீஸ்வரம்)
10. த்ரிசக்திபுரம் (திருச்சத்தி முற்றம்)
11. ருத்ராக்ஷாரண்யம் (தாராசுரம்-பஞ்சக் குரோசத்தில் ஒன்று)
12. தக்ஷிணாவர்த்த சமஸ்தானம் (திருவலஞ்சுழி)
13. குஹாசலம் (சுவாமிமலை-பஞ்சக் குரோசத்தில் ஒன்று)
14. இன (சூர்ய) புரம் - திருஇன்னம்பூர்
15. சாக்ஷிபுரம் (திருப்புறம்பயம்)
16. கோடிபுரம் (கொட்டையூர்)
17. பாடலவனம் (கருப்பூர்- பஞ்சக் குரோசத்தில் ஒன்று)
18. பாதராயணபுரி (பாணபுரி-பாணாதுறை)

இந்தப் பதினெட்டுத் தலங்களைத் தரிசிப்பது விசேஷம்.

*****

# குடந்தைக் கீழ்க் கோட்டத்துக் கூத்தனார்

முனைவர் **குடவாயில் பாலசுப்ரமணியன்,**

கோயில்களின் நகரம் என்ற பெருமைக்குரிய நகரங்களாகத் தமிழகத்தில் குறிக்கப்பெறுபவை இரண்டு பெருநகரங்களாகும். தொண்டைநாட்டு காஞ்சிபுரமும் சோழநாட்டு கும்பகோணமும் பழம்பெரும் கோயில்களைத் தன்னகத்தே கொண்ட அச்சிறப்புக்குரியவையாகும். திருக்குடமூக்கு, திருக்குடந்தை என்ற பழம் பெயர்களைச்



நடராஜர்

சுமந்த தஞ்சாவூர் மாவட்டத்து பேரூரொன்று விஜயநகர அரசு காலத்திலிருந்து கும்பகோணம் என்ற பெயர் மாற்றத்தினைப் பெற்றது. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தம் திருப்பதிகங்களில் குடமூக்கு எனக் குறிப்பிடும் கும்பேசர் கோயிலும், நாவுக்கரசர் குடந்தைக் கீழ்க்கோட்டம் எனக்கூறும் நாகேசுவரன் கோயிலும், குடந்தைக் காரோணம் என சம்பந்தர் குறிப்பிடும் காசிவிசுவநாதர் கோயிலும் குடந்தையின் தேவாரப் பாடல்பெற்ற சைவக் கோயில்களாகும். கும்பகோணத்து நாகேசுவரன் கோயிலையும் திருநாகேஸ்வரத்து (கும்பகோணத்திற்குக் கிழக்கே 3 கல் தொலைவில் உள்ள தனியூர்) நாகேச்சரத்தையும் ஒன்றெனக் கருதி சிலர் குழப்பம் கொள்வர். குடந்தை நாகேஸ்வரத்தை இங்குக் கீழ்க்கோட்டம் என்றே குறிப்பிடுவோம்.

விஜயாலய சோழன் காலம் (கி. பி. 846) தொடங்கி மூன்றாம் இராஜேந்திர சோழனின் நிறைவு ஆட்சியாண்டு வரை (கி. பி. 1279) உள்ள 433 ஆண்டுகால

முனைவர் **குடவாயில் பாலசுப்ரமணியன்,** வெளியீட்டு மேலாளர் (ஓய்வு)
சரசுவதி மகால் நூலகம். தஞ்சாவூர்

சோழராட்சியை பிற்காலச் சோழர் மரபின் ஆட்சிக் காலம் என்பர். அக்காலகட்டத்தில் படைக்கப்பெற்ற திருக்கோயில்களையும் அங்கு திகழும் சிற்பங்களையும், செப்புத்திருமேனிகளையும் கலைப்பாணி அடிப்படையில் மூன்றாகப் பகுப்பர். அவை முற்காலச் சோழர்கலை, இடைக்காலச் சோழர்கலை, பிற்காலச் சோழர்கலை என்பவையாகும். முற்காலச் சோழர் கோயில் கட்டடக்கலைக்கு மிகச் சிறந்ததோர் சான்றாக அறிஞர்களால் குறிப்பிடப்பெறுவது குடந்தைக் கீழ்க்கோட்டமே. பல்லவர் காலத்திற்கு முன்பே இக்கோயில் தோற்றம் பெற்றிருந்தாலும் தற்போது காணப்பெறும் கோயில் கட்டட அமைப்புகள் முதலாம் ஆதித்த சோழன் காலத்திலிருந்தே காணப்பெறுகின்றன.

பிரளய காலத்தில் ஊழிப் பெருவெள்ளத்தில் ஈசன் கருணையால் மிதந்து வந்த அமுத கலசத்தின் வில்வம் வீழ்ந்த இடத்தில் உதித்ததே இத்தலம் எனத் தொன்மங்கள் குறிக்கின்றன. நாகராசன், சூரியன், பகவத்ரிஷி என்போர் பூசை செய்து பேறு பெற்ற தலமுமாகும். ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் மூன்று நாட்கள் கதிரவனின் கிரணங்கள் கீழ்க்கோட்டத்து மூலவரின் திருமேனியை ஆரத்தழுவும் அரிய காட்சியை நாம் காணலாம். நாகேஸ்வரர், நாகநாதர் என்ற பெயர்களால் ஈசனும், பிரஹன்நாயகி, பெரியநாயகி என்ற பெயர்களால் அம்பிகையும் அழைக்கப்பெறுகின்றனர். கிழக்கிலும் மேற்கிலும் இராஜகோபுரங்கள் அமைய, தெற்கு நோக்கிய அம்மன் திருக்கோயில், சிங்கக்கிணறு என்ற கூபம் ஆகியவை இங்கு காணப்படுகின்றன. இரண்டாம் திருவாயில் கடந்து உள்ளே சென்றால் இடப்பக்கம் பதினாறு கால்களுடன் உள்ள மண்டபமும், வலப்பக்கம் பேரம்பலம் எனப்பெறும் நடராசர் சபையும் உள்ளன. பதினாறுகால் மண்டபத்தின் மேற்கூரை அழகிய மரவேலைப் பாடுகளுடன் அமைந்துள்ளமையைக் காணலாம்.

நடராச மண்டபத்தின் பெரும்பகுதி பிற்காலச் சோழர் கட்டுமான மாகவும், முற்பகுதி தஞ்சை மராட்டியர் கால வேலைப்பாடுகளுடனும் திகழ்கின்றன. இப்பேரம்பலம் ஆகாசமூர்த்தியான நடராசப்பெருமான் உறையும் இடம் என்பதால் சோழ சிற்பிகள் அதனை ஆகாசப்பெருந் தேராகவே வடிவமைத்துள்ளனர். இரண்டு பெரும் குதிரைகள் விண்ணில் பாய்ந்தவாறு (கால்கள் தரையில் பதியாதவாறு) அத்தேரினை இழுத்துச் செல்கின்றன. தேருக்கோ இரண்டு பெரும் சக்கரங்கள் உள்ளன. சுமார் 8அடி விட்டத்தில் ஒரே கல்லால் வடிக்கப்பெற்ற இரு தேர்க்கால்களும் மண்டபத்திலிருந்து நீண்டு திகழும் கல் அச்சில் மாட்டப்பெற்றுள்ளன. அச்சக்கரங்களில் 12 ஆரங்களும் அவைகளுக்கு ஊடே துவாதச ஆதித்தர் எனப்பெறும் பன்னிரு சூரியர்தம் சிற்ப உருவங்களும் இடம்பெற்றுள்ளன. ஆகாசத்தேராகிய அப்பேரம்பலத்துள் ஆடல்வல்லான் ஆனந்தத் தாண்டவம் புரிய அன்னை சிவகாமி கைத்தாளம் இட்டவாறு அருகே காணப் பெறுகின்றார். ஒரு புறம் ஆழியும் சங்கும் ஏந்திய திருமால் வேணுகாணம்

இசைத்தவாறு நிற்கின்றார். இவ்வம்பலத்தின் முகப்பு மண்டபத்தின் ஒருபுறம் உச்சிஷ்ட கணபதி தேவியோடு காணப்பெறுகின்றார். பின்னாளில் புதுப்பிக்கப்பெற்ற முகமண்டபத்தின் இருபுறமும் சுதையாலான இருபெரும் யானைகள் உள்ளன. பரசிவத்தின் ஆகாச தத்துவத்தை இங்கு நாம் கண்ணெதிரே கண்டு தரிசிக்கலாம்.

மூலவரின் கற்றளி சோழர் சிற்பக்கலையின் உச்சத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. கருவறையின் முப்புறங்களிலும் தேவகோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி, இடபத்துடன் உமையொருபங்கன், பிரம்மா ஆகிய திருவுருவங்களும், மற்ற கோஷ்டங்களில் பிச்சை உகக்கும் பெருமான், கொற்றவை, அரசன், அரசியர் திருவடிவங்களும் காணப்பெறுகின்றன. தட்சிணாமூர்த்தி கோஷ்டத்திற்கு மேலாகக் காணப்பெறும் வீணையை ஏந்தி இசைத்தவாறு அமர்ந்திருக்கும் சிவபெருமானின் திருவடிவம் குறிப்பிடத்தக்க ஒன்றாம். அது போன்றே தென்புற திருச்சுற்றில் தனிமண்டபத்தில் இடம்பெற்றுள்ள கங்காளர் மற்றும் தாருகாவனத்து இருடி பத்தினிகளின் சிற்பங்களும் தனித்தன்மை பெற்றவையாம்.

ஸ்ரீவிமானத்தின் அதிஷ்டானத்து கண்டபாதவரியில் சிற்றுருவ சிற்பப்படைப்புக்களாக 56 சிற்பக்காட்சிகளில் இராமாயணம் முழுவதும் விளக்கமுறச் சித்திரிக்கப்பெற்றுள்ளமையைக் காணலாம். குடந்தை தஞ்சை சாலையில் உள்ள புள்ளமங்கை ஆலயத்திலும் இத்தகைய இராமாயண சிற்பக்காட்சிகளைக் காண இயலும். ஆதித்தன் பராந்தகன் என்ற சோழப் பேரரசர்கள் சிவாலயங்களில் இராமகாதையை முழுமையாகக் காட்டி அப்பெருங்காவியத்தைப் போற்றிய பாங்கை இவ்விருகோயில்களின் வாயிலாக நாம் அறியலாம்.

கருவறையுள் இலிங்கத் திருமேனியாக கீழ்க்கோட்டத்துக் கூத்தனார் அருள் பாலிக்கின்றார். அப்பெருமானை நாம் நின்று வணங்குமிடத்தில் இடப்புறம் ஒரு சிறுமாடத்தில் கங்கைகொண்ட கணபதி என்ற பெயரில் ஓர் கணபதிப்பெருமான் திருமேனி இருப்பதை நாம் கண்டு வணங்கலாம். உலோகத்தில் வடிக்கப்பெற்றது போன்றே வழவழப்பான கருப்பு வண்ணக் கல்லில் இத்திருமேனி காணப்பெறும். பாம்புப் பூணூல் தரித்தவாறு நின்ற கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் பிள்ளையார் காணப்பெறுவார். இடக்கையில் உள்ள மோதகப் பாத்திரத்திலுள்ள மோதகங்களைத் துதிக்கை எடுக்க, வலக்கரத்தில் ஒடிந்த தந்தத்தையும், பின்னிருகரமொன்றில் உருத்திராக்க மாலையும் ஏந்த, மற்றொரு பின் கரத்தை தரையில் ஊன்றப்பெற்ற மழு மீது அமர்த்தியுள்ளார். பின்புறமுள்ள திருவாசியில் கின்னரர் போன்ற விண்ணவர்கள் வானில் மிதந்த வண்ணம் இசைக் கருவிகளை இசைக்கின்றனர்.

கங்கைகொண்ட கணபதி என்று மரபுவழி இவர் அழைக்கப் பெற்றாலும், இத்திருமேனி உண்மையிலேயே கங்கை கொண்ட இராஜேந்திரசோழனால் கங்கைக் கரையிலிருந்து எடுத்து வரப்பெற்று இங்கு பிரதிட்டை செய்யப்பெற்றதாகும். இத்திருமேனி சோழ சிற்பிகளால் வடிக்கப்பெற்றதன்று. வங்காள தேசத்தை ஆண்ட பாலர் என்ற அரச மரபினரின் சிற்பிகளால் வடிக்கப்பெற்றதாகும்.

மாமன்னன் இராஜராஜ சோழனின் மைந்தனான இராஜேந்திர சோழன் இந்திய தேசத்தின் வடபுலத்து நாடுகளை எல்லாம் வென்று இறுதியாக மேற்குவங்காளம், கிழக்கு வங்காளம் (பங்களாதேஷ்) ஆகிய பகுதிகளை வென்று கங்கைப் பேராறு கடலில் கலக்கும் கங்காசாகர் பகுதிகளிலிருந்து பொற்குடங்களில் கங்கை நீரை எடுத்து வந்துதான் புதிதாகத் தோற்றுவித்த கங்காபுரி என்னும் கங்கை கொண்ட சோழபுரத்தை புனிதப்படுத்தியதோடு, அங்கு எடுத்த பெருங்கோயிலை அந்நன்னீர் கொண்டு கடவுள் மங்கலமும் செய்தான். பின்பு அக்கங்கை நீரை தான் அவ்வூரில் வெட்டுவித்த ஏரியில் விடுத்து அந்த ஏரிக்கு "சோழகங்கம்" எனவும் பெயரிட்டான். அப்படையெடுப்பின்போது வங்காள தேசத்திலிருந்து கல்லிலும் செம்பிலும் செய்யப்பெற்ற பல இறையுருவங்களை பக்திப் பரவசத்தோடு எடுத்து வந்து சோழநாட்டின் பல திருக்கோயில்களில் வைத்து வழிபாடும் செய்தான். அவ்வாறு கங்கை கொண்ட இராஜேந்திர சோழனின் சேனாதிபதியார் வங்காள தேசத்திலிருந்து கொண்டுவந்த கணபதிபெருமான் குடந்தைக் கீழ்க்கோட்டத்து மூலவரின் முன்றிலில் நின்றவாறு நமக்கு அருள்பாலிக்கின்றார். இராஜேந்திரனின் கங்கை வெற்றியை அப்பேரரசனின் கல்வெட்டுக்கள் விரிவுபட கூறி நிற்கின்றன.

இவ்வாலயத்தின் முதற் திருச்சுற்றின் வடகிழக்குப் பகுதியில் சூரிய தேவனுக்கென்று தனித்த சிற்றாலயம் ஒன்றுள்ளது. உள்ளே கருவறையில் நின்ற கோல சூரியனின் திருமேனி இடம்பெற்றுள்ளது. இச்சிற்றாலயத்தின் வெளிப்புறம் முதற் பராந்தக சோழனின் சில கல்வெட்டுக்கள் காணப் பெறுகின்றன. அவை சூரியதேவன் முன்பு திருவிளக்குகள் இடவும், சிதாரி என்ற நறுமணப்புகையூட்டவும் அம்மன்னவன் வழங்கிய கொடைகள் பற்றி விவரிக்கின்றன. சூரியன் இத்தலத்து ஈசனை பூசித்தான் என்ற புராண அடிப்படையில் இத்தலம் பாஸ்கர க்ஷேத்திரம் என்ற பெயரால் அழைக்கப்பெறுகின்றது.

அம்மன் ஆலயத்தின் பிற்காலக் கட்டுமானத்தின் போது இணைக்கப் பெற்ற கல் ஒன்றில் இத்திருக்கோயிலின் புராதன கல்வெட்டொன்று காணப்பெறுகின்றது. மாறஞ்சடையன் என்ற முற்காலப் பாண்டிய மன்னனின் 8ஆம் நூற்றாண்டு குறிக்கப்பெற்ற இச்சாசனம் பாண்டியன் வரகுணனையோ அல்லது பராந்தகன் நெடுஞ்சடையனையோ குறிப்பதாகலாம். அக்கல்வெட்டு திருக்குடமூக்கிலுள்ள திருக்கீழ்க்கோட்டத்துப் பட்டாரகருக்கு அப்பாண்டிய மன்னன் இரண்டு திருவிளக்குகள்

எரிப்பதற்காக 100காசும், பாலுக்காக 138பசுக்களையும் வழங்கிய செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வாலயம் முழுதும் காணப்பெறுகின்ற நாற்பத்திரண்டுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் இவ்வாலயத்தின் 1200 ஆண்டுகால வரலாற்று நிகழ்வுகளை எடுத்துரைக்கின்றன.

இராஜராஜசோழன் இவ்வாலயத்திற்கென ஸ்ரீகோயில் பரமசுவாமி என்ற பெயரில் வெள்ளியால் அமைந்த திருமேனி ஒன்றினை அளித்த செய்தியை ஒரு கல்வெட்டு கூறுகின்றது. குடந்தையில் உள்ள திருக்காரோணமுடையார் கோயிலில் கன்னியாபிடாரிகள் எழுவர் திருவுருவங்கள் திகழ்ந்தமையும், அவர்தம் வழிபாடுகள் பற்றியும் முதலாம் இராஜாதிராஜனின் கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. மேலும் கண்டராதித்தர் காலத்துக் கல்வெட்டொன்றில் குடந்தை சார்ங்கபாணி சுவாமி ஜலசயனத்து பள்ளிகொண்டருளிய தேவர் என்ற பெயரால் குறிக்கப்பெற்றுள்ளார். காவிரி நீரில் பள்ளிகொண்ட பெருமானாக திருமாலைப் போற்றும் மரபு சோழ நாட்டில் இருந்துள்ளது. ஒவ்வொரு நாளும் மூன்று பொழுது காவிரி நீரால் கீழ்க்கோட்டத்துக்



குடந்தைக் கீழ்க்கோட்டம் - குடந்தை (நாகேசுவரன் கோயில்)

கூத்தனாராகிய இலிங்கப் பெருமானுக்கு திருமஞ்சனம் நிகழ்ந்ததை சில கல்வெட்டுக்கள் எடுத்துக்கூறுகின்றன. கீழ்க்கோட்டத்து பட்டாரகர், பரமசுவாமி, மகாதேவர், பெருமானடிகள், பரமேஸ்வரர் எனப் பல பெயர்களை இவ்வாலயத்து ஈசனுக்கு அரசர்தம் சாசனங்கள் குறிப்பிட்டாலும் பின்னாளில் நாகேசுவரர் என்ற பெயரே நிலைத்துவிட்டது. காஷ்மீர் நாட்டு சைவம் மலர்ந்த இடத்தில் ஓடும் தாவி நதியில் (ஜம்முதாவி) தொடங்கி இந்திய கண்டத்தின் தென்கோடி குமரி தீர்த்தம் வரை அனைத்து தீர்த்தங்களும் சூழ்ந்து நிற்கும் திருக்கோயில் இதுவென்பதைத் திருநாவுக்கரசர்

தாவி முதல் காவிரி நல் யமுனை கங்கை
சரசுவதி பொற்றாமரைப் புட்கரணி தெண்நீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே

என்று எவி இடர்க் கடல் பட, எனத்தொடங்கும் தேவாரப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். அத்தகு புனிதனான குடந்தைக் கீழ்க்கோட்டத்துக் கூத்தனை தரிசிக்க கோயில் நகரத்துக்கு வாருங்கள்.

-------x-------



கங்கை கொண்ட சோழபுரம் – வரைகோட்டு ஓவியம்

# 18ஆம் நூற்றாண்டு ஆவணச் செய்திகளில் மகாமகத் திருவிழாவும் – மராட்டிய மன்னர்களின் பங்களிப்பும்

முனைவர் கலாஸ்ரீதர்

கும்பகோணம் கோயில்கள் நிறைந்த தலமாதலால் கண்டேன் கும்பகோணம்-ஓகோகே காசிக்கு இது மெத்த மீசுரமாம் என்ற பாடல் வரிகள் திருவிடைமருதூர் நொண்டி நாடகத்தில் இடம்பெற்றுள்ளதன் வாயிலாக கும்பகோணம் கோயில் சூழ்ந்த நகரமாதலால் காசிக்கு ஒப்பாக கருதப்படுகிறது. இங்கு சைவக்கோயில்களான விசுவநாதர் கோயில், நாகேஸ்வரன் கோயில், சோமேசர்கோயில், கும்பேசர்கோயில் போன்ற கோயில்களும், வைணவக்கோயில்களான சார்ங்கபாணி, சக்கரபாணி, ராமசாமி போன்ற கோயில்களும் புகழ்பெற்ற கோயில்களாகத் திகழ்கின்றன.

தஞ்சையை ஆட்சி செய்த மராட்டிய மன்னர்கள் மகாமக விழாவை மிகச்சிறப்பாக கொண்டாடியதற்கான சான்றுகள் மராட்டியர்கால மோடி ஆவணங்கள், மற்றும் தமிழ் ஆவணங்களின் வழியாக அறியமுடிகிறது. அச்செய்திகளின் தொகுப்பே இக்கட்டுரையாகும், புகழ்பெற்ற தீர்த்த விழாக்களில் மகாமகம் விழா மிகப்பெரிய விழாவாகக் கும்பகோணத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப் படுகிறது. சிம்மராசியில் குரு இருக்கின்றபோது மக நட்சத்திரமும், பௌர்ணமியும் சேர்ந்துவரும் நாள் மகாமகம் எனப்பெறும். குரு ராசிக்கு ஓராண்டாகச் சுற்றிவரும்போது சிம்மராசிக்கு வரப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆதலின் மகாமகம் பன்னிரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வருகிறது. எனவே சிம்மராசியில் பிரகஸ்பதி பிரவேசிக்கும் வருடம் மாசிமாதம் மக நட்சத்திரம் பௌர்ணமி திதியில் பகல் காலத்தில் மகாமகம் என்னும் இப்புண்ணிய நன்னாளில் இத்திருவிழா கொண்டாடப்படுகிறது.


மன்னர் சரபோஜி - II

இந்தியத் திருநாட்டில் ஓடும் ஒன்பது புண்ணிய நதிகளாகிய கங்கை, காவிரி, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதை, சிந்து பயோஷ்னி, சரயூ ஆகிய நதிகளும் சேர்ந்து மகாமகக் குளத்தில் சங்கமிக்கின்றது. அந்தத் தீர்த்தத்தில் குளிப்பதால் அனைத்து

முனைவர் **கலாஸ்ரீதர்,** துறைத்தலைவர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம்.

பாவங்களும் நீங்கி தூய்மையான வாழ்க்கையையும், வளத்தையும் அடைவர் என்பது இந்துமத மக்களின் நம்பிக்கையாகும். இவற்றை ஆய்வு கண்கொண்டு பார்த்தோமேயானால் அனைத்து நதிகளையும் மலைகளையும், காடுகளையும் கடந்து அருவிகளாகவும், ஓடைகளாகவும் இயற்கை மூலிகைகளை தொட்டும், தழுவியும் பலத் தாதுக்களை தன்னுடன் கொண்டுவருவதாலும், அனைத்து நதிகளும் ஒன்றாக சங்கமிக்கும்போது அனைத்து தாதுக்களும் ஒன்றாகக் கலந்து அதன் மருத்துவ குணம் பன்மடங்காகப் பெருகி மக்களின் உடலுக்கும் மனத்துக்கும், ஆரோக்கியத்தையும் உற்சாகத்தையும் தருகிறது. உடல் தூய்மையடையும் போது மனமும் தூய்மையடைய வேண்டும். பல புதிய தூய்மையான மனத்தை மக்கள் பெறவேண்டும், நல்ல எண்ணங்கள் மக்களிடையே வளரவேண்டும் என்பதை மகாமக சங்கமத் தீர்த்தங்களின் வெளிப்பாடாக நம்முன்னோர்கள் கருதியுள்ளனர். அத்தகு மகாமகம் திருவிழாவை தஞ்சை மராட்டிய மன்னர்கள் தம் குடும்பத்தாருடன் சென்று மகாமகப் புனித தீர்த்ததில் நீராடி வருவதை வழக்கமாக கொண்டிருந்தனர்.

இவற்றை அறியும் வகையில் தஞ்சை மராட்டியர்காலத்தில் எழுதப்பட்ட சில துண்டுக் கல்வெட்டுக்கள் மகாமகக் குளத்தில் காணப்படுகின்றன. அவை மராட்டிய மொழியில் காணப்படுகின்றன. அதில் குளத்துத் தீர்த்தங்களின் பெயர்கள் குளத்தின் வடிவமைப்பு, மண்டபங்களின் அமைவிடங்கள் பற்றி கூறுகின்றன. மற்றொரு கல்வெட்டு பதினோறாவது மண்டபத்தில் காணப்படுகின்றன. அதில் குளத்தின் வடிவமைப்பும் மண்டபங்களின் அமைவிடங்களும் அவற்றின் திசைகளும், இருபது தீர்த்தங்களின் இடங்களும் குறிக்கப்படுகின்றன.

தீர்த்தங்களுக்குரிய பகுதிகளின் பெயர்கள் அதன் அமைவிடங் களிலுள்ள படிகளில் தமிழிலும், மராட்டியிலும் எழுதப்பட்டுள்ளன என்பதால் இப்பெயர்க் கல்வெட்டுக்கள் மராட்டியர் காலத்தில் எழுதப்பட்டிருக்கவேணடும். இங்கு எண்களுடன் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.. அவை 1. வாயு, 2.இந்திர தீர்த்தம், 3.அக்கினி, 4.எமன், 5.நிருதி, 6, 7, 8, 9. குபேர, 10. ஈசானம், 11. அறுபத்தாறு கோடி தீர்த்தம், 14. நர்மதா, 15.சரஸ்வதி, 16. காவிரி, 17. குமரி, 18. க்ஷீரநதி, 19. சரயு, 20. கோதாவரி என்றமைகின்றன. இக்கல்வெட்டுக்கள் வாயிலாக இக்குளத்தின் சிறப்பை வெளிப்படுத்தவேண்டும் என்று எழுதியிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. மன்னர் ஷாஜி தனது தாய் தீபாம்பாளுடனும் சகோதரர்களான முதலாம் சரபோஜி, துளஜா என்கிற துக்கோஜி ஆகியோருடனும் கும்பகோணம் சென்றுள்ளார். இவ்விழாவிற்குச் செல்லும்போது அவருடன் தஞ்சை அவைக்களப் புலவர்களையும்,

அழைத்துச் சென்றுள்ளனர். இவர்களனைவரும் சங்கமித்தபோது மன்னர் ஷாஜியும் அவரது குடும்பத்தினர்கள், அவைக்களப் புலவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கூடியிருக்கும்போது சபையில் அற்புத பஞ்சரம் என்ற நாடகம் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

ஸ்ரீ சந்திர மௌளீஸ்வர ஸ்வாமி கோயிலிலிருந்து ஸ்ரீ திவான் சாயேப் மகாமகத்திற்காக கும்பகோணத்திற்கு சவாரி போகும்போது கூட கொண்டு போன சுவாமிகளின் ஜாபிதா என்ற மோடி ஆவணக் குறிப்பும் காணப்படுகிறது. 1803இல் இரண்டாம் சரபோஜி கும்பகோண மகாமகக் குளத்தின் தீர்த்த பூஜைக்கு தங்கம், வெள்ளி, புஷ்பம், கம்மல், தாலி பொட்டு போன்றவற்றை அளித்தார் என்பது மோடி ஆவணக் குறிப்பின் மூலம் அறியமுடிகிறது. மகாமகத் திருவிழாவிற்கு வருகின்ற மக்களுக்கு உணவு இருப்பிடம் அளிப்பதற்காக இக்குளத்தின் அருகே ஒரு அன்னசத்திரம் கி.பி.1785இல் கட்டப்பட்டுள்ள செய்திகளை மோடி ஆவணங்கள் கூறுகின்றன.

1863 கும்பகோணம் மகாமகம் குளம் தீர்த்த பூசைக்கு தங்க புஷ்பம் வி1/2 3 வெள்ளி புஷ்பம் வி 101 1/2 சக்கரம் 4 பணம் தக்ஷிணை 1 வஸ்திரம் முறம் தானத்துக்கு கம்மல் தாலி பொட்டு வகையறாக்கள் மகாமககுளம் தண்ணீர் 20 குடம் மகாராஜா அவர்கள் ஸ்நானத்துக்கு கொண்டு வரப்பட்டது. மகாமகம் சிப்பந்திகள் தொண்டமான் படையாட்சி சேர்வை சிப்பந்தி அலிமார்களும். சென்ற மகாமகத்தின் படிக்கு அரண்மனை ஆசாமிகள் 25 ஒன்னரை மாதம் நியமித்திருக்குறது.குளத்தைச் சுற்றிலும் உள்ள கோயில்களை சுத்தம் செய்கிற விஷயம் சத்திரங்களுக்கு அதிக மொயின்கள், விவரம் விஷ்ணு தலங்களின் மொயின் ஸ்ரீ சாரங்கபாணிக்கு 510, ஸ்ரீ சக்கர பாணிக்கு 100 ஸ்ரீ ராமசுவாமிக்கு 50, ஹனுமாருக்கு 20 ஆக விஷ்ணு தலங்களுக்கு 680 சிவஸ்தலங்கள் கும்பேஸ்வர சுவாமிக்கு 300 சோமேஸ்வர சுவாமி 40 கௌதமேசுவர சுவாமிக்கு 30 சோடசலிங்கம் 46 நாகேசுவர சுவாமி 135 மற்ற தேவஸ்தானம் 30 ஆக 1,480. மகாமகத்துக்கு உத்தரவு. படிக்கு தேர் ஆண்கள் வரும் விவரம் கும்பகோணம் தேவஸ்தானம் ஆண்கள் 10,000 மாயவரம் தேவஸ்தானம் 7000 மன்னார்குடி திருவாளூர் 10,000 பாபநாசம் தேவஸ்தானம் 8,000 பட்டிகாட்டு ஜனங்கள் 3,000 பட்டுக்கோட்டை 2,000 வடகயறுள்பட மத்தியார்ஜுனம், திருவாரூர், குத்தாலம், மாயவரம், கோயில்களிலிருந்து வரவேண்டியது சென்ற மகாமகத்தின்படிக்கு மரங்கள் வெட்டும் உத்தரவு. இலுப்பமரம் 20,ஆலமரம் 15, புளியமரம் 20, தென்னை50, மூங்கில் 5000, பந்தலுக்கு கீத்து 5,000 வானவேடிக்கை சாமான்கள் கொம்பு1600, கருங்காலி கட்டை 2,000,தோல் 500 நெட்டி கட்டுகள் 2,000 மலார் கட்டு 500 சிவஸ்தலம் விஷ்ணுஸ்தலம், மகாமகம உத்ஸவம் நடக்கும் வரையில் மற்ற தேவஸ்தானங்களின் காரியஸ்தர்கள் பந்தல் போடுவதும், தேர் சாமான்கள், மேளம், நாட்டியம், தீவட்டிகள், குடைகள், தச்சு, இரும்பு

வேலை கொத்தனார் இவர்களுடன் இருந்து உதவிசெய்து வரவேண்டும். என்ற மோடி ஆவணத் தமிழாக்கச் செய்தியிலிருந்து 1863க்கு முன்பிருந்தே மகாமகம் சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ள செய்திகளை அறியமுடிகிறது.

மகாமகத்தை கொண்டாடும் தருணத்தில் கும்பகோணத்தில் உள்ள மற்ற கோயில்களுக்கும் கும்பாபிஷேகங்கள் நடத்தப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி கோயில்களுக்கு மொயினி என்கிற உதவித்தொகை கோயில் பராமரிப்புக்காக வழங்கப்பட்டுள்ள செய்திகளும் தமிழ் ஆவணங்களில் காணப்படுகின்றன.

கும்பகோணம் பட்டினம் குறித்து விஷ்ணு ஸ்தலத்திற்கு 147½ சக்கரங்களும், ½ பணமும் சிவஸ்தலத்திற்கு 69 சக்கரங்கள் விஷ்ணு தலத்தின் கோயில்களுக்கு கொடுத்த வகையில் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோயிலுக்கு மொயின் சக். 85½ 2½ பணம் ஸ்ரீ சக்கரபாணி ஸ்வாமிக்கு 27 ½ சக்1¼ பணம் ராமசுவாமிக்கு 10 சக் 4½ பணம் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி 1½ சக் 1¼ பணம் ஸ்ரீ சங்கர நாராயண பெருமாள் சாமிக்கு 17 சக்கரம், 4 பணம் முகுந்த ஸ்வாமிக்கு 3½ சக்கரம் 2¼ பணம் சிவஸ்தலம் ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரஸ்வாமி மொயின் 46 சக் ஸ்ரீ நாகேஸ்வரஸ்வாமிக்கு 23 சக் என்ற ஆவணக்குறிப்பின் மூலம் கும்பகோணம் சைவ வைணவக் கோயில்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டமை தெரிகிறது.

1843இல் கும்பகோணம் ஸ்ரீ ஆதி கும்பேஸ்வர கோயிலுக்கு கும்பாபிஷேகமாகி 45 வருஷங்களாயின. ஆகையால் சுவாமி அம்மன் வகையறா கர்ப்பகிரகத்தின் மேல் மண்டபம், தளவரிசை வகையறா சிதிலமாகியிருப்பதாலும் அதனுடைய ஜீர்ணோத்தாரணஞ் செய்ய திருப்பணிக்கு ரூ. 5,000/- கும்பாபிஷேகத்திற்கு ரூ. 5,000/- வேண்டியிருக்கிறது. என்ற குறிப்பின் மூலம் ஆதிகும்பேஸ்வரருக்கு கும்பாபிஷேகம் செய்ய அரசிடம் உதவி கேட்டமையை ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது.

மேற்கூறப்பட்ட செய்திகளின் வாயிலாக 300, 400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மகாமகம் கொண்டாடப்பட்டதற்கான சான்றாதாரங்கள் மராட்டியர் ஆட்சிக் கால குறிப்புகளின் வாயிலாக அறியமுடிகிறது. மராட்டிய மன்னர்களும், பொது மக்களும் இவ்விழா சிறப்புற நடைபெற பல மகத்தான பணிகளைச் செய்துள்ளனர்.

## கும்பகோணம் இஷ்டகாமடம்

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் கும்பகோணத்தில் இஷ்டகா மடம் என்னும் பெயரில் ஒரு திருமடம் இருந்துள்ளது. அம்மடத்தைச் சேர்ந்த ஸ்ரீபுருடோஷாத்தம பாரத் ஸ்ரீபாதங்கள் என்பவர் நன்னிலம் வட்டம் கூத்தனூரில் உள்ள சரசுவதி தேவிக்குக் கொடை அளித்துள்ளார். இக்கூத்தனூரே ஒட்டக்கூத்தர் ஊர் என்ற ஒரு கருத்தும் உண்டு.

# சங்க இலக்கியம், திருமுறை உணர்த்தும் குடந்தை

முனைவர் **மோ. கோ. கோவைமணி**

காலந்தோறும் உருவாகிய உருவாகிக் கொண்டிருக்கின்ற வரலாற்றுப் பதிவுகளைப் பல்வேறு காலச்சுவடிகள் நமக்குக் காட்டிக் கொடுக்கின்றன. அந்த வகையில்தான் தொல்லாய்வுகள், கல்வெட்டாய்வுகள், ஓலைச்சுவடி யாய்வுகள் அமைந்திருக்கின்றன. மேலும், அவ்வக்காலத்து வாழ்ந்த பெரியோர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்களிலும் அவ்வக்கால வரலாறுகள் இடம்பெற்றிருக்கின்றன. குறிப்பாக, குடந்தையைப் பற்றிப் பழங்கால இலக்கியங்களான சங்க அக இலக்கியங்களான அகநானூறு மற்றும் நற்றிணையில் குடவாயிற் கீரத்தனார் பாடல்களிலும், திருநாவுக்கரசர் மற்றும் திருஞானசம்பந்தர் ஆகியோரின் திருமுறைகளிலும் இடம்பெற்றிருக் கின்றன. அவற்றைப் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## குடந்தை

சோழநாட்டுத் தஞ்சைப் பகுதியில் உள்ள குடவாயில் என்னும் ஊரைச் சேர்ந்த கீரத்தனார் என்பவர் சங்க காலத்தில் வாழ்ந்து சங்கப் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார். தன்னுடைய ஊர்ப்பெயரை முன்னொட்டாகக் கொண்டு குடவாயிற் கீரத்தனார் என்றும், குடவாயிற் கீரத்தன் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவருடைய பாடல்கள் அகநானூற்றில் 35, 44, 60, 79, 119, 129, 287, 315, 345, 366, 385 ஆகிய எண்களிலும், நற்றிணையில் 27, 42, 212, 379 ஆகிய நான்கு பாடல்களும், குறுந்தொகையில் 79, 281, 369 ஆகிய மூன்று பாடல்களும், புறநானூற்றில் 242ஆம் பாடலும் ஆகப் பத்தொன்பது பாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன.


துவாரபாலகர்

எந்தவொரு புலவரும் தம்முடைய பாடல்களில் தம்மூர் பற்றியும், தம்மூரைச் சுற்றியுள்ள சிறப்பு வாய்ந்த ஊர் இருப்பின் அவற்றினைப் பற்றியும் அவற்றின் பெருமைகளைப் பற்றியும் சுட்டிச் செல்லாமல் இருக்க மாட்டார்கள். அவ்வகையில் பார்க்கும்போது குடவாயிற் கீரத்தனார் தம்மூரைப் பற்றித் தம் பாடல்களில் குடவாயில் என்றும், குடந்தைவாயில் என்றும் இருவேறு நிலைகளில் குறித்துள்ளார்.

முனைவர் **மோ. கோ. கோவைமணி,** பேராசிரியர், ஓலைச்சுவடித்துறை,தமிழ்ப் பல்கலைக் கழகம்.

நீங்காத புதுவருவாயுடையதும் மிக்க பழைய நெல்லினையுடைய பல குடிப்பரப்பினை உடையதும் யானை படியும் குளத்தினையும் நெருங்கிய காவற் காடுகளையும் உடையதுமாகிய குளிர்ந்த குடவாயில் அன்ன சிறப்பினள் தலைவி என்ற அகநானூற்று முல்லை நிலத்துப் பாடலாக விளங்கும் 44ஆம் பாடலில்,

தண்குட வாயிலன்னோள் (அகம். 44 : 18)

என்றும், புற்கென்ற தலையை உடைய பெண் குரங்கினது, மரமேறும் தன் தொழிலையும் சரிவரக்கல்லாத இளமையுடைய வலிய குட்டி குன்றிடத்தே உள்ள பொருந்திய மனையின் மற்றத்தினின்றும் நீங்காமல் இருக்கும். நெருப்புக் கொழுந்து விட்டது போன்ற மலர்கள நெருங்கிய பூங்கொத்தினை உடைய வேங்கை மரத்தின் தாழ்ந்த கிளையிடத்தே மறைந்திருந்து தலைவியின் கையிலிருந்த தேன் கலந்த இனிய பாலைக் கிண்ணத்தோடு வலியக் கைப்பற்றிச் சென்றுவிட்டது. அதனால் ஓவியர் எழுதினாற் போல அமைந்த இவள் கண்ணின் அழகெல்லாம் சிதையுமாறு அழுதனள். அவ்வாறு அழுததனால், கண்கள் தேர்களை இரவலர்க்குப் பரிசிலாக வழங்கும் வள்ளன்மை மிக்க சோழ மன்னர்க்குரிய குடவாயில் என்னும் ஊரில் மழைபெய்து நிரம்பிய அகழியிடத்துக் குளிர மலர்ந்த பெய்யும் மழைநீரை ஏற்கும் நீலமலர் போன்றன என்பதை நற்றிணை குறிஞ்சி நிலத்துப் பாடலாக விளங்கும் 379ஆம் பாடலில்,

தேர்வண் சோழர் குடந்தை வாயில்
மாரிஅம் கிடங்கின் ஈரிய மலர்ந்த
பெயர்உறு நீலம் போன்றன (அகம். 44 : 18)

என்றும் குறிப்பிட்டுள்ளார். குடவாயிலென்பதை குடந்தை என மேலையோர் திரித்தனர் என்று நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும், வேங்கட விளக்க உரையிலும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூர் கும்பகோணத்திற்கு அருகில் இருப்பதாலும், குடந்தைக்கு வாயில் போன்று இருப்பதாலும் குடந்தை வாயில் என்றும், குடவாயில் என்றும் குறித்தனர் என்பர். இவ்வூர் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள குடவாசல் என்று இன்று அழைக்கப்படுகிறது. குடவாயில், குடந்தை வாயில் ஆகிய பெயர்கள் குடவாசலைக் குறிப்பிடுகின்றனவேயன்றி குடந்தையைக் குறிப்பிடுவனவாக இல்லை. குடவாயிற் கீரத்தனாரின் பாடல்களில் அகநானூற்று அறுபதாம் பாடலில் வெல்லும் வேலினை உடைய கொற்றச்சோழர், பகைவர் திறையாகக் கொடுத்த நிதியைக் குடந்தையில் வைத்துக் காத்துள்ளனர் என்பதைக், கொற்றச்சோழர் குடந்தை வைத்த (அகம்.60:13) என்று குறிப்பிடுகின்றார்.

பன்னிரு திருமுறைகளில் கும்பகோணத்தைக் குடந்தை என்றும், குடமூக்கு என்றும், குடந்தைக் காரோணம் என்றும் சமயப் பெரியோர் அழைத்திருக்கின்றனர். திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறையில் ''திருக்குடந்தைக் காரோணப் பதிகம்''

மற்றும் மூன்றாம் திருமுறையில் "திருக்குடமூக்குப் பதிகம்" ஆகிய இரண்டு பதிகங்கள் குடந்தையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. திருநாவுக்கரசர் தேவாரம் ஐந்தாம் திருமுறையில் "திருக்குடமூக்குப் பதிகம்" மற்றும் ஆறாம் திருமுறையில் "திருக்குடந்தைக் கீழ்க்கோட்டப் பதிகம்" ஆகிய இரண்டு பதிகங்கள் குடந்தையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. நாலாயிர திவ்ய பிரபந்தத்திலும் "கன்னார் மதில்சூழ் குடந்கைக் கிடந்தாய்" (திவ். திருவாய். 5:8:3) என்று குடந்தை பற்றிக் குறிப்பிடுகிறது.

**சங்க இலக்கியம்**

பெரிய கடற்பரப்பில் சிவந்த இறால்மீன் நடுங்கும்படி மீன்களை முகக்கும் கொடிய தொழிலையுடைய நேரிய கோல்வினையுடைய அழகிய வலையினைக் கையிலே கொண்டவாறு நீண்ட படகில் தந்தையானவன் மீன் பிடிக்கும் தொழிலில் தங்கினான். உப்பு விற்று வாங்கி வந்த நெல்லாலே ஆக்கப்பட்ட மூரலாகிய வெண்சோற்றை அயிரை மீனை இட்டு ஆக்கிய சுவை மிகுந்த புளிங்கறியை அதிலே ஊற்றிக் கொழுமீன் கருவாட்டுடன் தந்தைக்கு அவனுடைய இளமை பொருந்திய மகள் உணவாகக் கொடுப்பாள். அத்தகைய இடமாகிய, வலிமை பொருந்திய தேரினையுடைய சேரனது தொண்டினைப் போன்ற எம் தலைவியின் ஒளிரும் வளையல்களைத் தழும்பு ஏற்படும் வண்ணம் நெருக்கி அமுக்கி வருத்தாதே !

வாடைக் காற்று கொண்டு வந்து குவித்த உயர்ந்த மணல் மேடுகளைக் கொண்ட பரந்த கடற்கரைப் பக்கத்தில் மாலையணிந்த தோழியருடன் சிற்றில் புனைந்து ஓரை விளையாடினும், உன் மேனி வருந்தும் என அறப் பண்பு இல்லாத எம் தாய் ஒரு பயன் இன்றியும் வீணே சினங்கொள்வாள். அத்தகையவள் நின் செயலைக் கண்டால் வெல்லும் வேலையையுடைய வெற்றி பொருந்திய சோழமன்னர் குடந்தை என்னும் ஊரின்கண் பாதுகாத்து வைக்கப்பட்ட, பகைவர் நாடு திறையாகத் தந்த நிதியைக் காட்டிலும் மிகவும் அரிய பாதுகாப்பினைச் செய்வாள் என்பதை,

> கொற்றச் சோழர் குடந்தை வைத்த
> நாடுதரு நிதியினும் செறிய
> அருங்கடிப் படுக்குவள், அறன்இல் யாயே. (அகம். 60:13-15)

என்கின்றார். சங்கப்பாடல்களில் குடவாயிற் கீரத்தனார் மட்டுமே குடந்தை பற்றிக் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்குடந்தையைக் குடவாயில் என்பாரும் உளர்.

**திருமுறைகள்**

கும்பகோணம் தேவாரங்களில் குடமூக்கு என வழங்கப்படுகிறது. பஞ்சகுரோசத் தலங்கள் சூழ்ந்தது. கங்கை யமுனை முதலிய ஒன்பது தீர்த்தங்களும் வந்து வழிபடும் பெருமை உடையது. பதினான்கு கோயில்களையும், பதினான்கு தீர்த்தங்களையும் உடையது. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் சோழ அரசர்கள் இதனைத் தலைநகராகக்

கொண்டிருந்தனர். சோழர்கள் இருந்த இடமாகிய சோழன் மாளிகையும், இடிந்து போன பழங்கோயில்களும் இதற்குச் சான்று எனலாம். இத்தலத்தில் (குரு சிம்ம ராசியில் பிரவேசிக்கும் காலமான ) 12 வருடத்திற்கு ஒருமுறை மகாமக தீர்த்தத்தில் மக்கள் நீராடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இங்கேயுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்கள் திருக்குடமூக்கு, குடந்தைக் கீழ்க்கோட்டம், குடந்தைக் காரோணம் ஆகியனவாகும். திருக்குடமூக்கில் கும்பேசுவர சுவாமியும், குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் நாகேசுவர சுவாமியும், குடந்தைக் காரோணத்தில் காசி விசுவநாதரும் கோயில் கொண்டுள்ளனர். இத்திருத்தலங்களில் வீற்றிருக்கும் சிவபெருமானைப் பற்றித் திருமுறைகளில் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் குறிப்பிட்டுள்ளனர். திருநாவுக்கரசர் திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக்குடமூக்கு ஆகிய இரண்டு பதிகங்களிலும், திருஞானசம்பந்தர் திருக்குடந்தைக் காரோணம், திருக்குட மூக்கு ஆகிய இரண்டு பதிகங்களிலும் குறிப்பிட்டுள்ளனர்.



திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவார முதல் திருமுறையில் திருக்குடந்தைக் காரோணப் பதிகத்தில் கும்பேசுவர சுவாமியையும் தேவியையும் பக்திப் பரவசத்துடன் பாடிப் பரவியிருப்பது வியத்தகு விண்ணப்பங்களாகும். அவை பின்வருமாறு.

கார்மேகம் போன்ற கருமை பொருந்திய கண்டத்தினராய், எட்டுத் தோள்களோடு விளங்குபவராய்த் திருக்குடமூக்குக் காரோணத்தில் எழுந்தருளியுள்ள எந்தையாகிய சிவபெருமான் அருள்செய்யும் இளமைக் கோலத்தில் விளங்குபவர். கச்சணிந்த கொங்கைகளையுடைய பார்வதி தேவியை ஒருபாகமாகக் கொண்டுள்ளவர். நீண்ட சடைமுடியில் நீர் மயமான கங்கையையும் பிறையையும் சூடியுள்ளவர். இயல்பான இருவிழிகளோடு நெற்றியில் மூன்றாவது கண்ணுடையவர். கூரிய மழு என்னும் ஓர் ஆயுதத்தை ஏந்தியுள்ளவர் என்றும்,

மாடவீதிகளும், மணம் கமழும் சோலைகளும் உள்ளன. இச் சோலைகளில் தோகையோடு கூடிய மயில்கள் உலாவுகின்ற குடந்தைக் காரோணத்தில் உறையும் இறைவரான சிவபெருமான், கொடியில் பொருந்திய இடபத்தோடும், இளமைக் கோலத்தோடும் விளங்குபவர். இவரை மணிமுடி சூடிய மன்னர்கள், இளமான் கண்கள் போன்ற விழியினை உடைய பெண்கள், மூவுலகத்திலும் உள்ள மக்கள், தேவர்கள், முனிகணங்கள், பவளத்தை போன்ற வாயினை உடைய அரம்பையர்கள் முதலான பலரும் போற்றித்துதித்து வணங்குவர் என்றும்,

குளிர்ச்சி தரும் குலைகளோடு கூடிய வாழை மரங்களும் மட்டைகளுடன் கூடிய தென்னை மரங்களும் சூழ்ந்து அழகு செய்யும் குடமூக்கில் மலையமங்கை பங்கராக, கையில் அனலேந்தியவராக எழுந்தருளி, பொன் அணிகளோடு விளங்கும் தனங்களையும் மூங்கில் முளை போன்ற வெண்மையான பற்களையும், இளம்பிறை போன்ற நெற்றியையும் இசை போன்ற மொழியையும் உடைய பார்வதி தேவியால் விரும்பப்படும் சிவபெருமான் என்றும்,

நிரம்பப்பெற்ற மணம் மிக்க பூக்கள், மகரந்தம் நிறைந்த சோலைகள், எழிலார்ந்த காடுகள் சூழப்பட்டு இருக்கும் குடமூக்கில் நீர்நிலைகளில் உள்ள தாமரை, கழுநீர், குவளை முதலிய பூக்களின் நறுமணம் முற்பட்டு வந்து பொலிவெய்துகிறது. இத்தலத்தில் காரோணம் எனப்பெயர்பெறும் திருக்கோயிலில் சிவபெருமான் எழுந்தருளி உள்ளார். இவர், காதல் நிறைந்த உமையம்மையைத் தன் உடம்பில் ஒரு பாகமாகக் கொண்டுள்ளார். மனைகள் தோறும் சென்று பலி ஏற்பவராகவும், காதில் குழை அணிந்தவராகவும், காள கண்டராகவும் இத்தலச் சிவபெருமான் விளங்குகின்றார் எனவும்,

சிவனடியார்கள் மூப்புக் காலத்து நலியும்போது நியதி தத்துவத்தின் வழியே நெறியாளராய் நின்று காக்கும் குடமூக்குக் காவலர். முற்காலத்தில் அனலையே அம்பாக வில்லில் கோர்த்து முப்புரங்களை அழித்தவரும், அருச்சுனன் செய்த தவத்தின் நிலை

கண்டு இரங்கிப் பாசுபதாத்திரம் என்ற அம்பை வழங்கியவரும், நம் உடலை வருத்தும் நோய்கள்- நம்மைப் பற்றிய வினைகள்-மனத்தை வருத்தும் துன்பங்கள் ஆகியவற்றைத் தீர்த்து காலன் அடையாவண்ணம் காத்தருள்பவர் என்றும்,

ஊன் பொருந்திய தலையோட்டைக் கையில் ஏந்தி, உலகம் முழுவதும் திரிந்து பலி ஏற்று உழலும் வாழ்க்கையர், மான்தோலைப் பூணூலில் அணிந்தவர். புலித்தோலை ஆடையாக அணிந்தவர். யானைத்தோலால் உடம்பைப் போர்த்தவர். சுடுகாட்டில் நடனம் புரிபவர். இவ்வாறான இறைவர் தேனார் மொழி அமையொடு குடமூக்கில் கூடி மகிழ்ந்துறைபவர் என்றும்,

இராவணன் மலைபோன்ற திரண்ட தோள்களை உடையவன். மதம் மிக்க வாள் போரில் வல்லவன். அவன் கயிலை மலையைப் பெயர்க்க எத்தனித்த போதே, அவ்வளவில் மணம் கமழும் தம் திருவடியின் நுனிவிரலால் அம்மலையின் உச்சியில் ஊன்றியவர், இராவணனின் பத்துத் தலைகளும் நெரித்தன. இராவணன், பணிந்து புகழ்மிக்க சாமகீதம் பாடினான். அப்பாட்டைக் கேட்டு மகிழ்ந்து அப்பொழுதே அவனுக்கு ஒளி பொருந்திய சந்திரஹஸ்தம் என்னும் வாளைக் கொடுத்து அருளியவர் குடமூக்கு நாதரே என்றும்,

காலனை அழித்த காலகாலர், கரிய திருமாலும் சிவந்த தாமரை மேல் விளங்கும் நான்முகனும் ஒருவருக்கொருவர் மாறுபட்டு வாதாடி இருவரும் அண்டங்கள் அனைத்திலும் அடிமுடிகளைக் காணத் தேடிச் சென்றும் காண இயலாத வண்ணம் ஓங்கி உயர்ந்து நிற்பவர் குடமூக்கு நாதரே என்றும் குறிப்பிடுகின்றார்.

இதுபோல் திருஞானசம்பந்த சுவாமிகளின் மூன்றாம் திருமுறையில் திருக்குடமூக்குப் பதிகத்திலும், திருநாவுக்கரசரின் ஐந்தாம் திருமுறையில் திருக்குடமூக்குப் பதிகத்திலும் கும்பேசுவர சுவாமியையும் தேவியையும் இவ்விரு தொண்டர்கள் பாடிப் பரவியிருப்பது நெஞ்சையள்ளுவதாக உள்ளது. இத்தலத்தில் இறைவன் எவ்வாறு வீற்றிருந்தான் என்பதைத் திருஞானசம்பந்தர், இரவிரி திங்கள்சூடியிருந்தான், ஏத்தர வங்கள் செய்ய இருந்தான், இயலொடு வானமேத்த இருந்தான். எக்கரை யாருமேத்த இருந்தான். இடிபடு வானமேத்த இருந்தான். இழைவளர் மங்கையொடும் இருந்தான். இலைமலி சூலமேந்தி இருந்தான். இடுமணல் எக்கர்சூழ இருந்தான். ஈரிரு கோவணத்தோடு இருந்தான். கூடலர் கொன்றைசூடி இருந்தான். இவ்வாறு இருந்த கும்பேசுவரனை சேருபவர்கள் எய்தும் நிலையினை,

வெண்கொடி மாடமோங்கு விறல் வெங்குரு நன்னகரான்
நண்பொடு நின்றசீரான் தமிழ் ஞானசம் பந்தனல்ல
தண்குட மூக்கமர்ந்தான் அடி சேர்தமிழ் பத்தும்வல்லார்
விண்புடை மேலுலகம் வியப் பெய்துவர் வீடெளிதே.

என்கிறார். அதுபோல் திருநாவுக்கரசர் ஐந்தாம் திருமுறையில் குடமூக்கில் உறையும் கும்பேசுவரரைக் கோவணத்துடையான், கூத்தாடி உறைபவன், கங்கையானவள் கன்னி எனப்படும் கொங்கையளிடம் உறைபவன். கோதாவிரியிடம் உறைபவன், கொக்கரை உடையான், சரசுவதியவள் கோமியும் உறையும், குரவனார் உறையும் தலத்தில் அரக்கன் இராவணன் கீதம் பாடியதும் குடமூக்கிலே என்கிறார்.

திருநாவுக்கரசர் ஆறாம் திருமுறையில் திருக்குடந்தைக் கீழ்க்கோட்டப் பதிகத்தில் நாகேசுவர சுவாமியைப் பற்றியும் தேவியைப் பற்றியும் பாடிப் பரவியிருப்பது பரவசப்படுத்துகிறது. சொற்பொருள் கடந்த சுடர்சோதி, கயிலைமலை வாணர், இருண்ட கண்டர், திண்தோளர், மடப்பாவை மணாளர், மூவிலைவேற் குழகர், பலிதிரியும் அழகர், நீறலைத்த திருவுருவம், நெற்றிக் கண்ணர், நிலா வலைத்த பாம்பினொடு நிறைநீர்க் கங்கையர், மலைமடந்தை கொழுநர், தக்கனது பெருவேள்வி தகர்த்தவர், சந்திரனைத் தரித்தவர். காலன் வலி தொலைத்தகழற்காலர், காமனெழில் அழல்விழுங்கியவர், ஆணொடு பெண்ணியல்லரானவர், நீலம் பச்சை செம்பொன் நிறத்தவர், முக்கண்ணர், தேவிக்குத் தேகத்தில் ஒருபாகம் தந்தவர். கோச்சோழர் குலத்தரசு கொடுத்தவர். புலித்தோல் உடையவர், பூணநூல் புனிதர் என்னை எவ்வாறு ஆட்கொண்டார் என்பதை,

ஏவியிடர்க் கடலினைப்பட டிளைக்கின் றேனை
 இப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவிஅம ருலகனைத்து முருவிப் போகக்
 குறியில்அறு குணத்தாண்டு கொண்டார் போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
 சரசுவதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
 குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.

என்கிறார்.

நாடகக்காட்சி



இவ்வாறு சங்கப் பாடல்கள் தொடங்கி திருமுறைப் பாடல்கள் வரை குடந்தையைப் பற்றிக் குறிப்பிடுகின்றதைக் காணமுடிகிறது. சங்க காலத்தில் குடந்தை நகரத்தில் இருந்த திரைச்சாலை பற்றிக் குறிப்பிடுகிறது. திருமுறைகளில் குடந்தை நகரத்தில் வீற்றிருக்கக் கூடிய தலங்களைப் பற்றியும் அத்தலங்களில் வீற்றிருக்கும் சிவபெருமானின் சிறப்புகளைப் பற்றியும் விளக்குவதாக அமைந்துள்ளது நோக்கத்தக்கது.

*****

## சார்ங்கபாணியா சாரங்கபாணியா ?

சார்ங்கம் என்ற சொல் திருமாலின் வில்லுக்குரிய சிறப்புப்பெயர். இன்னயதோர் சார்ங்கம் மால்வில் எனச் சூடாமணி நிகண்டும், சார்ங்கம் விண்டுவில் என நாமதீப நிகண்டும் தெளிவாக்குகின்றன. பாணி என்பது கரத்தில் ஏந்தியவன் எனப் பொருள் தரும். எனவே சார்ங்கபாணி என்பதற்குச் சார்ங்கம் என்னும் தெய்வீக வில்லை ஏந்தியவன் என்பது பொருள்.

சாரங்கம் என்பது பலபொருள்களை உடைய ஒருசொல். சாரங்கம் மானும் வண்டும் சாதகப் புள்ளும் ஆமே என்பது சூடாமணி, சாரங்கபாணி என்றால் மானை ஏந்திய சிவபிரான் எனக் கொள்ளலாம். இத்தொடர் நேராகத் திருமாலைக் குறிக்காது.

பொதுமக்கள் இவ்வேற்றுமையை உணராமல் சாரங்கபாணி எனத் திருமாலை வழிங்கத் தொடங்கிவிட்டனர். சார்ங்கபாணி என்னும் பெயர் உச்சரிக்க எளிமையாக இல்லாததே இதற்குக் காரணம். உலக வழக்கு இப்படி மாறிய உடனே நிகண்டு ஆசிரியர் களும் சாரங்கபாணி என்ற சொல்லுக்கே திருமால் எனக் கூறிவிட்டனர். 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாரதீப நிகண்டிலேயே, விண்டு நராந்தகன் சாரங்கபாணியன் வெற்பெடுத்தோன் என இப்பெயர் இடம்பெற்றுவிட்டது. பின்னால் வந்த அகராதிகளில் எல்லாம் சாரங்கம் என்ற சொல்லிற்குத் திருமாலின் வில் என்ற பொருள் ஏறிவிட்டது. இலக்கியத்தில் பேச்சுமொழியின் செல்வாக்கிற்கு இது ஒரு சிறந்த உதாரணம் ஆகும்.

– மலர்க்குழு



# இசைக்கலை வளர்ச்சியில் திருக்குடந்தை

முனைவர் **சண்முக. செல்வகணபதி,**

மயில்பெடை புல்கியால் மணல்மேல் மடஅன்னம் மல்கும்
பயில்பெடை வண்டு பண்செய் பழங்கா விரிப்பைம்பொ ழில்வாய்க்
குயில்பெடை யோடு பாடல் உடையான்குட மூக்கிடமா
இயலொடு வானம்ஏத்த இருந்தான்அவன் எம்மிறையே

(திருஞானசம்பந்தர் தேவாரம் : பண் பஞ்சமம். 317:3)

ஆண் மயில் பெண் மயிலோடு சேர்ந்து ஆடவும், அன்னங்கள் காவிரிக்கரை மணலின் மீது நடை பயிலவும், வண்டினம் பண் செய்யும் பைம் பொழிலின் கண் குயிலின் பெடையோடு சேர்ந்து பாடலை இசைக்கவும், ஈசன் வீற்றிருக்கும் திருக்குடமூக்கு என்றும் திருமுறைத் தலத்தைத் திருஞான சம்பந்தர் போற்றிப் பாடியுள்ளார். காவிரிக்கரையின் வளத்தில் மயில் ஆடவும், குயில் பாடவும், வண்டு முரலவும் குடமூக்கு இறைவன் கண்டும், கேட்டும் மகிழ்கிறார்.

சைவமும் வைணவமும் செழித்த பெருநகரம் கும்பகோணமாகும். தேவாரப்பாடல் பெற்ற திருமுறைத் தலமாகவும், ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்விய தேசமாகவும், அருணகிரியாரால் பாடப்பெற்ற திருப்புகழ்த் தலமாகவும் மிகப்பெரும் இசைவாணர்கள் வாழ்ந்த நகரமாகவும், பல்வேறு இசை விழாக்களை நடத்தி வரும் கலை நகரமாகவும் கும்பகோணம் அமைந்துள்ளது. அருணகிரியார் திருப்புகழ்ப் பாடல்களில் கும்பகோணம் என்று இந்நகரை அழைக்கிறார்.

## குடந்தையில் திருமுறைத் தலங்கள்

காவிரித் தென்கரையில் அமைந்துள்ள இந்நகர் மூன்று திருமுறைத் தலங்களைக் கொண்டுள்ளது. குடமூக்கு 143/26, குடந்தைக் கீழ்க் கோட்டம்144/27, குடந்தைக் காரோணம் 145/26 என்ற மூன்று திருமுறைத் தலங்களைத் தன்னகத்தேக் கொண்டுள்ளது. குடமூக்கு ஆதி கும்பேசுவரர் கோயிலாகும். கீழ்க்கோட்டம் நாகேசுவரர் கோயிலாகும். காரோணம் சோமேசர் திருக்கோயிலாகும். இம்மூன்று தலங்களும் பாடல் பெற்றுள.

குடமூக்கு – சம்பந்தர்– பஞ்சமப்பண் பதிப்பகம் – அரவிரிகோடல் – தொடக்கம்
– நாவுக்கரசர் – திருக்குறுந்தொகை – பூவணத்தவன் – தொடக்கம்
கீழ்க்கோட்டம் – நாவுக்கரசர் – திருத்தாண்டகம் – சொல்மலிந்த மறை – தொடக்கம்
காரோணம் – சம்பந்தர் – தக்கோசிப் பதிப்பகம் – வாரார் கொங்கை – தொடக்கம்

முனைவர் **சண்முக. செல்வகணபதி,** முன்னாள் முதல்வர், அரசர் கல்லூரி, திருவையாறு,

நான்கு பதிகங்கள் இத்தலப் பதிகங்களாகும். இவற்றிற்குரிய பண்முறைகளும், யாப்பு முறைகளும் கூறப்பட்டுள்ளன. சம்பந்தர் பஞ்சமப் பண், தக்கோசிப் பண்களில் பாடியுள்ளார். தொன்மையுடைய இப்பண் பதிகங்கள் முறையே ஆகிரி, காம்போதி இராகங்களில் பாடப் பெறுகின்றன. திருக்குறுந்தொகை யாப்புப் பதிகமாகும். சங்க நூற்களுள் குறுந்தொகை என்ற நூல் ஒன்றுள்ளது. குறுகிய அடிகளால் அமைந்தமையால் இப்பெயர் பெற்றுள்ளது. நாவுக்கரசர் பாடிய குறுந்தொகை தேவபாணியாதலால் திருக்குறுந்தொகை என்று அழைக்கப் பெறுகின்றது. அழகான இசைப்பாட்டு, இசை நூலார் கூறும் கீதம் என்ற இசை வகையின் முன்னோடி வடிவமாகும். பெரும்பாலும் சீகாமரப் பண் என்ற நாதநாமக்கிரியா இராகத்தில் இலாயாங்கமாகவும், சுத்தாங்க மாகவும் பாடப்பட்டு வருகிறது.



சண்டேச பதம் - கங்கைகொண்ட சோழபுரம்

தாண்டகம் என்பது மிக நீண்ட இசைப்பாடல். இவ்வகைப் பாடலைத் தமிழுக்கு அளித்தமையால் திருநாவுக்கரசர் "தாண்டகவேந்தர்" என்று அழைக்கப் பெறுகிறார். இப்பதிகங்களை குடந்தைத் திருக்கோயில்களில் பண்முறையோடு சொற்றமிழ்ச் சூடுவராகிய ஓதுவார்கள் பாடி வருஷ்கின்றனர்.

திருவாவடுதுறை து.சோமசுந்தரதேசிகர், சுவாமிமலை கல்யாண சுந்தர தேசிகர், திருவிடைமருதூர் மு. நடராஜதேசிகர், திருப்பனந்தாள் சோ. முத்துக் கந்தசாமி, திருவிடைமருதூர் சு. சம்பந்த தேசிகர், திருவாவடுதுறை ஆ.சங்கரலிங்க ஓதுவார் போன்ற ஓதுவார் மூர்த்திகள் திருக்குடந்தை நகரைச் சுற்றியுள்ள சைவத் தலங்களில் திருமுறைப் பணிகளை மேற்கொண்ட பெருந்தகை யாளர்கள் ஆவார். திருக்குடந்தையில் நடைபெறும் ஆலய விழாக்களிலும், திருமுறை விழாக்களிலும் இவர்களும் பிற தலங்களில் உள்ள ஓதுவார் மூர்த்திகளும் பண்ணிசையால் பரமனைப் பாடி மகிழ்வித்தனர். மகிழ்வித்து வருகின்றனர்.

**குடந்தை ப. சுந்தரேசனார்**

வாழ்நாள் முழுவதும் சைவநெறியும், பண்ணிசை நெறியையும் பட்டி தொட்டி எங்கும் பரப்பி வந்த பண்ணாராய்ச்சி வித்தகர் சுந்தரேசனார். குடந்தை சுந்தரேசனார் என்று போற்றப்பட்டார். கும்பகோணம் பேட்டை நாணயக்காரத்தெருவில் வாழ்ந்து பண்ணிசையின் பெருமையையும், நுட்பத்தையும் நகரங்களிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும், ஆராய்ச்சி மாநாடுகளிலும் பரப்பிய சுந்தரேசனார் இளமைக் கல்வியைக் கும்பகோணத்தில் தொடங்கி, வேதாரண்யம் இராமசாமி ஐயரிடம் 17ஆண்டுகள் குருகுலம் மூலம் இசைப் பயின்று, பிறகு அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரியில் பயின்று யாழ்நூல் விபுலானந்தர் மூலம் இசை கணக்கியல்களையும் கற்றார். இப்பயிற்சிகள் மூலம் பண்ணாய்வுகளைச் சிறப்புற நடத்தினார். "பண்ணாய்வான் பசு" என்று போற்றப்பட்டார்.

திருமுறைப் பண்கள், பதிகங்கள், பதிகங்களின் கட்டளைகள், பண்களைத் தற்கால இராக முறையில் பாடல், பண்ணுக்கும், பாடல் பொருளுக்கும் உள்ள பொருத்த முறைகளை ஆராய்தல், ஊர்கள் தோறும் வார நாட்களில் எல்லாம் திருத்தொண்டர் புராணம், திருவிளையாடல் புராணம், சிலப்பதிகார வகுப்புகளை நடத்தி பெருந்திரளான மாணவர்களை உருவாக்கினார். திருத்தவத்துறை, பூவாளூர், திருமழபாடி, கீழப்பழுவூர், ஆடுதுறை, அரியலூர், திருக்குடந்தை போன்ற ஊர்கள்தோறும் சென்று திருமுறைப் பணி மேற்கொண்டார். பழமையான இசை நூலான பஞ்சமரபு நூல் பதிப்பிற்குத் துணை நின்றார். முதல் ஐந்திசைப்பண் என்ற நூலையும் வெளியிட்டார். இசைத்தமிழ்ப் பாடல்களை எவ்வகையில் பாடவேண்டும் என்பதனைப் பாடிக்காட்டி பலரை உணரவைத்தார். இத்தகு பெருந்தகை திருக்குடந்தை மாநகர் தந்த இசைச் செல்வர் ஆவார். இத்தகு பெருந்தகையாளர் 09-06-1981 அன்று மறைந்தார்.

**நாலாயிரத்தைக் கண்டெடுத்த திருக்குடந்தை**

வைணவ அடியார்கள் பாடிய திருப்பாசுரங்களின் தொகுப்பை நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் என்பர். நாலாயிரம் இயற்பா என்றும் இசைப்பா என்றும் வகைப்படுத்தப்பெறும். நாலாயிரத்தில் மூன்றாவது ஆயிரம் இயல்பா. ஏனைய மூன்று ஆயிரங்களும் இசைப்பாக்களாகும். பெரியாழ்வார் யானைக் கழுத்தில் கிடந்த மணி ஓசைகளைத் தாளமாகக்கொண்டு திருப்பல்லாண்டு அருளினார். திருப்பாணாழ்வார் யாழிசையால் அரங்கனைச் சேவித்தார். குலசேகராழ்வார் **குலசேகரன் இன்னிசையில் மேவிச் சொல்லிய இன்தமிழ் மாலை** என்கிறார். திருமங்கையாழ்வார் **பண்ணார் பாடல் பத்தும் பயில்வார்க்கும் பண்கள் அகம் பயின்ற சீர்பாடல் விழுமிய இசையினோடும் ஒலி சொல்லும் அடியவர்** என்கிறார்.

நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் தொகுப்பிற்குத் திருக்குடந்தையில் எழுந்தருளியுள்ள இறைவன் ஆராவமுதனே காரணமாவார். திருக்குடந்தையில் உள்ள சாரங்கபாணி கோயில் இறை ஆராவமுதனை மையமிட்டு நாலாயிரம் தொகுக்கப்பட்டது. இவற்றைத் தொகுத்து வகைப்படுத்தியவர் நாதமுனிகளாவார். ஒருமுறை நாதமுனிகள் ஆராவமுதனைத் தரிசிக்க வந்தார். பக்தர்கள் சிலர் **குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும் மழலை தீர வல்லார் காமர் மானேய் நோக்கியார்க்கே** என்ற பாசுரத்தை இசைத்துக்கொண்டு வந்தனர். இதனைக் கேட்ட நாதமுனிகள் ஆயிரம் பாசுரங்கள் உண்டோ என்று ஆச்சரியப்பட்டார். பாடியவர்களையே அப்பாசுரங்கள் அனைத்தையும் பாடச்சொன்னார். இவை தவிர வேறு எவையும் தெரியாது என்றனர். ஆயிரம் மட்டுமல்ல மொத்தம் நாலாயிரம் உள்ளன என்றனர். உளவோ என்றார். ஆச்சரியம் அடைந்த நாதமுனிகள் நாலாயிரம் பெறும் வகையில் ஈடுபட்டார். அவரது கனவில் எம்பெருமான் ஆழ்வார் திருநகரிக்குச் செல்லுமாறு பணித்தார். ஆழ்வார் திருநகரி சென்றார். நம்மாழ்வாரைக் குறித்துத் தவமிருந்து, நம்மாழ்வாரின் தரிசனத்தோடு நாலாயிரத்தையும் தொகுத்து நற்றமிழ் உலகிற்குத் தந்தார். ஆராவமுதன் என்று பெயர்கொண்ட இப்பெருமான் ஆழ்வார்களின் பாசுரங்களைத் தொகுப்பதற்குக் காரணமாக இருந்தமையால் ஆராவமுதாழ்வார் என்று அழைக்கப்பெற்றார்.

இக்குடந்தை நகர் 52 பாசுரங்களைக் கொண்டுள்ளது. முதலாழ்வாரான பொய்கையார், பூதத்தார், பேயாழ்வாருடன் திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், திருமழிசையாழ்வார், ஆண்டாள் ஆகியோர்கள் பாடிய திவ்விய தேசமாகும். முதலாழ்வார் மூவர் பாடல்களைத் தவிர ஏனையவை இசைத்தமிழ்ப் பாசுரங்களாகும். திருமலைக்கும், அரங்கத்திற்கும் அடுத்து இங்குதான் ஆழ்வார்களின் மங்களாசாசனம் அதிகம். தமிழகத்தில் உள்ள மிக உயரமான மூன்றாவது இராசகோபுரம் இங்குதான் உள்ளது. முதலாவது கோபுரம் திருவரங்கம் 236அடி உயரம், இரண்டாவது திருவில்லிப்புத்தூர் இராசகோபுரம் 165 அடி, சாரங்கபாணி கோயில் கோபுரம் 150 அடி. இக்கோபுரத்தை மூன்றாம் குலோத்துங்கன் கட்டியுள்ளார். ஆயினும் இலட்சுமி நரசிம்மசுவாமி என்ற பக்தரால் கட்டப்பெற்றது என்பர். இவர் இக்கோபுரத்தைப் புதுப்பித்திருக்க வாய்ப்புள்ளது. இப்பெருமானையே இவர் உறவினராகக் கருதினார். உறவினர் ஒருவரும் இல்லாத இவர் பரமபதம் அடைந்தார். இவருக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகளை ஊரார் செய்தனர். மறுநாள் கோயிலைத் திறந்து பார்த்தபொழுது பெருமாள் ஈரவேட்டியுடன், மாறியுள்ள பூணூலுடன், தர்ப்பணங்களுடன் இறுதிச் சடங்குகள் செய்யும் கோலத்தில் இறைவன் காட்சியளித்தார்.

திருக்குடந்தை பாசுரங்கள் 51, இவற்றுள் இயற்பா. 44 இசைப் பாக்களாகும். இசைப்பாக்களில் திருமழிசையாழ்வார் 6, நம்மாழ்வார் 11, பெரியாழ்வார் 3, ஆண்டாள் 1, திருமங்கையாழ்வார் 22 ஆக 44 பாசுரங்கள். இவைகள் பண்ணோடும் பண்ணுக்குரிய இராகத்தோடும் பாடப்பட்டன. எடுத்துக்காட்டாக ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழி 13. 2. பைரவி இராகத்தில் ஆதிதாளத்தில் பாடப்பட்டது.

பாலா லிலையில் துயில் கொண்ட பரமன் வலைப்பட்டி ருந்தேனை
வேலால் துன்னம் பெய்தாற் போல் வேண்டிற் றெல்லாம் பேசாதே
கோலால் நிரை மேய்த் தாயனாய்க் குடந்தைக் கிடந்த குடமாடி
நீலார் தண்ணத்துழாய் கொண்டு என்நெறிமென் குழல்மேல் சூட்டீரே
(நாச்சியார் திருமொழி 13 : 2)

பைரவி என்பது கௌசிகப் பண்ணாகும். இதனைக் கைசிகிப் பண் என்றும் கூறுவர். பூமாதேவிக்குப் பூவராகப் பெருமாள் கைசிகப் புராணத்தைக் கூறினார் என்றும் அதன் பயனாய்ப் பூமாதேவி ஆண்டாளாக அவதரித்தார் என்பர். வைணவ ஆச்சாரியார் பாசுரபட்டர் கைசிகப் பண்ணைத் திருவரங்கன் முன் பாடினார் என்பர். திருக்குறுங்குடியில் நம்பாடுவான் நம்பி மீது பக்தி பூண்ட நிலையையொட்டி கைசிகப் புராண நாடகம் ஆடப்பட்டு வருகிறது.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தற்போது பண்ணோடு பாடப்பெறாமல் ஓதப்பட்டு வருகிறது. தேவாரத்தில் 23 பண்களே அமைந்துள. திவ்வியப் பிரபந்தம் மூலம் 29 பண்கள் கிடைத்துள. திருக்குடந்தை மூலம் நாலாயிரம் உளவென அறிந்த நாதமுனிகள் இசைப்பாசுரங்களைத் தனியாகவும் இயற்பாடல்களைத் தனியாகவும் கணக்கிட்டுள்ளார். அருணகிரியார் பாடிய ஏழு திருப்புகழ்ப் பாடல்கள் திருக்குடந்தைப் பாடல்களாகும். இந்நகரை இவர் கும்பகோணம் என்று அழைக்கிறார்.

**திருக்குடந்தையில் மங்கள இசை வளர்த்தோர்**

சைவ வைணவ ஆலய வழிபாட்டில் தமிழகத்தின் தனிப்பெரும் இசையாம் மங்கல இசை திருக்கோயில் வழிபாட்டில் முக்கிய இடம்பெற்று வருகிறது. விடியற்காலை வழிபாட்டில் தொடங்கி அர்த்த ஜாமப் பூசை வரை மங்கல இசை வழிபாடு நடைபெற்று வருகிறது. வருட விழாக்களில் சுவாமி திருவீதி உலா வருகையிலும் மங்கல இசை முக்கியப் பங்கு பெறுகிறது. சுவாமி புறப்பாட்டின் பொழுது மல்லாரி இசைக்கப்பெறும். பெரிய மல்லாரி, தேர் மல்லாரி என புறப்பாட்டு நிலைக்கு ஏற்ப இசைக்கப்பெறும். தளிகை மல்லாரி, திருமஞ்சனமல்லாரி, எச்சரிக்கை, உடல்கூறு, தட்டிச்சுற்று, கெட்டி மேளம் என்ற பல்நிலைகளில் நாகசுரம், தவில், தாளம், ஒத்துவுடன் கூடிய மங்கல இசை வழிபாடு நடைபெறும்.

கும்பகோணம் திருக்கோயில்களில் கோயில் மேளக்காரர்கள், கோயில் இசை ஊழியம் செய்து வந்துள்ளனர். இன்று கோயில் மேளக்காரர்கள் பலர் குடந்தை நகரில் இசை வழிபாடு செய்து வருகின்றனர். சிறப்பான திருவிழா நாட்களில் ஏற்பாடி மேளம் என்கிற சிறப்பு மேளக் கச்சேரிகளும் நடைபெறும். அப்பொழுது மிகச் சிறந்த இசை விற்பன்னர்களின் இசை நிகழ்ச்சிகள் கோவில் நகரமாம் கும்பகோணத்தை அலங்கரித்தன, இன்றும் அலங்கரிக்கின்றன.

**திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளை (1898-1956)**

நாகசுரச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தவர் திருவாவடுதுறை இராசரத்தினம் பிள்ளையாவார். 27-01-1898இல் திருவாவடுதுறையில் பிறந்தார். திருமருகல் நடேச நாகசுரக்காரரால் வளர்க்கப்பெற்றார். மன்னார்குடி சின்ன பக்கிரி நாயனக்காரர் போல் வாசிக்க முனைந்தார். அயராத உழைப்பால் இசைத்திறனால் நாகசுரச் சக்கரவர்த்தி என்று போற்றப்பட்டார். இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற்ற பொழுது புதுடில்லியில் இவரின் நாகசுர இசையோடு சுதந்திரக் காற்றை இந்தியத்திருநாடு சுவாசித்தது. நாகசுரக் கலைக்குப் புது மரியாதையையும் கொடுத்தார். மங்கல இசைக்காரர்கள் தன்மானத்தோடு வாழ வழி வகுத்தார்.

இவரைப்போல் திருவெண்காடு சுப்பிரமணியப்பிள்ளை (1906-1986), திருவீழிமிழலை சுப்பிரமணியபிள்ளை(1893-1984), கோட்டூர் இராசரத்தினம் பிள்ளை (1932-1987), திருச்சேறை கிருஷ்ணமூர்த்தி பிள்ளை(1921-1985). திரு. மெய்ஞானம் நடராஜ சுந்தரம் பிள்ளை (1920-1981), ஆண்டாங்கோயில் கருப்பையாப் பிள்ளை(1909-1958), ஆண்டாங்கோயில் செல்வரத்தினம், சூரியனார்கோயில் நாராயண சுவாமி பிள்ளை (1905-1972), திருவிடை மருதூர் வீருசுவாமி பிள்ளை(1901-1960), தருமபுரம் அபிராமி சுந்தரம்பிள்ளை போன்றோர் நாகசுர இசையால் கலை உலகைச் செழிக்க வைத்தனர்.

**கும்பகோணம் நாகசுரம் இராமையாபிள்ளை (1900-1972)**

கும்பகோணம் இராமையாபிள்ளை கந்தசாமி பிள்ளையின் இரண்டாவது மகனாவார். கும்பகோணம் ராஜண்ணா பிள்ளையுடன் இணைந்து நாகசுரம் வாசித்து வந்தார். நாகசுரம் கற்பிப்பதில் வல்லவர். பலருக்குக் கற்பித்துள்ளார். அவர்களும் பிற்காலத்தில் மிகச் சிறந்த வித்வான்களாக விளங்கினர். பந்தணைநல்லூர் மகாலிங்கம், இராமலிங்கம் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இவர்கள் கும்பகோணத்தில் தங்கி இசைக்கலை வளர்த்தனர். திருக்கருகாவூர் சுப்பிரமணியன், கோட்டூர் சாமிநாதன், வைக்கம் கோபால கிருஷ்ணன், திருமங்கலம் மீனாட்சி சுந்தரம் போன்றோர் இராமையா பிள்ளையால் உருவாக்கபட்ட மாணவர்கள் ஆவர். இராமையா பிள்ளை நாகசுரத்தோடு முகவீணை என்ற கருவியையும் வாசித்துள்ளார்.

நாகசுர இசையோடு இணைத்து இசைத்த தவில் கலைஞர்கள் பலர் தஞ்சை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். அம்மாப்பேட்டை பக்கிரிப்பிள்ளை



(1874-1920), அம்மாசத்திரம் கண்ணுசுவாமி பிள்ளை(1876-1933), திருவாளப்புத்தூர் பசுபதிப்பிள்ளை (1879-1958), நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (1894-1949), பந்தணை நல்லூர் ரத்தினம் பிள்ளை (1903-1936), கரந்தை சண்முகம், திருநகரி நடேச தவில்காரர்(1910-1980), மன்னார்குடி நடேசபிள்ளை (1897-1972), கரந்தை ரத்தினம்பிள்ளை (1884-1956), நாச்சியார்கோயில் இராகவப்பிள்ளை போன்ற தவில் மாமேதைகளும் இருந்தனர். தற்பொழுது அரித்துவாரமங்கலம் ஏ.கே.பழனிவேலு, திருவாளப்புத்தூர் கலியமூர்த்தி, வேதாரண்யம் பாலு, தஞ்சாவூர் டி. ஆர். கோவிந்தராஜன் போன்ற சிறந்த மேதைகள் இக்கலைக்குப் பெருமை சேர்த்து வருகின்றனர்.

**கும்பகோணம் தவில் தங்கவேல் பிள்ளை (1906-1981)**

கும்பகோணம் தங்கவேல் பிள்ளை அய்யாக்கண்ணு, கண்ணம்மாளின் மகன். தாதக் கிருஷ்ணத் தவில்காரரிடம் கற்று மிகப்பெரிய மேதையாக விளங்கினார். கும்பகோண நகருக்குப் பெருமை சேர்த்தவர், மாணவர்கள் பலரை உருவாக்கியுள்ளார். தவில் வாசிப்பில் தனக்கென ஒரு தனி இடம் பெற்றவர் ஆவார்.

**கும்பகோணம் பிடில் இராசமாணிக்கம் பிள்ளை (1898-1970)**

மேலை நாட்டுப் பிடில் கருவியைக் கர்நாடக இசைக்கு சொந்த மாக்கிய தஞ்சை வடிவேலு, பாலுச்சாமி தீட்சிதர் வழியில் கர்நாடக இசையில் சிறப்புடன் விளங்கியவர்களில் கும்பகோணம் பிடில் இராசமாணிக்கம் பிள்ளை, சிவவடிவேலுப்பிள்ளை, திருவாளப்புத்தூர் கிருட்டிணமூர்த்தி பிள்ளை போன்றோர் கும்பகோணத்திற்குப் பெருமை சேர்த்தவர்கள் ஆவர். சங்கீத கலாநிதி வயலின் மேதை என்று பாராட்டப்பெற்ற பிடில் இராசமாணிக்கம்பிள்ளை திருக்குடந்தை நகருக்குப் பெருமை சேர்த்தவர் ஆவார்.

மேலும் ஏராளமான இசை மேதைகளின் பணியால் திருக்குடந்தை பெருமை பெற்றது, பெற்று வருகிறது. வாய்ப்பாட்டுக் கலைஞர்கள, சித்திர வீணை மேதை சாவித்திரி அம்மாள், மிருதங்க மேதைகள், பரதநாட்டியக் கலைஞர்கள், வீணை வித்தகர்கள் போன்றோர் கோயில் நகரமாம் திருக்குடந்தைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். பல்வேறு சபாக்கள், தியாகராஜர் விழாக்கள் மிகச் சிறப்புடன் குடந்தையில் நடந்து வருகின்றன. உலகம் வியக்கும் திருவையாறு தியாகராசர் விழாவைத் தியாகப்ரும்ம சபை தொடர்ந்து மிகச் சிறப்புடன் நடத்தி வருகிறது. இவ்விழாவைச் சிறப்புடன் பெருமைக்குரிய கவித்தலம் மூப்பனார் குடும்பத்தினர் நடத்தி வருகின்றனர்.திருக்குடந்தையின் இசைக்கலையை வளர்த்தவர்கள் பலர். வளர்த்து வருபவர்கள் பலர் உளர். இன்றும் இசை உலகம் போற்றும் திருநகராகத் திருக்குடந்தை விளங்குவதற்கு இசைக்கலைஞர்கள், புரவலர்கள் காரணிகளாக விளங்கி வருகின்றனர். கோயில் நகரம் கலைநகரமாகக் காட்சியளிக்கிறது. அதிலும் இசைக்கலை வளர்க்கும் நகரமாக விளங்கி வருகிறது.

*****

## காவிரிக்கரையும் கரிகாலனும்

வரலாற்றுப் பேரறிஞர் தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் சங்ககாலக் கரிகாலன் கல்லணை கட்டவில்லை. காவிரிக்குக் கரை கட்டுவித்தான் என்று ஆய்ந்து நிறுவியுள்ளார்.

தொக்க கலியின்மூ வாயிரத்துத் தொண்ணூற்றில்
மிக்க கரிகால வேந்தனும்தான் பக்கம்
அலைக்கும் புகழ்பொன்னி ஆறுகரை கண்டான்
மலைக்கும் புயத்தானும் வந்து

என்று பழம்பாடல் இதனைக் கூறும். இதன் காலம் கி. மு. 11ஆம் நூற்றாண்டாகும். காவிரிக்கரை கட்டியபோது கரிகாலனுக்கு 53 வயது என்று ஒரு தனிப்பாடல் கூறுகிறது.

அஞ்சின் முடிகவித்து ஐம்பத்து மூன்றளவில்
கஞ்சி காவேரிக் கரைகண்டு - என்பது அப்பாடல் பகுதி

## சிவகுருநாதன் செந்தமிழ் நூல் நிலையம், கும்பகோணம்

முனைவர் **பா. ஜம்புலிங்கம்,**

தமிழகத்தில் அதிகமான எண்ணிக்கையில் சைவ மற்றும் வைணவக் கோயில்களைக் கொண்டு அமைந்துள்ள கோயில் நகரம் கும்பகோணம். காசிக்கு வீசம் பெரிது என்று கூறப்படும் இந்நகரில் பிற கோயில்களும் காணப்படுகின்றன. சமணக்கோயில்களும், பௌத்தக் கோயில்கள் இருந்ததற்கான சான்றையும் கொண்ட பெருமை கொண்டது இந்நகரம். மடங்களும் இந்நகரில் அமைந்துள்ளன. புகழ்பெற்ற மகாமகக்குளம் இவ்வூரின் பெருமையை உலகுக்கு உணர்த்துவதாகும். புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், நூலகங்கள் என்ற அனைத்து நிலைகளிலும் இந்நகரம் முன்னணியில் நிற்கின்றது.

கும்பகோணத்தில் சிவகுருநாதன் செந்தமிழ் நூல் நிலையம் அரை நூற்றாண்டிற்கும் மேலாக நகர மக்களின் வாசிப்புத் தேவையைப் பூர்த்தி செய்துவருகின்றது. மக்களிடையே படிக்கும் பழக்கத்தை வளர்க்கவும், கல்வியறிவை மேம்படுத்தவும் இந்நூலகம் செய்துவரும் பணி போற்றுதற் குரியதாகும். 2016 மகாமகம் கொண்டாடப்படும் இவ்வினிய வேளையில் இந்நகரில் புகழ்பெற்று விளங்குகின்ற இந்நூலகத்திற்குச் செல்வோம்.



குடந்தை நாகநாதசுவாமி கோயில்

முனைவர் **பா. ஜம்புலிங்கம்,** தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்–613 010.

### தோற்றம்

*1947ஆம் ஆண்டில் கும்பேஸ்வரர் கோயிலில் அறங்காவலராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது தேர்த்திருவிழா ஏற்பாட்டிற்காக ஜி.எஸ்.சுவாமிநாத செட்டியார் தருமபுரம் ஆதீனத்திற்குச் சென்றுள்ளார். அப்போது அங்கேயிருந்த ஞானசம்பந்தம் நூல் நிலையம் அமைக்கப் பட்டிருக்கும் முறை அவரைக் கவர்ந்துவிட்டது. அப்போது அவருடைய மனதில் அவருடைய தந்தையின் தந்தை கோபு சிவகுருநாதன் செட்டியார்,எம்.ஏ.,பி.எல்., பெயரில் நூல் நிலையம் அமைக்கும் எண்ணம் உருவானது. அவர் பெயரில் சில ஆண்டுகள் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கியுள்ளார். அவ்வாறு பயின்ற பலர் நல்ல நிலையில் வாழ்வதை அறிந்த அவர் நூல் நிலையம் ஒன்றும் அவர் பெயரில் அமைத்தால் அனைவரும் பயனடைவர் என்று எண்ணினார். இந்நூலகம் உருவாவதற்கு அடிப்படை இதுவேயாகும்.*

### சிவகுருநாதன் செட்டியார் வாழ்க்கை

*கி. பி. 1865இல் பிறந்த சிவகுருநாதன் செட்டியார் வழக்கறிஞர் பணியினை மேற்கொண்டார். அவர் திருவாவடுதுறை, குன்றக்குடி ஆதீனங்களின் வழக்கறிஞராகவும், அரசின் வழக்கறிஞராகவும் பணி யாற்றினார். 1899 முதல் 1901வரை கும்பகோணம் நகரத்தின் அவைத் தலைவராக விளங்கி பல நற்பணிகளைச் செய்துள்ளார். ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் டெல்லிக்கு வந்தபோது திருவாளர் செட்டியாரின் பெருமைகளைக் கேள்விப்பட்டு அவருக்கு நற்சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்தார். குடந்தை சாதுசேஷய்யா நூல் நிலைய அமைப்பாளர்களில் இவரும் ஒருவராக இருந்துள்ளார். பல கோயில்களில் அறக்கட்டளைகளை ஏற்படுத்தியுள்ளார். பெரும்புலவர்களான மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, தியாகராஜ செட்டியார், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், மறைமலையடிகள் போன்றோர் இவரது ஆதரவைப் பெற்றிருந்தனர். கும்பகோணத்தில் நாணயக்காரத் தெருவில் இருந்த அறுபத்துமூவர் மடத்தில் சைவ வளர்ச்சிக்கென ஒரு சங்கம் அமைத்து அதன் தலைவராகவும் விளங்கினார்.*

*1925இல் தனது 60ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது குடந்தை பேட்டைத் தெருவில் தனக்குச் சொந்தமான லட்சுமி சத்திரத்தை நகராட்சி தொடக்கப்பள்ளிக்கென நன்கொடையாக வழங்கினார். (இன்றும் அது பேட்டைத்தெருவில் கோபு சிவகுருநாதன் தொடக்கப்பள்ளியாக விளங்கி வருகிறது) இவர் 63ஆவது வயதில் 1928இல் இயற்கையெய்தினார்.*

**நூலகம் உருவாகுதல்**

இத்தகு பெருமைகளைக் கொண்டு வாழ்ந்த சிவகுருநாதன் செட்டியார் பெயரில் சிவகுருநாதன் செந்தமிழ் நூல் நிலையம் தற்போதுள்ள இடத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, 21-05-1958இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் சென்னை மேல்சபை உறுப்பினர் செந்தமிழ்க் காவலர் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களால் நூல் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 09-11-1959இல் நூல் நிலையம் சென்னை மேல்சபை உறுப்பினர் தமிழ்வேள் சர்.பி.டி.ராஜன் பார்-அட்-லா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இலவசமாக யாவரும் வந்து அமர்ந்து படித்து இன்புறுவதற்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் இந்நூல் நிலையம் கொண்டு அமைந்தது. கும்பகோணத்தில் இத்தகைய நூல் நிலையம் வேறில்லை என்று துணிந்து கூறும் அளவில் சிறப்பு பெற்றது. செந்தமிழ் நூல்களை மட்டுமே கொண்ட அரிய கலைப்பெட்டகமான இந்நூலகத்தில் 10,000 நூல்கள் சேர்க்கப்பெற்ற விழாவும், நூல் நிலையத்தின் 12ஆவது ஆண்டு விழாவும் 23-05-1971இல் கொண்டாடப்பட்டது.

**ஆரம்பகால நன்கொடையாளர்கள்**

நூலகம் உருப்பெறும் காலகட்டத்தில் ஆதீனங்கள்,கோயில்கள், கல்வியாளர்கள், வணிகர்கள், தனிநபர்கள் என்ற நிலையில் பல நன்கொடையாளர்கள் மனமுவந்து நூல்களை அன்பளிப்பாகத் தந்துள்ளனர். அவர்களில் திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானம் (216 நூல்கள்), தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானம் (152 நூல்கள்), திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானம் (15 நூல்கள்), கும்பகோணம் ஜகத்குரு காமகோடி பீடம் (35 நூல்கள்), அ. சிதம்பரநாத செட்டியார் (661 நூல்கள்). பி. ஸ்ரீனிவாச அய்யர் (68 நூல்கள்), எஸ். வி. தியாகராஜபிள்ளை (60 நூல்கள்), ஜி. கே. வைத்தியநாதன் செட்டியார் (51 நூல்கள்), ஜி. என். சதாசிவம் (46 நூல்கள்), கோபு. அ. ராமலிங்கம் செட்டியார் (40 நூல்கள்), ஜி. ஆர். ராமானுஜம் (44 நூல்கள்), எஸ். எம். பஞ்சநதம் செட்டியார் (33 நூல்கள்), ஏ. ஆர். ராமசாமி (31 நூல்கள்), கலியாணசுந்தர முதலியார் (30 நூல்கள்), சக்கரபாணி செட்டியார் (24 நூல்கள்), ஏ. எஸ். ஏ. துரைசாமி செட்டியார் (24 நூல்கள்), ஏ. எஸ்.ஏ. சீதாராமன் (19 நூல்கள்), சி. ராமன் (16 நூல்கள்), ஆடுதுறை எம். என். சொக்கலிங்க செட்டியார் (16 நூல்கள்), சாக்கோட்டை எம்.டி.டி.வி.மில் (14 நூல்கள்), காரைக்கால் வி. ஏகாம்பரம் (13 நூல்கள்), திருவிடைமருதூர் தேவஸ்தானம் (10 நூல்கள்), உள்ளிட்ட பலர் அடங்குவர்.

**பதிவேட்டுப்பட்டியல்கள்**

இந்நூலகத்தில் உள்ள நூல்கள் பல்துறை நூல்கள் என்ற தலைப்பில் இரு நூற்பட்டியல்களிலும், பத்திரிக்கைகள் என்ற தலைப்பில் இரு சிறிய பதிவேடுகளிலும்,

ஆங்கிலப் புத்தகப் பட்டியலைக் குறிக்கும் ஒவ்வொரு நூலின் தலைப்பு, ஆசிரியர், அதற்கான எண் போன்ற விவரங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

**முதல் புத்தகத் தொகுப்புப் பட்டியல்**

நூலகம் அமைந்த காலகட்டத்தில் முதன்முதலாக 44 பிரிவுகளைக் கொண்டு 5,000 நூல்களின் பட்டியல் முதலில் தொகுக்கப்பட்டது. இப்பட்டியலில் புராணம், தலபுராணம், சாத்திரம், தோத்திரம், திருமுறை, சமயம், சங்க நூல், பிரபந்தம், அகவல், அந்தாதி, உலா, கலம்பகம், சதகம், தூது, பரணி, பிள்ளைத்தமிழ், மாலை, வெண்பா, கீதை, இதிகாசம், வைணவம், நீதிநூல், அகராதி, இலக்கணம், நிகண்டு, கணிதம், சங்கீதம், புதுமைக்கவி, மொழிபெயர்ப்பு, கல்வெட்டுகள், சிற்ப நூல், உலக வரலாறு, யாத்திரை, வாழ்க்கை வரலாறு, உயிர் நூல், உடற்பயிற்சி, வைத்தியம், மாந்திரீகம், சோதிடம், கட்டுரை, மன நூல், வரலாறு உள்ளிட்ட தலைப்புகள் அடங்கும் இந்நூலில் பிற்சேர்க்கையும், திருத்தமும் இணைக்கப்பட்டுள்ளது.

**இரண்டாவது புத்தகத் தொகுப்புப் பட்டியல்**

முதல் பட்டியலில் விடுபட்ட துறைகளான அரசியல், அறிவியல், வேளாண்மை, இசுலாமிய, கிறித்துவ நூல்கள், நாடகம், புதினம் ஆகியவை கொண்ட 5,000 நூல்களின் தலைப்புகளைக் கொண்ட பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

**நூல்நிலைய விதிகள்**

இந்நூலகத்திற்கு வாசிக்க வருவோர் கடைபிடிக்க வேண்டிய விதிகளாக பின்வருவன கூறப்பட்டுள்ளன. ஆண்டாண்டு காலமாக வரும் வாசகர்கள் விதிமுறைகளை முறையாகப் பின்பற்றி வருகின்றனர்.

1. இந்த நூல் நிலையத்தில் சாதி மத வேறுபாடின்றி ஆடவர், மகளிர் யாவரும் நூல்களை எடுத்துப் படிக்கலாம்.

2. புத்தி மாறாட்டம் உள்ளோரும், தொழுநோயால் பீடிக்கப் பட்டோரும், தூய உடையின்றி அழுக்காடை அணிந்து வருவோரும் நூல் நிலையத்திலே நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3. 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கட்கு நூல் நிலையப் புத்தகங்கள் கொடுப்பதில்லை.

4. வியாழக்கிழமை தவிர மற்றைய நாட்களில் நூல் நிலையம் திறக்கப்பட்டிருக்கும். வேறு நாட்களிலே விடுமுறை இருக்குமாயின் முன்னரே அறிவிக்கப்படும்.

5. இந்நூல் நிலையம் அலுவல் நாட்களில் காலை 9 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 8 மணி வரையிலும் திறக்கப் பட்டிருக்கும்.

6. நூல்நிலையம் திறந்த அரை மணி நேரம் கழித்தே படிப்போருக்கு புத்தகம் எடுத்து அளிக்கப்படும்.

7. நாய் முதலிய செல்லப் பிராணிகளை வளர்ப்போர் அவைகளுடன் நூல் நிலையத்துக்குள் வரச் சிறிதும் அனுமதி கிடையாது.

8. தூங்குதல், எச்சில் துப்புதல், வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொள்ளுதல், புகை பிடித்தல் முதலியவைகட்கு நூல் நிலையத்தில் இடமில்லை.

9. படிப்பவர்கட்கு இடைஞ்சலாக இரைந்து பேசுதல், வீண் வார்த்தை யாடுதல், வம்பளத்தல் முதலியன செய்தல் கூடாது.

10. படிப்பவர்கள் புத்தகத்தைப் பழுதுபடாவண்ணம் ஒழுங்காக வைத்துக்கொண்டு படித்தல் அவசியம். புத்தகங்களோ அல்லது நூல் நிலையத்தில் உள்ள ஏனைய பொருள்களோ பழுது நேரும்படி உபயோகிக்கக் கூடாது. பழுதுபடுமாயின் நடவடிக்கை எடுக்கப்படும்.

11. நூல் நிலையத்தில் படிப்பதற்கு வருவோர்கள் தாங்கள் கொண்டுவரும் குடை, கைத்தடி முதலியவைகளையும், தமது சொந்தப் புத்தகம் முதலியவற்றையும் குறிப்பிட்ட



மங்கள விலாசம் - தஞ்சாவூர்

ஓரிடத்திலே வைத்துவிட வேண்டும். அந்தப் பொருள்களைப் பாதுகாக்கும் பொறுப்பு நூல் நிலையத்தாரைச் சேர்ந்ததல்ல என்பதும் அறிவிக்கப்படுகிறது.

*12.* நூல் நிலையத்திற்குச் சொந்தமான புத்தகங்களிலே பென்சில், பேனா முதலியவற்றால் கோடிடுதல், எழுதுதல் முதலிய எந்தச் செயலும் செய்யக்கூடாது.

*13.* புத்தகங்களிலிருந்து படம் முதலியவற்றை டிரேஸ் செய்யக் கூடாது.

*14.* படித்தவர்கள் அதற்கெனக் குறிப்பிட்டுள்ள பட்டியலில் கையொப்பமிட்டுச் செல்ல வேண்டும். புத்தகங்களை மேஜையின் மீது ஒழுங்காக வைத்தல் வேண்டும்.

**பொன்விழா கொண்டாட்டம்**

இந்நூலகத்தின் *27-02-2010* அன்று பொன்விழா நடைபெற்றது. அதற்கான கல்வெட்டு மருத்துவர் திரு. சு. திருஞானசம்பந்தம் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

*1975* வாக்கில் பள்ளி நாட்கள் தொடங்கி இந்நூலகத்திற்குச் சென்று வருகிறேன். கல்கியின் பொன்னியின் செல்வன் தொடங்கி பல வரலாற்றுப் புதினங்களை இந்நூலகத்தில் நானும் நண்பர்களும் போட்டி போட்டுக் கொண்டு படிக்க ஆரம்பித்தோம். *1993*இல் பௌத்தம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளத் தொடங்கிய முதல் இங்கு சென்று பல நூல்களைப் படித்துக் குறிப்பு எடுத்துள்ளேன். அவற்றில் பூர்வாச்சாரியார்கள் அருளிய ஆறாயிரப்படி பன்னீராயிரப்படி குருபரம்பரப்ரபாவம் (பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை. *1928*), தமிழர் மதம் (மறைமலையடிகள், திருமகள் அச்சுக்கூடம், பல்லாவரம், *1941*), தென்னிந்திய சிற்ப வடிவங்கள் (க. நவரத்தினம், சுன்னாகம், திருமகள் அழுத்தகம், யாழ்ப்பாணம், *1941*) புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம் (உ. வே. சா. கபீர் அச்சுக்கூடம், சென்னை), பிற்காலச் சோழர் சரித்திரம் (சதாசிவப் பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், *1951*), முதற்குலோத்துங்க சோழன் (சதாசிவப் பண்டாரத்தார், பாரி நிலையம், *1955*), பூம்புகார் (புலவர் ப. திருநாவுக்கரசு, அஸோஸியேஷன் பப்ளிசிங் ஹவுஸ். சென்னை, *1957*), தமிழ் வரலாறு (அ.மு.பரமசிவானந்தம், தமிழ்க்கலை பதிப்பகம், சென்னை, *1958*) உள்ளிட்ட பல நூல்கள் அடங்கும். தற்போது இந்நூலகம் *35, 000* நூல்களைக் கொண்டுள்ளது. நூலகப் பட்டியல் கணினி மயமாக்கப்படுகிறது. இதுவரை *30,000* நூல்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. நூலகத்தினை மேம்படுத்தவும் முயற்சிகள் கொள்ளப்பட்டுவருகின்றன. நூலக நாட்களில் நூலகத்திற்கு வந்து அங்குள்ள நூல் பட்டியலைப் பார்த்து படிக்கவேண்டிய நூலின் எண்ணை எழுதித் தந்தால் அந்நூலை படிக்கத் தந்துவிட்டு, அதற்கான எண்ணை அங்குள்ள கரும்பலகையில் உள்ள எண்ணைக் கொண்ட நூல்களைத் தவிர பிற நூல்களை எடுக்க இவ்வசதி உதவியாக உள்ளது. வாசகர்களுக்கு ஒருமுறைக்கு இரு நூல்கள் தரப்படுகின்றன. வாசிப்பதற்கும், தேவையான குறிப்புகள் எடுப்பதற்கும் உதவியாக மேசைகள் அமைக்கப்பட்டுள்ளன. கும்பகோணத்திற்குப் பெருமை சேர்க்கின்ற அரிய தமிழ் நூல்களைக் கொண்டு அமைந்துள்ள இந்நூலகத்திற்கு ஒருமுறை செல்வோம்.

*****

# குடமூக்கில் பழையாறை

முனைவர் **பு. இந்திராகாந்தி,**

தன் அலைகளாகிய கரங்களால் வாரிப் பொன்னையும் மணியையும் கொழிக்கும் புனல் பெருக வரும் காவிரி நதியால் சிறப்புற்றிருக்கும் திருத்தலங்களில் இக்கலியுகத்தில் மூன்றிடங்கள் சிறந்தன. இன்று கும்பகோணம் என்று அழைக்கப்படும் குடமூக்கு, ஸ்ரீரங்கம், காவிரிப்பட்டினம் என்ற இவைகளேயாகும்.

கி. பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களாகிய திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசு நாயனாரும் இத்தலத்தை குடமூக்கு என்றும், திருக்குடந்தை என்றும் குறிப்பிட் டுள்ளனர். ஆழ்வார்களுள் பேயாழ்வார் இத்தலத்தை குடமூக்கு என்றே குறிப்பிடுகின்றார். சேக்கிழார் திருநாவுக்கரசு நாயனாரின் தல யாத்திரை பற்றி கூறும்போது குடமூக்கு என்றே அறிமுகப் படுத்துகின்றார்.


சரஸ்வதி

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தாம் எழுதிய திருக்குடந்தைப் புராணத்தின் திருத்தல விசேடப் படலத்தின் 18ஆவது பாடலில் கும்பகோணம் என்றும் 19ஆவது பாடலில் குடமூக்கு எனவும் குறிப்பிடுகின்றார்.

இன்று இவ்வூர் 10 கி.மீ. சுற்றளவும், 150 கோயில்களைக் கொண்டு, காவிரியும், அரசலாறும் மாலைபோட்டு ஊரைச் சுற்றிவரும் அற்புதத்தலம். ஒரு கோயிலின் கோபுரத்தை அடுத்த கோயிலிலிருந்துதான் பார்க்க வேண்டும். அவ்வளவு நெருக்கமாக அடுத்தடுத்து ஆலயங்களைக் கொண்டு விளங்கு கின்றது.

இங்கு தேவாரப் பாடல்கள் பெற்ற திருக்குடமூக்கு ஆகிய குடந்தைக் கீழ்க்கோட்டம், குடந்தைக் காரோணம் ஆகிய திருக்கோயில்களும் ஆழ்வார்கள் பாசுரம்

முனைவர் பு. **இந்திராகாந்தி,** உதவிப் பேராசிரியர், குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.

பெற்ற சாரங்கபாணி கோயிலும் முறையாக வழிபடப்பெற்று வருகின்றன. எப்படியாகிலும் கோயில்கள் மிக்கது கும்பகோணம் என்னும் பெருமை கொண்டு திகழ்கின்றது. இதன் அடிப்படையிலேயே "**கும்பகோணம் கோயில் அழகு**" என்ற பழமொழி வழக்கில் உள்ளது.

**தொழில் வளம்**

வேளாண் தொழில் பிரதானத் தொழிலாகக் கொண்டு விளங்கும் சுற்றுவட்ட கிராமங்களைக் கொண்டு விளங்குகின்றது. இந்நகரில் பல வகைப் பாத்திரங்கள், கற்பலகை, கற்பலகைக் குச்சி, புகையிலைப் பொட்டலம், கொட்டைப்பாக்கு சீவல், சந்தனத் தைலம், சந்தனவில்லை, தகரப்பெட்டி, சாக்பீஸ், விக்கிரக வார்ப்பு போன்ற பொருள்களின் உற்பத்தியினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வூர் பித்தளைப் பாத்திரம், வெற்றிலை உலகப் பிரசித்திப்பெற்றதாகும்.

சென்னை மாநகருக்கு வெளியில் தமிழ்நாட்டில் அரசாங்கக் கல்லூரி ஏற்பட்டது இவ்வூரில்தான். காவிரியின் எதிர்க்கரையில் தஞ்சை அரசிகள் வாழ்ந்து வந்த 'வசந்த மண்டபம்' மாளிகையில் இக்கல்லூரி நடைபெற்று வருகின்றது. கற்பித்தலும், கற்றலும் பிரதானத் தொழில்களாக விளங்குகின்றன.

**பழையாறை வரலாற்றுப் பார்வை**

கும்பகோணத்திற்கு தென்புறத்தில் இன்று எளிய சிற்றூராகப் பொலிவிழந்து தன் பழைய அழகு குன்றி நிற்கும் பழையாறை ஒரு மறைந்த மாநகரமாகும். இவ்வூர் 5, 6 நூற்றாண்டுகளுக்கு முன் சிறப்புற்று திகழ்ந்திருந்தது.

சோழர்கள் தம் வலிமை குன்றிய காலத்து இவ்வூரைத் தலைநகராகக் கொண்டிருந்தனர். அதனால் பல்லவர் ஆட்சி தமிழ்நாடெங்கும் பரவியபோது பல்லவநாட்டின் தென் பகுதிக்கு இவ்வூர்தான் தலைநகரமாயிற்று. முதலாம் இராஜராஜனும், அவனுடைய தமக்கையாகிய குந்தவைப் பிராட்டியும், முதலாம் குலோத்துங்கன், அவன் மகன், பேரன் ஆகியோரும் இங்குதான் வாழ்ந்தனர்.

**தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து**
**பாரில் நீடிய பெருமைசேர் பதி பழையாறை**

என்று சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடுவார்.

வந்தியத்தேவனும், குந்தவையும் சந்தித்து முதன் முதலில் தங்களிடையேத் துளிர்விட்டிருக்கும் காதலைக் குறிப்பால் உணர்த்திக் கொண்டது இப்பழையாறையில் தான். இப்பழையாறை முடிகொண்டானாற்றுக்கும், அரசிலாற்றுக்கும் இடையே 5 மைல் நீளமும், மூன்று மைல் அகலமும் கொண்டு பரந்த நகரமாக அமைந்திருந்தது.

பழையாறை மாநகரின் பகுதியாக பம்பைப்படை, மணப்படை, ஆரியப்படை, புதுப்படை என நான்கு படைவீடுகள் இக்காலத்தில் அங்கு காணப்படும் கீழைப்பழையாறை, பழையாறை, வடதளி, தென்தளி, மேற்றளி, பட்டீச்சரம், சோழ மாளிகை, தாராசுரம், கும்பகோணத்தின் மேற்குப்பகுதி என இவை யாவும் பழையாறை மாநகரின் பழையப் பகுதிகளாகும். இவ்வூர் நந்திபுரம் எனவும், பழையாறை நந்திபுரம் எனவும், முடிகொண்ட சோழபுரம், இராஜராஜபுரம் என வெவ்வேறு பெயர்களால் வழங்கப்பட்டுள்ளன.

இங்குதான் மன்னர்களின் அபிஷேக மண்டபம் இருந்ததாகக் கூறுவர். "ஆடகப்புரிசை ஆயிரத்தளி சோழவளவன் அபிஷேக மண்டபம்" என்று கல்வெட்டு கூறுகின்றது. சோழநாடு முழுவதும் வென்ற முதலாம் மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் இந்தப் பழையாறை மண்டபத்தில்தான் முடிசூடிக் கொண்டான். நந்திவர்மன் கட்டிய அரண்மனை நாதன்கோயிலில் இருந்தது என்பர். தென் இந்தியாவில் கட்டப்பெற்ற முதற் கற்கோயில் பழையாறை வடதளி சிவன்கோயில் ஆகும். நாதன்கோயில், நந்திபுரத்தில் உள்ள நந்திபுர விண்ணகரம் போன்றவை நந்திவர்ம பல்லவன் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

இவ்வைணவ ஆலயத்திற்கு திருமங்கை ஆழ்வாரின் பாடல் உள்ளது. இங்குள்ள சைவ, வைணவ ஆலயங்களில் அற்புதமான சிற்ப உருவங்கள் உள்ளன.

இத்தகு சிறப்புகளை உடைய பழையாறை உயர்வு, தாழ்வு என்பது இறைவனின் படைப்பில் மனிதன் வாழ்வில் மட்டுமின்றி, மரம், செடி, கொடி, ஆறு, குளம், கடல், காடு, மாடமாளிகை, நகரம் நாடு என அனைத்துக்கும் பொருந்தும் என்பது இவ்வூரின் இன்றைய தோற்றம் நமக்குக் கூறும் உண்மையாகும்.

### குடமூக்கின் மகா சிறப்பு

இந்துக்கள் தமக்கு நலன் விளைவிக்கும் நாட்களாகக் கருதும் நாட்கள் பலவற்றில் மகாமகமும் ஒன்றாகும். ஒன்பது கோள்களில் ஒன்றான குரு எனப்படும் வியாழன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சிம்மராசியில் நிலைபெறும் நாளான மாசி திங்கள் மதிநிறை நாள் மகாமகம் நாளாகும்.

மகாமக நாளில் யமுனை முதலிய ஒன்பது தீர்த்தங்கள் மகாமகக் குளத்தில் அடைகின்றன என்று நம்பப்படுகின்றது. இதில் நாம் கண்கூடாக காண்பது மற்றைய நதிகள் காவிரி வந்தடையும்போது நாம் கண் காணா முறையில் கலந்து விடுகின்றன என்பதுதான் மகாமக நாளில் புனித நீராடுவது பெறும் பேறாகக் கருதப்படுகின்றது.

ஒருகாலத்தில் போக்குவரத்து வசதிகள் தகவல் தொடர்பு சாதனங்களின் அதீத வளர்ச்சியில்லாத காலத்தில் மகாமக நாளில் நீராடுபவர் எண்ணிக்கை அவ்விடம் எவ்வளவு கொள்ளளவோ அவ்வளவு மக்கள் இருந்தனர். இன்று அனைத்திலும் தலைகீழ் மாற்றம் குறிப்பிட்ட அந்நாளில் நீராடவும், வழிபடவும் நிறைய மக்கள் கூடுவது இயல்பாக உள்ளது.

இதனால் அளவுக்கு அதிகமான மக்கள் ஒரே இடத்தில் ஒருநாளில் கூடுவது பல்வேறு ஆபத்துக்களை விளைவிக்கும். ஆனால் அதே சமயம் புனித நீராடி வழிபடுவோர் அடையும் நற்பேற்றையும் அடையவேண்டும். இதற்கு வழி அப்புனித நாளில் அவரவர் தாம் இருக்கும் இடத்திலேயே மகாமகத்தில் கலந்து கொள்வதாக உள்ளங்களைச் சீர்செய்து குடமூக்குத் தலத்திற்குச் செல்லாமலே குடமூக்கு, குடமூக்கு என வாயார துதிப்போமெனில் அதே பலனைப் பெறலாம்.

குடமூக்கே குடமூக்கே என்பீராகில்
கொடுவினைகள் தீர்ந்தானைக் குறுகலாகலாமே

என்று நாவுக்கரசர் நமக்குக் கூறுகின்றார்.



பழையாறை

# தஞ்சைக் கலைக்கூடம்

**எஸ். சிவக்குமார்,**

உலக நாடுகளில் உல்லாசப் பயணிகளைக் கவரும் இடங்கள் பலவுள்ளன. அவைகள் குறிதது வழிகாட்டிப் புத்தகங்களுள் இந்திய நாட்டின் வழிகாட்டிப் புத்தகத்தில், சோழ நாட்டின் பண்டைத் தலைநகராம் தஞ்சையில் வெளிநாட்டவரும் கண்டுகளிக்கத்தக்கவையென குறிப்பிடப் பட்டுள்ள இடங்கள் மூன்றாகும். அவை:

1) இராஜராஜ சோழனால் கட்டப்பட்டுள்ள பெரியகோயில் எனப்படும் பெருவுடையார் திருக்கோயில்.

2) சரசுவதி மகால் நூலகம்

3) அரண்மனை வளாகத்தில் நாயக்கர் கொலுமண்டபம், ஆயுதக்கோபுரம், மற்றும் மணிமண்டபத்தை உள்ளடக்கிய தஞ்சைக் கலைக்கூடம்.

இந்தக் கலைக்கூடம் உருவாகிய வரலாறே ஒரு சுவைமிக்க சிறு நிகழ்ச்சியாகும். கல்கத்தா அருங்காட்சியகத்தின் புதைபொருள் ஆராய்ச்சியாளர் டாக்டர் சிவராமமூர்த்தி அவர்கள் தஞ்சையை அடுத்த கருந்தட்டான்குடியில் படைப்புத் தொழிலுக்கு



தஞ்சை கலைக்கூடம் - கிழக்கு முகத்தோற்றம்

**எஸ். சிவக்குமார்,** காப்பாட்சியர், கலைக்கூடம், தஞ்சாவூர்

அதிபதியான, மும்மூர்த்திகளில் ஒருவரான, பிரமதேவனின் கற்சிலையொன்று வடவாற்றின் வடகரையில் கவனிப்பாரற்று இருப்பதைக் கண்டார். அதன் கலையழகில் மயங்கினார். அதனைக் கல்கத்தா அருங்காட்சியகத்திற்கு எடுத்துச் செல்லவேண்டுமென்று பேரவாக்கொண்டு, அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த உயர்திரு டி.கே.பழனியப்பன்,இ.ஆ.ப., அவர்களிடம் தொடர்பு கொண்டார். இந்த நிலையில் அப்பகுதி மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு இச்சிலையினை வெளிமாநிலத்திற்கு எடுத்துச்செல்லும் முயற்சி வெற்றி பெறா வண்ணம் தடுத்தனர். ஆனால் அதேசமயம் இந்தச் சிலையைத் தஞ்சையிலேயே பாதுகாப்பாக வைத்துக்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர்.அதன்படி இந்தச் சிலை ஆற்றங்கரையிலிருந்து அரண்மனை வளாகத்துக்குக் கொண்டு வரப்பட்டது;.

பிரபஞ்சத்தை உருவாக்கும் பிரமதேவன் கலைக்கூடம் ஒன்றினை உருவாக்க அரண்மனைக்கு எழுந்தருளியதாகக் கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தஞ்சை நகரத்தைச் சேர்ந்த கலை ஆர்வம் மிக்க அன்பர்களைக் கொண்டு ஒரு குழு அமைத்தார்கள். சாலையோரங்களிலும், ஆற்றங்கரைகளிலும் கவனிப்பாரற்றும் சமூக விரோதிகளால் பின்னப்படுத்தப் பட்டும் இருக்கும் சிலைகளை, கலைக்கூடம் அமைக்கும் பொருட்டு, கொண்டு வந்து சேர்க்கும் பணியினை அப்போது தஞ்சையில் துணை ஆட்சியராகப் பணிபுரிந்துவந்த திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் மற்றும் மாவட்டத்திலிருந்த வருவாய்த்துறை அலுவலர்களிடம் ஒப்படைத்தார்கள். இதனை அறிந்ததும் சில கோவில்களின் பொறுப்பாளர் களும், மடாதிபதிகளும், வழிபாட்டில் இல்லாது தங்களிடமிருந்த விக்கிரகங்களைக் கலைக்கூடம் அமைந்திட மனமுவந்து அளித்தனர். இங்ஙனமாக உருவாக்கப்பட்ட தஞ்சைக் கலைக்கூடம் 09-12-1951 அன்று அப்போதைய தமிழக முதல்வர் மாண்புமிகு பி. எஸ். குமாரராஜா அவர்கள் தலைமையில் அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு எம். பக்தவச்சலம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, கடந்த அறுபத்தைந்தாண்டுகளாக உலக அரங்கில் ஒரு முக்கிய இடத்தை வகித்து வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் பூமிக்கடியிலிருந்து புதைபொருளாகக் கண்டெடுக்கப்பட்ட பல செப்புத் திருமேனிகள் முறையான விசாரணைக்குப் பின் கலைக்கூடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. தற்போது சுமார் 195 செப்புத் திருமேனிகளும், 200க்கும் மேற்பட்ட கற்சிலைகளும் இக் கலைக்கூடத்தில் உள்ளன.

கலைக்கூடத்தினுள் நுழையும்போது நடுநாயகமாக வீற்றிருக்கும் பிரமதேவன் சிலையினையும் அதனைச் சுற்றியும், அதன் தென்புறக் கூடத்திலும் அடுத்து ஆயுதக் கிடங்குக் கோபுரத்தின் அடிப்பாகக் கூடத்திலும் பல்வேறு தெய்வங்களின் கற்சிலைகள் பாங்குறப் பீடங்களில் வைக்கப் பட்டுள்ளன. நாயக்கர் கொலுமண்டபத்தில் செப்புத் திருமேனிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இங்கு சைவ, வைணவ, பௌத்த மற்றும் சமண சமயங்களைச் சார்ந்த திருவுருவங்கள் உள்ளன. மேலும் இவை அனைத்தும் பழைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்டவை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். இங்கு கி. பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து 20ஆம் நூற்றாண்டு வரையிலான சிற்பங்கள் உள்ளன.

பிற்காலச் சோழர்கள் ஆட்சிக்காலத்தில் சைவ சமயம் புத்துயிர்பெற, பிற சமயங்களான பௌத்தம் சமணம் ஆகியவற்றின் பிடியிலிருந்து மக்களைத் திரும்ப சைவநாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களுக் கேற்பப் பெருமளவில் செப்புத் திருமேனிகள் செய்யப்பட்டுள்ளன. பல கோவில்கள் புதுப்பிக்கப்பட்டும் உள்ளன. மக்களிடையே சமய உணர்வையும் பக்தியுணர்வையும் உண்டாக்கக் கோவில்களில் விழாக்கள் எடுத்துத் தெய்வ உருவங்கள் வீதியுலாவர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எனவே சோழர்கள் காலத்தில் செய்யப்பட்ட கவின்மிகு செப்புத் திருமேனிகளை இங்கு மிகுதியாகக் காணலாம்.

உலகப் புகழ்பெற்ற கலையம்சங்கள் நிறைந்த திருவெண்காட்டுச் செப்புத் திருமேனிகள் ரிஷபவாகனதேவர், அம்பிகை, பிட்சாடனர், கண்ணப்பர் மற்றும் பலவற்றை இங்குக் காணலாம். எந்தவொரு அருங்காட்சியகத்திலும் அல்லது கலைக்கூடத்திலும் இவ்வளவு அதிகமான எண்ணிக்கையிலான செப்புத்திருமேனிகளை ஒருசேரக் காண இயலாது. கல்வெட்டுக்களில் காணப்படும் சான்றுகளுக்கேற்பவுள்ள ரிஷபவாகன தேவர், பார்வதி மற்றும் பிட்சாடனர் செப்புத்திருமேனிகளும் அமைந்துள்ளன.

ஆடலுக்கு நடராஜப்பெருமானின் பல திருவுருவங்களும், பாடலுக்கு வீணாதரர் செப்புத் திருமேனியும், கற்சிலையில் நாரதர் சிலைகளும் உள்ளன.

கலையழகுக்கு ‘நர்த்தன விநாயகர்’ சிலையும், காதலுக்கு ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ள சிவ-பார்வதி சிலையும், ஊடலுக்குப் பார்வதியின் சினத்தைச் சிவன் சமாதானம் செய்யும் கங்காதரர் சிலையினையும் காணலாம்.



சிற்பக்காட்சி கூடம் – கலைக்கூடம், தஞ்சாவூர்

பல்வேறு கால கட்டங்களைச் சேர்ந்த தெய்வாம்சமும், பல்வகை பாவங்களையும் கொண்ட சிலைகளுடன் கூடிய இக்கலைக்கூடம் கலா ரசிகர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் ஒரு கலைச் சுரங்கமாக கலைப்பெட்டகமாக அமைத்துள்ளதென்றால் மிகையாகாது.



கலைக்கூடம், தஞ்சாவூர்

# தஞ்சை மாவட்டத்து வைணவத் திருத்தலங்கள்

**ஆர். இராஜசேகரன்**

சோழ நாட்டில் எவ்வாறு பாடல் பெற்ற சைவத் திருத்தலங்கள் மிகுதியாக உள்ளனவோ அவ்வாறே ஆழ்வார்களால் பாடப்பெற்ற வைணவத் திருத்தலங்களும் மிகுந்து உள்ளன. இத்தலங்களை மங்களாசாஸனத் தலங்கள் எனக்குறிப்பர் வைணவர்கள். தஞ்சை மாவட்டத்தில் திகழும் வைணவத் தலங்களைக் காண்போம்.

**1. தஞ்சை மாமணிக்கோயில்:** இத்தலம் தஞ்சாவூரிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் சுமார் 3 கி. மீ. தொலைவில் வெண்ணாற்றின் கரையில் இருக் கின்றது. இங்கு அடுத்தடுத்து மூன்று கோயில்கள் இருக்கின்றன. மூன்றுக்கும் சேர்த்தே மங்களாசாஸனம் என்று சொல்லப் பெறுகின்றது.


சுக்ரீவன் இராமசாமி கோயில் – குடந்தை

நீலமேகப்பெருமாள்- செங்கமலவல்லி இருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தஞ்சையாளி நகர் நரசிம்மப் பெருமாள்-தஞ்சைநாயகி இருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

மணிக்குன்றப்பெருமாள்-அம்புஜவல்லி இருந்த திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம். இத்தலத்திற்குத் திருமங்கையாழ்வார் 3பாசுரங்களும், பூதத்தாழ்வார் 1 பாசுரமும் பாடியுள்ளார்கள்.

**2. புள்ளப்பூதங்குடி:** சுவாமிமலைக்கு வடமேற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. திருமங்கை ஆழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

வல்வில் இராமன்-பொற்றாமரையாள் கிடந்த கோலம். கிழக்கே மண்டலம்.

**3. திருப்பேர் நகர் (கோவிலடி):** திருவையாறு கல்லணைச் சாலையில் கல்லணைக்கு அருகில் உள்ளது. பெரியாழ்வார் 2 பாசுரங்களும், திருமழிசையாழ்வார் ஒரு பாசுரமும், திருமங்கையாழ்வார் 19 பாசுரங்களும், நம்மாழ்வார் 11 பாசுரங்களுமாக நான்கு

**ஆர். இராஜசேகரன்,** மாவட்ட சுற்றுலா அலுவலர், தஞ்சாவூர்.

ஆழ்வார்களும் 33 பாசுரங்கள் பாடியுள்ளார்கள்.

அப்பக்குடத்தான்-கமலவல்லி. கிடந்த திருக்கோலம். மேற்கே திருமுகமண்டலம்.

4. ஆதனூர்: சுவாமிமலையிலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது. திருமங்கையாழ்வார் ஒரு பாசுரம் பாடியுள்ளார். பெருமாள் ஆண்டளக்கும் ஐயன் தாயார். ஸ்ரீமங்கலநாயகி. கிடந்த திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம்

5. திருச்சேறை: கும்பகோணத்திலிருந்த திருவாரூர் செல்லும் நெடுஞ்சாலையில் 13 கி. மீ. தொலைவில் உள்ளது. இத்தலத்திற்கு 13 பாசுரங்களைத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார். பெருமாள் சாரநாதன், தாயார் சார நாயகி. நின்ற திருக்கோலம். கிழக்கே திருமண்டலம்.

6. திருக்குடந்தை (கும்பகோணம்): சார்ங்கபாணிக்கோயில் ஒன்றே கும்பகோணத்தில் ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திருக்கோயிலாகும். கோயில் ஊரின் நடுவண் இருக்கிறது. பெரியாழ்வார் 3பாசுரங்களும், ஆண்டாள் ஒரு பாசுரமும், திருமழிசையாழ்வார் 7பாசுரங்களும், திருமங்கையாழ்வார் 25 பாசுரங்களும், பூதத்தாழ்வார் 2பாசுரங்களும், பேயாழ்வார் 2 பாசுரங்களும், நம்மாழ்வார் 11 பாசுரங் களுமாக ஏழு ஆழ்வார்களும் 51 பாசுரங்கள பாடியுள்ளனர். பெருமாள் சார்ங்கபாணி-தாயார் கோமளவல்லி. கிடந்த கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

7. கண்டியூர்: தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் சாலையில் 9கி.மீ. தொலைவில் உள்ளது. திருமங்கையாழ்வார் (ஒருபாசுரம்) மங்களாசாஸனம் செய்துள்ளார். பெருமாள்: அரன் தீர்த்த பெருமாள், தாயார் கமலவல்லி.

8. திருவிண்ணகர் (ஒப்பிலியப்பன்கோயில்) கும்பகோணத்துக்கு 6 கி. மீ. தொலைவில் இருக்கிறது. திருமங்கையாழ்வார் 34 பாசுரங்களும், பேயாழ்வார் 2 பாசுரங்களும், நம்மாழ்வார் 11 பாசுரங்களும் அருளிச்செய்துள்ளனர். பெருமாள் ஒப்பிலியப்பன், தாயார் பூமிதேவி.

9.திருநறையூர் (நாச்சியார் கோயில்): கும்பகோணத்திலிருந்து குடவாயில் செல்லும் சாலையில் 9 கி. மீ. தொலைவிலுள்ளது. திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்றதாகும். 110 பாசுரங்கள். பெருமாள்நம்பி, தாயார் நம்பிக்கை நாச்சியார். நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

10. நந்திபுர விண்ணகரம் (நாதன்கோயில்): கும்பகோணத்திற்குத் தெற்கே 5 கி. மீ. திருமங்கையாழ்வார் 10 பாசுரம். பெருமாள் விண்ணகரப் பெருமாள். தாயார் சண்பகவல்லி இருந்த திருக்கோலம். மேற்கே திருமுகமண்டலம்.

11. கூடலூர் (ஆடுதுறைப்பெருமாள் கோயில்) பாபநாசத்திலிருந்து வடக்கு 7கி.மீ. தொலைவிலும், திருவையாற்றில் இருந்து கிழக்கே 10கி.மீ. தொலைவிலும் உள்ளது. திருமங்கையாழ்வார் (10 பாசுரங்களால்) மங்களாசாஸனம் செய்துள்ளார். பெருமாள் வையம்காத்த பெருமாள், தாயார் பத்மாசனவல்லி நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

12. கபித்தலம்: கபிஸ்தலம் என வழங்கப்படும் பாபநாசம் இரயில் நிலையத்திலிருந்து வடக்கே 3 கி. மீ. தொலைவிலுள்ளது. திருமழிசையாழ்வார் ஒரு பாடல் பாடியுள்ளார். பெருமாள் கஜேந்திரவரதர், தாயார் ரமாமணிவல்லி.

13. திருவெள்ளியங்குடி: திருவிடைமருதூரில் இருந்து தெறகே 8கி.மீ. தொலைவிலுள்ளது. திருமங்கையாழ்வார் 10 பாசுரங்கள் பாடியுள்ளார். பெருமாள் கோலவில்லி இராமன், தாயார் மரகதவல்லி. கிடந்த திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம்.

*****



வாரியார் சுவாமிகள் திருப்பராய்த்துறை ஸ்ரீராம கிருஷ்ண குடிலில் உள்ள ஆதரவற்றக் குழந்தைகளுக் காக ரூ. 27 லட்சம் சேர்த்து வைப்பு நிதியாக வைக்க முயன்றார். அதனால் சுவாமிகள் ஒரு பணக்காரரிடம் பணம் பெறச் சென்றார்.

அம்மனிதர் பெரும் பணக்காரராக இருந்தும் முகத்தைச் சுருக்கிக் கொண்டு, எனக்கே சிரமம், நானே சிரமப்படுகிறேன் ஆதலால் குடிலுக்குப் பணம் தர முடியாது என்றார். உடனே வாரியார் சுவாமிகள் அவரிடம், ஐயா, நீங்கள் என் நண்பர், நீங்கள் சிரமப் படக்கூடாது, உங்கள் துயரத்தைத் துடைப்பது என் கடமை. நான் மாதா மாதம் பல ஏழைகளுக்கு உதவி வருகிறேன். அந்த வரிசையில் உங்களையும் வைத்துக்கொண்டு தங்களுக்கு உதவுகிறேன். என் நண்பராகிய தாங்கள் அல்லல்பட வேண்டாம் என்றார். பணக்காரரின் முகத்தில் ஈயாடவில்லை.

-திருமுருக கிருபானந்த வாரியார்



தாராசுரம் கோயில் வரைகோட்டு ஓவியம்

## கும்பகோணத் தலத்தொடர்பான தமிழ் இலக்கியங்கள்

1. திருக்குடந்தைப் புராணம்–மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்–2388 பாடல்

2. கும்பகோணப்புராணம்–அகோரமுனிவர்– 118 பாடல்

3. கும்பகோணப்புராணம்–அரசூர் சொக்கப்பநாவலர்–1406 பாடல்

4. திருக்குடந்தை மான்மியம்–ஸ்ரீனிவாச அய்யங்கார்

5. மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்–மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

6. திருக்குடந்தைத் திரிபந்தாதி–மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

7. திருக்குடந்தைப் பதிற்றுப்பத்தாதி –குடந்தை கும்பநாதன் செட்டியார்

8. திருக்குடந்தைக் கலம்பகம்–எட்டிசேரி. தி.சங்குப்புலவர்

9. குடந்தை வெண்பா மாலை–பூ–முருகேச பண்டிதர்

10. கும்பேசர் குறவஞ்சி–பாபநாச முதலியார்

11. குடந்தை பெரியநாயகியம்மை பதிகம்– ரா.சபாபதி பிள்ளை

# குவலயம் போற்றும் குடந்தை மாநகர்

முனைவர் **பொ. திராவிடமணி,**

காவிரியும் வடவாறும் இருமருங்கே சென்று மண்மகளை மகிழ்விக்கும் இடமாகவும், மனிதம் புனிதம் பெற பல்வேறு தெய்வங்கள் வந்து விரும்பியுறையும் தலங்களையுடைய ஊராகவும் விளங்குவது திருக்குடந்தை நகராகும்.

பட்டிலும் பருத்தியிலும் பார்போற்றும் நெசவுத்தொழிலிலும் செழிக்கும் இடமாகவும், ஆடலும் பாடலும் வழிவழியாகத் தழைத்து வளரும் நகராகவும், கூத்தும் பரதமும் பவனிவரும் ஊராகவும், உலகம் போற்றும் மேதைகளும், அகிலம் போற்றும் அறிஞர்களும் அவதரித்த இடமாகவும், மோட்சம் தரும் தெய்வங்களும் தேவர்களும் விரும்பிவந்து வாழுகின்ற சொர்க்கபுரியாகவும் விளங்குவதும் திருக்குடந்தை என்னும் கோயில் நகராகும். குடத்தால் பெயர் பெற்ற இவ்வூர் கோயில் நகரில் பெரியதாகக் கருதப்படும் காஞ்சிபுரத்திற்கு அடுத்ததாக வைத்துப் போற்றப்படும் சிறப்பிற்குரியது. ‘கொற்றச் சோழர் குடந்தை வைத்த, நாடுதரு நிதியினும் செறிய’ என்று அகநானூறு குறிப்பிடுவதன் மூலம் இந்நகரின் தொன்மையையும் பழமையையும் உணரலாம். குடமூக்கு என்றழைக்கப்பட்ட இவ்வூர் தற்போது கும்பகோணம் என்றழைக்கப்படுகிறது.

குஞ்சரி வெற்புத் தனநேயா
கும்ப கோணத்தில் பெருமானே!



திருநாகேசுவரம்

முனைவர் **பொ. திராவிடமணி,** உதவிப் பேராசிரியர், குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.

என்று அருணகிரிநாதர் இவ்வூரில் உறைந்திருக்கும் பெருமானைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

**மாமகம்**

மாமகம் என்பது மாமாங்கம் என்றழைக்கப்படுகிறது. மா என்றால் அணுகாது என்றும், மா என்றால் அகம்பாவம் அணுகாது என்றும் பொருள். எனவே மாமகம் என்றால் மிகப்பெரிய பாவத்தை நீக்குவது என்பது பொருளாகும்.

பிரளய காலத்தில் உலகு அழியும் தருவாயில் மீண்டும் படைப்பதற்காக மூலப்பொருட்களைக் காத்தருளவேண்டும் என்று பிரம்மன் சிவனிடம் முறையிட்டார். "மண்ணையும் அமுதத்தையும் கலந்து ஒரு குடம் செய்து, அதில் அமுதத்தை நிரப்பி படைப்புக்குக் காரணமான சிருஷ்டிபீஜம், வேதம், ஆகமம், இதிகாச புராணம் போன்ற அறிவுக்கருவிகள் போன்றவற்றைக் குடத்தில் பெய்து மாவிலைப்பரப்பிக் குடத்து வாயில் தேங்காய் வைத்து மூடிப் பூணூல் சாத்தி சத்தியலோகமாகிய பிரம்மன் இருப்பிடத்தில் உறியில் தொங்கவிடும்படி" சிவன் பிரம்மனிடம் கூறினார். பிரளயகாலம் வந்தது. உலகம் நீரில் மூழ்கியது. பிரம்மன் வைத்த உறியும் கலசமும் குடந்தைவரை வந்தது. வெள்ளம் வடிந்தபின் மாவிலை உதிர்ந்த இடம் வன்னிமரமாக முளைத்தது. தர்ப்பை அதன்கீழ் லிங்கமானது. அதற்கு வடமேற்கே குடம் போய் நின்றது. உறியும் ஒரு சிவலிங்கமானது. தேங்காய் அக்னி திசையில் சென்று தென்னையானது. வில்வத்தளிர்கள் வில்வ மரங்களாயின. தென்னை மரத்தடியிலும் லிங்கம் வந்தது. வில்வ வனத்தில் பாதாளலிங்கர் தோன்றினார். குடத்தில் இருந்த பூணூலும் ஒரு லிங்கமானது.

**பஞ்சகுரோசத் தலங்கள்**

திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம், சுவாமிமலை, தாராசுரம், திருப்பாடலி வனம் ஆகிய ஐந்து ஊர்களிலும் சிவபெருமான் எழுந்தருளி தேவர்களுக்கும் மானிடர்களுக்கும் மோட்சத்தையும் பல்வேறு வரங்களையும் அளித்துள்ளார். இத்தகைய சிறப்புப் பொருந்திய இத்தலங்கள் பஞ்ச குரோசத் தலங்கள் என்று போற்றப்படுகின்றன. திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம, சுவாமிமலை, தாராசுரம், திருப்பாடலி வனம் ஆகிய ஐந்து தலங்களையும் தரிசித்தபின்தான் குடந்தையை அடையவேண்டும் என்று கூறும் மரபு இன்றும் உள்ளது. இத்தல வரலாறு குறித்து புராணச்செய்தி ஒன்று உண்டு.

சிவபெருமான் வேடனாகத் திருவிடைமருதூர் வந்தார். பாணம் (அம்பு) ஒன்றால் குடத்தை எய்தார். அப்படி எய்த இடம்தான் பாணாதுறை, பாணாபுரி என்று அழைக்கப்படுகிறது. இவ்விடம் குடந்தையின் வடகிழக்கே காவிரியாற்றின் அருகே ஒரு பகுதியாக உள்ளது. வடமேற்கே சுவாமிமலை யிலும், தென்மேற்கே தாராசுரத்திலும், தென்கிழக்கே திருநாகேஸ்வரத்திலும், கிழக்கே திருவிடைமருதூரிலும், வடகிழக்கே கருப்பூரிலும், குடத்திலிருந்த அமுதம் சிதறியது இதனால் இத்தலங்கள் பஞ்ச குரோசத் தலங்கள் என்று பெயர்பெற்றன. குடத்தில் அகப்பட்ட துளை வழியே அமுதம்

சிதறியதால் (குடத்து மூக்கு வழியே ஒழுகியதால்) குடமூக்கு என்று இவ்வூர் அழைக்கப் பட்டது. குடத்துவாய் தெறித்த இடம் குடவாயில் என்றழைக்கப்பட்டது என்று புராணங்கள் கூறுகின்றன.

**பஞ்சகுரோசத் தலங்கள்**

1. திருவிடைமருதூர்
2. திருப்புவனம்
3. தர்ப்பாரண்யம்(அம்மாசத்திரம்)
4. ரத்தகதலீவனம் (ஐயாவாடி)
5. கண்ணவபுரம் (சிவபுரம்)
6. லாங்காரண்யம்(சாக்கோட்டை)
7. அமுததானம்(மருதாநல்லூர்)
8. பஞ்சாட்சரம்(பட்டீஸ்வரம்)
9. சத்திமுற்றம்
10. தாராசுரம்
11. தட்சிணாவர்த்தம் (திருவலஞ்சுழி)
12. குகாசலம் (சுவாமிமலை)
13. திருநாகேஸ்வரம்
14. இனபுரம்-சூரியபுரம்(இன்னம்பர்)
15. சாட்சிபுரம் (புறம்பயம்)
16. கோடிபுரம் (கொட்டையூர்)
17. கருப்பூர்
18. பாதராயணபுரி (பாணபுரி, பாணாதுறை)

மேற்குறிப்பிட்ட திருத்தலங்களில் சிவபெருமான் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்புரிந்த வண்ணம் இருக்கின்றார். இத்தலங்கள் பல சைவசமயக் குரவர்களாலும், நாயன்மார்களாலும் போற்றிப் பாடப்பட்ட பூசிக்கப்பட்ட சிறப்புக்குரியன. திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் பெருமானை திருநாவுக்கரசர்

கரப்பர் கரியமனக் கள்வர்க்கு உள்ளம்
கரவாதே தம்நினையகிற்பப் பாவம்
துரப்பர் தொடுகடலின் நஞ்சம் உண்பர்
தூய மறைமொழியர் தீயால் ஒட்டி
நிரம்பர் புரம்மூன்றும் நீறு செய்வர்
நீள்சடையர் பாய்விடை கொண்டு எங்கும் ஐயம்
இரப்பர் எமையாள்வர் என்னுள் நீங்கார்
இடைமருது மேவி இடங்கொண் டாரே

போற்றித் துதித்துள்ளார். கும்பகோணத்திலும், அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் உள்ள சிவத்தலங்களிலும் உறைந்திருக்கக் கூடிய சிவபெருமானின் மகிமையைப் போல கும்பகோணத்தில் உள்ள மகாமகக்குளம் தீர்த்தத்திற்கு உலக அளவில் சிறப்புப்பெற்றது.

**மகாமகக்குளம்**

மகாமகக்குளம் 20 ஏக்கர் பரப்பளவில் நீள் சதுரத்தில் வடகரையும், தென்கரையும் சிறிது உள்வளைந்து கிழக்கில் குறுகி மேற்கில் அகன்று வானிலிருந்து பார்ப்பதற்கு ஒரு குடம் போல காட்சி தருவதாக உள்ளது. வடக்கில் நான்கு கோயில்களையும், மேற்கிலும், தெற்கிலும் மும்மூன்று கோயில்களையும், கிழக்கில் இரண்டு கோயில்களையும், நாற்கோணங்களிலும் ஒவ்வொரு கோயில்களையும் உடையதாய் விளங்குகிறது. லிங்கத்தையுடைய இப்பதினாறு கோயில்களும் சோடச (16) மகாலிங்கக் கோயில்கள் என்று அழைக்கப்படுகின்றன.

தாவிமுதல் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதி பொற்றாமரை புட்கரணித் தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம்கூத்தனாரே

என்று அப்பர் மகாமகக்குளத் தீர்த்தம் குறித்துப் பாடியுள்ளர்.

**மகாமகத் தீர்த்தச் சிறப்பு**

இந்தியாவிலேயே இந்த தீர்த்தம்தான் மிகுந்த சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. வடஇந்தியாவில் திரிவேணி சங்கமத்தில் நடைபெறும் கும்பமேளாவைவிட குடந்தையில் நடைபெறும் மகாமகவிழா சிறப்புக் குரியதாகக் கருதப்படுகிறது. நம்நாட்டில் மும்மூர்த்திக்கும் உள்ள பெருமை தீர்த்தத்திற்கும், மரத்திற்கும் உண்டு.

மூர்த்தி தலம் தீர்த்தம முறையாய்த் தொடங்கினார்க்கு ஓர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

என்று இதனை தாயுமானவர் குறிப்பிடுகிறார். மேலும் திருஞானசம்பந்தர்.

மாசிக் கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்

என்று பாடியுள்ளார். இதன் மூலம் தீர்த்தத்தின் மகிமையை உணரலாம்.

**தீர்த்தமாடலின் நன்மை**

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனின் சிம்மராசியில் குரு சஞ்சரிக்கும்போது சூரியனின் பார்வையாலும், குரு சந்திரனின் சேர்க்கையாலும் உலகிலும், உடம்பிலும் மாற்றங்கள் நிகழும். அவை நம்மைப் பாதிக்காமல் இருக்க பக்தியில் மனம் நிம்மதியும், நம்பிக்கையும் கொள்வது முதன்மையானது. சில தீர்த்தங்கள் வெளி உடம்பு வழியாக நன்மை செய்ய முடியும் என்பதே குளியலின் காரணமாகும்.

ஒருவரின் பாவம் தீர்த்தத்தாலே போகும் என்பார்கள். புண்ணிய தலங்களில் பிறந்தோர் செய்த பாவம் காசியில் கங்கையில் நீராடினால் போகும். காசியில் பிறந்தவர்களின் பாவத்தைப் போக்கும் மகாமகத் தீர்த்தம் குடந்தையில் பிறந்தவரின் பாவத்தையும் போக்கும் மகிமைபெற்றது.

எனவேதான், ஒவ்வொரு மாமாங்கத்திலும் மானிடப்பிறப்பின் பாவங்களைப் போக்கும் புண்ணிய பூமியாம் திருக்குடந்தை நகரம் சென்று மக்கள் நீராடி தங்கள் பாவத்தைத் தொலைத்து வருகின்றனர்.

*****

# உருத்திராக்கம்

புலவர் **வீ. சொக்கலிங்கம்,**

**கண்டிகையிற்பட்ட கழுத்துடையீர்...............ஐவர்**
**கொண்டியிற்பட்டு மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே !**

"உருத்திராக்க மாலையாகிய கண்டிகை பூண்டு, திருவீழிமிழலையில் கோயில் கொண்ட எம்பெருமானே!" என்கிறார் அப்பரடிகள்.

சைவ சாதனங்கள் மூன்று. அவையாவன: திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து.

**கண்டிகை கொக்கரை கோணற்பிறை குறட்பூதப்படை**
**தண்டிவைத்திட்ட சர்க்கரையோ என் தனி நெஞ்சமே! -அப்பர்**

முத்துவடமாகிய கண்டிகை முதலானவைகளை எல்லாம் வைத்திட்ட என் மனம் (பொருள்கள் வைத்துப் பாதுகாக்கும்) சர்க்கரையோ? என்கிறார், பொங்குகடற் கன்மிதப்பில் போந்தேகிய திருநாவுக்கரசுப் பெருந்தகையார்.


அகத்தியர்

"நீரில்லா நெற்றி பாழ்" என்பது ஔவையார் வாக்கு திருவாலவாய் எனப் படும் மதுரையம்பதியில், பிற மதத்தைச் சார்ந்த கூன்பாண்டியனுடைய வெப்பு நோய் தீர்த்தது திருநீறு. அப்போது புகலியல் கோனால் பாடப்பட்டது திருநீற்றுப்பதிகம்.

**மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு**
**சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவதுநீறு**
**தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமைபங்கன் திரு ஆலவாயான்**
**திருநீறே!**

புலவர் **வீ. சொக்கலிங்கம்,** தமிழ்ப் பண்டிதர் (ஓய்வு),சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

முதலான பாடல்களைக் கொண்டது திருநீறு பற்றிய எல்லாச் சிறப்புகளையும், நன்மைகளையும் இப்பதிகத்தில் திருவாய் மலர்ந்து அருளியுள்ளார். இப்பாடல் யாவரும் அறிந்ததே.

### உருத்திராக்கம்

அடுத்ததாக உள்ளது உருத்திராக்கம். (ருத்ராட்சம்). சிவபெருமானுக்கு "உருத்திரன்" என்ற பெயரும் உண்டு. சிவனின் (உருத்திரன்) கண்(அட்சம்) ணிலிருந்து புறப்பட்ட நீர்த்திவலைகள் பூமியில் விழ அதுவே உருத்திராக்கம் ஆனது. அதேபோல் வீரபத்திரருடைய கண்ணிலிருந்து ஏற்பட்டதே பத்திராட்சம் எனப்பட்டது.

தேவர்கள் முதலானவர்களுக்குத் தொல்லை தந்த திரிபுரர்களை அழித்தார் சிவபெருமான். அப்போது அவரது மனம் தாளாது வருந்திய போது, அவரது மூன்றாவது கண்ணாகிய நெற்றிக்கண்ணின்றும் சிந்திய நீர்த்திவலைகளாகிய கண்ணீரே, மண்ணுலகத்தில் உருத்திராக்கங்களைத் தரவல்லதாயிற்று. உருத்திராக்கம் உருண்டை வடிவில் இருக்கும். பத்திராட்சம் நீண்ட (கண்) வடிவில் இருக்கும். உருத்திராக்கத்தின் மேலுள்ள ஆழ்ந்த கோடுகளே முகங்கள் எனப்பட்டன. உருத்திராக்க முகம் ஒன்று முதல் 14 (21) வரை இருக்கும். பத்திராட்சத்தில் ஒன்று அல்லது இரண்டு கோடுகள் இருக்கும். உருத்திராக்கம் இரண்டு இணைந்திருந்தால் அதனை (கௌரி சங்கர்) பார்வதி பரமேசுவரர் என்பர். அரிதாக மூன்று இணைந்திருந்தால் அதனை சோமாஸ்கந்தர் (முருகனுடன் கூடிய பார்வதி பரமேஸ்வரர்) என்பர். ஒருகோடு உள்ளது "ஏகமுகம்."

உருத்திராக்கத்தின் ஒவ்வொரு முகத்துக்கும் ஒவ்வொரு பலன் உண்டு என்பர். ஆயினும் எல்லா முக உருத்திராக்கமும் நன்மையே தரும். உருத்திராக்கம் மிகுந்த பக்தியுடன் அணியும்போது, அணிபவருக்கு சாந்தியை அளிக்கிறது. நீண்ட ஆயுளையும், நோயின்மையையும், பிற நலன்களையும் அருளவல்லது. இரத்த அழுத்தத்தையும் போக்கவல்லது என்று கூறுவர். மனமும், உடலும் தூய்மையடையும்.கைக்குழந்தை முதல் முதியவர் வரை, கன்னிப்பெண்கள் சுமங்கலிகள், கணவனை இழந்த விதவைகள் ஆகிய எல்லோரும் அணியலாம். பெண்கள் உருத்திராக்கம் அணியக்கூடாது என்று சிலர் சொல்வர். அதற்கு எந்த சாத்திர ஆதாரமும் இல்லை.உருத்திராக்கம் அணிந்தால் சுத்தமாக இருக்கவேண்டும் என்று சிலர் சொல்வர். அப்படியானால் உருத்திராக்கம் அணியாதவர்கள் அசுத்தமானவர்களா? சுத்தமாக இருக்கவேண்டியதன் பொருள், தீய வழிகளை நாடாமலும், செயல்கள் புரியாமலும், புகைபிடித்தல், மது உண்ணல், புலாலுண்ணல் போன்றச் செய்யாமலும் இருத்தலேயாம். இவை இல்லாதிருத்தல் நன்மைதானே !. மருந்துக்கு பத்தியம்போல, உருத்திராக்கம் அணிபவர் தீமை நாடாதிருத்தலே நலமாகும். தீமையைக் கைவிடவேண்டும், புலால் முதலியவை உண்ணுதல் உடல்நலக் கேடாகும்.

ஆடு, மாடு, மான், முதலியவை புலால் உண்ணுவதில்லை. பூனை, நாய், புலி, சிங்கம் முதலானவை புலால் உண்ணும். என்ன காரணம்? இரு பகுப்புகளும் விலங்குகள்தானே!

முதலாவது பகுப்பு நம்மைப்போன்ற பல்லமைப்பைக்(வரிசையாக)கொண்டிருக்கும். இரண்டாவது பகுப்புக்கு நான்கு கோரைப் பற்கள் இருக்கும். அதனால் இவைகள் புலால் முதலியவற்றைக் கிழித்து அதக்கி உண்ணும். அதனால் இவை அசைவம். முதலாவது சைவம்.

நமக்கு ஆடு, மாடுகளைப் போன்று பற்கள் வரிசையாக உள்ளன. கோரைப்பற்கள் இல்லை. அதனால் நாம் சைவமாக இருத்தல் வேண்டும், என்பதற்காகவே இறைவன் நமக்கு வரிசைப் பற்களாக அளித்துள்ளான். இப்பற்களைக் கொண்டு புலால் உண்டால், இறைவனுடைய கட்டளையை மீறுகிறோம் என்பதுதானே பொருள். போனது போகட்டும் இனிமேலாவது சைவ உணவு உட்கொண்டு ஆட்பட்டிருக்கலாமே ! அப்படி இருப்பவர்கள் தான் சுத்தமானவர்கள். எல்லோரும் உருத்திராக்கம் அணியலாம்.

நீர் பருகும்போதும், உண்ணும்போதும், உறங்கும்போதும் மற்ற எல்லாக் காலங்களிலும் உருத்திராக்கம் அணியலாம். என்று சிவபெருமான் கூறியுள்ளதாக உபநிடதம் தெரிவிக்கின்றது.

சிறுவர், சிறுமியர் 4முக உருத்திராக்கம் அணிந்தால் நினைவாற்றல் மிகுந்து கல்வியால் மேம்படுவர். 3முகம் கொண்ட உருத்திராக்கம் இரண்டினை சுமங்கலிகள் தாலியின் இருமருங்கும் அணிந்தால், நிறை மங்கலத்தோடு தீர்க்கசுமங்கலிகளாகவே வாழ்வர். அதனால் அவர்கள் தம் கணவன்மார்கள் நிறை ஆயுள் உடையவர்களாக வாழ்வர்.



பராசக்தியாம் பார்வதிதேவியரோ பெண்களின் பெரும் தெய்வமாக விளங்குபவள். அவள் உருத்திராக்கம் அணிந்திருக்கிறாள். இதனை அருணாசல புராணம்,

> கொந்தளகம் சடைபிடித்து விரித்து பொன்தோள்
> குழை கழுத்தில் கண்டிகையின் குப்பை பூட்டி (பா. எண். 330)

எனக் கூறுகின்றது.

திருவானைக்கா புராணம், பாட்டெண் 68

> இழியும் பழிபாதகம் முழுவதும் சிரிக்கும் நீறும் கண்மணியும்
> கொழியும் பனுவல் விதியாற்றான் முழுவதும் திருமேனியல் அணிந்தார்

எனக் கூறுகின்றது. சிவமகா புராணத்திலும் பெண்கள் கட்டாயம் உருத்திராக்கம் அணிய வேண்டும் என்று சிவபெருமானே வலியுறுத்தி யுள்ளார்.

பொதுவாக 5முக 6முக உருத்திராக்கங்கள் எங்கும் எளிய விலையில் கிடைக்கும்.எப்போதும் தொண்டைக்குழியில் ஒரு உருத்திராக்கம் சிகப்பு நூலில் கோர்த்து அணிவர். அது கழற்றப்படுவதில்லை. 108மணிகள் கொண்ட மாலையினை எப்போதும் அணியலாம். நீராடும்போது அணிந்து நீராடினால் மிகுந்த பலன் கிடைக்கும்.

108 உருத்திராக்க மணியினால் ஐந்தெழுத்து மந்திரத்தை மனம் உருகிச் சிந்தித்தால் அதன் அற்புத ஆற்றல் நன்மை பயக்கும். ஒரு உருத்திராக்கம் கண்டத்தில் அணியும்போது காசநோய் (டிபி) முதலான நோய்கள் வாரா. மாலையினால் இதயநோய், இரத்த அழுத்தம் முதலியன நீங்கும் என வெளிநாட்டவரின் ஆய்வு கூறுகின்றது.

உருத்திராக்கம் அணிந்து திருநீறு தரித்து ஐந்தெழுத்து ஓதினால் சிவபெருமானின் கருணை கிட்டும்.

**ஐந்தெழுத்து**

ஒரு நல்ல குருவை அணுகி, அவரிடம் தீட்சை (சமயதீக்கை) விசேட தீக்கை, நுண்மை தீக்கை முதலானவை பெற்று, அவர்தம் உபதேசத்தால் பெற்ற ஐந்தெழுத்தை எப்போதும் மனதில் எண்ணிக்கொண்டே இருப்பர், மனிதப்பிறப்பின் பயனை அடைவர்.

நமது பொருள் கீழே விழுந்தால் அதனை எடுத்து நம்மிடம் தரும்போது, அவருக்கு நாம் நன்றி கூறுகிறோம். நாம் அடையும் நன்மை தீமைகட்கெல்லாம் காரணமாய் இருப்பது நமது உயிர். அதற்கு நன்றி கூறவேண்டாமா? அதற்கு நன்றி கூறும் வழிபாடுதான் சிவபூசை எனும் ஆன்மார்த்த மூர்த்தி பூசை.

எனவே எல்லோரும் சைவ உணவே உண்டு, திருநீறு தரித்து, உருத்திராக்கம் அணிந்து, திருவைந்தெழுத்தை நாளும் ஓதி வந்தால் நன்மை பெறலாம். எனவே எல்லோரும் சைவ சாதனங்களை அணிந்து இன்புற்று வாழ்வோமாக.

**மகாமகம்**

மக்கள் கங்கை, காவிரி முதலான புண்ணிய நதிகளில் நீராடி தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்வர். கங்கை, காவிரி முதலான புண்ணிய நதிகள் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்ள 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடந்தை மகாமகக் குளத்தில் நீராடித் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்வது வழக்கம். அப்போது நாமும் நீராடி, குளக்கரையில் அமைந்துள்ள 16இலிங்கங்களையும் வணங்கி மகிழ்தல் நல்ல பலனைத்தரும்.

**எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்**
**வேறொன்றறியேன் பராபரமே !** **-தாயுமானவர்**

# நாட்டியக் கலை வளர்ச்சியில் குடந்தை

முனைவர் **செ. கற்பகம்,**

கலைகள் வளம்பெற்ற தஞ்சை மாவட்டத்தின் முக்கிய நகரமாகக் கும்பகோணம் அமைந்துள்ளது. கோயில் நகரமாகத் திகழ்கின்றது. சைவக் கோயில்களும், வைணவக் கோயில்களும் நிறைந்த நகரமாகும். காவிரி நதியால் வளம்பெற்ற இந்நகரில் பன்னிரு ஆண்டுகட்கு ஒருமுறை மகாமகத் திருவிழா நடைபெறுகிறது. வடக்கே ஒரு கும்பமேளா, கும்பகோணத்தில் ஒரு மகாமகத் திருவிழா. புண்ணிய நதிகளான கங்கை, சரயு, யமுனை, சரஸ்வதி, சிந்து, நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி நதிகள் சங்கமிக்கும் மகாமகக் குளத்தில் மாசிமக நாளில் தீர்த்த நீராடல் மிகவும் புண்ணியமாகும்.



இறைவழிபாட்டை மையமிட்டுக் கலைகள் வளர்கின்றன. கலையால் இறைவழிபாடு நிகழ்த்தப்பெறுகின்றன. இதை நாட்டியம், ஓவியம், சிற்பம், கட்டடம், ஒப்பனை போன்ற கலைகள் திருக்கோயில்கள் வளர்த்த கலைகளாகும். கும்பகோணத்தில் கும்பேசுவரர் கோயில், நாகேஸ்வரன் கோயில், சோமேஸ்வரன் கோயில், காசி விசுவநாதர் கோயில், பாணபுரீசுவரர் கோயில், கௌதமேசுவரர் கோயில், அபிமுகேசுவரர் கோயில், இராமசாமி கோயில், சக்ரபாணி கோயில், சாரங்கபாணி கோயில் போன்ற கோயில்கள் மிகச் சிறப்புடன் அமைந்துள்ளன. இக்கோயில் வழிபாட்டில் பெரியமேளம் என்று போற்றப்படும் நாகசுவரம், தவில் குழுவின் வழிபாடும், சின்ன மேளம் எனறு அழைக்கப்பெறும் நாட்டியக்குழு வழிபாடும் சிறப்புற அமைந்திருந்தன. தேவதாசி ஒழிப்புச் சட்டத்திற்குப் பின்பு சின்னமேள வழிபாடு திருக்கோயில்களில் நின்றது. தற்பொழுது விழாக்காலங்களிலும், மாசி சிவராத்திரி நிகழ்வை மையமிட்டு நாட்டியாஞ்சலி விழாக்கள் நிகழ்த்தப்பெறுகின்றன. குடந்தையில் மிகச் சிறப்புடன் நாட்டியாஞ்சலி விழா ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது.

முனைவர் **செ. கற்பகம்,** தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

**சார்ங்கபாணி கோயில் கர்ணச் சிற்பங்கள்**

குடந்தை நகரின் மையப் பகுதியில் சார்ங்கபாணி கோயில் என்ற வைணவத் திவ்வியதேசம் உள்ளது. மிக உயர்ந்த கோபுரத்தையும், சிறந்த தேரையும் இக்கோயில் கொண்டுள்ளது. திருமலையையும், குடந்தை நகரையும் திருமழிசையாழ்வார் ஒப்பிட்டு உரைக்கிறார். இரண்டு நகரங்களிலும் திருமால் எழுந்தருளியுள்ளார். திருமலையில் நின்ற வண்ணம் காட்சி அளிக்கும் திருமால் குடந்தையின் பன்னிரு கோலத்தில் காட்சி அளிக்கிறார். திருமலையின் இயற்கை அழகையும், குடந்தை நகரின் எழிலையும் எழிலுறத் தமது சந்த விருத்தப் பாடலால் எடுத்துரைக்கிறார்.

செழுங்கொழும் பெரும்பணி பொழிந்திட உயர்ந்தவேய்
விழுந்து லர்ந்து எழுந்து விண்புடைக்கும் வேங்கடத்துள் நின்று
எழுந்தி ருந்து தேன்பொருந்து பூம்பொழில் தழைக்கொழும்
செழுந்தடம் குடந்தையுள் கிடந்த மாலும் அல்லையே (பா. எண். 60)

குடந்தை சார்ங்கபாணித் திருக்கோயில் கோபுரத் தங்கு தளத்தில் நான்கு பட்டிகைகளிலும் நாட்டியக் கரணச் சிற்பங்கள் எழிலுற அமைந்துள்ளன. கிழக்குப் பட்டிகையில் 44 கரணச் சிற்பங்களும், மேற்கு பட்டிகையில் 38, தெற்கு மதில் சுவரில் 15, வடக்கு மதில் சுவரில் 9 ஆக 106 கரணச் சிற்பங்கள் உள்ளன. இவற்றில் சிவபெருமானின் ஊர்த்துவ தாண்டவம், காளியின் நடனம், சூத்ரதாரணம், தளிப்பூதமும், பரதரும் அவரது சீடரும் உள்ள ஐந்து சிற்பங்கள் உள்ளன. இவை 108 கரணங்களில் சேரா. இவை நீங்கலாக 108 கரணங்களில் 101 கரணச்சிற்பங்கள் உள்ளன. இரண்டு கரணச் சிற்பங்கள் கும்பேசுவரர் கோயிலில் காணப்படுகின்றன என்று வரலாற்று ஆசிரியர் இரா.கலைக்கோவன் குறிப்பிடுகிறார். இவற்றையும் சேர்க்க 103 கரணச் சிற்பங்கள் கும்பகோணத்தில் உள்ளன. கரணத்தின் பெயர் கிரந்த எழுத்தில் உள்ளன. ஆண் கலைஞர் ஆடும் நிலையில் இவை அமைந்துள.

மாமன்னன் இராசராசன் தான் எடுப்பித்த இராஜராஜேச்சுரம் என்னும் தஞ்சைப் பெரியகோயில் விமானத்தின் சாந்தார அறையின் மேல் தளத்தின் திருச்சுற்றில் நாட்டியக் கரணச் சிற்பங்களை அமைத்துள்ளான். தட்சிணமேரு விடங்கராகிய ஆடல் வல்லானாகிய சிவபெருமான் ஆடும் நிலையில் இக்கரணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பரத சாத்திரம் கூறும் 108 கரணங்களில் 81 கரணச் சிற்பங்கள் இங்கு இடம்பெற்றுள்ளன. எஞ்சிய கரணங்கள் இடம்பெறவில்லை.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் நான்கு கோபுரங்களின் கீழ் 108கரணச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன, ஆடல்வல்லான் கோயிலில் ஆடல் கலைக் கரணச் சிற்பங்கள் இடம்பெறுவது நியாயம்தானே. இவை ஒப்பனையுடன், ஆடை அலங்காரத்துடன் பெண் ஆடும் நிலையில் அமைந்துள்ளன. இசைக் கலைஞர்கள் இசை முழங்கிட பெண் ஆடுகிறாள். என்ன அழகு, தஞ்சையில் ஆண் ஆடும் நிலையிலும் தில்லையில் பெண் ஆடும் நிலையிலும் கரணச் சிற்பங்கள் அமைந்துள்ளன. ஆடலில் அமையும் தாண்டவமும் இலாசியமும் அமைந்த ஆடல் நிலைகளாக இவை காணப்படுகின்றன.

தெற்குக் கோபுரம் பாண்டியனால் கட்டப்பெற்றதாகும். கோபுர வாசல் மேல் தளத்திலும், இரு அருகால்களிலும் இரட்டைக் கயல்மீன்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. மேற்குக் கோபுரம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனாலும், வடக்குக் கோபுரம் கிருஷ்ண தேவராயராலும், கிழக்குக் கோபுரம் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனாலும் கட்டப்பெற்றதாகக் கூறுவர். இந்நான்கு கோபுரங்களிலும் மேலிருந்து கீழாகப் பதினான்கு தூண்களில் இக்கரணங்கள் இடம்பெற்றுள.

கரணம் என்பது சுத்த நிருத்தமாகும். இதனைச் சொக்க நடனம் என்பர். உடல் உறுப்புகளால் செய்யப்படும் வினையமாகும். இது தாளத்திற்கும், அடைவு சொற்கட்டுக்கும் ஏற்ப ஆடும் சுத்த நிருத்தமாகும். இதனை உடல் பாவனை என்பர். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் 108கரணங்கள்என்கிறார். (சிலம்பு 3 : 12 அடியார் உரை)

பரத சாத்திரம் 108 கரணங்களைக் குறிப்பிடுகின்றது. தலபுஷ்பபுடம் (மலரிடுகை), வார்த்திதம்(நுடங்குகை), வலிதோரு(நொசி குறங்கு), அபவித்தம்(கிளிக்கை நுடக்கம்), சமநகம்(இணைப்பறடு), லீநம் (உரங்கை யொடுக்கம்) வைதிக ரேசிதம் (குறுக்கிடுகை யோச்சசு), மண்டல ஸ்வஸ்திகம்(உட்கொடு குறுக்கிடுகை), நிகுட்டகம் (தட்டுத்தாள்), அர்த்த நிகுட்டகம் (சாய் தட்டுத்தாள்), கடிச்சின்னம் (சுழலரை), வக்ஷுஸ்வஸ்திகம் (மார்புக் குறுக்கிடுகை), உன்மத்தம் (பித்தர் நடம்), ஸ்வஸ்திகம் (குறுக்கிடுகை கால்), பிருஷ்டஸ்வஸ்திகம் (புறக் குறுக்கீடு), திகஸ்வஸ்திகம் (சுழற்குறுக்கீடு), அலாதகம் (நொடிப்பு), கடிசமம் (அரைநேர்பு), ஆக்ஷிப்தரேசிதம் (அதிர வீசுங்கை) என இக்கரணங்கள் பெயரிடப் பெற்றுள்ளன.

தல புஷ்பப் படம் என்கிற கரணம், பரதசாத்திரம் கூறும் முதலாவது கரணமாகும். இதனை மலரால் வழிபடல் என்பர். மலரால் வழிபடும் கை முத்திரையில் அமையும். நடனத்தில் புட்பாஞ்சலி என்ற உருப்படியின் பொழுது ஆடும் கலைஞர் கையில் மலர்

ஏந்தி அரங்கினுள் நுழைந்து அரங்கினுள் உள்ள தெய்வத்திற்கு இடுவர். புஷ்பப்புட அஸ்தத்தை இடது பக்கத்தில் வைத்துக்கொண்டு அக்ர தல சஞ்சாரம் என்னும் முறையில் பாதங்களை வைத்துக் கொண்டு இடுப்புப் பகுதியைச் சற்று வளைத்து நின்று இக்கரணத்தைச் செய்வர். இதனைப் பஞ்ச மரபு என்ற இசை இலக்கண நூல் பின் வருமாறு குறிப்பிடுகின்றது.

**கையிரண்டும் சர்ப்ப சிரமமாய்க் கூட்டில்**
**மெய்யில் சிறப்புப் புட்பம் போற்று (ப. 73)**

என்கிறது.

வர்த்திதம் என்ற கரணத்தில் பதாக அஸ்தத்தை மணிக்கட்டுப் பகுதியில் வளைத்துப் பின்புறமாகத் திருப்ப வேண்டும். இவ்வாறு ஏனைய கரணங்களும் அமைந்திருக்கும். எழுத்தளவில் கூறப்பெற்ற இக்கரணங்களை அறிந்துணர சிற்பங்களே துணை நிற்கின்றன. இவை ஒவ்வொரு கோயில் களிலும் ஒவ்வொருவித நிலையில் உள்ளன. கரண அசைவின் ஒவ்வொரு நிலையை இவை அறிவிப்பனவாக உள்ளன. இவ்வகையில் 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தஞ்சைக் கரணச் சிற்பங்களும், 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குடந்தைக் கரணச்சிற்பங்களும், 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தில்லைச் சிற்பங்களும், 15ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கரணங்களும், 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விருத்தாசலம் விருத்தகிரிசுவரர் கோயில் கரணச்சிற்பங்களும் காட்சிப் படுத்தியுள்ளன. இவ்வகையில் குடந்தை சார்ங்கபாணிகோயில் கரணச் சிற்பங்களும் துணை நிற்கின்றன.


தூண் சிற்பம்

**சார்ங்கபாணிக்கோயிலில் கரணச் சிற்பங்கள் ஏன்?**

ஆடல்வல்லானின் ஆடல் நிருத்தமாகிய கரணங்கள் சார்ங்கபாணி கோயிலில் இடம்பெற்றுள்ளது ஏன்? என்ற ஐயம் எழும்புவது இயல்புதானே. இக்கரணச் சிற்பங்கள் கி. பி. 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தன என்கின்றனர். ஆனால் சார்ங்கபாணிக்கோயில் இராசகோபுரத்தைச் சுமார் 300 ஆண்டுகட்கு முற்பட்ட இலட்சுமி நாராயணன்

கட்டியதாக ஒரு வரலாறு கூறப்படுகிறது. இலட்சுமி நாராயணன் சிலை இக்கோயில் உத்திராயண வாயிலின் அருகில் உள்ளது. அச்சிலைக்கு அருள் வழங்கும் நிலையில் திருமாலின் திருவடிகளும் அருகில் காணப்படுகின்றன.

சார்ங்கபாணிக் கோயிலை ஒட்டி சோமேசுவரன் கோயில் உள்ளது. இருகோயில்களுக்கும் இடையில் உள்ள தொடர்பைச் சார்ங்கபாணி கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கன் காலத்தது. இவர் சோமேசுவரர் கோயிலில் வீரசபாபதி (நடராசர்) கோயிலைக் கட்டியதாகக் கூறப்படுகின்றது. வீரசபாபதி சன்னதி கட்டிய விவரம் சார்ங்கபாணிக் கோயிலில் இடம்பெற்றது ஏன் ?

ஒரு காலத்தில் சோமேசுவரர் கோயிலும், சார்ங்கபாணி கோயிலும் ஒரே கட்டடத்திற்குள் இருந்திருக்கலாம். தில்லையில் ஆடல்வல்லான், கோவிந்தராஜர் சன்னதி இருப்பது போல் இருந்திருக்க வாய்ப்புள்ளது. வீரப்ப சன்னதியை அமைத்த மூன்றாம் குலோத்துங்கனே கோயிலின் சுற்றுச்சுவரின் அடிப்பகுதியில் நடனச் சிற்பங்களை அமைத்திருக்கலாம். இம்மன்னனே நடனச் சிற்பங்கள் கொண்ட தில்லைக் கோயிலின் முகமண்டபத்தையும், கோபுரத்தையும் அமைத்தவன் என்று கல்வெட்டு ஆய்வாளர் பேராசிரியர் மா.இராசமாணிக்கனார் சுட்டுகிறார். (மேற்கோள் ச. மணி. சார்ங்கபாணி கோயில் வரலாறு, பக். 29-30)

இவ்வாறு ஒரே கட்டடத்திற்குள் இருந்த சோமேசுவரர், சார்ங்கபாணி திருக்கோயில்கள், பின்பு தோன்றிய படையெடுப்புகளால் கேடுற்றன. சார்ங்கபாணி கோயில் நடனச் சிற்பங்கள் பல வெட்டப்பட்டு உருக்குலைந்த நிலையில் உள்ளன. கி. பி. 1385ஆம் ஆண்டில் விஜயநகர வீர விருப்பண்ண உடையார் இக்கோயிலைப் புதுப்பிக்கும் பொழுது இரு கோயில்களையும் தனித்துப் பிரித்திருக்கலாம் என்று பேராசிரியர் திரு.சு.மணி குறிப்பிடுகிறார் (மேற்கோள் ப.31), பின்பு இலட்சுமி நாராயணன் இக்கோயில் திருப்பணிகளை மேற்கொண்டிருக்கலாம். இவர் இவ்விறைவனின் மகனாகக் கருதி இவர் இறந்ததும் சார்ங்கபாணியே மகனாக இருந்து ஈமச் சடங்கு செயதார் என்றும், ஐப்பசி அமாவாசையன்று மகனாக இருந்து திதி கொடுக்கும் ஒரு விழா இன்றும் நடத்தப்பெற்று வருகிறது.

**நாகேசுவரன் கோயில் நடராஜர்**

குடந்தைக் கீழ்க்கோட்டம் தற்பொழுது நாகேசுவரன் கோயில் என்று அழைக்கப்பெறுகிறது. அமுதக் கலசத்தின் வில்வம் சிவலிங்கமான தலம், தேவாரப் பாடல்

பெற்ற தலம். நாவுக்கரசர் பாடியுள்ளார். இறைவன் பெயர் நாகநாதர். இறைவி பெயர் பெரியநாயகி. ஐந்து நிலை இராசகோபுரத்துடன் கிழக்கு நோக்கிய நிலையில் உள்ளது. இக்கோயிலில் இரண்டாம் திருச்சுற்றின் வடக்கு மூலையில் கூத்தாண்டவர் கோயில் என்கிற நடராசர் மண்டபம் உள்ளது. இக்கோயில் பேரம்பலம் என்று அழைக்கப்படுகிறது. தேர்வடிவில் உள்ளது. குதிரைகளும், யானைகளும் இழுத்துச் செல்லும் நிலையில் உள்ளது. மண்டபத்தின் முகப்பில் உள்ள படிக்கட்டுகள் இருபுறமும் இருபெரும் கல் யானைகள் முன் நோக்கி விரைந்து செல்லும் நிலையில் கட்டப்பட்டுள்ளன. யானையின் மேலுள்ள அம்பாரி மிகவும் வேலைப்பாடுடன் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் இருபுறமும் இருபெரும் தேர்ச்சக்கரங்கள் அச்சில் பொருத்தப்பட்டுச் சுழலும் நிலையில் உள்ளன.

இம்மண்டபத்தின் அதிட்டானங்களின் இடையேயுள்ள கண்டப் பகுதிகளில் பல்வகை நடனப்பெண்கள் நடனமாடும் காட்சிகளுடன் உள்ளனர். கண்டத்தில் நடனமாடும் பெண்களை அடுத்து ஆடல்வல்லான் ஆனந்தக் கூத்தாடுவதும், அன்னை சிவகாமி அதனைக் கண்டு களிப்பதும், மகிழ்வு பொங்க அதிகார நந்தியின் மகிழ்வும் கண்டுகளிக்கத் தக்கன. இதனைத் தொடர்ந்து பன்னிரு அடியார்கள் வரிசையாக வணங்கி நிற்கும் காட்சி இடம்பெற்றுள்ளது.இம்மண்டபத்தின் கருவறையில் கோபாலன் குழலூத, சிவகாமி தாளமிட குடந்தைக் கூத்தர் ஆனந்தத் தாண்டவமாடுகிறார். இப்படிமம் கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. (மேற்கோள். மா. சத்தியமூர்த்தி, தமிழ்நாட்டுச் சிவாலயங்கள் தொகுதி - 2, பக். 261) திருநாவுக்கரசர் இப்பெருமனைக்

**கோன் மலிந்த மூவிலைவேற் குழகர் போலும்**
**குடந்தைக் கீழ்க் கோட்டத் தெங்கூத்தனாரே**

என்கிறார்.

எல்லாச் சிவாலயங்களிலும் ஆனந்தத் தாண்டவ மூர்த்தம் உள்ளது. மார்கழி திருவாதிரையன்று ஆதிரையானுக்கு அபிடேகமும், திருவீதி உலாவும், ஊடல் உற்சவமும் நடைபெறும். இவ்வானந்தத் தாண்டவ மூர்த்தம், புராணம், கலை, அறிவியல், மெய்ஞானம் உணர்த்தும் அற்புதத் திருவுருவாகும். இளம்பிறை, மயிலிறகு, கொக்கிறகு, இடக்கண், வலக்கண், நுதல்வழி, திருநீறு, கபாலம், ஊமத்த மலர், கங்கை, நுண்சிகை, கொன்றை மலர், துடி, தீயகல், குழை, தோடு, நீலகண்டம், கபாலமாலை, ஆதிவராகக் கொம்பு, ஆமை ஓடு, நரசிம்மரின் குருதித்தோல், அபயகரம், அரவணி, கைகள், தோள்கள், பூநூல், உதரபந்தம், கஜஹஸ்தம், உடல், புலிஉரி, யானை உரி, ஊர்த்துவ மேரு, கோவணம், குஞ்சிதபாதம், சிலம்பு, கழல், வீரகண்டமணி, ஊன்றிய திருவடி, முயலகன், திருவாசி, சுடர், கமல பீடத்தோடு அமைந்துள்ளது.

ஆடவல்லான் மீது நாட்டியக் கவுத்துவம், பதவர்ணங்கள், பதங்கள், கீர்த்தனைகள், தில்லானாக்கள் போன்றன படைக்கப்பட்டுள்ளன. இவற்றை நடனக் கலைஞர் ஆடி வழிபாடு செய்து வருகின்றனர்.

**கும்பேசர் குறவஞ்சி**

ஆடல்வல்லான் மீது சீர்காழி முத்துத்தாண்டவர், தில்லை விடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதியார், பாபநாசம் சிவன், கே.என். தண்டாயுதபாணி பிள்ளை, மதுரை முரளீதரன் போன்றோர் பல உருப்படிகளைப் படைத்துள்ளனர். இவற்றைப் போல் நாட்டிய நாடகங்களும் படைக்கப்பெற்று ஆடப்பட்டு வருகின்றன. நாட்டிய நாடகங்களில் குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் செவ்வியலும், நாட்டுப்புறமும் கலந்த ஆடலாகும். ஏராளமான குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் ஆடப்பெற்று வருகின்றன. இக்குறவஞ்சி நாட்டிய நாடகத்தின் வித்துக் கும்பகோணத்தில் தோன்றியதாகும்.

கும்பேசர் குறவஞ்சி என்ற நாட்டிய நாடகம் முன்னோடி நாட்டிய நாடகமாகும். இதனைப் படைத்தவர் பாபநாச முதலியார் (கி. பி. 1640-1740) ஆவார். இந்நூல் 114 பாடல்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் 45 கீர்த்தனைகள் உள்ளன. முத்தமிழும் நிறைந்த நாடகம். கும்பேசர் சந்நிதியில் நாடகமாகப் பாடி நடித்துக் காட்டப்பெற்றுள்ளது. கும்பேசர் குறவஞ்சி நூலின் இலக்குமி துதியில் இரவலர் தருவான் தஞ்சை ஏகோசிராஜன் போற்றும் கும்பேசர் என்று குறிப்பிடப்படுகின்றது. ஏகோசி மன்னன் காலம் 1676-1683. எனவே நூலாசிரியர் காலத்தை மு. அருணாசலம் கி.பி. 1640-1740 என்று குறிப்பிடுகின்றார். (தமிழிசை இலக்கிய வரலாறு, ப. 288)

இக்குறவஞ்சி நூலில் தம்மை ஆதரித்த கும்பகோணம் பேட்டை நாணயக்காரத் தெரு நடராசர் செட்டியாரைப் பாடியுள்ளார்.

> அவனி புகழ் முத்தமிழ்க் கவிராச சேகரன் – அருள்பாபநாசன் வித்தகன்
> ஆதி கும் பேசர்மேல் குறவஞ்சி நாடகம் பாடி ஆடல்புரி
> கருணைமிகு பேட்டைநகர் வாழ் கோப்பக் குமர பூபனருள்
> நற்கருணையாளன் மிகு சொற்புலவர்க்குதவு நடராச மகிபாலனே

குடந்தை நகருக்குப் பெருமை சேர்த்த நாட்டிய ஆசான்கள் பலர். நாட்டிய நங்கைகள் பலர். கும்பகோணம் பக்கிரிசாமி, பாபநாசம் வடிவேலு நட்டுவனார், தம்பிக்கண்ணி நட்டுவனார், சண்முகசுந்தரம் பிள்ளை, திருவாளபுத்தூர் சுவாமிநாதபிள்ளை, பந்தணை நல்லூர் சுவாமிநாதபிள்ளை, குத்தாலம் கணேசப்பிள்ளை, வழுவூர் இராமையாப்பிள்ளை, பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சொக்கலிங்கம் பிள்ளை போன்றோரால் நாட்டியக்கலை வளர்ச்சியடைந்தது.

கும்பகோணம் பானுமதி, வரலட்சுமி, சுலோசனா, பட்டம்மாள், சாரநாயகி, கோமதி, கிரிஜா பக்கிரிசாமி, ஸ்ரீபிரியா, திருவாளப்புத்தூர் கல்யாணி அம்மாள், ஜெயலட்சுமி, ராஜலெட்சுமி போன்ற நாட்டிய நங்கையர்கள் நாட்டியக்கலை வளர்த்த காவலர்கள் ஆவார்கள். இன்றும் நாட்டிய ஆசிரியர்கள், நடனக்கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் திகழ் நகராகக் குடந்தை உள்ளது. குடந்தை நாட்டியாஞ்சலி விழா நிகழ்வுகள் கண்டு மகிழத்தக்கன.

*****



## குடந்தைப் பதிகமே குறிப்பு தந்தது

நாதமுனிகள் என்னும் வைணவப்பெரியார் வாழ்ந்திருந்த காலத்தில் திருவாய்மொழியோ, திவ்வியப்பிரபந்தமோ வடிக்கில் இருக்கவில்லை. இப் பெயர்களையே யாரும் அறியார். திருநகரி என்னும் ஊரைச்சேர்ந்த சில வைணவர்கள் ஆரா அமுதே என்னும் திருப்பதிகத்தைச் சொல்ல (5ம் திருவாய் மொழி 8ம் பதிகம்) ஒருநாள் நாதமுனிகள் கேட்டார். அதன் கடைசிப் பாடலில்,

குருகூர்ச் சடகோபன் குழலில் மலியச்
சொன்ன ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்

என வருதலால் இப்பதிகம் ஆயிரம் பாடல்களை உடைய பெரியநூல் ஒன்றின் பகுதி என உணர்ந்தார். அந்நூலைக் கண்டுபிடிக்க அரிதின் முயன்று திருவாய்மொழியோடு நாலாயிரத்தையும் தொகுத்து வழங்கினார். ஆழ்வார் பாசுரங்களைக் கண்டுபிடிக்கத் திருக்குடந்தை ஆராவமுதப்பெருமாளின் பதிகமே அடிப்படையாக அமைந்தது.

# ஒட்டக்கூத்தரும் குடந்தையும்

**கோ. ஜெயா கணேசன்,**

அந்தி சாயும் நேரம் ஒரு மனிதர் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேகமாக ஓட அவரைத் துரத்துபவர்களும் விடாது துரத்த இவர் ஓடிச்சென்று அருகில் இருந்த கோவிலுக்குள் நுழைந்துகொண்டு கோயில் கதவினைத் தாழிட்டுக்கொண்டு இறைவியின் சந்நதியில் அமர்ந்து விடுகிறார். துரத்தி வந்தவர்களோ கோயிலினுள் நுழைந்து எப்படி அவரைக் கொல்வது. எப்படியும் வெளியே வந்துதானே ஆகவேண்டும். விடியட்டும் பார்ப்போம் என காத்திருக்க. விடியும் வேளை வந்தது. துரத்தி வந்தவர்கள் வெளியே வா! வெளியே வா! எனக் கூக்குரலிட்டு அழைக்க. உள்ளேயிருந்த அவர் அங்கிருந்த சாளரத்தின் வழியே கையை நீட்டி ஏட்டுச் சுவடிகளை மட்டும் நீட்டினார். அதைக் கண்ட அவர்கள் அச்சுவடியினை வாங்கிப் படித்துப் பார்த்தார்கள். துரத்தியவர்கள் அனைவரும் சிவனடியார்கள். அந்தச் சுவடியில் உள்ள கருத்துக்கள் முழுவதும் தங்களின் வழிபாட்டுத் தெய்வமாக விளங்குகின்ற வீரபத்திர ஸ்வாமிகளின் வீர வரலாறு என்று உணர்ந்தனர். ஒரு சிறந்த படைப்பினை ஒரே இரவில் இயற்றும் அளவிற்கு தெய்வீக ஆற்றலுடையவரை கொல்வதா? ஏதோ ஒரு விதி வசத்தால் இவர் தவறு செய்துவிட்டார். அதற்காக இவரின் உயிரை பறிப்பது முறையல்ல, இவரை மன்னிப்பதே முறை என நினைத்து, தங்கள் தலைவராகிய மகா சுவாமிகளிடம் நடந்த நிகழ்வைக் கூறினர். இக்கதையில் ஓடியவர் 'மூவருலா' பாடிய கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசர் காளக்கவி, சர்வக்ஞகவி என்னும் பட்டங்களைப்பெற்று மூன்று தலைமுறை சோழ மன்னர்களின் அரசவையில் புலவராக விளங்கிய ஒட்டக்கூத்தர். இவர்களின் காலம் கி.பி. 1146-62 ஆகும்.


ஒட்டக்கூத்தர்

ஒருநாள் காலையில் வீரசிங்காதன பீடத்து வீர சைவ பெரிய மடத்தில் வாழ்ந்த சிவனடியார் ஒருவர் திருஞானசம்பந்தர் அருளிய திருவீழிமிழலை தேவாரப்பாடலை,

''கல்லால் நிழற்கீழாயிடர் காவாயென வானோர்
எல்லாமொரு தேராயயன் மறைபூட்டி நின்றுய்ப்ப
வல்லாயெரி காற்றீர்க்கரி கோல் வாசுகி நாண்கல்
வில்லாலெயி லெய்தானிடம் வீழிம் மிழலையே''

**கோ. ஜெயா கணேசன்,** ஆசிரியர், சக்கராப்பள்ளி, தஞ்சாவூர்.

என்று பாடிக்கொண்டே பிக்ஷை கேட்டுவர, ஒட்டக்கூத்தரின் இல்லத்தருகே வந்தபோது அப்பாடலைக் கேட்ட ஒட்டக்கூத்தர் "இப்பாடலின் பொருள் என்ன? கூறு" என்று வினவ. அதற்கு அந்த சிவனடியார், சினத்துடன் எனக்குத் தெரியாது, உனக்கும் தெரியாது என்று கூறியதைக் கேட்டு தம்மை இவர் ஏளனம் செய்கிறார் என அறிந்து, அடங்காத கோபத்துடன் தன்னுடைய கைத்தடியால் அவரை நையப்புடைத்தார்.

அடித்த அடியில் அவர் மூர்ச்சையாகி விழுந்து இறந்தேவிட்டார் அதனைக் கண்ட கூத்தர் தனது பெருங்கோபத்தால் ஏற்பட்ட விளைவை எண்ணி வீட்டிற்குள் செல்லாமல் வெளியேறிவிட்டார்.

செய்தியை அறிந்த வீரசைவ பெரிய மடத்து சிவனடியார்கள் மிகுந்த சினமுற்று ஆரவாரத்துடன் கூத்தரின் இல்லம் முன் வந்தனர். அங்கு கூத்தர் இல்லாததைக் கண்டவுடன் சோழ மன்னனின் அவைக்குச் சென்று முறையிட்டனர். இவர்கள் வருவதை முன்பே அறிந்த கூத்தர் அரசனிடம் நடந்ததைக் கூறி அடைக்கலம் ஆகியிருந்தார்.

அரசன் சிவனடியார்களிடம் இதற்கு நீங்கள் கூறும் பரிகாரம் என்ன? என்று வினவ அதற்கு அவர்கள் "கூத்தரை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்" என்றும் அவருக்குரிய தண்டனையை நாங்களே அளிப்போம் என்றனர். சோழ மன்னனோ தனது குருவை அவர்களிடம் ஒப்படைக்க மனம் இன்றி தனது மகனை (இளவரசரை) ஒரு மூடு பல்லக்கில் வைத்து மூடி நீங்கள் என்ன செய்யவேண்டுமென நினைக்கிறீர்களோ செய்துகொள்க என்று அவர்களுடன் அனுப்பினான்.

சங்கமர்கள் (சிவனடியார்கள்) சிவிகையைத் திறந்து பார்த்தபோது அரசகுமாரன் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து மீண்டும் மன்னனிடம் வந்து முறையிடவே, அதற்குள் கூத்தரும் மனம் மாறி தாம் அவர்களுடன் செல்வதாக அரசனிடம் கூறினார். சோழனும் வேறு வழியின்றி கூத்தரை அவர்களுடன் அனுப்பி வைத்தான். அரிசொல் ஆற்றங்கரையை அவர்கள் அடைந்தபோது அந்தி நேரமாக இருந்தபடியால் தாம் ஒரு சைவன் என்றும், தினமும் நித்திய சிவபூசை செய்து வருகிறேன் என்றும் எனவே, இந்நேரத்தில் பூசையை முடித்துவிடுகிறேன். பின்னர் நீங்கள் அழைத்துச் செல்லுங்கள் என்று அந்த கூட்டத்தினைப் பார்த்து கூத்தர் கூறினார். அவர்களும் வேறு வழியின்றி சிவபூசையை தடுப்பது அதுவும் நாமும் வீரசைவ சமய நெறியுடையவர்களாய் இருந்துகொண்டு பாவம் எனக்கருதி அனுமதித்தனர்.

ஆனால் ஒட்டக்கூத்தர் அரிசொல்லாற்றில் நீராடியபின் கரையேறி ஓடத்தொடங்கி விட்டார். பின்னர் நடந்ததுதான் ஆரம்பத்தில் கூறிய நிகழ்வுகள். அவர் ஓடிச்சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டது ஒரு அம்மன் கோயில். உள்ளே சென்று காளிகாதேவியை மனம் உருகித் தாம் செய்த தவறை நினைத்து தியானித்து தாயே என்னுடைய இடர்களைவாய் என் முன்கோபத்தால் நான் பெற்ற இக்கொலைப் பழியிலிருந்து என்னை விடுவித்து அருள்க என்று வேண்டினார்.

அப்போது காளிகாதேவி அவர்முன் தோன்றி கூத்தனே! வீர சைவர்கள் வழிபடும் வீரபத்திரர் சரித்திரத்தை ஓர் பிரபந்தமாகப் பாடுக என்று அருள் செய்து ஏடும் எழுத்தாணியும் அளித்தாள். தேவியின் அருள்பெற்ற கூத்தர் மனத்தூய்மையுடன் ஸ்ரீ வீரபத்திரர் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியது முதல் தக்கன் யாகத்தை அழித்த புராணத்தை "தக்கயாகப் பரணி" எனும் சிறந்த நூலினைப் படைத்து பொழுது விடிவதற்குள் படைத்தருளினார்.

முன்னொரு காலத்தில் பிரும்மாவின் புதல்வர்களில் ஒருவனாகிய தக்கன் சிவபெருமானை நோக்கி கடுந்தவம் இருந்து, அனைத்துலகங்களையும் ஆள்வதற்கும், உமாதேவியை மகளாகப் பெறுவதற்கும் வரம்பெற்றான்.தக்கனின் (தக்ஷனின்) புதல்வியாகிய உமாதேவி சிவபெருமான் மீது மிகுந்த பக்தி கொண்டு தந்தையின் பேச்சை மீறி அவரின் விருப்பத்திற்கு மாறாக சிவபெருமானை மணந்து கொண்டு திருக்கயிலாயம் சென்று விட்டாள். அதனால் தாட்சாயினிதேவியார் மீதும், சிவபெருமான் மீதும் கோபம் கொண்டு தாம் ஏற்பாடு செய்திருந்த அந்த பெரிய வேள்விக்கு இருவரையும் அழைக்காமல் திருமால், பிரம்மா, இந்திரன் முதலான அனைத்து தேவர்களையும் அழைத்தான். அவர்களும் வந்திருந்தினர். தந்தை அழைக்காவிட்டாலும் தான் மட்டுமாவது சென்றுவர அனுமதி கேட்டாள் தாட்சாயினி. சிவபெருமான் மறுத்தும் அவள் யாகம் நடத்தும் இடத்திற்குச் சென்றாள். தட்சன் தனது மகளைப் பார்த்துவிட்டு ஏன் வந்தாய்? என இகழ்ந்து பேசியும் சிவபெருமானை நிந்தித்து பேசியும் திருப்பி அனுப்பிவிட்டான். அதிக சினத்துடன் கயிலை திரும்பிய தாட்சாயினி சிவபெருமானிடம் முறையிட்டாள். அதனைக் கேட்ட சிவபெருமான் அதிக கோபம் கொண்டார். அவரின் முகத்திலிருந்த நெற்றிக்கண்ணில் தீப்பொறி எழுந்தது. அது அக்கினி சொரூபராகிய வீரபத்திரரைத் தோற்றுவித்தது.

சிவபெருமானைத் துதித்து நின்ற வீரபத்திரனை சிவனார் "அகோர வீரபத்திரனே! நீ தட்சனின் வேள்வியை அழித்து, அவனையும் தண்டித்து வருக" என ஆணையிடவே. வீரபத்திரரும் சில சிவகணங்களுடன் சென்று அவ்வாறே அங்கிருந்த திருமால், பிரம்மன், இந்திரன் ஆகியோரை போர் செய்து, வென்றும், தட்சனின் யாகத்தையும் அழித்து தட்சனின் தலையை கொய்யப்போக தட்சனின் மனைவி மாங்கல்யப் பிச்சைக் கேட்கவே இவரும் உயிர்ப்பிச்சை அளித்தார்.

பரம்பொருளாகிய சிவபெருமானை இகழ்வோர் யாராயினும் இம்முடிவையே அடைவர் என்பதை நிலைநாட்டிய வீரபத்திரருக்கு சிவபெருமான் தெய்வநிலையை அருளியதோடு, தனது புத்திரனாக இருக்கவும் அருள் செய்தார்.

**"ஆதி நாயகனைஒல்லார் அனையவர் சேர்ந்தார்க் கெல்லாம்**
**வேதமே இசையா நிற்கும் வியன் பெருந்தண்டம் அன்றோ"**

இதை உணர்த்துவது வீரபத்திர தேவர் புராணமாகும்.

ஒரு சமயம் திருக்கயிலாயத்தில் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் உமையம்மையுடன் திருக்காட்சி அருள்செய்து கொண்டிருக்கும்போது கங்காதேவியானவள் முக்கண் பெருமானின் திருவடிகளை வணங்கித் தனது விண்ணப்பத்தினை தெரிவித்தாள். கற்பனைக் கடந்த சோதியே! மகாதேவரே ! இந்த பூவுலகத்தில் வாழுகின்ற மனிதர்கள் அனைவரும் தங்களின் பஞ்சமா பாதகங்களை என்னுள் மூழ்கி கழிக்கின்றனர். அப்பாவங்கள் அனைத்தும் என்னிடம் வந்து சேர்வதால் அவை எனக்கு பெரும் சுமையாகவும், நான் சுத்தமில்லாதவளாகவும் மாறி விடுகிறேன். அதை என்னால் பொறுக்க முடியவில்லை.

ஆகவே சிவபெருமானே என்னுடைய இந்தப் பாவச்சுமைகளை நான் எங்கு சென்று கழிப்பது ஆகவே ஐயனே எனது துன்பத்தைப்போக்குவதற்கு ஒருவழி கூறுங்கள் என்று வேண்டி நின்றாள். சிவபெருமானும் கங்கையே! யாம் கூறுவதைக் கேட்பாயாக! திருமால், பிரம்மன், தேவர்கள் முதலியோர் போற்றி வழிபடும் இடமாக கயிலை திகழ்ந்தாலும் புண்ணியத் தலங்களில் மிகச் சிறப்பாக விளங்கினாலும் என்னுடைய இதயமானது திருக்குடந்தைப் பதியிலேயே பதியும் அளவிற்கு சிறப்புடையது திருக்குடந்தையாகும். உலக ஆன்மாக்கள் தமது பாவத்தினை போக்க காசியில் மூழ்குவர். அக்காசியில் ஏற்படும் பாவங்கள் நீங்க குடந்தையில் மூழ்குவர். அக்குடந்தையில் செய்யும் பாவம் அங்கேயே நீங்கும். ஆகவே நீயும் மற்ற நதிதேவிகளும் சேர்ந்து திருக்குடந்தை சென்று அங்குள்ள மகாமகக் குளத்தில் நீராடினால் உங்கள் பாவம் நீங்கி தூய்மை பெறுவீர்கள் என்று அருளினான்.

அதைக் கேட்ட கங்காதேவியும் மற்ற நதிகளும் சிவபெருமானின் கால்களில் விழுந்து வணங்கி மேலும் ஒரு விண்ணப்பம் ஆண்டவனே, நாங்கள் வடநாட்டிலிருந்து தென்னாடு செல்வதற்கு பெண்களாகிய எங்களுடன் வழித்துணையாக வலிமை மிக்க ஒருவரை அனுப்பிவைக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். அதற்கு சிவபெருமானும் இசைந்து எனது நெற்றிக்கண்ணில் உதித்து, தக்கனை அழித்த வீரபத்திரதேவனை அனுப்பி வைக்கிறோம் என உரைத்து மேலும் யாம் அங்கு வந்து உங்களுக்கு அருள் செய்வோம் எனவும் ஆணையிட்டார். அதைக் கேட்ட கங்கை முதலான நவகன்னியரும் மகிழ்ந்து வீரபத்திரதேவருடன் வழியில் உள்ள தலங்களை எல்லாம் தரிசித்துக்கொண்டு குடந்தை மாநகரை அடைந்தனர். கங்கை முதலான நவகன்னியரும் மகாமகதீர்த்தக் குளத்தின் வடகரையில் தங்கி காசி விசுவநாதரை வழிபட்டனர். அந்த திருக்கோயிலில் கங்கை, யமுனை, கோதாவரி, நருமதை, சரஸ்வதி, காவேரி, துங்கபத்திரா, கிருஷ்ணா, சரயு ஆகிய நவகன்னியர்களும் தற்போது தெய்வமாக மகாமக திருக்குளத்தினை நோக்கி காட்சியளிக்கின்றனர்.

ஸ்ரீவீரபத்திரதேவர் அந்த திருக்கோயிலின் வடமேற்கு திசையில் எழுந்தருளி கோயில் கொண்டார். அதுவே தற்போது உள்ள வீரபத்திரசுவாமி கோயில் மற்றும் அதனுடன் இணைந்த வீர சைவ மடம் ஆகும். வீரபத்திரர் மகாமகக் குளத்தின் வடக்கிலிருந்தபடியே சிவபெருமானை எண்ணி நாள்தோறும் பூசித்து வந்தார். சிவனும்

இவருடைய பூசையை ஏற்று தனது ஐந்து முகத்தில் ஒன்றான ஈசான முகத்துடன் வீரபத்திரருக்கு வீரசைவ சமய நெறிகளை உபதேசித்து அருளி, தீர்த்தப் பிரசாதம் அளித்து இலிங்கதாரணம் செய்து, ஞானமுடிசூட்டி, வீரசிங்காதன பீடத்து அமர்த்தினார்.

"வீரபத்திரனே! உலகில் வீரசைவ சமய நெறியை பரப்பி வருக. அதற்காக இந்த வீர சிங்காதன பீடத்து இருந்து அருளாட்சி புரிக" என்று அருளி மறைந்தார். அன்று முதல் இவ்விடம் வீரசைவப் பெரியமடமாக விளங்குகிறது.

இந்த மடத்தின் முதல்தலைவரான வீரபத்திர சுவாமியைப் பற்றித்தான் நமது ஒட்டக்கூத்தர் தக்கையாகப்பரணி பாடினார். இந்நூல் இவரின் ஏழாவது படைப்பாகத் திகழ்கிறது. இது இரண்டாம் இராசராசன் காலத்தில்தான் இயற்றப்பட்டது என்பதற்கு ஆதாரமாக இராசராசன் எடுத்த இராசராசபுரியீசரையும், இராசராசனையும் போற்றுவது கொண்டு அறியலாம்.

**ஒருமருங்குடைய மூல நாயகி யாரோ**
**டொற்றை வெள்விடை யூர்திமேல்**
**இருமருங்குமறை தொழவெழுந் தருளி**
**யிராசராசபுரி யீசரே.**

என்ற பாடலிலும் அந்நூலின் இறுதிப் பகுதியாக அமைந்துள்ள வாழ்த்துப் பகுதியில்

"**வாழி வரராசராசனே**" என வாழ்த்தி பின்பு

"**குடந்தையம் பதியில் கோதிலப் பெரிய**
**மடந்தனில் வாழ்வீர மயேச்சுரர் வாழியே**"

என்றும் தனது பரணியில் மடத்தைப் பற்றியும் பாடியுள்ளார்.

இந்நூலில் வைரவரை முதலில் காப்பாகக் கொண்டு அதனைத் தொடர்ந்து கடவுள் வாழ்த்து முதல் பதினோரு உறுப்புகளைக் கொண்டு இயற்றியுள்ளார். முதல் உறுப்பில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் முதலில் சிவனையும், விநாயகரையும், முருகக் கடவுளையும, ஆளுடையப்பிள்ளையார் ஆகியோரை சோழனுக்கு வெற்றி உண்டாக வேண்டும் என்று வாழ்த்திப் பாடியுள்ளார்.

இரண்டாம் பகுதி கடைதிறப்பில் பலவித பருவ மகளிரும் வீரபத்திரரைப் போற்றி பாடுவதற்கு கதவைத் திறக்கும்படி கூப்பிடப்படுகிறது. அத்தகைய மகளிராகத் தேவியின் அடியார்கள், தேவ மங்கையர், உருத்திரக் கன்னியர், இராசபுரத்து வீதிமாதர், அங்கு குடிபுகுந்த மகளிர், வித்யாதர மகளிர், கின்னர மகளிர், நாககன்னியர், சக்கரவாளம், இமயம், உதயகிரி போன்ற மலைகளில் வாழும் அரசமகளிர் போன்றவர்களை குறிப்பிடலாம். பொதுவாக உலாவில் தலைவனைப்பார்த்து ஏழு வகை மகளிர்களான பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகியோரை குறிப்பிடுவது வழக்கம். ஆனால் இங்கே சற்று மாறுபட்டு பிறவகையானப் பெண்களைப் போற்றி பாடும்படி ஒட்டக்கூத்தர் அமைத்துள்ளார்.

அடுத்ததாக காடு பாடியது எனும் மூன்றாம் பகுதியில் தேவி கோயில் கொண்டிருக்கும் பகுதி, சோலைகளின் அமைப்பு, பைரவர்களின் செயல்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

நான்காம் பகுதியில் காளியின் பெருமை, மற்றும் பூசைக்குரிய பொருட்கள் பற்றியும் ஐந்தாம் பகுதியில் பேய்களின் உருவம் அவற்றின் பசி பற்றியும் ஆறாம் பகுதியில் கோயிலைப் பாடுதலும் ஏழாம் பகுதியில் பேய்கள் முறையிடுதலும், எட்டாம் பகுதியில் வீரபத்திரர் தக்கனை அழித்தது ஆகிய நிகழ்வுகளும், ஒன்பதாம் பகுதியின் மூலமாக பேய்கள் பிணங்களை கூழ் சமைத்து, தேவிக்குப் படைத்து தானும் சாப்பிடுதலும், பத்தாம் பகுதியான களங்காட்டலில் சிவபெருமான் அம்பிகையோடு போர்க்களத்திற்கு எழுந்தருளி அங்குள்ளோருக்கு அருளுதலும். கடைசியாக வாழ்த்து எனும் பதினோறாவது நிறைவுப்பகுதியில் ஒட்டக்கூத்தர் தம்மை ஆதரித்தவனும் இந்நூல் எழக்காரணமாக விளங்கியவனுமாகிய இராசராச சோழனையும், பிறரையும் வாழ்த்துகிறார்.


தமிழ்ப் புலவர்

இந்நூல் இவரின் மிகச்சிறந்த படைப்பாகும். முப்பெரும் சோழ மன்னர்களின் அவைக்களப் புலவராக இருந்த ஒட்டக்கூத்தர் பிறந்த ஊர் தற்போது திருவெறும்பூர் என்று அழைக்கப்படும் ஊராகும். இவ்வூர் முன்னர் மலரி என்ற பெயரால் வழங்கப்பெற்றது. சைவ சமயத்திற்கும், தமிழுக்கும் மிகச்சிறந்த தொண்டாற்றியவர். இவருடைய தக்கயாகப்பரணி வீரபத்திரசுவாமி கோயிலில் அரங்கேற்றம் செய்யப் பெற்றது. இவருக்கு குடந்தையோடும், பெரிய மடத்தோடும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

சோழப் பேரரசர்கள் இவருக்கு எடுத்த திருவுருவச் சிலையானது, தற்போது குடந்தை பெரியமடத்து வீரபத்திரர் கோயில் வளாகத்ினுள் உள்ளது. இவரது பள்ளிப்படையானது, இராசராசேச்சுரம் எனும் நூலின் ஆசிரியர் திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் அவர்களின் கூற்றுப்படி தாராசுரம் ஐராவதீசுவரர் திருக்கோயிலுக்கு பின்புறம் பட்டீச்சுரம் சாலைக்கு மேற்புறம் தனியாகத் திகழும் திருக்கோயில்தான் வீரபத்திரர் திருக்கோயிலெனும் ஒட்டக்கூத்தரின் சமாதி ஆலயமாகும். கிழக்கு நோக்கிய மூன்று தள இராஜகோபுரம், திருச்சுற்றுமதில், திருச்சுற்று மாளிகை, மண்டபங்கள் ஆகியவை சூழ நடுவே வீரபத்திரர் கோயில் அமைந்துள்ளது.

இரு தள விமானமாக கருவறை திகழ, அர்த்த மண்டபம், முன் மண்டபம் ஆகியவை உள்ளன. கருவறையின் உள்ளே நின்ற கோலத்தில் வாள், கேடயம், வில், அம்பு

ஆகியவற்றை நான்கு கரங்களிலும் பிடித்த நிலையில் வீரபத்திரர் திருமேனி காணப்பெறுகின்றது. முகமண்டப வாயிலின் இருபுறமும் முறையே திருஞானசம்பந்தரின் படிமம், தக்கனுடன் திகழும் மற்றொரு வீரபத்திரரின் திருமேனியும் உள்ளன. இந்த வீரபத்திரர் பிற்காலத்திய படைப்பாகும். திருச்சுற்று மண்டபத்தின் மேற்குப் பகுதியில் வீரபத்திரரின் கருவறைக்குப் பின்புறம் ஒட்டக்கூத்தரின் பள்ளிப்படை காணப்படுகிறது.

சோழர்கால பள்ளிப்படை அமைப்பிலேயே ஒட்டக்கூத்தரின் பள்ளிப்படையும் விளங்குகிறது. சமாதியின் மேல் இலிங்கப் பிரதிஷ்டையும், எதிரில் நந்தியும் உள்ளது. மரபு வழியாகவும் தற்போதும் இவரது சமாதி இதுவெனப் போற்றி வழிபடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பகாலத்தில் கற்றளியாக இருந்து பின்னர் இப்பள்ளிப் படையும், வீரபத்திரர் ஆலயமும், நாயக்கர்களின் (கோவிந்த தீட்சிதர்) காலத்தில் திருப்பணி செய்யப்பட்டுள்ள விபரத்தினை, கோபுரம் மற்றும் பிற பகுதிகளில் காணப்பெறும் சோழர்கால கல்வெட்டுகளின் உடைந்த பகுதிகள் வாயிலாக அறியமுடிகின்றது என்று கூறியுள்ளார்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் சிறந்த கவிச்சக்கரவர்த்தியாகவும், புகழேந்திப் புலவருக்கு முற்பட்டவராகவும், கம்பன் மற்றும் சேக்கிழார் போன்றோர்களின் சமகாலத்தவராகவும் வாழ்ந்துள்ளார் என்பதையும் கூத்தன் என்ற சிவபெருமானின் பெயரை இயற்கையில் கொண்டிருந்தாலும் விக்கிரம சோழன் கண்ணியை ஒட்டிப்பாடுக என்று கூறியதும் உடனே அவர் பாடியதால் ஒட்டக்கூத்தர் என்று அழைக்கப்படுகிறார். இரண்டாம் இராசராசன் இவருக்கு தானமாக அளித்த ஊரில் கலைமகளை ஸ்தாபிதம் செய்து தினந்தோறும் வழிபாடு செய்துவந்தார். அந்த ஊர் தற்போது திருவாரூர் மாவட்டத்தில் பூந்தோட்டம் எனும் ஊருக்கு அருகில் உள்ள ஊராகும். இவ்வூரின் பெயரே கூத்தனூர் ஆகும்.

இன்றும் இவ்வூரில் சரசுவதி தேவியானவள் அனைவருக்கும் ஞானத்தை அளித்து அருளி வருகின்றாள். ஒட்டக்கூத்தரின் புகழானது காலங்கள் தோறும் நம் நினைவில் நின்று கொண்டே இருக்கும் அதற்கு மகாமகம் திருவிழாவும் ஒரு வகையில் காரணமாக அமைகின்றது என்பதில் எள்ளவும் ஐயமில்லை.



சிக்கல் கோயில்

## நந்திபுர விண்ணகரம்

தஷிண ஜகந்நாதம் என்றழைக்கப்படும் இக்கோயிலின் மூலவர் ஜகந்நாதன். தாயார் செண்பகவல்லி. இது திருச்சத்திமுற்றத்துக்கு அடுத்து உள்ளது. அதிகார நந்தி அவ்விடத்தில் தவம் செய்து சாப விமோசனம் பெற்றதால் நந்திபுரம் என்று வழங்கப்படுகின்றது. நந்தி பணிசெய்த நகர் என்கிறார் திருமங்கையாழ்வார். சிபிச்சக்கரவர்த்தி புறாவிற்காக தன் தசையை அறுத்து தராசுத் தட்டில் வைத்து சரி செய்வதைக்காண கிழக்கே இருந்த பெருமான் மேற்கு முகமாக ஆனார்.

# குடந்தையின் கருவூலங்கள்

**மரு. ச. அரங்கராசன்,**

கோவில்கள் நிறைந்த குடந்தை, தஞ்சை மாவட்டத்தின் கருவூலம் ஆகும். இங்கு சித்தர்கள் பலரும் வரலாறு படைத்துள்ளார்கள். இவர்களில் பலர், சமயம், சித்த மருத்துவம், நூல் பதிப்பு ஆகியவற்றில் வல்லவர்களாக விளங்கினார்கள்.

**திருமழிசை ஆழ்வார்**

காலத்தால் முந்தியவர் திருமழிசை ஆழ்வார் ஆவர். இவர் காலம் கி.பி.7ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகும். மூதாட்டிக்கு இளமை தந்தும், பெரும்புலியூரில், தன் பாடல்களைக் கேட்க, செல்லும் திசைகளில் பெருமாளின் தலையைத் திரும்பச் செய்தார், தன் தலை மீது பறந்த கந்தர்வனின் வாகனத்தைத் தடுத்தவர். இவர் காலத்தில் கொங்கண சித்தர் என்ற இரசவாதியை வென்றவர். சிவபெருமானுக்கு காலில் நெற்றிக் கண்ணைக் காட்டியவர் போன்ற அரிய செயல்களைச் செய்தவர். திருமழிசை ஆழ்வார். இவர் காலத்தில் கூறப்படும் கொங்கணர், சித்த மருத்துவ நூல்களைச் செய்த கொங்கண சித்தரினும் வேறானவர். இவரது சமாதி கும்பேசுரர், கோவிலுக்கு வடக்கு திசையில் உள்ள சாத்தாரத்தெருவில் "திருமழிசைப் பிரான் சன்னதி"[1] என்ற பெயரில் உள்ளது.

**கும்பமுனி**

ஆதி கும்பேசுரர் கோவிலின் வெளிச்சுற்றில் கும்பமுனியின் சமாதிக் கோவிலில் உள்ளது. மதில் சுவர் எழுப்பப்படுவதற்கு முன்னரே இக்கோவில் தோன்றியது என அறியமுடியும். கும்பமுனியின் பெயரில் ஐந்து அச்சிடப் படாத சுவடிகள் உள்ளன. கும்பமுனி கடைக்காண்டம்-600, சூத்திரம்-35, சோதிடம் நவக்கிரகக்கிசம், வாக்கிய ஞானம், வைத்தியரத்தினச் சுருக்கம்[2] என்பன. இவர் அகத்தியரினும் வேறானவர் இவரைப்பற்றி நந்தீசர் நிகண்டு, பாடல்-76இல் கோணந்தக் கும்பமுனி உரைத்தார், தன் மந்திரிக் கூறினால் சாபம் போ(ம்) கும்பநாதன் என்று வருகின்றது.

1. தல வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள், திரு. ஆ. வீரராகவன், பக்கம்-190, சரசுவதி மகால் பதிப்பு, 2014.
2. சித்தர் தரிசனம்-சந்திரசேகரன், பக்கம் 264, விஜயா பதிப்பகம், 2006.

**மரு. ச. அரங்கராசன்,** மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் (ஓய்வு) தஞ்சாவூர்.

### கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்

கும்பகோணத்தின் புறப்பகுதியான கொட்டையூரில் பிறந்தவர் மன்னர் சரபோஜியின் அவைப் புலவர் தாண்டவராய முதலியார் கேட்டுக் கொண்டபடி சென்னை மாகாண கல்விச் சங்கத்தில் சேர்ந்தார். வரதுங்கபாண்டியனின் கொக்கோகம் என்ற கலவி நூலை மேல் பார்வையிட்டுத் தந்தார். கொற்றமங்கலம் இராமசாமிப்பிள்ளை 1937இல் பதிப்பித்தார். திருத்தணிகை விசாகப்பெருமாள் அய்யருடன் இணைந்து 1857இல் திருவாசகத்தைப் பதிப்பித்தார். இது திருவாசகத்தின் முதல் சுவடிப் பதிப்பாகும். இவர் கோடிச்சுவரக் கோவை,[1] சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, பெருவுடையார் உலா போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

மருத்துவச் சுவடிகளில் சரபேந்திர வைத்திய முறைகள், தனிச் சிறப்புடையவை சரபோசியின் மருத்துவர்கள் திருவேங்கடத்தாபிள்ளை, காரைக்குறிச்சி வேலாயுத வாத்தியார், வேங்கடாசலம்பிள்ளை, சுப்பராயக் கவிராயர் முதலியோர் இயற்றினார்கள். இதை மேற்பார்வையிட்டவர் சிவக்கொழுந்து தேசிகராவார்.[2]

### சந்திரசேகர கவிராச பண்டிதர்

சோழநாட்டின் தில்லையம்பூரில் இவர் பிறந்தார். பெரும் புலவர்களான திருத்தணிகை விசாகப்பெருமாள் அய்யர் சரவணப்பெருமாள் அய்யர் ஆகியோரிடம் கல்வி பயின்றார். சித்தூரில் தமிழாசிரியராக தொண்டாற்றியவர். குடந்தை அரசினர் கலைக்கல்லூரியின் தமிழாசிரியர் தியாகராசச் செட்டியார் மருத்துவ விடுப்பு எடுத்தபோது, பதிலாகப் பணியாற்றினார் எனினும், தியாகராஜ செட்டியார் போன்று பாடம் சொல்ல இயலாதவர் என்று இவரைப் பற்றி என் சரித்திரத்தில் உ. வே. சா. குறிப்பிட்டுள்ளார். முதன் முதலாகத் தனிப்பாடல் திரட்டை சேதுபதி, பொன்னுச்சாமிதேவரின் நிதி உதவியுடன் வெளியிட்டார். தன்னுடைய ஆசிரியர்கள் இயற்றிய பால போத இலக்கணம், நன்னூல் கண்டிகை உரை, ஐந்திலக்கண விடை என்பனவற்றைப் பதிப்பித்துள்ளார். சித்தூர் ஆயுர்வேத மருத்துவ சபையில் உறுப்பினராகவும்


மாணிக்கவாசகர்

1. அனைத்துலகத் தமிழ் ஓலைச் சுவடிகள் அட்டவணை, பக்கம் 2136, தமிழ்ப்பல்கலைக் கழகம், 1991.
2. தமிழ் எண்ணும் எழுத்தும், ஆசிரியர், மணி. மாறன், தமிழ்ப் பண்டிதர், சரசுவதிமகால் நூலகம்.

இருந்துள்ளார். விசப்பிரதிவிசத்திரட்டு, சுந்தரானந்தர், ஆயுர்வேத பொது இலட்சணம், திருமூலர் நாடி ஆகியவற்றை பதிப்பித்தவர். தன்னுடைய பிறந்த ஊரில் மேற்படி நூல்களைப் பதிப்பித்தார். சுந்தரானந்தர் ஆயுர்வேதப் பொது லட்சணம், 12 பக்கங்களுடன் தில்லையம்பூர் கலாநிலைய அச்சுக்கூடத்தில் 1874இல் வெளியானது. திருமூலர் நாடி அந்தாதி, தில்லையம்பூர் கலாநிதி அச்சுக்கூடத்தில் 1872இல் 4அணா விலையிலும் விசப்பிரதி, விசத்திரட்டு, தில்லையம்பூர் கலாநிதி அச்சுக்கூடத்தில் 1872இல் 4 அணா விலையில் விற்பனையானது.

**சித்த மருத்துவ நூல் பதிப்புகள் – கும்பகோணம் துரைசாமிப் பண்டிதர்**

இவர் குடந்தையில் கும்பேசர் மேலவீதியில் மருந்தகம் நடத்தியவர். சுகாதார சீவரட்சாமிர்தம் என்ற நூலை 1915ஆம் ஆண்டு 240 பக்கங்களுடன் 1916ஆம் ஆண்டு குடந்தை அலெக்சாண்டர் அச்சுக்கூடத்தில் பதிப்பு செய்து ரூ. 4-12-0 விற்றுள்ளார். சர்வரோக நிவாரண வைத்தியசாலை[1] என்பது அம்மருந்திற்குப் பெயர். மௌனகுருசாமிகளின் மீது பற்றுக்கொண்டவர். அவரைப் பின்பற்றியவர்.

**பாடகச்சேரி ஸ்வாமிகள்**

குடந்தை கீழ்க்கோட்டமான காயாரோகணம் எனப்படும் நாகேசுரன் கோயிலைச் சீரமைத்துக் குடமுழுக்குச் செய்தவர். இயற்பெயர் இராமலிங்க சுவாமிகள். இவர் இறைத்தொண்டுடன், சித்த மருத்துவமும் செய்துவந்தார். கும்பகோணத்தில் 1921, 1932ஆம் ஆண்டுகளில் மகாமகம் வந்தது. இவரது கூழ்சாலை மடத்தில் அன்னத்தை வழங்கியுள்ளார்.

சுவாமிகள் நிறைய மருந்துப் பொருட்களையும், மூலிகைகளையும் பெங்களூர் இராமலிங்க முதலியார் வீட்டுக்குக் கொண்டுவருவார். பத்துவிதமான மருந்துகளைச் செய்வார். சாடி நிறைய மருந்துகளிருக்கும். 64விதமான நோய்களைக் குணமாக்க ஆமையோடு பற்பம் வயிறு தொடர்பான நோய்களுக்கு தருவார். அயச்செந்தூரம், பட்டுக்கறுப்பு போன்றவைகள் இருக்கும் லிங்கச் செந்தூரத்தை, அரிசியின் பாதியளவு எடுத்து வெற்றிலையில் வைத்துத் தேனில் குழைத்துத் தருவார். இது 33வகைக் காய்ச்சல்களைக் குணப்படுத்தும். 1949இல் சுவாமிகள் சித்தியடைந்தார். இரவு பகலாய் அனேகப் பொருட்களைப் புடம்போட்டுச் சுடர் தைலம் தயாரித்த சுவாமிகள், அதை சுப்பிரமணியர், பட்டினத்தார் விக்ரகங்களுக்கு அபிசேகம் செய்தார். இத்தைலத்தால் குளிப்பவர்களுக்கு டைபாய்டு போன்ற விஷ சுரங்கள் தீர வழிபட்டார். இத்தைலத்தையும், மற்ற மருந்துகளையும் செய்யப் பொருள் அளித்தவர் இராமசாமிப்பிள்ளை. சென்னையில் இராமசாமிப் பிள்ளை இருந்தபோது, பலருக்கும் உதவும் விதமாக ஏராளமான மூலிகை மருந்துகளைத் தயாரித்தார். தயாரிப்பு

விவரங்களைப் பிடில் சௌந்திரராச அய்யங்காரும், இராமசாமிப்பிள்ளையும் எழுதிவைத்தார்கள். உடன், போட்டோ தனபால் முதலியார் இருந்தார். சுவாமிகளின் மருந்துத் தயாரிப்பு முறைகளை நூலாக பதிப்பித்தல் அவசியம்.

### ஆறுமுக ஞானியார்

கும்பகோணம் மேலக்காவேரி ஆறுமுகஞானியாரின் மேற் பார்வையில் வாத காவிய திறவுகோலாகிய வாத சௌமியம் 1893இல் சென்னை சூளை குப்புசாமி முதலியாரின் தொண்டை மண்டல அச்சு இயந்திர சாலையில் அச்சிடப்பட்டது. இதன் விலை ரூ. 1/- சுவாமிகளின் மாணவர்கள் மேலக்காவேரி, பொன்னுச்சாமி ஆசாரி, கருப்பூர் வைத்திலிங்கம் பிள்ளை ஆகியோர் பதிப்பித்தனர். இந்நூல் 1200 பாடல்களைக் கொண்டதாகும்.

### பொன்னம்பலப் பண்டிதர்

“சித்தர் களஞ்சியம்” என்ற நூலை 1915இல் பதிப்பித்துள்ளார். குடந்தை சிவானந்த சாகர யோகீஸ்வர சுதேசி அச்சியந்திரசாலை அச்சிட்டுள்ளது.

### பண்டிதர் ஆனந்தர்

இவர் குடந்தையில் 16-03-1876இல் பிறந்தவர். பெற்றோர் சாமினாதன், கமலம்மாள் “மருத்துவன்” என்ற மாத இதழை 1929இல் நிறுவி இவரே ஆசிரியராக இருந்தார். சித்தமருந்து செய்நிலையத்தில் பல மருந்துகளைச் செய்து மக்களுக்கு வழங்கியுள்ளார். இதை தந்தைப் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இவர்களது மருந்தகத்திற்குத் தமிழ் வைத்தியசாலை எனப்பெயர் சூட்டினார். 18-06-72இல் இயற்கை எய்தினார்.

### இராமசாமி அய்யங்கார்

1898இல் “சவுத் இந்தியன் எஜிகேஷனல் டிரேடிங் கம்பெனி” “சுகவழி விளக்கமும், வினாவிடையும் என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டது. இதன் ஆசிரியர் இராமசாமி அய்யங்கார். 3ஆம் படிவ மாணவர்களுக்கான பாடநூலாகும்.

### நாராயணசாமி அய்யங்கார்

“சயின்ஸ், ஹைஜீன்” செய்முறை பயிற்சிக்கான பாடநூல், மூத்த அறிவியல்துறை உதவியாளர், நாராயணசாமி அய்யர் நகர உயர்நிலைப்பள்ளி கும்பகோணம் எழுதி, 1924இல் வெளிவந்தது 12 அணா விலை.

**நிறைவுரை**

குடந்தையில் ஆன்மீகம் கலை, மருத்துவம் என்பன செழித்து வளர்ந்தன என்பதற்கு பல சான்றுகள் தரப்பட்டன. குடந்தை தஞ்சை மாவட்டத்தின் கருவூலமாக திகழ்கிறது.

*****



துவாரபாலகர்

**குடந்தையும் குடமூக்கும்**

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் மொத்தம் 51 பாசுரங்களில் கும்பகோணம் குறிக்கப்படுகிறது. இவற்றுள் பூதத்தாழ்வாரின் இரண்டாம் திருவந்தாதி 97ஆம் வெண்பா ஒன்றில் மட்டும்

படமூக்கின் ஆயிரவாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய் குடமூக்கில் கோயிலாக் கொண்டு (2278)

எனக் குடமூக்கு என்ற பெயர் வந்துள்ளது. மற்ற 50 இடங்களிலும் குடந்தை என்ற பெயரே ஆளப்பட்டுள்ளது.



## வெற்றிலையின் மருத்துவக்குணம்

வெற்றிலையில் 84.4% நீர்ச்சத்தும், 3.1% புரதச்சத்தும், 0.8% கொழுப்புச்சத்தும் உள்ளன. கால்சியம், கரோட்டின், தயாமின், ரிபோப்ளேவின் மற்றும் வைட்டமின் சி ஆகியவையும் வெற்றிலையில் உள்ளன. வெற்றிலைக்கு நாக இலை என்ற பெயரும் உண்டு. பாம்பின் விடத்தையே முறிக்கும் அளவுக்கு வீரியம் கொண்டதால் சித்தர்கள் வெற்றிலையை நாக இலை என்று குறிப்பிட்டுள்ளனர். வெற்றிலையுடன் மிளகை தட்டிக் கொடுத்தால் பூச்சிக் கடிபட்டவர்களுக்கு விடம் இறங்கும். இரண்டு வெற்றிலையை எடுத்து அதில் 9 மிளகை மடக்கி வாயில் போட்டு மென்று விழுங்கினால் தேள்கடி விடம் இறங்கும்.

வெற்றிலை உமிழ்நீரைப் பெருக்கி பசியைத் தூண்டும் தன்மை கொண்டது. வெற்றிலைச்சாறுடன் நீர் கலந்த பாலைக் குடித்தால் சிறுநீர் பிரியும், சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சல் குறையும். வெற்றிலையை கடுகு எண்ணெயில் இளஞ்சூட்டில் வதக்கி மார்பில் கட்டினால் குழந்தை பெற்ற பெண்களுக்கு தாய்ப்பால் அதிகம் சுரக்கும். குழந்தைகளுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டால் வெற்றிலைக் காம்பை ஆமணக்கு எண்ணெயில் தடவி ஆசன வாய்வுள் செலுத்தினால் மலம் வெளியேறும்.

தேங்காய் எண்ணெயில் வெற்றிலையை சேர்த்து சூடாக்கி வெற்றிலை சிவந்தவுடன் இறக்கி அந்த எண்ணெயைத் தடவினால் தோல், சொறி, சிரங்கு நோய்கள் குணமாகும். வெற்றிலை வேரை சிறிதளவு எடுத்து மென்று வந்தால், குரல்வளம் பெருகும்.

– மலர்க்குழு

# சிவாலய அமைப்பும் பிரதிஷ்டா மூர்த்திகளும்

எஸ். நாராயணசுவாமி,

பண்டைத் தமிழக வேந்தர்களும், பெருமக்களும் இறை வழிபாட்டிற்கு முதலிடம் கொடுத்து ஆண்டின் பன்னிரு திங்களிலும் விழா எடுத்தனர். இதற்கு சங்க இலக்கியங்கள் சான்றாக அமைந்துள்ளன. எனவே, பண்டைத் தமிழர்களின் வாழ்வே சமய வாழ்வாக அமைந்திருந்ததென்று கூறினால் அது மிகையாகாது. சைவப் பெரியோர்களின் வாழ்க்கைச் சரிதம் அதற்கோர் உதாரணமாகும். எந்நாட்டவர்க்கும் இறைவன் தென் நாட்டவர்க்குச் சிவன். அவ்வாறு இறை வழிபாட்டையும், சமய வாழ்வையும் இணைக்கும் பாலமாக அமையப்பெற்றதே இயல், இசை, நாடகம். அவற்றைப் போற்றிக் காப்பதில் தமிழ் மன்னர்கள் பெரிதும் ஆர்வம் காட்டினார்கள் என்பதனை நிரூபிக்கும் கலங்கரை விளக்குகளே தமிழ்நாட்டின் ஆலய அமைப்பு களாகும். ஆலயங்களில் எழுந்தருளி விளங்கும் திருமேனிகள் உயிர்களை நல்வழிப்படுத்துவனவாம். இவ்வாலயங்கள் இறை வழிபாட்டிற்கு மட்டுமல்லாமல், 64 கலைகளை வளர்க்கும் இடமாகவும், மதம், சாதி, சமயம் இவைகளுக்கு அப்பாற்பட்டதும், சமூகம், சகோதரத்துவம், மனிதநேயம் இவைகளை போற்றிப் பாதுகாக்கும் உன்னத கலாச்சார தெய்வீகச் சின்னங்களாகவும் தமிழக ஆலயங்கள் விளங்குகின்றன.



ராவணன் கைலையை
பெயர்க்கும் காட்சி

மக்களின் நல்வாழ்விற்காக ஆலய வழிபாடு இன்றியமையாதது என்பதனை வலியுறுத்தவே "கோயில் இல்லாத ஊர் பாழ்" என்றும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும், "ஊன் உடம்பே ஆலயம்" என்றும் கூறுவர். இவ்வாலயங்களின் கட்டுமானம், சிற்பம், பிரதிஷ்டை, பூசை யாவும் பல்வேறு நிலைகளில் விளங்குகின்றன.

**சிவனே முழுமுதற்பொருள்**

சிவபெருமானே முழுமுதற் பொருளாக விளங்கும் கடவுள் ஆவார். "சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை" என்பார் திருமூலதேவ நாயனார். ஐந்தொழிற்கும் அதிபதியாக விளங்கும் சிவனின் திருநாமங்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டதால்,

எஸ். நாராயணசுவாமி, திருவிடைமருதூர்.

ஆலயங்களில் பல்வேறு திருவுருவங்களின் வாயிலாக நின்று நிலவி என்றும் அருள் பாலித்து வரும் இறைத் திருமேனிகள் யாவும் அடியார் பெருமக்கள் நமக்கு அளித்த கொடையாகும்.

ஞானிகள் கூறும்போது இறைவனை ரூபம், அரூபம், ரூபாரூபம் என்ற மூன்று நிலைகளில் உணர்த்துகின்றனர். இம்மூன்று நிலைகளையும் திருக் கோயில்களில் இன்றும் காணலாம்.

**அருள்பெறும் இடம்**

பசு, தனது உடல் முழுவதும் பாலினைக் கொண்டுள்ளது. ஆனால் “மடி” என்ற ஓர் இடத்தின் மூலமாகத்தான் அப்பாலினை நாம் பெற முடிகிறது. அதுபோல இறைவனாகிய சிவபெருமானின் திருவருள் எல்லா இடங்களிலும் பரவியிருந்தாலும் திருக்கோயில் என்ற இடத்தின் மூலமாகத்தான் எப்போதும் அந்த அருள் கிடைக்கின்றது.

**இறை உருவம் தந்த நிலை**

தொடக்கக் காலத்தில் மக்கள் தமது வாழ்க்கையோடு இயற்கையினை மறவாது ஞாயிறு (சூரியன்) திங்கள்(சந்திரன்), மரம் போன்ற இயற்கைப் பொருள்களைத் தெய்வமாக வழிபட்டனர். குறிப்பாக மக்கள் வழிபட்டு வந்த மரங்கள் யாவும் காலத்தால் முதிர்ந்து பட்டுப்போய் கிளைகள் எல்லாம் நீங்கி அடிமரம் மட்டும் எஞ்சி நிற்கின்ற போதும் தெய்வமாகவே எண்ணிப் போற்றி வழிபட்டனர். இத்தகைய அடிமரம் சந்தாழி எனப்பட்டது.

சிவலிங்க வடிவத்தினையே போற்றி வழிபட்ட மக்கள் காலப் போக்கில் வேத சிவாகம சிற்ப சாத்திர வழிகளில் சொல்லப்பட்ட பல்வேறு நிலைகளில் திருக்கோயில்களை அமைத்தும், அருள் பாலிக்கும் இறைத் திருமேனிகளை மண், மரம், கல், உலோகம், ஸ்படிகம், நவரத்தினக் கற்கள், ஓவியம் முதலியனவற்றில் அமைத்து வழிபடலாயினர்.

சிவனுக்குரிய எண்ணற்ற திருக்கோலங்களைத் தன்னகத்தே கொண்ட திருக்கோயில்கள் யாவும் தமிழகத்தில்தான் இன்றும் நின்று நிலவுகின்றன. இத் தமிழகத்தின் திருக்கோயில்கள் எப்போது தோன்றின? அதனுடைய மூலம் என்ன? தமிழகத்திற்கே உரிய கோயிற்கலையின் சிறப்பு என்ன? என்று பலவாறாக சிந்திக்க முயன்றால் பல உண்மைகள் வெளிப்படுகின்றன.

**சங்க காலத்தில்.....**

பண்டைத் தமிழகத்தில் தொல்காப்பியக் காலத்திலேயே வீரர் வணக்கத்திற்குரிய கோயில்கள் பல இருந்தன. கி. பி. 2ஆம் நூற்றாண்டினதாகிய சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை நூல்களில் கோயில்கள் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன.

### ஆலயங்களின் முந்தைய நிலை

மகேந்திர பல்லவன் (திருநாவுக்கரசர் காலம்) காலத்திற்கு முன் தமிழகத்தில் கற்கோயில்கள் இல்லை. இருந்த கோயில்கள் யாவும் செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் இவற்றால் ஆனவை. இவன் காலத்திற்கு முன்னரே தமிழர்கள் கோயிற்கலையில் சிறந்திருநதனர். இவனே மேற்சொன்ன அழியும் பொருளை விடுத்து முழுவதும் கருங்கற்கள் கொண்ட கற்றளியை உருவாக்கினான்.

### பல்வேறு திருக்கோயில்கள்

திருக்கோயில்கள் பெருங்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், கரக்கோயில், தூங்கானை மாடம் எனத் திருமுறைகளில் குறிக்கப்படுகின்றன. பொதுத் தன்மையில் தேவாலயம் என்றும், மிச்ராலயம் என்றும், சங்கீர்ணாலயம் என்றும் மூன்று வகைகளாகப் பிரிப்பர். முதன் முதலில் இயற்கையை வழிபட்ட மக்கள், சோலைகளிலும், மர நிழலிலும், குகைளிலும் இறைவன் திருமேனியை அமைத்து வழிபட்ட மக்கள் காலப்போக்கில், மனித உடலுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப புறச்சின்னமாக அமைந்த திருக் கோயில்களை சிவாகமங்கள் மற்றும் சிற்ப நூல்களின் துணைகொண்டு கோயிலும் அதனைச் சுற்றிய மதில்களும், நான்கு திசைகளில் வாயில்களும் (கோபுரங்கள்), அந்த கோபுரங்கள், 3, 5, 7, 9, 11, 13 நிலைகளைக் கொண்டதாகவும், கோபுரத்தை அடுத்து பலிபீடம், கொடிக்கம்பம், நந்தி, நேரே அமைந்த கருவறை, (கருப்பக்கிரகம்) அதனுள் சிவமாம் மூல மூர்த்தியாகிய சிவத்திருமேனியும், கருவறையின் மேல் அமைந்த கட்டுமானப் பகுதி விமானம் என்றும் அழைப்பர். கோபுரங்கள் மற்றும் விமானத்தின் உச்சிப் பகுதியில் ஒற்றைப்படையில் செப்புக் கலசங்கள் அமையும்.

### மூன்று நிலைகள்

திருக்கோயில் "திராவிடம்," "வேசரம்," "சதுரம்" என்ற நிலைகளில் நிர்மாணிக்கப்படுகின்றன. இதில் விமானங்கள் 1, 3, 5, 7, 9, 11, 13, 15 என்ற தள அமைப்புகளும் உண்டு. விமானங்கள் மூன்று வகைப்படும்.

1. தூய விமானம் :- விமானங்கள் கல், செங்கல், மரம் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டே அமைக்கும் விமானம், தூய விமானம் எனப்படும்.

2. கலப்பு விமானம்:- கல், சுண்ணாம்பு என்னும் இரண்டு பொருளைக் கொண்டு அமைவது கலப்பு விமானம் ஆகும்.

3. பெருங்கலப்பு விமானம்:- பல பொருள்களால் அமைவது பெருங்கலப்பு விமானம் ஆகும். இது கட்டடக்கலை நூற்கூற்றாகும். இதனாலும் பண்டைக் காலத்தில் கோயில்கள் இருந்தமையும் விமானங்களில் உண்மையையும் அறியலாம்.

**திராவிடக் கலைப்பாணி**

திராவிடக் கலைப்பாணிக் கோயில்கள் சதுரமான கருவறையையும், அதனைச் சுற்றி வலம் வரும் திருச்சுற்றையும் கொண்டிருக்கும். கூம்பு வடிவ விமானம் அமைப்பு கீழிருந்து மேலாகக் கூம்பிச் செல்லும். இவ்விமானங்கள் பல தளங்களைப்பெற்று விளங்கும் கூடு அமைப்பும், சாலை அமைப்பும் தளங்களில் காணப்படும். கழுத்து, தலை. முடி ஆகிய மூன்று உறுப்புகளும் விமானத்தில் காணப்படும். உருவ அமைப்பின் அடிப்படையில் விமானங்கள் 1. விருத்த விமானம், 2. சதுர விமானம், 3. அறுகோண விமானம், 4. எண்கோண விமானம், 5. தூங்கானை மாட விமானம், 6. சத்தி நீள விமானம் என ஆறு வகைப்படும். பிற்காலத்தில் தென்னிந்தியக் கோயில்கள், தூண் மண்டபங்களையும், தூண்கள் கொண்ட சுற்றுப் பாதைகளையும், நுழைவாயில்களில் கோபுரத்தையும் கொண்டு விளங்குகின்றன.

*****



அங்கோர்வாட் கோயில்

# குடந்தை திருச்சேறையில் சாளுக்கிய-சோழன் விக்கிரமனின் கல்வெட்டுகள் ஓர் பார்வை

**கோ. தில்லை கோவிந்தராஜன்,**

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருச்சேறை சாரபரமேஸ்வரர் (திருசெந்நெறி உடையார்) கோயிலில் பல கல்வெட்டுக்கள் சோழர்காலம் தொடங்கி விஜயநகர காலம் வரை காணப்படுகின்றது. அக் கல்வெட்டுக்கள் மத்திய தொல்லியல் துறையால் ஆய்வு செய்யப்பட்டு ஆண்டறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அக்கல்வெட்டுக்களை படித்து நகல் எடுத்து முழுவடிவத்துடன் செய்திகளைத் தமிழ்நாடு தொல்லியல் துறையினரால் கும்பகோணம் கல்வெட்டுக்கள் முதல் தொகுதி என்ற நூலாக வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்கள் ஐந்தும் முதலாம் குலோத்துங்கனின் மகன் விக்கிரம சோழனின் ஆட்சிக்காலத்தில் தானம் வழங்கப்பட்ட செய்தியை குறிப்பிடுகின்றன. அக்கல்வெட்டுக்களைப் பற்றிய செய்திகளை நாம் காணலாம்.



தாராசுரம்

**கோ. தில்லை கோவிந்தராஜன்,** தலைமையாசிரியர், தஞ்சாவூர்.

**சோழ மரபும் - சாளுக்கிய உறவும்**

சோழர் மரபானது கி. பி. 850இல் விஜயாலய சோழனால் தோற்றுவிக்கப்பட்டது. கி. பி. 1070இல் அதிராஜேந்திர சோழன் என்பவருடன் சோழர்குல ஆண் சந்ததி முடிவுற்றது.

**சோழகுல பெண் சந்ததியினர்**

முதலாம் இராசராசனின் மகள் குந்தவையை கீழை சாளுக்கிய இளவரசனான விமலாதித்தனுக்கு மணமுடித்து வைக்கப்பட்டது. இத்தம்பதி யினருக்கு பிறந்த ஆண் மகவுக்கு பெயர் இராசராச நரேந்திரன் என்பதாகும்.

சாளுக்கிய இளவரசனான ராசராசநரேந்தினுக்கு அம்மானாகிய முதலாம் இராசேந்திரன் மகளான அம்மங்கதேவியை மணமுடித்து வைத்தனர். இவ்விருவருக்கும் பிறந்த ஆண்குழந்தைக்கு தாய்வழி பாட்டனாகிய சோழ மாமன்னன் பெயரினை இட்டு இராசேந்திரன் என்று அழைத்தனர். பிற்காலத்து சோழ அரசர்குலத்தையும், சாளுக்கிய அரசகுலத்தையும் உயர்த்திப் பிடித்தவன் என்ற பொருளில் குலோத்துங்கன் என்ற பெயருடன் சோழ சாம்ராஜ்ஜியத்தின் அரசனானான். அவன் இரண்டாம் இராசேந்திரசோழரின் மகளான மதுராந்தகியை திருமணம் செய்து கொண்டான். இவர்களுக்கு பிறந்த ஆண் மக்களில் விக்கிரமசோழனும் ஒருவரே. குலோத்துங்கனுக்குப் பிறகு சோழ அரசு கட்டிலேறியவர் இவரே.


தூண் சிற்பம்

சோழ,சாளுக்கிய மரபினைச் சார்ந்த விக்கிரமசோழரின் கல்வெட்டுக்கள் தென்னகத்தில் பல இடங்களில் கிடைக்கப்பெற்றிருப்பினும், குடந்தை திருச்சேறை கோயிலில் கிடைக்கும் கல்வெட்டின் செய்திகள் இக்கட்டுரையில் விவாதிக்கப்படுகின்றது.

விக்கிரமசோழனின் 4, 5. 9 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தானங்களையும், இம்மன்னன் காலத்தில் இப்பகுதிக்கு குலோத்துங்க சோழ வளநாடு என்றும், அதனைச் சார்ந்த திருச்செந்துார் கூற்றமும், பிரமதே யங்களான ஸ்ரீவானமாதேவி சதுர்வேதி மங்கலம், மற்றும் ஸ்ரீராஜாதித்த சதுர்வேதி மங்கலம் இருந்தன என்பதை விளக்குகின்றன.

இக்கோயிலுக்கென நிலக்கொடைகள் கொடுத்த இரண்டு ஊர்ச் சபைகள் குறிக்கப்படுகின்றன. அவை விசலூர் பட்ட பெருமக்களாலும், மற்றொன்று வானவன்மாதேவி சதுர்வேதி மங்கலத்து நம்பிமார்கள் உள்ளடக்கிய சபையும் குறிக்கப்பெறுகின்றன.

விசலூர் என்ற ஊர் தற்பொழுது நாச்சியார்கோயிலிலிருந்து 4கிலோ மீட்டர் தூரத்தில் வலங்கைமான் செல்லும் பிரதான சாலையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### தானங்கள் வழங்கிய செய்திகள்

#### கங்கைகொண்ட விண்ணகராழ்வார்

விக்கிரமசோழனின் 4ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் சார பரமேஸ்வரர் கோயிலுக்கு ஏழரை கழஞ்சு பொன்னுக்கு மூன்றுமா நிலத்தினை வாங்கி விசலூர் மகாசபையினர் வழங்கினர். அவற்றின் நான்கு எல்லைகளாக குறிப்பிடப்படுபவை கங்கைகொண்ட சோழ விண்ணகராழ்வார் இறையிலி நிலம், வெள்ள வாய்க்கால், ஸ்ரீகிருஷ்ணன் திருவாய்குலமுடையார் நிலம், உலோச்சன் மன்னநத்தம் ராசராசன் வாய்க்கால் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட தாகும்.[1] இக்கங்கை கொண்ட சோழ விண்ணகராழ்வார் என்ற விஷ்ணு கோயில் முதலாம் இராசேந்திரனின் பெயரில் அமைக்கப்பட்டிருக்கலாம்.

#### வீதிவிடங்கன் கருவுணாயகன் பிள்ளையடியார் பெயரில் நிலம்

விக்கிரம சோழரின் 5ஆம் ஆண்டு கல்வெட்டில் விசலூர் பட்டப் பெருமக்கள் உள்ளிட்ட மகாசபையினர் திருச்செந்நெறி உடையாருக்கு இறையிலியாக செய்து குடுத்த நிலமும், அருமொழிதேவ வாய்க்கால், ஸ்ரீபத்தபிரியத்தாழ்வார் நிலம், ஆகியவற்றினை எல்லையாக கொண்டது. அந்நிலத்தினை வீதிவிடங்கன் கருவுணாயகனான பிள்ளைபடியான் பேரில் குடிவிலை பெற்று மனையும், நிலமும் சேர்த்து வழங்கியுள்ளனர்.

#### ஸ்ரீராஜசுந்தரி சதுர்வேதி மங்கலத்து பட்ட பெருமக்கள் தானம்

இம்மன்னரின் 5ஆம் ஆட்சியாண்டுக் குறிக்கும் கல்வெட்டில் ஸ்ரீராஜசுந்தரிச் சதுர்வேதி மங்கலத்துப் பட்டப் பெருமக்கள் உள்ளிட்ட மகா சபையார் தங்களுடைய அனைத்து நிலத்துக்கும் நிலவரி கட்ட இயலாத நிலையில் குறிப்பிட்ட நிலத்திற்கு மட்டும் வரிச் செலுத்தி மற்ற வரி செலுத்த இயலாத நிலங்களை செந்நெறி உடையார் கோயிலுக்கு விற்றுக் கொடுத்தனர். அந்நிலத்தின் அளவுகள் ஒன்றே ஒன்பது மா முந்திரிக்கைக் கீழரையே மாகாணிக்கு விலைகொண்ட குடிவிலையிட்ட காசு இருபத்து நாலே அறுமா வரையும் காண்பித்து கொடுத்தனர்.

**செந்நெறியுடையார் மற்றும் பள்ளியறை நாச்சியார் பெயரில் கொடை**

இம்மன்னரின் 5ஆம் ஆட்சியாண்டைக் குறிக்கும் மற்றொரு கல்வெட்டில் திருவிசலூர் பெருமக்கள் உள்ளிட்ட சபையினர் செந்நெறி உடையார்க்கும், திருப்பள்ளியறை நாச்சியாருக்கும் நிலக்கொடை வழங்க இக்கோயிலைச் சார்ந்த தேவகன்மிகளிடம் (கோயில் பணிபுரிபவரிடம்) காசினை பெற்று விலைக்கு மூன்று இடங்களில் நிலம் பெற்று வழங்கியுள்ளனர்.

பள்ளியறை நாச்சியாருக்காகப் பெறப்பட்ட நிலத்தின் நான்கு எல்லைகள் அருமொழிதேவ வாய்க்கால், உலோச்சன் அனந்த நாராயணன் கிளியநல்லூர் சலகபத்தியனான தேவன் நிலம், ராசராச வாய்க்கால் ஆகியவற்றிற்கு இடைப்பட்டதாகும். மேலும், திருசெந்நெறிமுடை யாருக்காகப் பெறப்பட்ட நிலம் இரண்டே ஒன்பதுமா அரையாகும். இதனை கோயில் சபையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

**கோயில் அறக்கட்டளையிலிருந்து பெறப்பட்ட காசும் கொடை நிலமும்**

கோயில் நிருவாகத்தினரிடமிருந்து இருநூற்று நாற்பத்தெட்டுக் காசு (248) பெற்று விலைக்கு வாங்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் புதுவூர்வதி, கவுணியர் பொன்மலை மாதவன் மற்றும் திருவரங்க நாராயணன் விளைநிலம், கணபதி நிலம், சிரியத்தாழ்வார் நிலம் ஆகியவற்றிற்கு இடைப்பட்டதாகும்.

இவ் அறக்கட்டளையிடமிருந்து கூடுதலாக நாற்பத்தேழரை (47½) காசினைப்பெற்று விலைக்கு வாங்கிய நிலத்தின் எல்லைகள், புதுவூர்வதி, ராசராசவாய்க்கால், விசலூர் சீபத்தப்பிரியத்தாழ்வார் இறையிலி நிலம், அருமொழிதேவ வாய்க்கால் ஆகியவற்றிற்கு உட்பட்ட பயன்படுத்தப் படாமல் இருந்த நிலத்தினை விலைக்கு பெற்று வழங்கியுள்ளனர் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

**நம்பிமார்கள் வழங்கிய கொடை**

விக்கிரமசோழனின் 9ஆம் ஆட்சிக் கல்வெட்டில் பிரமதேசம் வானவன்மாதேவி சதுர்வேதி மங்கலத்து நம்பிமாருளிட்ட மகாசபை பெருமக்களோம் நிலையாவணமாக இந்நாட்டு பிரமதேயம் ராஜாதித்தச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த உடையார் திருசெந்நெறி உடையமாதேவர் கோயில் மாகேஸ்வர கண்காணிப் பிள்ளையடியாருக்கும், தேவகன்மிகளுக்கும் மேற்குறிப்பிட்ட சபையினரால் விற்றுக்கொடுக்கப்பட்ட நிலமும் அதன் எல்லைகளும் குறிப்பிடப்படுகின்றன. அந்நிலமானது பட்டைபிடாரி நங்கை கோயிலுக்கு வடக்கே உள்ள ஊரொழுக்கைக்கும், தேவர் இறையிலி நிலம், நாயனார் இறையிலி நிலம், குலோத்துங்க சோழநல்லூர் நீர் பாயும் வாய்க்கால் ஆகியவற்றினை எல்லையாகக் கொண்டதாகும். இந்நிலத்தின் அளவு மூன்று மாக்காணியரைகாணி விளைநிலமும், கொல்லை நிலம் ஒருமா முக்காணியும், காசு பதின்மூன்றேகாலுக்கு ஆவணக்களரியே காண்பித்து செந்நெறியுடையார் திருநாமத்தில் இறையிலி செய்துகொடுத்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோயில் கல்வெட்டுக்களில் சில வாய்க்கால், வதி(வடிகால்), விஷ்ணுகோயில்கள், பிடாரிகோயில், விளாகம், புறம், மடப்புறம் குறிக்கப்படுகின்றன. அவைகள்,

**வாய்க்கால்**-அருமொழிதேவ வாய்க்கால், ராஜராஜ வாய்க்கால் இரண்டும் இராஜராஜன் பெயரிலும், ராஜேந்திரசோழ வாய்க்கால் முதலாம் இராஜேந்திரன் பெயரிலும் வழங்கப்பட்டுள்ளது.

**வதி: வடிகால்:** புதுவூர் வதி

**புறம்:** திருச்செந்நெறிபுறம்

**மடப்புறம்:** நாற்பத்தெண்ணாயிரவன் மடப்புறம்

**விளாகம்:** உலகுய்ய வந்த விளாகம்

**நந்தவனம்:** திருநந்தவனம்

**ஆழ்வார்:** சீபத்தப்பிரியத்தாழ்வார், சிரியத்தாழ்வார், கங்கை கொண்ட சோழ விண்ணகரத்தாழ்வார் (முதலாம் இராஜேந்திரன் பெயரில்)

**பிடாரி நங்கை:** பட்டை பிடாரி நங்கை என்னும் ஊர் தேவதை கோயிலும் காணப்படுகின்றது.

அரசர் பெயரில் ராஜாதித்த சதுர்வேதி மங்கலம் என்பது முதற் பராந்தகனின் முதல் மகனின் பெயராலும், குலோத்துங்கசோழ நல்லூர் என்பது முதற் குலோத்துங்கன் பெயரிலும் ஸ்ரீராஜசுந்தரி சதுர்வேதி மங்கலம் என்பது முதல் குலோத்துங்கன் மகள் பெயரிலும் உருவாக்கப்பட்டன.

மேற்சொன்ன தானங்கள் விக்கிரமசோழனின் காலத்தில் அவன் ஆட்சிக்குட்பட்டவர்களால் வழங்கப்பட்டுள்ளதை கல்வெட்டுக்கள் மூலம் காணமுடிகின்றது.

*****

## திருச்சத்தி முற்றம்

கும்பகோணத்திற்கு தென்மேற்கே 6 கி.மீ. தொலைவிலும், பட்டீசுவரத்தின் வடக்கிலும் இத்தலம் அமைந்துள்ளது. பராசக்தி ஸ்வாமியைத் தழுவி (சிவக்கொழுந்தீசுவரர்) முத்தம் கொடுத்த ஸ்தலம். அந்த உருவமும் கோயிலில் இருக்கிறது. பூவாரடிச்சுவடென்மேற் பொறித்துவை என்று அப்பர் ஸ்வாமிகள் வேண்டி தந்த ஸ்தலம் ஆகும்.

## அபிமுக்தன் திருமடம்

சோழ அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்த இடமாக இருந்த நகரம் பழையாறை என்னும் பகுதியாகும். இக்காலத்தில் இருக்கும் கீழப் பழையாறை, நாதன்கோயில், பட்டீச்சரம், திருச்சக்தி முற்றம், ஆரியப்படையூர், மணப்படையூர், பம்பப் படையூர் முதலான பல ஊர்கள் சேர்ந்து அமைந்திருந்த பழம்பெரும் நகரமே பழையாறையாகும். பழையாறையை அடுத்துள்ள ஊர்களில் ஒன்று உடையாளூர் ஆகும். இது முற்காலத்தில் சிவபாத சேகர மங்கலம் என்றழைக்கப்பட்டது. இவ்வூரில் அபிமுக்தன் திருமடம் என்றொரு மடம் இருந்தமையைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

உடையாளூரில் உள்ள கைலாசநாதர் கோயிலில் இருக்கும் 20 கல்வெட்டுக்களில் இரண்டனுள் இத்திருமடம் குறிக்கப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் 25ஆவது ஆட்சியாண்டில் இம்மடம் தோற்றுவிக்கப்பட்டது பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இக்கல்வெட்டில் இந்த மடம் அபிமுக்தமான திருமடம் என்று குறிப்பிடப்படுகிறது. இந்த மடத்தில் விச்வேச்ரவரதேவர் எழுந்தருளிவிக்கப் பட்டார். இதனைச் செய்தவன் திருநறையூர் நாட்டில் இருந்த மாகேச்வரஸ்தானமான சிவபாத சேகர மங்கலத்தைச் சேர்ந்த தபசியருள் ஒருவனாவான். திருச்சிற்றம்பல முடையானான வித்யா சிவபண்டிதர் என்பது அவன் பெயராகும். இந்த மடம் சிவபாதசேகர முடையார் (ஸ்ரீகைலாசநாதர்) கோயிலுக்குத் தெற்கிலும், பாற்குளம் என்ற குளத்துக்கு மேல் கரையில் வடக்குக் கோடி வரையிலும் அமைந்திருந்த மடமாகும்.

– மலர்க்குடி



சிரமஞ் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரம னைப்பல நாளும் பயிற்றுமின்
பிரமன் மாலொடு மற்றொழிந் தார்க்கெலாம்
குரவ னாருறை யுங்குட மூக்கிலே

–பாடல் எண்.1293

பொருள்:

பிரமன் திருமால் முதலிய தேவர்க்கெல்லாம், பரமஞானாசாரியனாக விளங்கும் பரமன் உறையும் குடமூக்கில் பலநாளும் பயின்று சிவனுக்குப் பக்தர்களாக முயற்சி செய்து வாழ்வீர்களாக.

தேவாரம்–திருநாவுக்கரசர்

# மகாமகத்தில் தமிழ்த் தாத்தா

**இரா. சுப்பராயலு,**

ஒரு நாட்டின் வளங்களில் முதன்மையானது நீர் வளமாகும். நீரின்றி அமையாது உலகு என்று வள்ளுவரும் கூறிப் போந்தார். ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்று முந்நீர் பேசப்பட்டாலும், ஆற்றுநீர்தான் நமக்குப் பெருங்கொடையாக அமைந்து உள்ளது. இதனால்தான் நாம் நதிகளை தேவதைகளாக வழிபடுகிறோம்.

வடநாட்டில் ஆண்டுதோறும் நதிகளின் சங்கமங்களில் கும்பமேளா விழா கொண்டாடப்படுகிறது. அது ஆன்மீகப் பெருவிழாவாக அமைந்துள்ளது. நாட்டிலுள்ள முனிவர்களும், யோகிகளும் வருகை தந்து வழிபாடாற்றி பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்.

ஆனால் திருக்குடந்தை நகரில் கொண்டாடப்படும் மகாமகப் பெருவிழா குறிஞ்சி மலரைப் போன்று பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் விழாவாகும். பன்னெடுங்காலமாக இந்த விழா கொண்டாடப்பட்டு வருவதைத் திருமுறைகள் நமக்கு அறிவிக்கின்றன. நாடு முழுவதிலிருந்தும் ஆன்மீகப் பெரியவர்கள் மகாமகப் பெருவிழாவிற்கு எழுந்தருளி விழாவைப் பெருமைப்படுத்துகின்றனர்.

காவிரி நதிக்கரையில் திருக்குடந்தை நகரம் அமைந்திருந்தாலும் இந்த விழா ஒரு



உ. வே. சாமிநாதையர்

**இரா. சுப்பராயலு,** தஞ்சாவூர்.

நதிக்கு மட்டும் உரியதன்று. இந்தியாவின் புனித நதிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து சங்கமிக்கும் இடமாக மகாமகத் திருக்குளம் அமைந்துள்ளது. மகாமகத்தன்று இத்திருக்குளத்தில் நீராடி அனைத்துப் புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிய பயனைப் பெறலாம்.

தமிழ்நாட்டில் சமயக் கோயில்கள் மிகுதி. எனவே சமயத் திருமடங்களும் சிறப்புடன் விளங்கிவருகின்றன. இத்திருமடங்களின் அதிபர்கள் மகாமகப் பெருவிழாவிற்கு எழுந்தருளி ஆராதிப்பதோடு, சமய அறிஞர்களையும், ஆன்மீகப் பெருமக்களையும் பாராட்டிப் பெருமைப் படுத்துவதும் வழக்கமாக இருந்து வந்துள்ளது.

கும்பகோணத்தில் வாழ்ந்து கும்பகோணம் நகருக்கும், அரசு கலைக் கல்லூரிக்கும் பெருமை சேர்த்த தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையர் அவர்கள் காலத்தில் ஒரு மகாமகப் பெருவிழா 1897ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்றது.

அப்போது திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் அம்பலவாண தேசிகர் தம் பரிவாரங்களுடன் கும்பகோணம் வந்தார். பேட்டைத் தெருவிலுள்ள மடத்தில் தங்கினார். பல நாடுகளிலிருந்தும் பிரபுக்களும், வித்துவான்களும் வந்து கூடினர். மகாமகத்தை ஒட்டி நாள்தோறும் வித்துவான்களின் உபந்நியாசங்கள் நடைபெற்றன. ஒருநாள் மிகவும் சிறந்த வித்துவான்களைப் பூசித்து உத்தம சம்பாவனை செய்வதாக ஏற்பாடாகியிருந்தது.



கல்வி பெறுவது என்றால் அறிவைத் திரட்டி மூளையில் திணிப்பது அன்று கல்வியின் உண்மையான குறிக்கோள் மனத்தை ஒருநிலைப் படுத்துவதுதான். நான் மீண்டும் கல்வி பயிலுவதா யிருந்தால் விடயங்களைப் பற்றியே படிக்க மாட்டேன்.

மனம் ஒருநிலையில் இருக்கத்தான் செய்வேன், மனத்தை நான் விரும்பிய இடத்தில் செலுத்தும் திறனைப் பெற்றுப் பெருக்கிக் கொள்ளுவேன். அதன் பின்னர் மன ஒருமை எனும் கருவிகொண்டு விரும்பிய அறிவையெல்லாம் விரைவில் திரட்டிக் கொள்ளுவேன்

சுவாமி விவேகானந்தர்.

வடமொழி வல்லுநர்களும், வேத விற்பன்னர்களும் இத்தகைய விழாக்களில் பெருமைப்படுத்தப்படுத்துவது வழக்கமாக இருந்தது. திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஆறு வித்துவான்களுக்கு சிறப்புச் செய்ய எண்ணி ஆறு ஆசனங்களைப் போடச்செய்தார். அவற்றில் புகழ்பெற்ற ஐந்து சம்ஸ்க்ருத வித்துவான்களை அமரச்செய்தார். ஆறாவது ஆசனத்தில் உ.வே.சாமிநாதையரை அமரும்படி கூறினார்.

உ. வே. சா. அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தோடு நீண்டகாலத் தொடர்பு உடையவராய் இருந்தும், இத்தகைய பெருஞ்சிறப்பை எதிர்பார்க்கவில்லை, ஆகவே தயங்கினார். வாழ்நாள் முழுதும் சாஸ்திரப் பயிற்சி பெற்று சாஸ்திரத்திற்கே பெருமை சேர்த்த அவர்கள் எங்கே? சாமானியராகிய தாம் எங்கே என்று எண்ணினார்.

ஆனால் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் அவரை நோக்கி, "என்ன யோசிக்கிறீர்கள் ? அப்படியே அமர வேண்டும்" என்றார்.

உ. வே. சா. "இவர்களுக்குச் சமானமாக இருக்க எனக்குத் தகுதி இல்லையே" என்றார். ஆதீனகர்த்தர் சிரித்துக்கொண்டே, "தகுதி உண்டு என்பதை உலகம் அறியும். இவர்களைப் போன்ற மகாவித்துவான்கள் இந்த நாட்டில் தேடிப் பார்த்தால் ஒருவேளை கிடைத்தாலும் கிடைப்பார்கள். தங்களைப்போல் ஒருவர் கிடைப்பது அரிது" என்று அன்பொழுகக் கூறினார்.

ஆதீனகர்த்தரின் வற்புறுத்தலுக்கு இணங்கி அந்த வடமொழி வித்துவ மேதாவிகளுடன் இவரும் அமர்ந்தார். இரட்டைச் சால்வையும் சன்மானமும் பெற்றார். தமிழ் அறிஞர் பெருமைப்படுத்தப்பட்டதால் தமிழ் மொழியும் பெருமைப்படுத்தப்பட்டது.

தேடி வந்த மரியாதையை ஏற்பதற்குத் தயங்கிய மாமனிதர் உ.வே.சா. பணிவுக்கும், அடக்கமுடைமைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர். பணியுமாம் என்றும் பெருமை என்ற வள்ளுவர் வாக்கிற்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தவர்.

தமிழ்த் தாத்தா உ.வே.சா. இல்லையென்றால் சங்க இலக்கியங்களில் பெரும்பாலானவை நமக்குக் கிடைத்திருக்கமாட்டா, வாழ்நாள் முழுவதையும் தமிழ் இலக்கியப் பதிப்பிற்காகவே செலவிட்ட உ.வே.சா. அவர்களை இந்த மகாமகத் திருவிழாவில் நினைவு கூர்வது தமிழுக்குப் பெருமை சேர்ப்பதாகும். அவர் நினைவைப் போற்றுவோம்.

*****



மகாமகக் குளக்கரை மண்டபம்

### பஞ்சபூத தலங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மண் | – | பிருத்வி | – | திருவாரூர், காஞ்சிபுரம் |
| நீர் | – | அப்பு | – | திருவானைக்காகோயில் |
| நெருப்பு | – | தேயு | – | திருவண்ணாமலை |
| காற்று | – | வாயு | – | திருக்காளத்தி |
| வெட்டவெளி | – | ஆகாயம் | – | சிதம்பரம் |

# குடந்தை சார்ங்கபாணி திருக்கோயிலும் ஆழ்வார்களும்

**அ. தட்சிணாமூர்த்தி,**

இந்தியப் பண்பாட்டின் மணிமுடியாக விளங்குவது பக்திநெறி என்றும் அது கி. பி. 6ஆம் நூற்றாண்டிற்கும் எட்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தில் சான்றோர்களால் உருவாக்கப்பட்டு, மெல்ல மெல்லச் செல்வாக்குப்பெற்றுப் பரதகண்டம் முழுவதையும் தன் செல்வாக்கிற்கு உட்படுத்திற்று என்றும் அறிஞர் கருதுவர். பௌடிகபுராணம் என்னும் வடமொழி நூல் “பக்திநெறி தமிழ்நாட்டில் தோன்றியது; மராட்டியத்தில் வளர்ந்தது; குஜராத்தில் மலர்ந்தது; இராசபுதனத்தில் இருளகற்றியது; வங்காளத்தில் வான்புகழ் பெற்றது,” என்று குறிப்பிட்டுள்ள தாகக் கூறுகின்றார்.

இந்த நெறியை உருவாக்கி வளர்த்த பெருமக்களைத்தான் நாயன்மார்கள் என்றும் ஆழ்வார்கள் என்றும் தமிழர் போற்றுவர். இப் பெருமக்கள் மேலே குறித்த காலப்பகுதியில் வாழ்ந்தோராவார். சிவனை முழுமுதலாக ஏற்றோர் சைவர் என்றும்., திருமாலை அங்ஙனம் ஏற்றோர் வைணவர் என்றும் பெயர் பெற்றனர். பழைய வேதநெறியில், சமூகத்தின் மேனிலை மாந்தர் மட்டுமே செல்வாக்குப் பெற்றிருந்தனர். . வேள்விகளிலும், அது சார்ந்த சடங்குகளிலும் பிராமணர் மட்டுமே பங்குபெற்றனர். அன்று நாட்டிலிருந்த கடிகைகளில் பிராமணர் மட்டுமே கல்விபெறும் உரிமை பெற்றனர். இந்நிலையை மாற்றியமைக்கத் தேவை இருந்ததாகத் தெரிகின்றது. இதற்குப் பிராமணர் சமயம் இந்து சமயமாக



சார்ங்கபாணி

**முனைவர் அ. தட்சிணாமூர்த்தி,** முதல்வர் (ஓய்வு), செந்தமிழ்க்கல்லூரி, தஞ்சாவூர்.

மாற்றப்படவேண்டுமென நினைத்தனர். சமூகத்திலிருந்த அனைத்துச் சாதியினரையும் சமயத்திற்குள் கொண்டு வருதற்கு யாவர்க்கும் பொதுவான நெறியாகப் பக்திநெறி உருவாக்கப்பட்டது. சிவனையும், திருமாலையும் ஏற்று, அவர்களிடம் அன்பு பாராட்டுபவர் யாவரும் ஒரே குடும்பத்தினர் என்கின்ற உணர்வைச் சான்றோர் பரப்பலாயினர். இந்த ஒருமைப்பாட்டுணர்ச்சியை ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோற்றுவித்து வளர்த்தனர்.

இவ்வியக்கத்தின் இயல்பினைப் பற்றிப் பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளை தன்னுடைய நூலான History of Tamil Language and Literature என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். போராசிரியர் கூறும் சமூக ஒருமைப்பாட்டு உணர்ச்சியை நாயன்மார்களும் ஆழ்வார்களும் பின்வருமாறு உணர்த்துகின்றனர்.

குலம்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை
நலம்தான் இலாத சண்டாள சண்டாளர்களாகிலும்
வலம்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணந் தாள்என்றுள்
கலந்தார் அடியார்தம் அடியார்எம் அடிகளே!

என்பது வேதம் தமிழ்செய்த வித்தகர் நம்மாழ்வார் திருவாக்காகும். புறச் சமயத்தார்களின் தலையை அறுப்பதே கருமம் என்ற தீவிர வைணவர் தொண்டரடிப்பொடியார்,

பழுதிலா ஒழுகலாற்றுப் பலசதுப்பேதி மார்கள்
இழிகுலத்தவர்களேனும் எம்மடியார்களாகில்
தொழுமின்நீர் கொடுமின் கொள்மின் என்று நின்னோடும் ஒக்க
வழிபட அருளினாய்போல் மதில் திருவரங்கத்தானே

என்று அருளினார்.

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லராகில்
அங்கமெலாம் குறைந்து அழுகு தொழுநோயரால்
ஆவுரிந்துந் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவாழ் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே

என முழக்கமிட்டார் அப்பரடிகள். ஆழ்வார்களால் சிறப்பிக்கப்பட்ட வைணவத் திருத்தலங்கள் 108. இவற்றுள் 40 சோழநாட்டிலும், 18 பாண்டிய நாட்டிலும், 13 மலைநாட்டிலும், 2 நடுநாட்டிலும், 22 தொண்டை நாட்டிலும், வடநாட்டிலும் உள்ளன. சோழநாட்டில் மிகுதியான தலங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாம்.

சோழநாட்டிலுள்ள நாற்பது தலங்களுள் பெருமாள் பாம்பணையில் பள்ளிகொண்டு அருள்பாலிக்கும் தலங்கள் 13 ஆகும். அவற்றுள் ஒன்றாக விளங்குவது திருக்குடந்தையாகும்.

திருக்குடந்தையில் பள்ளிகொண்டவர் சார்ங்கம் என்னும் வில்லைத் தாங்கிய நிலையில் காணப்படுவதால் சார்ங்கபாணி (சார்ங்கம் என்னும் வில்லைத் தன் கையில் தாங்கியவர்) எனப் பாராட்டப்படுகின்றார். 'ஆழிமழைக் கண்ணா' என்ற பாவைப்பாட்டில் ஆண்டாள் "தாழாதே" சார்ங்கம் உதைத்த சரமழைபோல்" மழைபொழிய வேண்டுவார். மக்கள் வழக்கில் சாரங்கபாணி என்ற பெயரே நிலைத்துள்ளது. வடமொழியில் சாரங்கம் என்பது மானாகும். எனவே இது பிழை வழக்கு எனப் பெரியோர் கூறுவர். இதனை அறிஞர் குடவாயில் பாலசுப்ரமணியன் நினைவூட்டியுள்ளார். இப்பெருமானை காவிரியும் சோணாட்டில் அமைந்த குடந்தையிற் கண்டு பாடிய அருளாளர்கள் எழுவர். அவர்கள் 1) பூதத் தாழ்வார், 2) பேயாழ்வார், 3) பெரியாழ்வார், 4) ஆண்டாள், 5) திருமழிசை யாழ்வார், 6) நம்மாழ்வார், 7) திருமங்கை மன்னர் என்போராவர். இவ்வெழுவரும் பாடியருளிய திருப்பாசுரங்கள் 51, இவற்றுள் ஒன்று பலசுருதியாகும். இவ்வெழுவருள்ளும் மிகுந்த எண்ணிக்கை கொண்ட பாசுரங்களால் பெருமானைப் பாடிய பெருமை திருமங்கையாழ்வார்க் குரியதாக அமையக் காணலாம். நம்மாழ்வார் இரண்டாம் இடம் வகிக்கின்றார்.

**கோயில்களின் இயற்கைச்சூழல்**: சங்கப்புலவர்கள் போல் ஆழ்வார்களும் இயற்கையில் பெரிய ஈடுபாடு கொண்டுள்ளனர். இங்குச் சில எடுத்துக் காட்டுகளைக் கொண்டு அவர்தம் இயற்கையீடுபாட்டை அறிவோம். அவர்கள் கோயில்களைச் சிறப்பித்துப் பாடும்போது, கோயில்கள் அமைந்துள்ள ஊரின் இயற்கையழகை மட்டுமின்றி மக்களின் இயல்பும், செல்வப் பெருக்கம் முதலானவற்றைச் சேர்த்துப் பேசுகின்றனர். வேதம் தமிழ் செய்த வித்தகராம் நம்மாழ்வார்.

"சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை (3195)" எனக் குடந்தையின் நீர்வளத்தையும் நெல்வளத்தையும் பாராட்டுகின்றார். அங்ஙனமே, "செம்மா கமலம் செழுநீர் மிசைக்கண் மலரும் திருக்குடந்தை (3196) " என்றும் பாடுவார் "கன்னார் மதிள்சூழ் குடந்தை (3196) என்ற தொடரில், மதிள் சுவர் கோயிலைச் சூழ்ந்திருந்தது என்று கொள்ளவும், நகரைச் சூழ்ந்திருந்தது என்று கொள்ளவும் இடந்தருகின்றது. நீர்நிலைகள் எனனும் நலத்தால் மிக்கார் வாழுநீர் என்றும், திசைகளில் வில்லைத் தோற்றுவிக்கும் செழுமாணிக்கம் நிறைந்த ஊர் என்றும் அவர் புகழ்கின்றார்.

திருமழிசையாழ்வார் "கொங்கு தங்கு வார்குழல் மடந்தையர்கள் குடைந்தாடுவதால் நீர் பொங்கும் இயல்புடையது குடந்தையென்கிறார். மேலும், செழும் கொழும் பெரும் பனி பொழிந்திடப்பெறும் உயர்ந்த மூங்கில்கள் கீழே சாய்ந்து, உலர்ந்து பின்னர் எழுந்து இருந்து விண்ணைப் புடைக்கும் வேங்கடத்தில் நின்ற திருமால்

எழுந்திருந்து, தேன்பொருந்தும் பூம்பொழில்கள் தழைக்கும் கொழும் செழும் குடந்தையில் கிடப்பதாகப் பேசுகின்றார்.

**திருமழிசைப் பிரானின் கவிதை நயம்:** அங்ஙனம் வடக்கிலிருந்து தெற்கே வந்து படுத்தமைக்குரிய காரணத்தை வினவும் வகையில்

நடந்த கால்கள் நொந்தவோ, நடுங்க ஞானம் ஏனமாய்
இடந்த மெய்குலுங்கவோ, விலங்குமால் வரைச் சுரம்
கடந்தகால் பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து பேசுவாழி கேசனே !

என நயமுறப்பாடுகின்றார்.

இப்பாட்டில், பெருமாள் பஞ்சவர்க்குத் தூதனாய் நடந்ததையோ, ஈரடிகளால் மூவுலகையும் நடந்து அளந்ததையே முதலில் குறிக்கின்றார். அப்படி நடந்தமையால் அவர் கால்கள் நொந்தமையாலா, உலகமெல்லாம் அஞ்சி நடுங்கும் வண்ணம் வராக வடிவில் நீருக்குள்ளிருந்து மீண்டும் மண்ணுலகைப் பெயர்த்ததால் உடல் நொந்ததாலா, அன்றி மலைகள் குறுக்கிட்டுக் கிடந்த காட்டைக் கடந்து தந்தையின் கட்டளையை நிறைவேற்றிய அலுப்பினாலா, எதனால் நீ குடந்தையில் வந்து படுத்தாய், எழுந்து வந்து கூறுவாயாக, கேசவனே என்று வினவும் அழகோ அழகு!

**தந்தையும் மகளும்:** பெரியாழ்வாரும் அவர் மகள் ஆண்டாளும் திருக் குடந்தைமேவிய நீலவண்ண நெடுமாலை முறையே மூன்று திருப்பாடல்க ளாலும், ஒரு பாடலாலும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். *(173, 177, 188 மற்றும்628)*

பெரியாழ்வார் தம்மைத் தாயாகவும், பெருமாளைத் துள்ளி விளையாடும் சேயாகவும் பாவித்துப் பாடிய திருப்பாசுரங்கள் தெவிட்டாத தெள்ளமுதமாகும். ஆழ்வார் தம் திருமொழியில், காக்கையை விளித்துத் தன் மகனுக்குக் கோல்கொண்டு வருமாறு கட்டளையிடும் அழகே அழகு!



கொங்கும் குடந்தையும் கோட்டியூரும் பேரும்
எங்கும் திரிந்து விளையாடும் என்மகன்
சங்கம் பிடிக்கும் தடக்கைக்குத் தக்க நல்
அங்கமுடையதோர் கோல்கொண்டு வா
அரக்கு வழிந்ததோர் கோல்கொண்டு வா ! (173)

ஆலத்து இலையான் அரவின்அணை மேலான்
நீலக்கடலுள் நெடுங்காலம் கண்வளர்ந்தான்
பாலப்பிராயத்தே பார்த்தற்கு அருள்செய்த

கோலப் பிரானுக்கோர் கோல்கொண்டு வா !
குடந்தைக் கிடந்தாற்கோர் கோல்கொண்டுவா! (177)

அடுத்துத்தன் செல்வனுக்குப் பூச்சூட்டுதற் பொருட்டு அழைக்கும் அழகை நுகருங்கள்!

குடங்க ளெடுத்தேறவிட்டுக் கூத்தாட வல்ல எம்கோவே
மடங்கொள் மதிமுகத்தாரை மால்செய்யவல்ல என் மைந்தா
இடந்திட்டு இரணியன் நெஞ்சை இருபிளவாக முன் கீண்டாய்!
குடந்தைக் கிடந்த எம் கோவே! குருக்கத்திப் பூச்சூட்ட வாராய் ! (188)

மணிவண்ணனால் மாலுற்ற மங்கையாய்த் தன்னைப் பாவித்த நாச்சியார், பிரிவாற்றாமையாய்த் தான் பேதுறுதல் கண்டு இழித்த தன் சேடியரை நோக்கிப் பேசும் நிலையில் பாடிய தீந்தமிழ் திருப்பாட்டின் பொருள் ஈதோ.

தோழிமீர்! நான் பாலாலிலையில் துயின்ற பரமன் வலையில் மாட்டியுள்ளேன், வேடன் விரித்த வலையிற் பட்டு உழலும் மான்போல் எனக்காக இரங்காத வன்னெஞ்சினராய் நீவிர் என்னைச் சூழ நின்று வேல் எய்த தாக்கு வார் போல் கொடுஞ்சொற் பேசி என்னை வருத்துதலைத் தவிர்ப்பீர்! மாறாக, கோலால் நிரைமேய்த்த ஆயனாய்க் குடந்தையிற்கிடக்கும் குடமாடியின் கழுத்தில் அசைந்தாடும் தன்மையுடையதும் நீலவண்ணத்ததும் ஆன துழாய் மாலையைக் கொண்டு என் நெறிமென் குழல்மேல் சூட்டுவீர்.

**பரகாலரின் பக்தித்திறம்:** குடந்தைக் கிடந்த குடமாடிமேல் தீராத காதலுடன் 205 பாடல்களைப் பாடிய பரகாலனான திருமங்கை மன்னர். அவரை, காற்றாய், புனலாய், கடிமதில் இலங்கையைப் பொடியாக்கிய ஏறாய், எழில் மாணிக்கக் குவியலாய், இன்ப வெள்ளமாய்ப் பாயும் ஆறாய், அமுதமாய், அவுணர் கூட்டத்திற்குக் காற்றாய்க் கண்டவர். அவரைத் தம் வாக்காலும், மனத்தாலும், செயலாலும், வேட்கை மீதூரும் வண்ணம், அள்ளி விழுங்கியதாகக் கூறி மகிழ்கிறார். கற்பவர் விழுங்கும் கற்பகக் கனியென்று சிவபரம்பொருளை அடியவர் ஒருவர் புகழ்ந்ததை இவர் செயலோடு ஒப்பிட்டுக் காணலாம், மேலும் மும்மூர்த்திகளுள் முதல்வராக, உலகைக் கொண்ட, கோவாக, குடந்தை மேவிய குருமணித் திரளாக, இன்பப்பாவாக, பச்சைத் தேனாக, பசும்பொன்னாக, தேவர்களின் திருமுடியை அணிசெய்யும் பூவாகக் காண்கிறார்.

உலகியல் இன்பத்தில் ஆழ்ந்து கிடந்து வாழ்வை வீணாக்கிய தம் அறியாமையை எண்ணி நைந்து உருகும் ஆழ்வாரின் கழிவிரக்கத்தைக் காண்மின்!

காவியை வென்ற கண்ணார்
கலவியை கருதி நாளும்

பாவியே னாக எண்ணி அதனுள்ளே
பழுத் தொழிந்தேன்
தூவிசேர் அன்னம் மன்னும்
சூழ்புனல் குடந்தையானைப்
பாவியேன் பாவியாது பாவியேன்
ஆயினேனே !

பல்லவர் காலத்தில் செங்கற்களால் எழுப்பப்பட்டது இக்கோயில் என்று நம்பலாம். இதனைக் கற்றளியாக மாற்றும் திருப்பணி செய்து கி. பி. 12ஆம் நூற்றாண்டில் முதலாம் குலோத்துங்க சோழன் நிறைவேற்றினான் என்றும் பின்னால் தமிழகம் விசயநகரத்தாரால் ஆளப்பட்டபோது பெரிய கல்வியாளனாகவும், புகழ்மிக்க ஆட்சியாளனாகவும் பெயர்பெற்ற சாளுவ கோபதிப்பன் பற்பல திருப்பணிகளைச் செய்வித்து திருக்கோயிலை மேலும் அழகுறுத்தினான் என்றும் வரலாற்றறிஞர் குடவாயில் பாலசுப்ரமணியன் தம் கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

*****



பெரியாழ்வார்

# சிவ ரகசியத்தில் குடந்தை

பெரும்புலவர் **ப. வெ. நாகராஜன்,**

தஞ்சையை ஆண்ட மராட்டியர் மரபில் சகசி மன்னனின் ஆட்சிக் காலத்தில் *(1684-1714)* சொக்கப்புலவர் என்னும் புலவர் ஒருவரால் சிவரகசியம் என்ற பெயரில் ஒரு நூல் இயற்றப்பட்டது. இது வடமொழியில் அகத்தியரால் இயற்றப்பட்டதும் வேதசாரமாகக் கருதத்தக்கதுமாகிய சிவரகசியம் என்னும் நூலின் மொழிபெயர்ப்பு என்று நூற்பாயிரம் குறிப்பிடுகிறது. இந்த நூல் கும்பகோணத்தில் எழுதப்பட்டது. எனவே இதில் குடந்தையின் சிறப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சிவரகசியக் காப்பியத்தில் கும்பகோணத்தின் பெருமை எவ்வாறு பேசப்பட்டுள்ளது எனக் காண்போம்.



உமாதேவியார் சிவபெருமானை நோக்கி, "உயிர்கள் தம் இருவினைப் பயன்களையும் நீக்கிவிட்டு வீட்டின்பம் பெறுவதற்கு அருள்புரியும் தலம் எது" எனக்கேட்க, இறைவன் "அத்தலம் திருக்குடந்தை" எனப் பதிலளித்து, அதன் சிறப்புக்களை விரித்துரைப்பதாகத் தோற்றுவாய் செய்து கொள்ளப் பட்டுள்ளது. தொடக்கத்தில் பிற்காலத் தலபுராண மரபின்படி கும்பகோணத்தின் இயற்கை செயற்கை வளங்கள் நன்கு புனைந்துரைக்கப் படுகின்றன.

ஐம்புலன்களுள் விழி எப்படி மேன்மையானதோ அப்படி சிவத்தலங் களுள் கும்பகோணம் சிறப்பானது என்பதை ஆசிரியர், "கண்ணின் நேர்வரும் பொறி இல எனும் மொழி கடுப்ப மண்ணுள்ளே திருக்குடந்தை என்று ஒரு பெயர் மருவும் அப்பதிக்கு உயர் சிறப்பு எவர் உரைக்குநர்?" எனக் கூறுகிறார். காவிரி, அரிசிலாறு ஆகிய இரண்டு ஆறுகள் அவ்வூரைச் சூழ்ந்துள்ளன என்றும், அவ்வூரார் கலைகளில் வல்லவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. தொடர்ந்து அவ்வூர் மகளிரின் அழகு வர்ணிக்கப் படுகிறது. கங்கை முதலாய புனித நதிகள் எல்லாம் இப்பதியில் நீங்காமல் உறைகின்றன என்பதை, "அப்புனித கங்கை முதல் தீர்த்தமை யாவும் ஒப்புஇல் குடமூக்கிடை வசிப்பர் ஒழியாரே" எனச் சிவரகசியம் செப்புகிறது.

பெரும்புலவர் **ப. வெ. நாகராஜன்,** கோவை-49

சிவபெருமான் தேவியின் திருவுள்ளத்திலும், அடியார்களின் மனத்திலும், வேதத்தின் முடிவிலும் நிலையாக எழுந்தருளி இருப்பதைப் போல எப்போதும் அவர் இத்தலத்திலும் நிறைந்திருப்பார் எனக்கூறிய பிறகு இத்தலத்தே வழிபட்டுப் பயன்பெற்றவர்களைப் பற்றிய செய்தி எடுத்து இயம்பப்படுகிறது.

பெருவீரனாகிய மாந்தாதா கும்பகோணத்தில் வழிபட்டுப் பேரரசனாக விளங்கினான். மாளவதேசத்து மன்னனாகிய சத்திய கீர்த்தியும், தன் கணவனையே கொன்ற பெரும் பாவி ஆகிய பார்ப்பனப் பெண் ஒருத்தியும், திருக்குடந்தையின் காசிபதீர்த்தத்தில் நீராடித் தங்கள் தீவினையைத் தீர்த்துக்கொண்டார்கள். சந்திரன் சோமலிங்கத்தை இங்கு வழிபட்டுத் தன் க்ஷயரோகத்தினின்றும் நீங்கித் தேவர்களுக்கு அமுதத்தைத் தரும் வல்லமை பெற்றான். குபேரனும் இங்கு ஓர் குளத்தை ஏற்படுத்திச் சோமநாதர் அருளினாலே சிவபெருமானுக்குத் தோழனாகவும் வடதிசைக் காவலனாகவும் ஆனான். அங்கீரச முனிவரின் மைந்தன் ஆகிய வியாழன் சோமேசரை வழிபட்டுத் தேவகுரு ஆனார்.

திருமால் குடந்தையில் ஓர் இலிங்கத்தைத் தாபித்து வழிபட்டார். அது மாலீசன் என வழங்கப்படுகிறது. பகவன் என்பவன் தன் தந்தையின் எலும்புகளைக் கங்கைக்கு எடுத்துச் செல்லும்போது வழியில் கும்பகோணத்தைக் கடக்கும்போது அவ்வெலும்புகள் தாமரை மலர்களாக இருந்தன. அந்த அந்தணன் அவற்றை அங்கேயே கரைத்துவிட்டான். அவன் தந்தை உயர்கதி அடைந்தான். பாம்புகளின் தலைவனான ஆதிசேடன் இங்கே வந்து வணங்கி உலகத்தைச் சுமக்கும் வல்லமை பெற்றான். சிவபிரானுக்கு உரிய பங்கினைத் தராத தங்களின் யாகத்தில் கலந்துகொண்டதால் விளைந்த பாவத்தை நாகலோக வாசிகள் குடந்தையில் வழிபட்டுத் தீர்த்துக் கொண்டனர்.

தெய்வத் தச்சன் மயனால் தாக்கப்பட்ட சூரியன் இத்தலத்தில் வழிபட்டு ஒன்பான் கோளுக்குத் தலைவர் ஆனார். இறைவன் அமுதக்குடம் ஒன்றைப் பிரமனிடம் வழங்கினான். படைத்தலுக்கு உதவியாக இருந்த அதைப் பிரமன் மேருமலையில் வைத்திருந்தான். பேரூழியில் அக்குடம் மிதந்து வெளியே வந்து குடந்தையில் தங்கிவிட்டது. சிவபெருமான் எய்த அம்பால் அமுதம் வெளியே பெருகி கும்பேசுவரர் என்னும் லிங்கம் ஆக உருவெடுத்தது.

அந்தக் குடத்தில் இருந்த அமுதம் பெருகி பொற்றாமரைக் குளமாக ஆயிற்று. இதுதான் மகாமகக்குளம். தேவகுருவாகிய வியாழன் இவ்வூரில் இயற்றிய சோமயாகத்திற்காகக் குபேரன் பொன்மாரி பெய்தான்.

இந்தச் செய்திகளை அடுத்துத் தலபுராண மரபுப்படி இத்தலத்தில் வழிபடுவோர் எல்லாப் பெருஞ்செல்வங்களையும் பெற்று நீடுழி வாழ்ந்த பிறகு வீடுபேறு பெறுவர் என்கிறது.

இத்தலபுராண வரலாறுகளை எல்லாம் சிவரகசியம் ஒவ்வொரு விருத்தத்தில் சுருக்கமாகக் கோடுபோட்டுக் காட்டியுள்ளது. இவை ஒவ்வொன்றையும் மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்கள் தம் திருக்கரந்தைப் புராணத்தில் ஒவ்வொன்றிற்கும் ஒரு சுருக்கமாக மிக விரித்துப் பாடியுள்ளார். (மொத்தம் 2,388 செய்யுள்) அதனால் சிவரகசியத்தின் இந்தப் பகுதியைக் கும்பகோணப் புராணச் சருக்கம் எனலாம்.

கும்பகோணத் தலபுராண வரலாறுகளைத் தவிர இந்த நூலில் சிவபூசைச் சிறப்பு, சிவபுண்ணியப் பலன், சிவநாமமகிமை, சிவபிரானின் பரதத்துவ நிர்ணயம், திருநீற்றின் பெருமை, சிவனடியார்களின் மகத்துவம் முதலிய சைவ சமயச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

எளிய தமிழ் நடையில் அமைந்துள்ள இச்சிவரகசியம் 1971ஆம் ஆண்டு கும்பகோணப் புராணம் என்னும் பெயரில் வெளியிடப்பட்டு மறுபதிப்பும் கண்டுள்ளது. இந்தப் பதிப்புக்கு ஆதாரமான ஓலைச்சுவடியில் ஏடுகள் பிறழ்ந்துள்ளதால் அச்சில் சில குழப்பங்கள் ஏற்பட்டுவிட்டன. புராண நூல் பதிப்பில் அனுபவம் வாய்ந்த ஒரு பதிப்பாசிரியரைக் கொண்டு மறுபடியும் சுவடி பெயர்த்தெழுதி முதலில் தொடங்கிச் சுவடிச் செம்பதிப்பாகத் திருந்திய ஒரு பதிப்பை வெளியிட்டால் சைவ நூல்களின் மிக்க விருப்பம் உடைய இன்றைய சைவ மற்றும் தமிழ் ஆர்வலர்களுக்கு உதவியாக இருக்கும்.

*****



குஞ்சரக்காளை

## குடமூக்குப் போர்

வரகுணபாண்டியன் மகன் பரசக்ர கோலாகலன் கும்பகோணத்தில் கங்கர், பல்லவர், சோழர், கலிங்கர், மகதர் ஆகியோரை வென்றான் என்று சின்மனூர்ப் பெரிய செப்பேடு கூறுகிறது. அப்பகுதி

கொங்கலர் பொழில் குடமூக்கில் போர் குறித்து
வந்தெதிர்ந்த கங்க பல்லவ சோள காலிங்க
மாகதாதிகள்
குருதிப்பெரும் புனல் குளிப்பக் கூர்வெங்கணை
தொடைதெரிந்துப்
பருதியாற்ற லொடுவிளங்கின பரசக்ர கோலா கலன்

என்பதாகும்

– மலர்க்குழு




ஆன்மீக நாட்டிய இசைக்கருவிகள்



இசட் வடிவ விநாயகர்

# கவிதைகள்

## எல்லை இல்லாத ஈசன் மகாமகத்து நேசன்

முனைவர் கவிஞர் **வீ.கே. கஸ்தூரிநாதன்**

குடந்தையிலே குடியிருக்கும் எங்கள் அண்ணல்
குளிர்பாதம் தொழுதிட்டால் தொலையும் இன்னல்
மடமையிலே உழலுகின்ற மனிதர் எல்லாம்
மகாமகத்தார் ஆலயத்தைச் சுற்றி வந்தால்
விடமுறியும் துயர்விலகும் சுகங்கள் மேவும்!
விமலனாரின் அருளாலே யாவும் கூடும்!
விடமருந்தி தேவர்களை அன்று காத்த
வித்தகரின் கருணைக்கு அளவே இல்லை!

ஆயகலை அறுபத்து நான்கை ஆளும்
அண்ணாமலை தெய்வத்தை நெஞ்சில் வைத்துப்
போயவரின் திருவடியில் விழுந்தோம் என்றால்
பொய்ப்பிறவி மாயைகளே அற்றுப் போகும்
நேயமுடன் பிறைசூடா நேரில் தோன்றி
நினைத்தவைகள் அத்தனையும் நடத்தி வைப்பான்!



தாராசுரம்

நோயழித்து வாழ்க்கையிலே இன்பம் தந்து
நூறாண்டு மானிடரை வாழ வைப்பான்!

பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒருநாள் சென்று
பரமசிவன் மகாமகத்துக் குளத்து நீரில்
மின்னுகின்ற பக்தியுடன் இறங்கி வந்தால்
மேவுகின்ற செல்வங்கள் வந்து சேரும்!
சென்னியிலே கங்கையினை அணிந்து நிற்கும்
சிவபெருமான் ஆடுகின்ற ஆடல் நின்றால்
மண்ணுலகே இருக்காது! அழிந்து போகும்!
மற்றெந்த உயிரினங்கள் உலகில் வாழும்

கண்ணப்பன் காலாலே உதைத்த போது
கருணைப்பா சுரந்தவனை அணைத்துக் கொண்ட
பண்ணப்பன் முப்போதும் சுடலை ஆடும்
பாசப்பன் நமசிவாய என்று சொன்னால்
விண்ணப்பர் வீற்றிருக்கும் கயிலை விட்டு
விரைந்தப்பன் போல்வந்து காக்கும் தெய்வம்!
எண்ணிப்பார் உலகத்தில் சிவனே ஆகும்!
எல்லைப்பா இல்லைப்பா அவனுக் கென்றும்!

காமத்தைக் கொளுத்தியவன்! அவனை மீண்டும்
கருணையுடன் எழுப்பியவன்! முக்கண் என்னும்
நாமத்தில் உலவுபவன் காலை மாற்றி
நடனத்தை ஆடுபவன் பக்தர்க் காக!
சாமத்தில் ஏமத்தில் நினைத்தால் போதும்
சட்டென்று வருகின்ற சடையன் ஆவான்
பூமொத்தும் வண்டும்போல் சுற்றி வந்து
புவனத்தைக் காக்கின்ற தெய்வம் ஆவான்!

பிட்டுக்கு மண்சுமந்து சென்றான்! மன்னன்
பிரம்படிக்கு உடல்தந்து நின்றான்! என்றும்

கட்டுக்குள் அடங்காத பிள்ளை அந்த
கயிலாயன் என்றைக்கும் மணக்கும் முல்லை!
மொட்டுக்குள் தேன்சுரக்க வைப்பான் நாளும்
மூவாத தமிழ்கேட்டு களிப்பான் நெஞ்ச
வட்டத்தில் அந்தமில்லா அவனை ஏற்று
வாழ்வெல்லாம் நெஞ்சே நீ அவன்பேர் போற்று!

பெண்ணுக்குச் சரிபாதி தந்த பெம்மான்
பிரம்மன்தன் தலைகிள்ளிப் போட்ட எம்மான்!
கண்ணுக்குள் தீவைத்து எரித்த கொம்பன்
கரித்தோலை அரைக்கசைத்து அணிந்த வம்பன்!
விண்ணுக்கும் மண்ணுக்கும் உயர்ந்து நின்று
வேதத்தின் பொருளாகத் திகழும் ஈசன்!
எண்ணத்தில் எப்போதும் இருந்து நம்மை
இயக்குகின்ற சக்தியுடன் திகழும் நேசன்!

தவமிருந்து தேவருடன் முனிவர் கூட்டம்
தாமறிய முடியாத ஒளியாய் நிற்கும்
சிவன்வாழும் குடந்தையிலே மகத்தில் ஒன்றாய்ச்
சென்றடைந்து நீராடி பாவம் போக்கி
எவருக்கும் கிட்டாத பேறைப் பெற்று
ஈசனுருள் தவறாமல் அடைய வாரரீர்!
உவர்நெஞ்ச அழுக்குகளை அகற்றி வாழ்வில்
உயர்கின்ற மேன்மைகளைப் பெறவே வாரீர்

## வெற்றிலை

கடவுளுக்குப் படையல் படைக்கும் போதும் சரி, மங்களகரமான நிகழ்ச்சிகளிலும் சரி அதில் வெற்றிலை கட்டாயம் இடம் பெற்றிருக்கும். திருமண நிச்சயதார்த்தத்தின் போது வெற்றிலை–பாக்கு மாற்றிக் கொள்வது ஒரு சம்பிரதாயமாகத் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. பொங்கல் திருநாளன்றும் படையலில் வெற்றிலைக்கு முக்கியத்துவம் உண்டு.

கும்பகோணம் வெற்றிலை, சோழவந்தான் வெற்றிலை என ஒவ்வொரு பகுதியிலும் பிரத்யேக சுவையுடன் விளைகிறது வெற்றிலை. தூத்துக்குடி மாவட்டம், ஆத்தூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் விளையும் வெற்றிலைக்கும் தனி கிராக்கி உண்டு. அதற்கு அந்தப் பகுதியின் நீர் வளமே காரணம்.

– மலர்க்குழு



தாராசுரம்

## கும்பகோணப் புராணம்

இதன் ஆசிரியர் தொண்டை நாட்டு அரசூர் சொக்கப்புலவர் எனபவராவார். தஞ்சையை ஆண்டுவந்த மராத்திய மன்னர் சகஜியின் காலத்தில் வாழ்ந்தவர். இந்நாலில் குடந்தையின் புராண வரலாற்று செய்தி விரிவாக கூறப்பட்டுள்ளது. 19 அத்தியாயங்களில் குடந்தை சிறப்பு கூறப்பட்டுள்ளது. இப்புராணத்தின் மற்றொரு பிரதியான நூலில் தல மகிமை 13 சருக்கங்களாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் கும்பகோண க்ஷேத்ரமகாமகம் சிறப்பு என்றொரு சுவடி நூலும் மூன்று கும்பகோண புராண சுவடி நூல்களும் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ளன.

– மலர்க்குழு

# தண்ணீர் தவம்

தஞ்சை ராகவ். மகேஷ்

மக நட்சத்திரம்
மகத்தான நட்சத்திரம்

ஆண்டுபல கடந்த
பூமிப்பந்தை
ஆண்டுவரும்
புனித நட்சத்திரம் !

மாசு நீக்கும்
மாசி மாதத்தில்
மகாமகத்திருவிழா
தென்னகத்துக் கும்பமேளா !

குலபேதம் மறைந்து
மகாமகத் திருக்குளம்
மக்களால் நிறைந்திருக்கும் !

சனிக்கொடுமை
பிணிக்கொடுமை
தீர்த்தவாறு
தீர்த்தவாரி !

நிர்மூலம் செய்விக்கும்
பாவங்கள் யாவும்
நீர்மூலம் கழுவப்படும்!

மக மகிமையில்
மகப்பேறு வாய்க்குமென்று
குழந்தை வரம்வேண்டி
குடந்தை வரும்
பக்தர்கள் !

காசில்லாதோரின்
காசி.......
கடல்தழுவாத
இராமேஸ்வரம்....
மகாமகக் குடந்தை !

புண்ணிய நதிகள்கூட
பாவங்கள் கரைந்தோட
மகாமகக் குளத்தில்
மகிழ்வோடு நீராடும் !

கும்பேஸ்வரர் திருவருளால்
பன்னிரெண்டு
வருடத்திற்கொருமுறை
அபூர்வமாய் பூக்கும்
திரவக்குறிஞ்சி
மகாமக தீர்த்தத்துளி !

*****

நம் கை நிறைய பை நிறைய காசு இருந்தாலும் உண்டியலில் அப்படியே கொட்டிவிட முடியுமா? துவாரத்தின் வழியே ஒவ்வொரு காசாக, சிக்கிக் கொள்ளாமல் உண்டியைக் குலுக்கித்தானே போட வேண்டும்? அப்படித்தான் ஒவ்வொரு விடயத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் ஒவ்வொன்றாக மாணவர்களுக்கு எடுத்துச்சொல்லி, அவர்களுக்குள்ளே போய்விட்டதா என்பதை கேள்விகேட்டு நிச்சயப் படுத்திக்கொண்டு அப்புறம்தான் அடுத்த அம்சத்திற்குப் போகவேண்டும்.

– ஸ்ரீமஹாபெரியவாள்

# திருப்பாலத்துறை நெற்களஞ்சியம்...!

ஒருசில ஆண்டுகளிலேயே சிதைந்து போகும் நவீனக் கட்டுமானங்களுக்கு இடையில். ௨ ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து கல்லணை, ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து தஞ்சை பெரியகோயில் போன்றவை இன்னமும் காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன. அதற்குக் காரணம் கட்டுமானத்தில் அனுபவமும், நாட்டு மக்கள் மீதான அக்கறையும்தான்.

அணைகள், கோயில்கள் மட்டுமில்லாமல், பஞ்ச காலங்களில் பயன்படுத்துவதற்கான தானியங்களை, விதைகளைச் சேமித்து வைக்கும் களஞ்சியங்களும் நம் முன்னோர்களின் தொழில்நுட்ப அறிவைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. தானியங்களைக் களஞ்சியங்களில் சேமித்து வைப்பது,எறும்புகள் கைக்கொள்ளும் தொழில் நுட்பம். இயற்கை மூலம் கற்றதை தங்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைத்துக் கொண்டனர் நம் முன்னோர்.



நெற்களஞ்சியம்

500 ஆண்டுகள் கடந்த பிறகும், இம்மியளவுகூட ஈரக்கசிவு இல்லாமல் கம்பீரமாக காட்சியளிக்கின்றன அப்படிப்பட்ட களஞ்சியங்கள். அவற்றில் ஒன்றுதான், தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் உள்ள திருப்பாலத் துறை ஸ்ரீபாலவனநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் உள்ள மிகப் பழமையான நெற்களஞ்சியம், செங்கல் அடுக்குமுறை. வெளி, உள்பூச்சு இல்லாமல் 500 ஆண்டுகளாக வெட்ட வெளியில் இருந்து நூற்றுக்கணக்கான புயல், மழையையும், சுட்டெரிக்கும் வெயிலையும் சந்தித்து சமாளித்து வருகிறது இந்த நெற்களஞ்சியம்.

ஆசிய நாடுகளில் மிகவும் பழமையான, பிரமாண்டமான, சிதில மடையாத ஒருசில நெற்களஞ்சியங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்நெற்களஞ்சியம் தமிழக அரசின் தொல்லியல்துறையால் பாதுகாக்கப் பட்டு வருகிறது. இந்த நெற்களஞ்சியத்தின் உயரம் 36அடி, சுற்றளவு 84அடி. இதன் அடிப்பகுதி வட்ட வடிவிலும், மேற்பகுதி கூம்பு வடிவத்திலும் இருக்கும். இதன் கீழ்ப்பகுதி, நடுப்பகுதி, மேல் பகுதியிலும் கதவுகள் இருக்கும். நெல்லை எளிதாக கொட்டுவதற்கும் எடுக்கிறதற்கும்தான் இந்தக் கதவுகள். இது மூவாயிரம் கலம் (சுமார் 90ஆயிரம் கிலோ) கொள்ளளவு கொண்டது.

– மணி. மாறன்

# மாணவர்களின் வரைகோட்டு ஓவியங்கள்




கவின்கலைக் கல்லூரி மாணவர்கள், குடந்தை

## லல்லேசுவரி

காச்மீரத்தில் ஸ்ரீநகரிலிருந்து வடகிழக்கில் நான்கு மைல் தொலைவில் பண்ட்ரன்தான் என்ற ஊரில், காச்மீரப் பண்டித குடும்பத்தில் பிறந்த லல்லேசுவரி. பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவள் ஆவாள். அந்தக் குடும்பத்தினர் வழி வழியாகச் சிவபெருமானை வணங்குகிறவர்கள். சிறு பருவம் முதலே லல்லாவுக்குப் பரமனிடம் பக்தி நிரம்பியிருந்தது. வழக்கப்படி அவள் தந்தையார் அவளுக்கு ஏற்ற கணவனைத் தேர்ந்தெடுத்து, திருமணம் செய்து கொடுத்தார். அவள் மணமாகிக் கணவனுடன் வாழ்ந்த போதிலும் அவள் மனம் உலகை வெறுத்துச் சிவபெருமானையே காதலித்தது. ஆதலால் கணவனுடன் இன்புற்று வாழவில்லை. அது கண்டு கணவன் வெறுத்து அலட்சியப்படுத்தினான். பன்னிரண்டு ஆண்டுகள் பொறுமையோடு இருந்த அவள், கணவனுடைய புறக்கணிப்பும் மாமியாரின் கொடுமையும் தாங்காமல், வீட்டைத் துறந்து, இறைவனையே பாடி ஆடிக்கொண்டு நாடு முழுவதும் சுற்றினாள். ஈசுவரனையே, கணவனாகக் கொண்ட லல்லா, லல்லேசுவரியானாள்.

– மலர்க்குழு





வெள்ளை விநாயகர் - திருவலஞ்சுழி



சுவாமிமலைத் திருக்கோயில்



அர்த்தநாரீஸ்வரர் - தாராசுரம்



தாராசுரம் திருக்கோயில் வாய்!றகோபுரம்

பி.இளஞ்செழியன்




**தாராசுரம் திருக்கோயில்தேர்மண்டபம்**

# சேஷாசல நாயுடு யாத்த கும்பகோணம் மகாமக அலங்காரம்

**பி. விஜயலட்சுமி**

2016 - மகாமகம் சிறப்பு மலராக வெளிவருகின்ற இந்நூலில் மகாமக அந்தாதிக் கும்மி எனும் பழைய கும்மி நூல் இடம்பெற்றுள்ளது போலவே, கும்பகோணம் மகாமக அலங்காரம் எனும் சிறு நூலும் இடம்பெறுகின்றது. மிகப்பழமையான நூல்கள் கால வெள்ளத்தில் கரைந்தோடி விடுகின்றன. அவ்வாறு நிகழாது தடுக்கவே எதிர்காலத் தலைமுறை யினரும் இச்செய்திகளை அறியும் பொருட்டே அவைகள் அப்படியே இங்கு பதிப்பிக்கப் பெறுகின்றது.



கரியுரித்த நாயனார் (கஜ சம்ஹாரமூர்த்தி)

ஸ்ரீமான் ஈரோடு ஊற்றுக்குழி மிராசுதார் செ. வீ. ந. முத்துச்சாமி முதலியார் அவர்களின் வேண்டுகோளின்படி, மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பால பண்டிதர் பட்டம் பெற்ற காங்கயம் அஷ்டாவதானம் வி. சேஷாசல நாயுடு அவர்களால் இயற்றப் பெற்று கி. பி. 1909ஆம் ஆண்டு கோயமுத்தூர் கிருஷ்ண விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்ற நூலே, கும்பகோணம் மகாமக அலங்காரம் எனும் இச்சிறு நூலாகும்.

கீலக வருடம் மாசி மாதம் 23ந்தேதி சனிக்கிழமை அதாவது, 06-03-1909ஆம் ஆண்டு நடைபெற்ற மகாமகப் பெருவிழாவின் பொழுது, இந்நூல் இயற்றப் பெற்றதாகக் கருத இடமுள்ளது. மேலும் தமிழ் ஆர்வலர்கள் அறியும் விதமாக இந்நூலாசிரியர் படைத்திட்ட நூல்களின் பட்டியலும் இங்கு தரப்பெறுகின்றது. அவை, மயில்வாகனக் கடவுள் பதிகம், ஸ்ரீரங்க வழிநடைச் சிந்து, தாந்தோன்றி வழிநடைப்பதம், வண்ணப்பதிகம், ஆனந்த விநாயகர் பதிகம், பூகம்பக் கீர்த்தனை, பில்லூர்ப்பதிகம், சென்னப்பை மாகாளியம்மன் பதிகம், தியான மஞ்சரி, ஞானரச மஞ்சரி, கருவூர் கும்பாபிஷேகக் கும்மி, பாவடி விநாயகர் துதி மஞ்சரி, பாண்டமங்கலம் பத்திரச மஞ்சரி, வேலாயுதசாமி துதி மஞ்சரி, மதிட்கரை செல்லாண்டியம்மை கவிமஞ்சரி, வருகைப்

**பி. விஜயலட்சுமி,** தஞ்சாவூர்

பதிகம், கரைச் சிலேடை வெண்பா, சிலேடை வெண்பாத்திரட்டு, புகழி மலைப் பதிகம், நாமக்கல் விநோதச் சிந்து, நல்லூர்ப் பதிகம், அங்காளம்மன் பதிகம், திடசித்தக் கும்மி, சிதம்பரம் அன்னசாலைக் கும்மி, திருவானைக்கா மும்மணிக்கோவை, கல்யாணப் பாட்டு, மஹாமாரிக் கும்மி போன்ற நூல்களின் பட்டியல் இந்நூலின் பின் அட்டையில் தரப்பெற்றுள்ளது.

கும்பகோணம் மகாமக அலங்காரம் எனும் இந்நூல், சீர்காழி அமரர் கி. அருணாசல முதலியார் அவர்களின் நினைவாக, அவரது துணைவியார் திருமதி சியாமளா அருணாசலம் அவர்களால் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பெற்றதாகும். இவ்வம்மையார் நூற்றுக்கணக்கான நூல்களையும், விலையுயர்ந்த தேக்குமரத்தாலான பீரோக்களையும் வழங்கியுள்ளார். நூலகத்தின் தமிழ்த் தொகுப்பில் டி. 6618 என்ற எண்ணில் இந்நூல் பட்டியலிடப்பெற்றுள்ளது.

# கும்பகோணம்
# மகாமக அலங்காரம்

## விநாயக வணக்கம்

சீர்பெருகும் கீலகத்திற் சேருமகாமகத்தின்
பார்பெருகலங்காரம் பாடுதற்குத் - தேர்பெருகும்
பன்னொருகோணப்பதியில் பண்புறுகும் பேசரருள்
முன்னொருகோ வந்தாள்வார் முன்.

## காவடிச் சிந்து மெட்டு

வஞ்சியரே மடமானே பசுந்தேனே சொல்லுவேனே - யிந்த
மாமாங்க சம்பிரமந்தானே - அந்த
மலர்மீதினி லுறைநான்முக னொருநாளினில் அரனாரடி
வாழ்த்தினனே பூசைபண்ணி தீர்த்த யாத்திரை செய்யவே நண்ணி 1

அந்த வேளைதனில் அமிர்த கடம் உருக மண்ணில் வருக - அது
ஆனது மாமாங்கம் பெருக - இதில்
அணிசேர் நவகதி மூழ்கிட உலகோர் சுரர் முதலோர்களும்
அன்புடன் தீர்த்தங்களாடி அரன் பொன்பத துத்தியம்பாடி. 2

வந்திடுந் தீர்த்தமீ தேடி அடிவாடி யருகோடி - யிந்த
மாமகச் சிந்தினைப் பாடி - மாசி
மகமேவிய மதியந்தனில் மிகவேகன விரதஞ்செய்து
மற்றா நாட்காலையில்தானே அந்த வற்றாத தீர்த்தத்தில் தேனே. 3

மூழ்கிட மாதரைத் தேடி வந்து நாடி மஞ்சட்கூடி – ஒரு
முச்சியிற் சீப்புக் கண்ணாடி – குங்கும
முந்துங் கலையொடுகச்சும் சந்தம்பெற மிகவச்சும்
முக்கியமாய்த் தருவோமே இங்கு பக்குவமாகவே நாமே. 4

உற்ற தானஞ்செய்துகொண்டு மலர்ச்செண்டு நிம்மபண்டு–கா
தோலை கருமணி ரெண்டு–வளை
யுடனே ஒரு தேங்காயினை யிடுநீரிலே பாங்காகவே
ஓம் எனு மந்திரஞ் சொல்லி யிங்கு மூழ்கடி சுந்தரவல்லி. 5

உத்தர திக்கினில் மின்னே அடிபொன்னே கரைமுன்னே–மிக
வோங்கரசமரந்தன்னைக்–கும்பிட்
டுயர்மங்களவல்லிக் குயில்தனை வந்தணை நல் வித்தகர்
ஓங்கு கும்பலிங்கர் தாளைப் பணி பாங்குடனே யிந்த வேளை. 6

பாயிற் றுயில வொண்ணாது இன்று தீது பலன் ஏது–சந்தப்
பண்களை யென்னுடனோது–பண்ணும்
பாவங்களெலா மின்றறு மாமிஞ்சிய வாழ்வொன்றிடு
பாக்கியம்பெற்றிடுவாயே மிரு சிலாக்கிய முற்றிட நீயே. 7

வெள்ளியாற் செய்த அம்பாரி வைத்து நேரி லொரு பாரி–யானை
மீதினி லேறியே சாரி–வரும்
வித்தகராரென்றிடிலோ சற்குரு மா சங்கரரே
வேந்தன் தஞ்சைமன்னன் நேராய்க் கூடிச்சேர்ந்துவருகிறார் பாராய். 8

சீர்பெருகுந் தெருவூடே வேலைப்பாடே செய்து ஈடே–இன்றிச்
செல்லும் சிவிகைகள் நாடே – இதில்
திருவாவடு துறைமேவிய தருமாதிபர் கிளையாளர்கள்
சேர்ந்த பவனியிதேடி சேது வேந்தரும் செல்கிறார் கூடி. 9

வீதி வலமாக வாராய் குள்ளத்தாராய் என் பின்னேராய்–அந்த
மேவுங் கஞ்சித்தொட்டி பாராய்–பச்சை
மிளகாயுடனே கஞ்சிகள் களையாறிடவே யுண்டிட
வேணவரை தருவாரே இது காணும் நரசய்யர் சீரே. 10

இத்தனைக்கும் பொருள் நேரே தருவாரே வெகுபேரே–யின்னும்
எங்கள் கும்ப நகர்ச் சீரே –கொளும்
இதமேவிய கும்பேசரும் முதலானவரும் பூசூரர்
ஏயு மகாமகம் வாழி காங்கேயன் றமிழுமே வாழி. 11

**வேறு சந்தம்**

சீலமிகுந் தென்குடந்தைப் பாலுறுமாமாங்க தீர்த்தம்
தீர்த்தமன்றி வேறுதீர்த்தம் தீர்த்தமோ-கும்ப
மூர்த்திபோல் இதுவரையும் பார்த்தமோ-இந்த
தினமதனிலுல கதனிலுள பல
நதியுமிதனிடம் வருகு மெனிலெவர்
செப்பிடுந்திறமுடைய தன்னமே-மன
மொப்பிடுமோ வந்து சொல்ல முன்னமே 1

ஆயிரம்பதினாயிர மல்லடி லக்ஷமெனிலோ
அத்தனையும் சொற்பமெனலாகுமே - சொல்லில்
ஆயிரம்கோடிக்குமேலும் போகுமே - கும்பல்
அதனிலே ஒரு எள்ளெறிந்திடில்
விலகியே புவியில் விழுந்திட
லாகுமா ஆகாது மிகையல்லவே - கஷ்டம்
ஆதிசேடனுக்கும் வகை சொல்லவே. 2

இத்தடந்தனிற்படிந்தோர் எத்தனை தீமைகள் புரிந்
திட்டபோதினிலும் அனற்பஞ்சிலே - பட்ட
தென்னவாகும் நேசமிகுவஞ்சியே - அந்த
இயல்பு தானடி பிரியமாகிய
பெருகு கோபுரம் அருகில் வானுல
கெட்டிநின்று தோன்றலென்ன நேர்த்தியே - வர்னம்
இட்டிலங்கு காந்திபன்னுங் கீர்த்தியே 3

சக்ரபாணி கோவிலிது உக்ரமேவுநாதரான
சாரங்கபாணீசர்வாழுங்கோவிலே -இது
சீரங்கநேராகவாகும் பூவிலே-தெருச்
சாலையெங்கணு மாலையம் பல
கோல மிஞ்சின வேலை யிந்திர
தானமெனலான தணிமங்கையே-எனச்
கானசுகமான ரதி தங்கையே 4

மேகமீதளாவியோடும் வேகமான தேர்கள் பாரில்
விதி நிறைந்திட்ட அலங்காரமே-இந்தப்
பூதலத்தில் சொல்லிடல் அபாரமே-மிகு
வேகமொடு குலாவி யோடிடு

பாகமா யிசை வாகுமா பரி
விச்சித்திரம் என்னவென்று சொல்லுவோம்-அவை
கர்ச்சித்திடு தன்மையென்று செல்குமே 5

ஏழை பரதேசி வெகு பேர்கள் வருகின்றனரே
இத்தனை பேருக்கும் அன்னம் ஏதென-மலைப்
புற்றிடாதே மிக்க உண்ணு சாதன-முடன்
இந்த வீதியில் வந்து பாரடி
கஞ்சியோடு பொருந்து சோறிட
எங்கள் கஞ்சித்தொட்டி நரசய்யரே வரு
சங்கையின்றிக் கிட்டுவோர்கள் கையிலே 6

வாய்கனியும் பச்சைமிள காய்களுடன் கிட்டிவரு
வார்கள் வயிராற வுண்டு கொள்ளவே-பல
பேர்கள் தருவார் திரண்டு மெள்ளவே-இந்த
வாறு புகழ் பெறுமாறு வெகு தின
மாக நரசயர் பேதமது கெட
வைத்திருக்கின்றார்கள் அன்னசாலையே-வரம்
பெற்றிருக்கின்றார் இதென்ன வேலையே 7

கையிலொரு காசு காணோம் அய்யர் செயல் ராசவேலை
காசினியி லித்தனைகள் பண்ணவே-நட
ராசர் துணை மெத்தவடி அன்னமே-அது
காரணத்தினில் மாநிதிக் குவை
சேர்தல் நித்தியம் ஆர் தடுப்பவர்
கண்டவர்கள் யாவரும் கைப்பொன்னையே கொட்டித்
தந்திடுவார் பேர்விளங்கப் பின்னையே 8

எங்குமிந்தப் பூவிலுச்சவங்கள் வந்திட்டாலுமச்ச
மில்லை யிவர்க்கன்னமிடப் பஞ்சமே-மிக
அல்லலுறப் பண்ணு பிறப்பெஞ்சுமே-இன்னும்
இந்த நகர் தனில் முந்து முதவி
புரிந்த பலர்களில் விந்தை பெருகிய
ஈசர் வடமட்டம் எனும் ஊரிலே
சீனிவாசதுரை மெத்த உபகாரியே 9

தக்கவிடத் தந்துதவி மிக்கவும் புரிந்து கவி
தன்னிலே இசைபடைத் திட்டாரடி-இனி
என்ன வேணும் வையகத்தில் கூறடி-அன்ன
சாலை யிது நடராஜர் கிருபையி
னாலுலகமிசை நீடு பெருகவி
சாலமுடன் யாவர்களும் வாழியே
அனுகூல மங்களாம்பிகையும் வாழியே

*****



தாராசுரம்

# கும்பகோணம் மகாமகத்தில் வடமொழி நாடகங்கள்

**என். ஸ்ரீநிவாசன்,**

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகாமகத்திற்கு பல பகுதிகளிலிருந்தும் ஆன்மீக பக்தர்கள் கும்பகோணத்திற்கு யாத்திரையாக வந்து ராமேஸ்வரம் சென்று கடலாடிச் செல்வார்கள். இந்தக் காலம் போல போக்குவரத்து அதிகமில்லாத அந்தக் காலங்களில் நடையாத்திரையாகவே வந்து செல்வார்கள் மக்கள்.

கும்பகோணத்திற்கு வந்து, இதனைச் சுற்றியுள்ள தலங்களுக்குச் சென்று, இறை வழிபாடுகளைச் செய்வர். இவர்களுக்கு நல்ல பொழுது போக்கு சாதனம் அந்த நாளில் நாடகம், இசை விருந்து, கிராமிய நிகழ்ச்சிகள் மட்டுமே.



மகாமகத்திற்கு வருகின்றவர்களில் பண்டிதர் முதல் பாமரர் வரையில் அவரவர் விருப்பப்படி இந்த கலை நிகழ்ச்சிகளைக் கண்டு ரசிப்பார்கள. இந்த நிகழ்ச்சிகளுக்காக புதிய புதிய நாடகங்களை இயற்றும் வழக்கமும் உண்டு. இசையுடன் கூடிய இத்தகு நாடகங்களில் வடமொழியில் இயற்றப்பட்ட நாடகங்களும் இருந்திருக்கின்றன. அந்த நாடகங்களைப் பற்றியும், அதனை இயற்றிய ஆசிரியர் பற்றியும் வெளியிடுவதே இக்கட்டுரையின் நோக்கம். இதன் காரணமாக தமிழகத்தை அரசாண்ட மன்னர்கள் பற்றிய சரித்திரமும் அறியமுடிகிறது.

**சுபத்ரா பரிணயம்:** இதன் ஆசிரியர் சுதீந்திர தீர்த்த சுவாமிகள். இவர் மத்வ மடத்தின் பீடாதிபதியாக விளங்கியவர். கும்பகோணத்தில் உள்ள விஜயீந்த்ர ஸ்வாமிகளின் ஸ்ரீமடத்தில்தான் இவருக்கு சன்யாஸ தீட்சையும், பீடாதிபதி பொறுப்பும் கிடைத்துள்ளது. இவர் வாழ்ந்த காலம் தஞ்சை நாயக்கர்களின் ஆட்சியில்

**என். ஸ்ரீநிவாசன்,** சம்ஸ்கிருத பண்டிதர் (ஓய்வு) சரசுவதி மகால் நூலகம்.

அச்சுதப்பநாயக்கர் (1561-1614) மற்றும் ரகுநாத நாயக்கர் (1614-1633) ஆகிய இருமன்னர்களின் காலமாகும்.

தஞ்சையில் ரகுநாதநாயக்கர் மீது 'ரகுநாத பூபாலீயம்' என்ற அலங்கார நூலை, அவைப் புலவராக விளங்கிய க்ருஷ்ணயஜ்வா என்பவர் இயற்றினார். அந்த நூலை நன்கு ஆராய்ந்த அவையின் புலவர்கள் ஏகமனதாக தீர்மானம் செய்து மன்னன் ரகுநாதநாயக்கரிடம் தெரிவித்தனர். "மன்னா ! இந்த நூல் மிகச் சிறப்பாக இருக்கிறது. இருப்பினும் இன்றுள்ள புலவர்களிலேயே நன்கு படித்த சாஸ்திர வல்லுனரான ஸ்ரீசுதீந்திரதீர்த்தர் இந்த நூலுக்கு விரிவுரை செய்தளித்தால் அது விமர்சனமாகவும், வியாக்கியானமாகவும் இருக்கும். அவரின் கருத்தைப் பின்பற்றியே எங்கள் கருத்தும் இருக்கும்" என்று கூறினர். ரகுநாதநாயக்க மன்னரும் மிகுந்த புலமைபெற்றவராக இருந்தமையால் இக்கருத்தை ஏற்று, சுதீந்திரதீர்த்தரிடம் விண்ணப்பித்துக்கொள்ள, இந்த ரகுநாதபூபாலீயம் என்று நூலுக்கு "சாகித்ய ஸாம்ராஜ்யம்" என்ற பெயரில் ஒரு விரிவுரை எழுதினார். அரசவைப் புலவர்கள் மிகவும் மகிழ்ந்ததுடன் மன்னர் ரகுநாதநாயக்கரும் மிகுந்த மகிழ்ச்சிகொண்டு, ஸ்ரீசுதீந்திரதீர்த்தரை தங்க சிம்மாசனத்தில் எழுந்தருளச்செய்து, கனகாபிஷேகம் செய்தார். இச்செய்தி ராகவேந்திர விஜயம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இத்தகைய சிறப்புகளைப் பெற்ற சுதீந்திரதீர்த்தர் கும்பகோணத்தில் வாழ்ந்து வந்தவர். இவர் இயற்றிய 'ஸுபத்ராபரிணயம்' என்ற நாடகத்தை இயற்றியதுடன் மகாமகத்தின்போது மக்கள் முன்னிலையில் இந்த நாடகம் நடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நாடகம் ஓலைச்சுவடியாக தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்து வெகு விரைவில் அச்சிட்டு வெளிவர இருக்கிறது என்ற அரிய செய்தி இலக்கிய ஆர்வலர்களுக்கு ஒரு விருந்து.

-------x-------

# பழையாறைப் பெருநகர்

ஜி. சிவகுரு

கோயில் மாநகரம் குடந்தைக்கு இணையாக தன்னகத்தே பல கோயில்களைக் கொண்டதும், சோழப் பேரரசர்கள் காலத்தில் தஞ்சையின் செல்வத்துக்கும், செழுமைக்கும், அதிகாரத்திற்கும் இணையாக இரண்டாம் தலைநகராக திகழ்ந்ததுமான பெருநகரம் பழையாறை.

**வரலாற்றில் பழையாறை**

அரிசிலாற்றாங்கரையில் அமைந்த இந்நகரம், ஆறை, பழைசை, மழபாடி, பழையாறு, நந்திபுரம் என்று பல பெயர்களைப் பெற்றிருந்தது. முதலாம் இராஜராஜன் காலம் வரை பழையாறை என்றே அழைக்கப்பட்ட இந்நகரம் ராஜேந்திரசோழனின் ஆட்சியில் முடிகொண்ட சோழபுரம் என்றும், இரண்டாம் ராஜராஜனின் ஆட்சிக்காலத்தில் ராசராசபுரம் என்றும் வழங்கப்பட்டது. பழையாறை, பட்டீச்சரம், திருச்சத்திமுற்றம், அரிச்சந்திரம், பாற்குளம், முழையூர், இராமநாதன்கோயில், சோழன் மாளிகை, தாராசுரம், திருமத்தடி, கோணப்பெருமாள்கோயில், ஆரியப்படையூர், பம்பப்படையூர், புதுப்படையூர், மணப்படையூர், நாதன்கோயில், உடையாளூர். இராசேந்திரன்பேட்டை ஆகிய சிற்றூர்களை உள்ளடக்கிய பகுதியே பழையாறையாகும்.



ஜி. சிவகுரு தஞ்சாவூர்.

இந்நகரில் இருந்த 19 கோயில்களில் பல காலவெள்ளத்தில் அழிந்துவிட்டன. பழையாறைப் பகுதியின் நான்கு திசைகளிலும் வடதளி, கீழ்த்தளி, மேல்தளி, தென்தளி எனும் கோயில்கள் இருந்தன. ஞானசம்பந்தருக்கு முத்துப்பந்தல் வழங்கப்பட்ட பட்டீச்சரம் தேனுபுரீஸ்வரர் கோயில், திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட நாதன்கோயில் என்றழைக்கப்படும் நந்திபுரத்து விண்ணகரம், கோபிநாதப்பெருமாள் கோயில், ராமநாதசுவாமிகோயில் என்றழைக்கப்படும் பஞ்சவன்மாதேவீச்சரம் ஆகிய கோயில்கள் இன்றும் காணக்கிடைக்கின்றன.

சோழன் மாளிகை என்னும் பகுதியில்தான் சோழ மன்னர்களின் மாளிகைகள் இருந்தன. இந்தப்பகுதிக்கு அருகே இருந்த படைவீடுகளான ஆரியப்படைவீடு, பம்பப்படைவீடு, புதுப்படைவீடு, மணப்படைவீடு ஆகியவையே இன்று ஆரியப்படையூர், பம்பப்படையூர், புதுப்படையூர், மணப்படையூர் என அழைக்கப்படுகின்றன.

உறையூர், தஞ்சை, கங்கைகொண்டசோழபுரம் என்று சோழ மன்னர்கள் தலைநகரை மாற்றினாலும், விஜயாலய சோழன் முதற்கொண்டு அனைவரும் பழையாறையையே தங்கள் வாழ்விடமாகக்கொண்டிருந்தனர். சோழப் பேரரசின் புகழை உச்சிக்கு கொண்டு சென்ற ராஜராஜசோழனும், ராஜேந்திரசோழனும் வளர்ந்தது இந்த நகரிலேதான்.

இந்த நகரம் பற்றிய குறிப்புகள் தேவாரம், பிரபந்தம் உட்பட பல இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. கி. பி. 825 முதல் கி. பி. 850வரை காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த மூன்றாம் நந்திவர்ம பல்லவன், தன்னை எதிர்த்த சோழ, பாண்டிய கூட்டுப்படையினை தெள்ளாற்றுப் போரில் வெற்றி கண்டு, கடம்பூர், வெரியலூர், வெள்ளாறு, பழையாறு ஆகிய இடங்களில் எதிர்கொண்டு பாண்டிய எல்லை வரை விரட்டினான். அதன்பின் சோழர்கள் பல்லவ அரசுக்கு கப்பம் கட்ட உடன்பட்டனர். நந்திக்கலம்பகம், இந்தப் போர் வெற்றியை “படையாறு சாயப் பழையாறு வென்றான்” என்று குறிப்பிடுகிறது.

தேரோடு பொருந்திய செழுமையான மணிகள் இழைத்த வீதிகளால் சிறப்படைந்து, இவ்வுலகில் நிலைபெற்ற பெருமையினை உடைய நகரமாக விளங்குவது பழையாறை பெருநகர் என்று சேக்கிழார் பெருமான் போற்றுகிறார்.

**தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து**
**பாரில் நீடிய பெருமைசேர் பதிபழை யாறை**

**தேவாரத்தில் பழையாறை**

தேவார மூவரான ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் பழையாறை நகரைப் பற்றியும், அங்கு அமைந்துள்ள தலங்களைப் பற்றியும் பாடியுள்ளனர். ஞானசம்பந்தப்பெருமான், திருச்சத்திமுற்றத்தில் இறைவனை தரிசித்துவிட்டு பட்டீச்சரம் வரும் பொழுது வெப்பம் அதிகமாக இருக்கிறது, அவ்வெப்பத்தை தணிக்க விரும்பிய இறைவன் தனது பூதகணங்களைக் கொண்டு முத்துப்பந்தல் அளிக்கிறார். ஞானசம்பந்தர் அருளிய பதிகங்களிலிருந்து, பழையாறை பழசை என்று அழைக்கப்பட்டதும், மழபாடி என்பது நகரின் பெயராகும். பட்டீச்சரம் என்பது கோயிலின் பெயராகும் என்பதையும் அறியமுடிகிறது.

பாடல் மறைசூடல் மதிபல் வளையொர்
பாகமதில் மூன்றொர் கணையால்
கூடளரியூட்டி எழில்காட்டி நிழல்
கூட்டு பொழிசூழ் பழைசையுள்
மாடமழபாடி யுறை வினார்
மேய கடிகட்டர வினார்
வேடநிலை கொண்டவரை
வீடுநெறி காட்டிவினை நீடுமவரே -திருஞானசம்பந்தர்

பழையாறை வடதளி, சமணர்களால் மறைக்கப்பட்டு அப்பர் உண்ணாநோன்பிருந்து வெளிப்படுத்தப்பட்ட இறைவன் உறையும் தலமாகும்.

தலையெலாம் பறிக்கும் சமண் கையருள்
நிலையினான் மறைத்தான் மறைக் கொண்ணுமே
அலையினார் பொழில் ஆறை வடதளி
நிலையினானடியே நினைந்துய்ம்மினே -அப்பர்

**திவ்யப்பிரபந்தத்தில் பழையாறை**

மரக்கொம்புகளிலே தோகைகளை அசைத்து அசைத்து குயில்கள் கூவ, மயில்கள் ஆடும் எழில் நிறைந்த பொழில் சூழ்ந்த சோலைகளால் சூழப்பட்ட இந்த நந்திபுர விண்ணகரத்திலேதான், கொடிய காடுகளெல்லாம் வனவாசம் செய்த இராமபிரான் தன் துணைவி மற்றும் தம்பியுடன் உறைகிறான் என்று திருமங்கையாழ்வார், பெரிய திருமொழியில் இத்திருநகரை மங்களாசாசனம் செய்துள்ளார்.

தம்பியொடு தாமொருவர் தன் துணைவி
காதல் துணையாக முனநாள்
வெம்பியெரி கானகமு லாவுமவர்
தாமினிது மேவு நகர்தான்

கொம்புகுதி கொண்டு குயில் கூவ
மயிலாலு மெழிலார் புறவு சேர்
நம்பியுறை கின்ற நகர் நந்தி புர
விண்ணகரம் நண்ணு மனமே

**பொன்னியின் செல்வனில் பழையாறை**

*வீரசோழிய உரையில், சுந்தர சோழரைப் பழையாறை நகர்ச் சுந்தரசோழர் என்று குறிப்பிட்டுள்ள பாடலுடைய பின்னணியில் கல்கியின் பொன்னியின் செல்வனில் ஒரு காட்சி இடம்பெற்றுள்ளது.*

இந்திரன் ஏறக் கரியளித்தார் பரி ஏழளித்தார்
செந்திரு மேனித் தினகரர்க்குச் சிவனார் மணத்துப்
பைந்துகில் ஏறப் பல்லக்களித்தார் பழையாறை நகர்ச்
சுந்தர சோழரை யாவரொப் பாரித் தொன்னிலத்தே

*போர் ஒன்றில் தன் ஐராவதத்தை இழந்த இந்திரன், அதற்கு இணையான யானை ஒன்றை தேடி அலைந்து. கடைசியில் பழையாறை நகரில் வாழ்ந்த சுந்தரசோழனிடம் வருகிறான். ஆனால் சுந்தரசோழரோ, தன்னிடம் ஐராவதத்திற்கு இணையான யானை இல்லையென்றும், அதனினும் சிறந்த களிறுகளே உள்ளனவென்றும் சொல்லி, தன் யானைகளைக் காட்டுகிறார். குன்றுகளைப் போல நின்ற ஆயிரம் வேழங்களில் எதை எடுப்பது என்று குழம்பியிருந்த இந்திரனுக்கு, தானே ஒன்றை தேர்ந்தெடுத்து, அதை அடக்க வஜ்ராயுதத்தினும் வலுவான ஓர் அங்குசத்தையும் தந்தார் சுந்தரசோழர்.*

*மற்றோர் சமயம், தன்னை விழுங்க முயன்ற ராகுவுடனான போரில், அவனை வீழ்த்திய சூரியன் தன் தேர்க் குதிரைகள் ஏழும் இறந்துவிடவே, பயணிக்க முடியாமல் திகைத்து நின்றான். அதைக் கண்ட சுந்தரசோழர் சூரியனுக்கு ஏழு குதிரைகளை தந்து பயணத்தை தொடங்குமாறு வேண்டினார்.*

*சிவபெருமானுக்கும் உமையவளுக்கும் கயிலையில் நடந்த திருமணத்தில் பெண் வீட்டார் பல்லக்கை கொண்டுவர மறந்துவிட்டனர். ஊர்வலத்திற்கு எருது மட்டுமே இருந்தது. இதையறிந்த சுந்தரசோழர் பழையாறையிலிருந்து தனது முத்துப்பல்லக்கை இறைவனுக்கு காணிக்கையாக கொடுத்தார். அப்படிப்பட்ட சுந்தரசோழ சக்கரவர்த்திக்கு இந்த உலகில் வேறு யாரை உவமை சொல்லமுடியும்.*

*இத்தகைய பல்வேறு வகையிலான பெருமைகளைக் கொண்டு பழையாறை பெருநகர் பல நூற்றாண்டு வரலாறுகளை சந்தித்து, பல மன்னர்களால் ஆளப்பெற்று பீடுடன் நின்று வரலாற்று புத்தகங்களில் தனித்த இடத்தைப்பெற்றுள்ளது. மகாமகம் கொண்டாடப்படும் இவ்வினிய வேளையில் கும்பகோணத்துக்கு அருகிலுள்ள பழையாறைக்கும் அதைச் சார்ந்த பகுதிகளுக்கும் சென்று நம் முன்னோர்கள் தடம்பதித்த இடங்களுக்குச் சென்று அவர்தம் பெருமையை நினைவுகூறுவோம்.*

-------x-------

# கோயில் நகரம் குடந்தை

**எஸ். தேவதாஸ்,**

மாசி மாதத்தில், குரு சிம்மராசியிலும், கதிரவன் கும்ப ராசியிலும் வரும்பொழுது, முழு நிலா நாளில் மக நட்சத்திரமும், ரிஷப லக்கனமும் கூடிய நன்னாள் மகாமகத் திருநாள். கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, காவிரி, சரயூ, துங்கபத்ரா, கிருஷ்ணா ஆகிய ஒன்பது நதிகளும் மகாமகக் குளத்தில் நீராடி தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்கின்றனர். வடக்கில் ஒரு கும்பமேளா, தெற்கில் ஒரு மகாமகம் என்று கூறுவர். மேற்கூறிய ஒன்பது நதிகளுக்கும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை விஷேசமாக புண்ய காலம் அமைகிறது. இந்த மகாமகக் குளக்கரையில் 12 சிவலிங்கமூர்த்திகள் அருள் பாலிக்கிறார்கள். இக்குளத்தில் 19 தீர்த்தக் கிணறுகள் உள்ளன. இந்நாளில் கங்கை முதலிய எல்லாப் புண்ணிய தீர்த்தங்களும் இக்குளத்தில் சாநித்யம் பெறுகின்றன.

தென்னாட்டில் விளங்கும் பழமையான பெரிய நகரம் கும்பகோணம் ஆகும். இவ்வூரின் பழைய பெயர் குடந்தை என்பதாகும். கும்பகோணத்தில் குடமூக்கு, குடந்தைக் காரோணம், குடந்தைக் கீழ்க்கோட்டம் ஆகிய தேவார திருத்தலங்களும், திவ்வியப் பிரபந்தம் பெற்ற சாரங்கபாணிப் பெருமாள் கோயிலும், பிற கோயில்களும் உள்ளன. பிரளய காலத்தில் ஈசனது ஆணைப்படி விடப்பட்ட அமுத கும்பம் கும்பத்தின் மூக்கு வழியே அமுதம் பரவியதால் குடமூக்கு என்றும், கும்பகோணம் என்றும் அழைக்கப்பெறுகிறது. இந்த அமுதம் கலசத்தின் மூக்கு வழியாக வெளிப்பட்டு ஐந்து



**எஸ். தேவதாஸ்,** தஞ்சாவூர்.

குரோச அளவிற்கு இந்நகரைச் சுற்றி நனைத்தது. "குரோசம்" என்றால் கூப்பிடு தூரம் என்று பொருள். இந்த அமுதம் நனைந்த இடங்கள் பஞ்ச குரோசத் தலங்களாகும். 1.திருவிடைமருதூர், 2. திருநாகேஸ்வரம் (தென்கிழக்கு), 3.தாராசுரம் (தென்மேற்கு), 4.சுவாமிமலை (வடமேற்கு), 5.திருப்பாடலவனம்-கருப்பூர் (வடகிழக்கு).

**திருவிடைமருதூர்**

கும்பகோணத்திற்கு அருகில் அமைந்துள்ள இச்சேத்திரம் மத்யார்ஜுன திருவிடைமருதூர் என்று அழைக்கப்படுகிறது. அர்ஜுனம் என்ற சொல் மருதமரத்தைக் குறிக்கும் மற்றும் சண்பக ஆரண்யம், சக்தி புரம், தபோவனம், ஜோதி நகர், சர்வ தீர்த்தபுரம், முக்திபுரம் போன்ற பன்னிரண்டு பெயர்களால் இத்தலம் அழைக்கப்பெறுகிறது.

இவ்வாலயத்தில் அமைந்துள்ள ஜோதி லிங்கத்தைச் சிவபெருமானே தன்னைத் தானே ஆத்ம பூஜை செய்திருக்கிறார். எனவே இத்தலத்து ஈஸ்வரர் மகாலிங்கம் என்று அழைக்கப்பெறுகிறார். மகாலிங்கரை "மகாதேவ" என்று சொல்லி ஆராதித்தால் கோடி பிரம்மஹத்தி பாவங்கள் விலகும் என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது. சித்தப்பிரமை உள்ளவர் பிரகாரச் சுற்றை ஒரு மண்டலம் சுற்றி வந்தால் அப்பிரமை விலகுவது உண்மையாகும். கருவறையில் ஜோதி ஸ்வரூபமாக மகாலிங்கர், மருதவாணன், மருதவனேசன், மருதநாயகன், மருதநிறைவன் என்ற பல நாமங்களோடு காட்சி தருகிறார்.

பொதுவாக சிவாலயங்களில் ஈசனுக்கு இடது புறமாக அம்பாள் சந்நிதி அமைந்திருக்கும். ஆனால் எதிராக அம்பாள் ஈசனின் வலது பக்கம் அமைந்திருக்கிறார். ஒரு முனிவர் வேண்டிக்கொண்டதால் தாயார் வலப்புறம் அமர இறைவன் காட்சி தந்ததால் தாயார் சன்னதி வலப்புறம் அமைந்துள்ளது. வரகுணபாண்டியனின் பிரம்மஹத்தி தோசம் நீங்கப் பெற்றது இவ்வாலயத்தில்தான். சிவவாக்கியர், காளி, அகத்தியர், கபிலர் முதலானோர் இவரை வழிபட்டுள்ளனர். இத்தலம் தொடர்பான வரலாற்றுச் செய்தி உ.வே.சா. அவர்களால் "மத்தியானர்ஜுன மான்மியம்" என்று பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

**திருநாகேஸ்வரம்**

இத்தலம் சேக்கிழார் சுவாமிகளால் திருப்பணி பெற்றது. இவ்வாலயம் சண்பகவனம், கிரிகன்னிகை வனம் முதலிய வேறு பெயர்களையும் கொண்டது. இக்கோயிலின் தேவியான திருகுசாம்பாள் ஆலயம் கிழக்கு நோக்கி தனியே அமைந்துள்ளது. இத்தல புராணத்தில் பெருமானுக்கு இரண்டு வடிவங்களும், தேவிக்கு இரண்டு வடிவங்களும் உள்ளதாகத் தெரிகிறது. இத்தலம் நவக்கிரகத் தலங்களில் ராகு ஸ்தலமாக விளங்குகிறது. இத்தலம் நாகராஜன் வழிபட்ட தலமாகும் மற்றும் ராகு, கேது தோஷங்களை நிவர்த்தியாக்கக்கூடிய தலமாகும்.

இக்கோயிலை நிர்மாணித்தவர் கண்டராதித்த சோழர். உள்மண்டபத்தை சேக்கிழாரும், வெளி மண்டபத்தை ஸ்ரீ கோவிந்த தீட்சதரும் நிர்மாணித்தார்கள் என்பது வரலாறு. பரகேசரி வர்மனுடைய பதினான்காவது ஆட்சியாண்டில் இக்கோவிலுக்கு பொன், வெள்ளிப் பாத்திரங்கள் வழங்கப்பட்டன. முதலாம் ராஜேந்திரசோழனின் 24வது மற்றும் 31வது ஆட்சியாண்டில் "ராஜேந்திரசோழன் காசு" என்ற பொன் நாணயம் வெளியிடப்பட்டது.

**தாராசுரம்**

இரண்டாம் ராஜராஜனால் எழுப்பப்பட்ட ஆலயம் "தாராசுரம் ஐராவதேச்வரர்" ஆலயமாகும். இக்கோயிலில் தேர்ச்சக்கரம் போன்ற கல் சக்கரமும் இராஜகம்பீர மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்து ஈசனைத் தலைவனாக வைத்து பாடியதுதான் தக்கயாகப்பரணியாகும். சேக்கிழார் அருளிய பெரியபுராணம் 63 நாயன்மார்களின் சீரிய சிவ வழிபாட்டை விளக்குகிறது. இதன் சிற்பங்கள் கருவறை அடித்தளப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கோயில் திருச்சுற்றுச் சுவரில் சிவதீட்சை பெற்ற 108 சிவனடியார்களின் உருவங்களும் இடம்பெற்றுள்ளன.

**சுவாமிமலை**

ஆறுமுகனின் அறுபடை வீடுகளுள் நான்காவதாக அமைந்துள்ள திருவேரகம் என்னும் தலம் சுவாமிமலை என்றே வழங்கப்பெறுகின்றது. திருமுருகாற்றுப்படையில்

**உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து**
**ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி**
**நாநவில் மருங்கில் நவிலப்பாடி விரையுறு**
**நறுமலர் ஏத்திப் பெரிது வந்துள்ள ஏரகத்து**
**உறைதலும் உரியவர் அதா அன்று**

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிவனார் மனம் குளிரக் குமரன் தம் தந்தைக்கு பிரணவப் பொருளை உபதேசித்த தலமாகும். சுவாமிக்கே நாதனாக முருகன் விளங்குவதால் சுவாமிநாதன் என அழைக்கப்பெறுகிறார்.

உற்சவமூர்த்தி ஆறுமுகப்பெருமான் இரு தேவியரோடு காட்சியளிக்கிறார். இவ்வாலயத்தில் வழிபட்டு கேகய நாட்டு அரசர் தம் பிணி நீங்கி அருள்பெற்றார். அருணகிரிநாதர் 38 பாடல்களில் முருகனைப் பாடியுள்ளார். இக்கோயிலில் தினமும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. காவிரியின் வடபுறம் சுவாமிமலை அமைந்துள்ளது. சுவாமிநாத சுவாமியின் பெருமை பெரிதும் விளங்குகிறது.

**திருப்பாடலவனம்**

இத்தலம் கருப்பூரில் அமைந்துள்ளது. இத்தலம் கும்பகோணத்தி லிருந்து சென்னை செல்லும் வழியில் 2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. பஞ்ச குரோசத் தலங்களுள் ஐந்தாவதான இத்தலத்தின் இறைவன் "சுந்தரேசர்" என அழைக்கப்பெறுகிறார். இறைவியின் நாமம் "அபிராமி" என்பதாகும். இவ்வாலய தீர்த்தம் "பரம தீர்த்தம்" என அழைக்கப்பெறுகிறது. இவ்வாலய தடாகத்தில் அகத்திய முனிவர் நீராடி இறைவனின் அருளைப்பெற்றார் என புராணங்கள் தெரிவிக்கின்றன.

யக்ஞவல்ய முனிவர் இவ்வாலய இறைவனை வேண்டி முக்தி பெற்றார் எனவும், சுரோதன் என்ற அரசன், மற்றும் குபேரன் போன்றோரும் இவ்விறைவனை வழிபட்டு வீடுபேறு பெற்றார்கள் எனவும் புராணங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு கும்பகோணம் அருகில் அமைந்துள்ள பஞ்ச குரோசத் தலங்களை வழிபட்டு மக்கள் சிறப்புறுகின்றனர்.

“ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆடும் தீர்த்தன்” என்பது மாணிக்கவாசகரின் திருவெம்பாவை.

**காமியம் செய்து காலம் கழியாதே........சாமியோடு**
**சரசுவதியைப் பணி**

என்ற சமயக்குரவரின் வாக்கை நினைத்து தீர்த்த நீராடுதல் சிறப்பானதாகும். பொன்னி நதியால் வளம்பெறும் நாடு சோழநாடாகும். அத்தகைய சிறப்புடைய சோழநாட்டில் ஒன்றான குடந்தை கோயில்களின் நகரம் என்று பன்னாட்டவர்களால் அழைக்கப்பெறுகின்றது.

அருணகிரிநாதர் சென்று வழிபட்ட தலங்களில் கும்பகோணத் தலம் மிகவும் முக்கியமானதாகும். தேவாரம், திவ்வியப்பிரபந்தங்களில் குடமூக்கு, திருக்குடந்தை என்று கும்பகோணம் பற்றிய செய்திகள் காணப்படுகிறது. திருப்புகழில் கும்பகோணத்தைப் பற்றி 7 பாடல்கள் வந்துள்ளன. இப்பாடல்களில் கும்பகோணநகர், திருக்குடந்தை முதலான பெயர்கள் வருகின்றன.

இத்தகைய கும்பகோணம் அருகில் அமைந்துள்ள கோயில்கள் பற்றியும் அதன் சிறப்புக்களைப்பற்றியும் தெரிந்துகொள்வது மிகவும் சிறப்பாகும்.

*****

## உறையூர்வல்லி

ஆண்டாளையும் மீராவையும் போல, பரமனே என் பதி என்ற உணர்வுடன் பல பக்தைகள் பாரத நாட்டில் இருந்திருக்கிறார்கள்.

உறையூரில் இருந்து ஆண்ட நந்த சோழனுக்கு, அரங்கநாதனின் அருளினால் அழகிய மகள் பிறந்தாள். அவள் தோழிகளுடன் அரண்மனைத் தோட்டத்தில் பூப்பறிக்கையில், ஓர் அழகன் குதிரை மேல் வேட்டையாடச் செல்வதைக் கண்டு, அவனிடம் மையல் கொண்டாள். அரங்கனே அந்த அழகன். அவனும் உறையூர்வல்லியிடம் மனத்தைப் பறிகொடுத்தான். மகள் நலிவதைக் கண்ட மன்னனும் அரசியும் அவளை அரங்கனுக்கே மணம் செய்விக்க விரும்பினர். அரங்கனும் இதற்கு இசைந்தான். உறையூரில் திருமணம் நடந்ததும் அரசன் உறையூர் வல்லியை ஆயிரம் தோழிகளுடனுன் ஸ்ரீரங்கத்துக்கு அனுப்பி வைத்தான். கோயிலில் திருமணித்தூணை அணுகியதும் உறையூர் வல்லி அரங்கனுடன் கலந்துவிட்டாள். உறையூரில் இப்போதும் ஆண்டுதோறும் இந்த திருமணத்தைக்கொண்டாடுகிறார்கள். பெருமாளும் தாயாரும் திருமணக் கோலத்தில் விளங்குகிறார்கள.

– மலர்க்குழு

# அறவழி காட்டும் திருமடங்கள்

**வி. பர்வதம்**

**ஸ்ரீ காமகோடி பீடம்**

'எல்லா உயிரிலும் இருப்பவன் இறைவன்' 'மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்தால் தெய்வமாகலாம்' என்னும் தத்துவங்களைப் பரப்பிவரும் அறநிலையம் காஞ்சி காமகோடி பீடம் சங்கரமடம் ஆகும்.

காஞ்சியில் நிலவிய இத்திருமரபு குடந்தைக் காவிரிக் கரையில் திருமடத்தை நிறுவியது, காமகோடி பீடாதிபதி நான்காம் சந்திரசேகரர் காலத்திலாகும். (1746-1783). இப்பொழுது பீடாதிபராக அருளாட்சி புரிந்து வருபவர்கள் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள், ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் ஆகியோர் ஆவர்.



ஆதிசங்கரர்

'பக்தர்கள் இருக்குமிடத்திற்கு முனிவர் சென்று நல்வழி காட்டுதல்' என்னும் நெறிக்கு ஏற்ப காஞ்சி அருளாளர்கள் ஊர் ஊராக யாத்திரை சென்று மக்களுக்குக் காட்சி அளிப்பது சிறப்புமிக்க செயலாகும்.

**ஜகத்குரு பரம்பரா நாம மாலா**
**ஜகத்குரு பரம்பரா ஸ்தவம்**

போன்ற வடமொழி நூல்களுடன், யோகநாதம்பிள்ளை, மழலை சின்னச்சாமி பாரதி, புதுக்கோட்டை, எட்டயபுர சமஸ்தானத் தமிழ்ப் புலவர்கள் பாடிய பாடல்களும் இத்திருமடத்தின் அரிய வரலாற்றுச் செய்திகளைக் கூறுகின்றன.

பலமொழிகளில் இவர்களைப் பற்றிய இசைப்பாடல்கள் உள்ளன. ஸ்ரீசங்கரர் போதித்த தத்துவம் அத்வைதம். ஆதலால் அத்வைத நூல்கள் பல தமிழில்

**வி. பர்வதம்,** கம்பாசிடர் (ஓய்வு), சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

எழுதப்பட்டன. பல்வேறு ஆலயங்களைத் திருப்பணிச் செய்து மிகச் சிறப்புடன் நிர்வாகம் செய்தார்கள்.

சாத்திரம் தொடர்பாக எழும் ஐயங்களைக் காஞ்சிப் பெரியவர்களே தீர்த்து வைத்துள்ளனர். சங்கரமடம் அரிய நூலகத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வேதக்கல்விக்காகப் பள்ளிகள், நடத்தின சங்கரமடம் கலைவளர்த்த காஞ்சிபுரத்தில் 'காடிகாஸ்தானம்' என்னும் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது.அபூர்வ நூல்களைத் தொகுத்து 'சரஸ்வதி பண்டாரம்' ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் நலிவடைந்த பல்வேறு கோயில்களைத் திருப்பணி செய்துள்ளனர். அங்கு தொடர்ந்து பூசைகள் நடைபெறவும் தக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். பல்வேறு இடங்களில் புதிய கோயில்கள் பலவற்றை நிர்மாணம் செய்துள்ளனர்.

ஆலய ஆய்வு மையம் சார்பில் துல்லியமான ஆய்வுகள் செய்யப் படுகின்றன. அன்னதானம், முதியவர் வாழ்வில்லம், கோசாலைகள், மருத்துவமனைகள் ஆகியவை மடத்தின் சார்பில் இந்தியாவின் பல இடங்களிலும் நடைபெறுகின்றன. ஜனகல்யாண் இயக்கத்தின் மூலம் மக்களை ஒன்றுசேர்த்துப் பல்வேறு அறப்பணிகள் நடைபெறுகின்றன.

சங்கரமடத்தின் மூலம் இசைப்பணி, தமிழ்ப்பணி, மொழிபெயர்ப்புப் பணி, இந்து சமயமன்றம் மூலம் பழைய இலக்கியப் பதிப்புப்பணி, புத்திலக்கியங்கள் இயற்றல், உரைநடைநூல்கள் எழுதும் பணி, திருமுறை வளர்ச்சிப்பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன. காலந்தோறும் சமுதாய- சமய-இலக்கியப் பணிபுரியும் சங்கரமடத்தின் சேவைகள் பாராட்டுக்குரியவை.

**தருமபுர ஆதீனம்**

16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மயிலாடுதுறையை அடுத்த தருமபுரத்தில் தருமை ஆதீனத்தைத் தோற்றுவித்தவர் ஸ்ரீகுருஞானசம்பந்த தேசிகராவார். ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தவர். சைவசித்தாந்தப் பெருநெறியில் சிறந்து விளங்கிய கமலை ஞானப்பிரகாசரின் மாணவர். இளம் வயதிலேயே ஆலவாய்ப் பெருமானிடத்தில் நாட்டம்கொண்டு மதுரையில் தங்கியிருந்த போது பொற்றாமரைத் திருக்குளத்தில் கிடைத்த சிவலிங்கத்திருவுருவையே தான் வணங்கும் மூர்த்தமாக ஏற்றுத் தருமை மடத்தில் ஸ்தாபித்தார்.

குரு முதல்வரான ஸ்ரீகுருஞான சம்பந்ததேசிகர் அருளிய நூல்கள் எட்டு. இவை குருஞான சம்பந்தர் அட்டகம் எனப் போற்றப்பெறுபவை யாகும். இவரது அருள் மரபில்

உதித்த பல குருமணிகளும் அற்புதமான சைவ நூல்களைப் படைத்துள்ளனர். நான்காவது குருமகா சன்னிதானமாகத் திகழ்ந்த ஸ்ரீமாசிலாமணி தேசிகர் அவர்கள் குமரகுருபரருக்குக் குருவாய்த் திகழந்தவர். குருமரகுருபரர் காசி மடத்தைத் தோற்றுவித்தவர். தருமை ஆதீனம் துறவரசு என்று சைவ மரபினரால் போற்றப்பெறுகிறது.

தருமபுர ஆதீனம் சைவத்திற்கு மட்டுமின்றி, இலக்கியத்திற்கும் இன்றுவரை சேவைபுரிந்து வருகின்றது. ஏராளமான தமிழ் நூல்களை வெளியிட்டுத் தமிழ் மணக்கச்செய்த பெருமையைத் தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் மறவாது. 16 மொழிகளில் 20 ஆயிரம் நூல்கள் கொண்ட நூலகம் ஒன்றினை இம்மடம் போற்றுவதும், கல்விப்பணிகள் புரிவதும் வரலாற்றில் என்றென்றும் இடம்பெறும். சமயம், மொழி, போன்றே கலைத்துறைக்கும் தொடர்ந்து ஆதரவு நல்கிவரும் இம்மடத்தின் தொண்டு குறிப்பிடத்தக்க தாகும். தருமை ஆதீனத்தின் அருளாட்சியின் கீழ் 27 வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோயில்கள் உள்ளன. திருக்கோயில்களைப் பேணிக்காப்பதோடு, பூஜைகள் முட்டுப்பெறாமல் மன்னர்கள் காலம் போன்றே இன்றும் காப்பது இம்மடம் செய்யும் பெரும்பணியாகும்.

பெருமைமிகு இம்மடத்தின் 26ஆவது குருமூர்த்திகளாய் அமர்ந்து அருள்மழை பொழிபவர் குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆவார். நிறைந்த ஞானமும், செறிந்த கல்வி அறிவும் கொண்டு திகழும் சுவாமிகள் 16ஆம் நூற்றாண்டில் ஆலவாய்ப் பெருமான் அருளால் குரு முதல்வருக்குக் கிடைத்த சிவலிங்கத்திருவுருவைத் தம் ஆன்மார்த்த தெய்வமாக நாள் தவறாமல் பூஜித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கமலை ஞானப்பிரகாசரின் ஆசிகளாலும், ஆலவாயுடைய பெருமானின் திருவருளாலும், குருமாமணிகளின் சீரிய தொண்டாலும் நாளும் சைவம் கமழச் செய்யும் தருமை ஆதீனத்திற்குத் தமிழக வரலாற்றில் ஒரு சிறப்பிடம் உணடு.

**திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம்**

பதினேழாம் நூற்றாண்டில் புகழ்பெற்ற தவமுனிவராகவும், சிறந்த கவிஞராகவும் விளங்கிய ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளால் காசியில் தோற்றுவிக்கப்பெற்ற ஸ்ரீகுமாரசுவாமி மடத்தின் கிளையாகத் திருப்பனந்தாளில் கி.பி.1720 வாக்கில் ஏற்பட்ட திருமடமே ஸ்ரீகாசிமடம் ஆகும்.

முதல் நான்கு அருளாளர்கள் காசியிலேயே தங்கித் திருத்தொண்டு செய்தனர். ஐந்தாமவராக அருளாட்சிக்கு வந்த காசிவாசி தில்லைநாயகத் தம்பிரான் அவர்கள் காலத்தில்தான் திருப்பனந்தாளில் அருளாட்சி தொடங்கியது.

ஐந்தாண்டளவும் ஊமையாக இருந்து திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் ஆற்றல் பெற்ற குமரகுருபரர் கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், திருவாரூர் நான்மணிமாலை, பண்டார மும்மணிக்கோவை, காசிக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, சிதம்பர செய்யுட்கோவை முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

ஸ்ரீகாசிமடம் ஆற்றிவரும் கல்விப்பணி அளவிடற்கரியது. திருப்பனந்தாளிலும், ஸ்ரீவைகுண்டத்திலும் கலைக்கல்லூரிகளையும், திருப்பனந்தாளிலும், திருலோக்கியிலும் பல பள்ளிகளையும் இம்மடம் நடத்திவருகிறது. அண்ணாமலை, காசி ஆகிய பல்கலைக்கழகங்களிலும், திருப்பனந்தாள், நாகர்கோயில், ஸ்ரீவைகுண்டம் போன்ற ஊர்களில் உள்ள கல்லூரிகளிலும், காஞ்சி, லால்குடி. ஆடுதுறை போன்ற ஊர்களில் உள்ள பள்ளிகளிலும் மாணாக்கர்க்கு உதவித்தொகை ஸ்ரீகாசிமடத்தினரால் வழங்கப்படுகிறது.

தமிழ்ப்புலவர், பி.எட், தேர்வுகளில் மாநில முதன்மை பெறுவோர்க்கு பரிசு வழங்கிட மூலப்பொருள் காசிமடத்தினரால் வைக்கப் பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திருக்குறள், குமரகுருபரர் பிரபந்தங்கள், சைவசித்தாந்த சாத்திரங்கள் முதலான தமிழ் நூல்களில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற மாணாக்கருக்குப் பரிசுகள் வழங்க 12 அறக் கட்டளைகள் தனித்தனியே நிறுவப்பட்டுள்ளன.

புராணப் பிரசங்கங்கள் பல ஊர்களில் நடத்தவும், வடமொழி வளர்ச்சிக்கும், சைவ சித்தாந்த விரிவுரைகள் நடத்தவும், அன்னம்பாலிப்புக்கும் அறக்கொடைகளை ஏராளமாக இம்மடத்தினர் வழங்கியுள்ளனர். இசைத்தமிழ் அறக்கட்டளையும், இசைக்கல்லூரிக்கு இடமும் அளித்து மாணாக்கர்கட்கு இசைப்புலமையைத் தூண்டப் பல்வேறு போட்டிகளையும வைத்துப் பரிசளித்து வருகின்றனர்.

இந்தியாவில் பல்வேறு ஊர்களில் உள்ள சிறப்பு வாய்ந்த கோயில்களில் திருமுறை இசையைப் பரப்பத் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டுக் காசி மடத்திலிருந்து ஊதியம் வழங்கப்படுகிறது. ஆண்டின் எல்லாத் திங்களிலும் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட கோயில்களில் திருமுறைவாணர்கள் பலர்சேர்ந்து குழுவாகத் திருமுறை விண்ணப்பம் செய்ய நிலையாகப் பெரும் பொருட்கொடை வழங்கியுள்ளனர்.

மதுரை, காஞ்சி, சிதம்பரம் போன்ற பல தலங்களில் திருக்கோயில் சுவர்களில் அத்தலத்தொடர்பான பாடல் கல்வெட்டுக்கள் இத் திருமடத்தினரால் அமைக்கப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறைகள், திருக்குறள், குமரகுருபரர் பிரபந்தங்கள், புராணங்கள், தோத்திர நூல்கள் ஆகியவை அடக்கவிலையில் முழுமையாகக் கிடைக்க மடத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். திருக்குறளுக்கும், திருமுருகாற்றுப்படைக்கும் உரைக்கொத்து வெளியிட்டுள்ளனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வாயிலாகச் சங்க நூல்கள், திருமுறைகள், சாத்திரங்கள், குமரகுருபரர் பிரபந்தங்கள் போன்ற சில நூல்கள் முதற்பதிப்பு அடக்கவிலையில் கால் பங்கும், இரண்டாம் பதிப்பு அடக்க விலையில் 1/8 பங்கும் விலை நிர்ணயம் செய்து விற்க அறக்கொடைகள் நிறுவியுள்ளனர். குமரகுருபரர் என்னும் மாத இதழையும் நடத்தி வருகின்றனர். மக்கள் மனநோய் நீக்கும் காசிமடத்தினர் உடல்நோய் நீக்கும் மருத்துவ உதவிகளையும் தாராளமாகச் செய்துவருகின்றனர். சைவமும், செந்தமிழும் பேணிப்புரக்கும் காசிமடத்தின் பணிகள் போற்றுதலுக்கு உரியனவாகும்.

**சூரியனார் கோயில் ஆதீனம்**



சூரியனார் கோயில்

தமிழகத்தின் தொன்மையான திருமடங்களில் சூரியனார்கோயில் ஆதீனமும் ஒன்று. கந்தகுருவால் உபதேசிக்கப்பட்டுக் கந்தபரம்பரையில் சிறப்புற்று விளங்கிய ஸ்ரீசிவமார்க்கப் பிரகாசதேசிகர் அவர்கள்பால் உபதேசம் பெற்ற சிவக்கொழுந்து தேசிகர் என்னும் சிவாக்கிரயோகிகளால் இவ்வாதீனம் வரலாற்றுச் சிறப்புடைய சூரியனார் கோயிலில் தோற்றுவிக்கப்பட்டது.

சிவாக்கிரகயோகிகளைப் போற்றி ஸ்ரீசிவாக்கிர தேசிகமாலை பாடப்பட்டது. பின்னர் வந்த குருமூர்த்திகள் யாவரும் தம் நூல்களில் ஆதி சிவாக்கிரயோகிகளுக்கு வணக்கப்பாடல்கள் பாடியுள்ளனர். ஸ்ரீவீழிச் சிவாக்கிரயோகிகள் தஞ்சை நாயக்க மன்னர்கட்குக் குருவாக விளங்கினார். மணவாள மாமுனிகளை வாதில் வென்றார் என்பர். நாயக்க மன்னரால் திருவீழிமிழலையில் ஒருமடம் ஏற்படுத்தப்பட்டது. கொடை நிலங்கள் அரசரால் மடத்துக்கு அளிக்கப்பட்டன. இவர் சைவ சந்நியாச பத்ததி, கிரியா தீபிகை, சிவஞானபோதச் சிற்றுரை, சிவாக்கிரபாஷியம் என்னும் பேருரை, சைவபரிபாஷை, சிவசமவாத உரை மறுப்பு நூல், தேவி காலோத்தரம், சுருதி சூக்திமாலை ஆகியவற்றிற்கு உரை, சிவநெறிப்பிரகாசம் என்னும் சைவ சித்தாந்த நூல் ஆகியவைகளையும் இயற்றியருளியுள்ளார்.

ஸ்ரீநந்தி சிவாக்கிரயோகிகள் தம் ஞானாசிரியராகிய வீழிச் சிவாக்கிர யோகிகள் அருளிச்செய்த சிவநெறிப்பிரகாசம் என்னும் நூலுக்கு உரை எழுதினார். ஸ்ரீ அம்பலவாண

தேசிகர் தமிழிலும், வடமொழியிலும் பெரும்புலமை பெற்றவர். இவர் திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்தபோது திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கட்குக் கம்பரந்தாதி முதலிய நூல்களைக் கற்பித்தவர் ஆவார்.

ஸ்ரீமுத்துக்குமாரதேசிகர் அவர்கள் மிகவும் புலமைமிக்கவர். இவருக்கு யாழ்ப்பாணத்திலும் சில சீடர்கள் இருந்தனர். இவர்கள் சிவஞானபோத நூலுக்கு மாதவச் சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த மாபாடியத்தை 1921ஆம் ஆண்டு அச்சுவாகனமேற்றிச் சைவ உலகிற்கு வழங்கியவர் ஆவார்.

இலக்கணம் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். தல யாத்திரைக்காகச் சிதம்பரம் வந்தவர் ஆதீன அடியாராகித் தலைவரானார். சிவஞானபோத மாபாடிய நூல் அச்சிடும் போது பல உதவிகள் செய்தார். சிவாக்கிரயோகிகள் அருளிய சிவாக்கிர பாடியம், கிரிய முத்தி நிச்சயப்பேருரை முழுவதையும் செப்பம் செய்து கொடுத்தார். ஆதீனத்துக்குரிய ஞானாவரண விளக்கவுரையைச் செப்பம் செய்தார்.

ஸ்ரீமீனாட்சிசுந்தரத் தம்பிரான் அவர்கள் இறைஞானபோதம், ஆன்மார்த்த பூசை விளக்கம், ஆன்மலாப தீபிகை ஆகிய மூன்று நூல்களை அருளிச்செய்தார். 04-09-1990 முதல் ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள் சூரியனார்கோயில் சிவாக்கிரயோகிகள் ஆதீனத் தலைவராகி அருளாட்சி செய்து வருகிறார்கள்.

சிவாக்கிரயோகிகள் ஆதீனத் தலைவராகத் திருவாவடுதுறை ஆதீன அடியவர்களே பொறுப்பேற்றல் மரபாக இருந்து வருகிறது. பழம்பெருமை மிக்க ஆதீனமாகிய சிவாக்கிரயோகிகள் ஆதீனம் சிறப்பாகச் சைவப்பணியாற்றிக் கொண்டு வருகிறது.

**கும்பகோணம் பெரியமடம்**

சிவபெருமானை எப்பொழுதும் மறவாத சிந்தையராய், தம்பூசைச் சிவலிங்கத்தைப் பிரியா இயல்பினராய் இருப்பவர்கள் வீரசைவர்கள், தமிழகத்தில் ஒரு காலத்தில் இச்சமயம் பெரிதும் பரவியிருந்தது.

தென்ஆர்க்காடு மாவட்டம் மயிலம், கோவை மாவட்டம் பேரூர் போன்ற இடங்களில் வீரசைவ மடங்கள் இருப்பினும் தொன்மையானது கும்பகோணம் பெரிய மடமேயாகும். தக்கயாகப்பரணி, வீரசிங்காதன புராணம் முதலிய நூல்களும், சில கல்வெட்டுக்களும், தஞ்சை சரசுவதி மகால் ஆவணங்களும் பெரியமடத்தின் வரலாற்றைச் சுட்டிக்கூறுகின்றன.

பெரியமடத்தின் வரலாற்றைக் காட்டும் அரிய நூல் ஆகிய வீரசிங்காதனபுராணம் முதலில் கன்னடத்தில் இயற்றப்பட்டது. வீரநரசிம்மதேவன் என்னும் விஜயநகர மன்னன் காலத்தில் சோமசேகரதேவர் என்பவரால் இயற்றப்பட்டது. பின்னர் அந்நூல் திருக்குடந்தை மடத்துத் தேசிகர் என்பவர் ஆணைப்படி வேலைய சுவாமிகள் என்பவரால்

மழைய மல்லேச்சுரச்சருக்கம் முதல் மூன்று சருக்கங்கள் தமிழில் மொழிபெயர்த்துப் பாடப்பெற்றன. இவ்வேலையைச் செய்தவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் சகோதரர் ஆவார். இந்நூலின் ஏனைய பகுதிகள் சிதம்பரம் மடத்தில் இருந்த வசவலிங்கையர் வேண்டுகோளுக்கிணங்க மெய்கண்ட தேவர் சந்தானம் திருத்துறையூர் ஆதீனத் தலைவராய்க் கோட்டூரில் இருந்த உமாபாகதேவர் என்பவரால் இயற்றப்பட்டன. இது *875* செய்யுட்களை உடையது.

நவகன்னியர் கங்கையுடன் வீரபத்திரருடனும் கும்பகோணம் வந்து மகாமகக் குளத்தில் புனித நீராடிய செய்தி வீரசிங்காதன புராணத்தில் கூறப்படுகிறது. சிவபெருமான் வீரபத்திரருக்குக் காட்சி தந்தருளிய பீடமே வீரசிங்காதனம் ஆகும். அருகில் வீரபத்திரருக்குக் கோயிலும் ஏற்பட்டது. இக்கோயிலில் வீரபத்திரர்க்குக் கங்கை வீரன் என்று பெயர்.

ஒட்டக்கூத்தர் இவ்வீரபத்திரக் கடவுள் கோயிலிலேயே தக்கயாகப் பரணியை இயற்றினார்.

> **குடந்தையம் பதியில் கோதிலாப் பெரிய**
> **மடந்தனில் வாழ்வீர மகேச்சுரர்**

என்பது தக்கயாகப்பரணித் தாழிசையாகும்.

வீரசிங்காதனபுராணம் மூர்க்க நாயனார் பெரிய மடத்தில் இருந்தவர் என்று கூறும் பெரியபுராணமும், மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் திருக்குடந்தைப் புராணமும் இச்செய்தியைக் கூறுகின்றன.

இப்பெரிய மடத்தின் தலைவர்களாக விளங்கிய அருளாளர்கள் ஏகாக்கர், இரேணுகர், இரேணுவர் முதலியோர் அரிய சமயப்பணிகள் புரிந்தனர். மழைய மல்லேச்சுரர்க்குப் பின்வந்த பலருள் சோமசேகரதேசிகர் வீரசிங்காதன ஸ்தாபனாச்சாரியார் எனக் கொண்டாடப்படுகிறார். இவர் விஜயநகர மன்னன் வீரநரசிம்மன் காலத்தவர். *(1506-1509)* இவருக்குப்பின் வந்தவர் சாரங்கதேசிகர் என்பவர். சிறப்புமிக்க சாரங்கதேவருக்குப் பின் பெரிய மடம் என்றே அழைக்கப்படலாயிற்று.

தஞ்சை நாயக்க அரசில் அமைச்சராகப் பல்லாண்டுகள் பணிபுரிந்த அய்யன் என்னும் சிறப்புப் பெயரையுடைய கோவிந்த தீட்சிதர் பெரியமடத்தின் நுழைவு வாயிலைக் கட்டுவித்தார். அதனை இங்குள்ள கல்வெட்டு பின்வருமாறு குறிக்கிறது. *(காலம் 13-01-1632)*

'சொஸ்திஸ்ரீ சாலியவாகந சகாப்தம் 1551க்குமேற் செல்லாநின்ற பிரஜோத்பத்தி வருஷம் தை மாதம் 15தேதி ஸ்ரீமது ராஜமானிய ராஜஸ்ரீ ரெகுநாத நாயக்கர் அவர்கள் பிரதானி அய்யனவர்கள் கோவிந்த தீக்ஷிதர் ஸ்ரீமது கும்பகோணம் பெரியமடம் வீரசிங்காதனத்துக்குக் கர்த்தரான சாரங்க சுவாமியார் அவர்கள் எழுந்தருளிஇருக்கிற

மஹாமடத்து ஆசாரவாசல் அனந்தகல்யாண மஹாமண்டபம் திருப்பணிக்கு கட்டளை வைத்தது. வினாயகர் கங்கை வீரேச்வர சுவாமி துணை. சிவா உ'

கன்னடக் கல்வெட்டு 1507ஆம் ஆண்டு வீரநரசிம்மதேவர் விட்ட நிலக்கொடையைக் குறிக்கிறது. 16-01-1846இல் எழுதப்பட்ட மராட்டியர் ஆவணத்திலும் இம்மடத்தைப் பற்றிய செய்தி குறிக்கப்படுகிறது. புகழ் வாய்ந்த வீரசைவப் பெரியமடம் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன.

**திருவாவடுதுறை ஆதீனம்**

கி. பி. 16ஆம் நூற்றாண்டில் திருவாவடுதுறையைத் தலைமையகமாகக் கொண்டு தோன்றியதே திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனமாகும். சிவஞான சூரியனான ஸ்ரீ மெய்கண்ட தேவரின் மரபில் உதித்த இந்த ஆதீனத்தின் குரு ஸ்ரீபஞ்சாக்கரதேசிகர் என்று போற்றப்பெறுவர்.

இரண்டாம் குருமகா சன்னிதமானமாக ஸ்ரீமறைஞானதேசிகர் பொறுப்பேற்றார். பின்னர் அம்பலவாண தேசிகரில் தொடங்கி, உருத்திர கோடி தேசிகர், வேலப்பதேசிகர், திருச்சிற்றம்பல தேசிகர், அம்பலவாண தேசிகர், வேளூர் சுப்பிரமணிய தேசிகர், மேலகரம் அம்பலவாண தேசிகர், சுப்பிரமணிய தேசிகர், அம்பலவாண தேசிக மூர்த்திகள் வரை இருபத்திரண்டு குருமணிகள் இவ்வாதீனத்தை அலங்கரித்த பின்பு இருபத்தி மூன்றாவது குருமகாச ன்னிதானமாக ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள் அருளரசை ஏற்று நடத்தி வருகிறார்கள்.

இம்மடம் சைவம் வளர்த்தது மட்டுமின்றித் தமிழ் வளர்த்த திருமடமுமாகும். திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையையும், உத்தமதானபுரம் சாமிநாத அய்யரையும் போற்றித் தமிழுக்குத் தந்த பெருமை இம்மடத்திற்கே உரியதாகும்.

எண்ணிலா நூல்களை நாளும் பதிப்பித்துச் சைவமும், தமிழும் வளரத் தொடர்ந்து பணி புரியும் திருமடமான திருவாவடுதுறை ஆதீனத்தின்கீழ் பல பாடல் பெற்ற திருக்கோயில்கள் உள்ளன. இவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்க திருக்கோயில்கள் திருவாவடுதுறை திருக்கோயிலும், திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கசுவாமி திருக்கோயிலுமாகும்.

*****

# மகாமகத் தொடக்கமும் அதன் சிறப்பும்

மூ. நேரு,

புராணக் காலம் முதல் தொன்று தொட்டு மிகப்பெரும் அளவில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமகம் விழா ஒரு தீர்த்த விழாவாக மட்டும் கொண்டாடப்படவில்லை. இயல், இசை, நாடகம் என முப்பெரும் விழாவாகவும் நடைபெற்று வந்துள்ளதை வரலாறு எடுத்துக் கூறுகிறது. இவ்விழாவின் போது பல்வேறு இன, மொழி, பண்பாடு என்னும் நிலையில் மாறுபட்டாலும் அவர்களது மொழிச் சிறப்புகள், படைப்புகள், இசை விழாக்கள், நாடகங்கள், கருத்தரங்குகள் என பன்முக நோக்கில் இவ்விழா அமைந்து இருப்பதை அறியமுடிகிறது.

தஞ்சை மராட்டிய மன்னர் தம்முடன் அரசவைப் புலவராக இருந்த நாராயணன் என்ற புலவரை அழைத்துச் சென்று அவையில் இலக்கிய நிகழ்ச்சியை நடத்தியும் 'லீலாவதி' என்ற நாடகம் நடைபெற்றதையும் அறியமுடிகிறது. இலக்கிய விழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன என்பதை கி.பி. 1873ஆம் ஆண்டில் பல்வேறு வித்வத் சபைகள் கூடிய செய்திகளையும், ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் தம் பரிவாரங்களுடன் சென்று தங்குவாரென்றும் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் குறிப்பிடுகின்றார்.




பன்னிரண்டு இராசிகளும், மகாமகக்குளமும்

மூ. நேரு, பதிவுரு எழுத்தர், சரசுவதி மகால் நூலகம்.தஞ்சாவூர்.பதீ

இதற்கு பின்னர் நடைபெற்ற மகாமக விழாக்களிலும் இயல், இசை, நாடகங்கள் சிறப்பாக நடைபெற்றன என்பதை அறியமுடிகிறது. எனவே மகாமக விழா ஒரு இறை வழிபாட்டுடன் அமைந்திருப்பினும் கலைகளை அறிமுகம் செய்யும் விழாவாகவும் கலைகளை வளர்க்கும் தளமாகவும் திகழ்ந்து வருகிறது என்பதை வரலாற்றுச் செய்திகள் நமக்குக் காட்டுகின்றன.

கும்பகோணத்தில் உள்ள அமிர்தவாவிகள் என்று சொல்லப்பட்ட பொற்றாமரைக்குளம், மஹாமகக்குளம் ஆகிய இவ்விரண்டும் புண்ணியத் தீர்த்தங்களும் கீழ்கண்ட புண்ணிய தீர்த்தங்களுக்கெல்லாம் புண்ணிய தீர்த்தமாக உள்ளது என்று புராணம் கூறுகிறது.

மகாமகத் திருவிழாவின் சிறப்பு பற்றி பல இலக்கியங்களும் படைக்கப்பட்டுள்ளன என்பதை இலக்கிய வரலாறு கூறுகின்றது. இத்தகைய இலக்கியங்களில் ஒன்றுதான் 'மகாமக அந்தாதிக் கும்மி' என்ற படைப்பாகும். மகாமகத்தின் சிறப்புப் பற்றி அமைந்துள்ள இக்கும்மிப் பாடலை இயற்றியவர் யார் என்பது தெரியவில்லை. மகாமகத் திருவிழா நிகழ்த்தும் காலம் பற்றி,

**மன்னிய மாமகம் மாநிலந் தன்னிலோர்**
**பன்னிரண் டாண்டிற் கொருமுறையாம்**
**வன்னியாம் சூரியன் கும்பத்திருந்திட**
**பன்னிய குருமதி பார்த்திடு நாள்**

எனக் குறிக்கும் பாடல் இடம்பெற்றுள்ளது. இந்த அந்தாதியில் இவ்விழாவின் சிறப்பை மிக எளியமுறையில் கும்மிப்பாடலாகப் பாடப்பட்டுள்ளது இதன் சிறப்பாகும்.

மகாமகம் விழா எந்த ஆண்டு யாரால் முறையாகத் தொடங்கி வைக்கப்பெற்றது என்பதற்கு போதிய வரலாற்றுச் சான்றுகள் இல்லை. ஆனால் கி. பி. 1909ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற மகாமக விழா நாட்கள் பற்றிய செய்தியை அறியமுடிகிறது. அவை பின்வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1. | 06-03-1909 | மாசி 23ல் | கீலக வருடம்-சனிக்கிழமை |
| 2. | 22-02-1921 | மாசி 11ல் | ரௌத்ரி வருடம்-செவ்வாய்க்கிழமை |
| 3. | 10-03-2033 | மாசி 27ல் | ஆங்கிரஸ வருடம் - வெள்ளிக்கிழமை |
| 4. | 26-02-1945 | மாசி 15ல் | தாரண வருடம் - திங்கள் கிழமை |
| 5. | 25-02-1956 | மாசி 13ல் | மன்மத வருடம் -சனிக்கிழமை |
| 6. | 14-02-1968 | மாசி 2ல் | பிலவங்க வருடம் -புதன் கிழமை |
| 7. | 01-03-1980 | மாசி 16ல் | சித்தார்த்தி வருடம்-சனிக்கிழமை |
| 8. | 18-02-1992 | மாசி 6ல் | பிரஜோத்பத்தி வருடம்- செவ்வாய்க்கிழமை |
| 9. | 06-03-2004 | மாசி 23ல் | சுபானு வருடம் - சனிக்கிழமை |

இப்படி நாள், ஆண்டு, கிழமை ஆகிய மூன்றும் மாறி மாறி வருகின்றன. இப்படி 12 கிரகங்களும் இலக்கணங்களையும் சுற்றி வருகின்றன. அவ்வாறு வரும்பொழுது சூரியன் கும்பத்திலிருக்க, கும்பத்திலிருக்கும் சூரியனை சிம்மத்திலிருக்கும் சந்திரனும் குருவும் பார்க்கும் காலத்தைத்தான் மகாமகம் என சிறப்பித்து விழாக் கொண்டாடுகின்றனர். குரு ஒவ்வொரு லக்கனத்திலும் ஒரு வருடம் காலம் தங்கி மாறி வருவதால் சிம்மத்திலுள்ள குரு மறுபடியும் வந்து சிம்ம லக்கனத்திலிருந்து கும்பத்தை பார்க்கும் காலம் 11 ஆண்டுகள் கழிந்து 12ஆவது வருடத்தில்தான் வருகிறது. இவ்வாறு குரு சிம்ம லக்கனத்திலிருந்து மறுபடியும் சிம்ம லக்கனத்திற்கு வர 12 ஆண்டுகள் ஆகிறபடியால் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறையே இவ்விழா மகாமக விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

மகாமகம், மாசி திங்கள் மக நட்சத்திரம் கூடிய நாளில் விருஷப லக்னத்தில் தொடங்கப்பெறுகிறது. இவ்வாறாக அமைகின்ற அதன் நாழிகைக் குறித்த விவரம்

| | | |
|---|---|---|
| கும்பம் | 3. 36 | நாழிகை |
| மீனம் | 4. 14 | நாழிகை |
| மேஷம் | 4. 33 | நாழிகை |
| | 12. 23 | நாழிகை |

அன்றைய நாளின் உதயாதி நாழிகையிலிருந்து கணக்கிட்டால் 12. 33 நாழிகை முடிந்து விருஷப லக்கனம் உதிப்பதற்கு முற்பகல் 11. 30 மணி ஆகிறது. எனவே காலை 11. 30 மணியளவில் மகாமகத் தீர்த்த விழா தொடங்கப்பெறுகிறது.

மகாமக திருவிழா நடைபெற்ற நாட்கள் குறித்துச் சிறிய பகுதியே இங்கு கொடுக்கப்பட்டாலும் நாயக்கர் காலத்தில் கிருஷ்ணதேவராயர் காலம் முதல் மகாமகத் திருவிழா கும்பகோணதில் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது என்பது வரலாறு கூறும் செய்தியாகும். சோழர் கல்வெட்டுக்களில் மகாமகம் கூறப்படாத நிலையில் இருப்பதாலும், மகத் திருவிழா சோழர்களின் காலத்தில் சிறப்பாகக் கொண்டாப்பட்டுள்ளது என்பதாலும் மகாமகத் திருவிழா விஜயநகர மன்னர் காலத்திலிருந்து நாடு தழுவிய விழாவாக அரசு ஆதரவுடன் கொண்டாடப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம். பின்னர் ஏற்பட்ட மராட்டியர் ஆட்சிக்காலத்திலும், சங்கரமடத்தின் முயற்சியாலும் வடஇந்திய கும்பமேளாவை ஒத்த பெருவிழாவாக வளர்ச்சி அடைந்தது எனலாம்.

முற்காலத்தில் ஒன்பது தீர்த்த தேவதைகளும் ஈசனிடத்தில் சென்று, "கடவுளே, உலகத்திலுள்ள பாவிகள் எல்லோரும் எங்களிடம் வந்து மூழ்கித் தங்கள் பாவங்களையெல்லாம் எங்களுக்குக் கரைத்து விட்டுவிட்டுப் புண்யாத்மாக்களாகிச் செல்கின்றனர். நாங்கள் சம்பாதிக்கும் இந்தப் பாவங்களுக்கெல்லாம் விமோசனம்

அருள்புரிய வேண்டும்'' என்று பிரார்த்தனை செய்தனர்.அவர்களிடம் கருணை பாவித்து எம்பெருமான், புண்ய தீர்த்தங்களே! (தேவதைகளே) பாவங்களாலே தீண்டப்படாத அமிர்த வாவிகள் இரண்டு நான் கும்பகோணத்தில் சமைத்திருக்கிறேன். அவற்றில் சென்று ஸ்நானம் புரிந்தால் உங்களுடைய பாவங்கள் விலகிவிடும்'' என்று கட்டளை புரிந்தார். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இங்கு கங்கை முதலிய தீர்த்த தேவதைகள் வந்து ஸ்நானம் புரியும் சமயமாகிய மகாமக புண்ய காலம் ஆகும்.

சங்ககால இலக்கியத்தில் தெய்வங்கள் வழிபட்ட இடங்களைப் பற்றி பல குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இதனை

**ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்**
**கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்**
**அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்**

*(பரிபாடல் 4: 67,69)*

எனவரும் தொடர் ஆலமரத்தின் நிழலிலும், கடம்ப மரத்தின் அடியிலும், ஆறுகளின் பகுதியிலும், குன்றின் மீதும், தெய்வங்களை வழிபட்டு வந்தனர் என்பதை கூறுகின்றது. தெய்வங்கள் தங்கும் இடங்களென

**காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்**
**யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்**
**சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்**
**மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்**

(திருமுருகாற்றுப்படை)

எனக்கூறும் செய்தியாலும் தமிழன் பண்பாட்டில் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே ஆறு, குளம் ஆகிய இடங்களில் தெய்வங்கள் தங்குமிடங்களாகச் சுட்டப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகிறது. எனவே புண்ணிய தீர்த்தங்களில் தீர்த்தமாடுவது என்பது சங்கத் தமிழரின் பண்பாடாகும். இப்பண்பாட்டின் தொடர்ச்சியான மரபும் நம்பிக்கையும் இன்றும் தமிழர்களால் பின்பற்றப்படுவது தமிழக வரலாற்றுச் சிறப்பைக் காட்டுகின்றது. இதன் வழிவந்த மரபே கும்பகோண மகாமகத் திருவிழாவாகும்.

*****



சரஸ்வதி

# மகாமகக் குளத்தை நிர்மாணித்த கோவிந்த தீட்சிதர்

**பி. ரவி தீட்சிதர்,**

கும்பகோணம் காணும் பிரமாண்ட விழாவான மகாமகத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றுவருகிறது. குறிஞ்சி மலர் போல 12 வருடங்களுக்கு ஒருமுறை வரும் இந்த விழாவின் நாயகனே மகாமகக் குளம்தான்.

செவ்வப்ப நாயக்கர், அச்சுதப்பநாயக்கர் மற்றும் ரகுநாத நாயக்கர் ஆகிய மூன்று சந்ததி மன்னர்களுக்கும் முக்கிய ஆலோசகராகவும் முதல் அமைச்சராகவும் இருந்தவர் கோவிந்த தீட்சிதர். இவர் மைசூர் தசரத ராமய்யரின் புதல்வர் ஆவார்.



கோவிந்த தீட்சிதர்

கோவிந்த தீட்சிதர் முயற்சியால்தான் தரங்கம்பாடி துறைமுகம் கடல் வணிகம் சிறப்பு பெற்றது. மேலும் டென்மார்க் அரசின் தூதுவராக வந்த ஓவ்.ஜெடியுடன் பேச்சுவார்த்தை நடத்தி ரகுநாதநாயக்கர் அரசுடன் ஒப்பந்தம் செய்ய காரணமாக இருந்து அரசின் வியாபார முன்னேற்றத்திற்கு அவர் காரணமாக அமைந்தார். மேலும் 1620ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கும் ஆதாரமாக இருந்தார்.

நாயக்கர் காலத்தில் அரசவைக்கு மிகவும் நம்பிக்கைக்கு உரியவராகவும், மக்களின் நலனிற்காக திட்டங்கள் வகுத்து நீதி தவறாத ஆட்சி என்று பெருமை சேர்த்ததால் மன்னருக்கு இணையாக அமரும் தகுதி கோவிந்ததீட்சிதருக்கு அளிக்கப்பட்டது.

கோவிந்த தீட்சிதர் சேவையைப் பாராட்டி நாயக்க மன்னரால் நாணயங்கள் வெளியிடப்பட்டன. ஒரு அமைச்சர் பெயரில் வந்த முதல் நாணயம் (செப்புக்காசு) இது ஆகும். நாணயத்தின் ஒரு பக்கம் தோரண வாயிலில் நின்ற நிலையில் நாயக்க மன்னன் உருவமும், பின்பக்கம் மூன்று வரிகளில் தமிழ் எழுத்தில் கோவிந்தய்யார் என்று குறிப்பிடப்பட்டு 25 கிராம் எடையுடன் செப்புக்காசு வெளியிடப்பட்டது.

இவரது பெயரில் கோவிந்தகுடி, கோவிந்தபுத்தூர், அய்யன்பேட்டை. அய்யன்கடைவீதி, அய்யன்குளம், அய்யன் வாய்க்கால் போன்ற இடங்கள் குறிப்பிட்டு அழைக்கப்படுகின்றன.

**பி. ரவி தீட்சிதர்,** கும்பகோணம்.

திருவையாறு தல புராணம் புகழ்பெற்ற தாண்டவமாலை என்ற சோதிடநூல் உள்பட பல நூல்களை அவர் எழுதியுள்ளார். சோழ தேசத்தில் நாயக்க மன்னர்கள் தர்மம் செய்து சமயப்பணிகள் செய்ய தூண்டுகோலாக இருந்தார்.

**எடைக்கு எடை**

இவரின் முயற்சியினை பாராட்டி அரசன் ரகுநாதன் என்பவர் கோவிந்த தீட்சிதரின் எடைக்கு எடை பொன் தந்து பாராட்டினார். வேத சாஸ்திர நிபுணரான கோவிந்த தீட்சிதர் கும்பகோணத்தில் காவிரியின் தென்கரையில் 1542ஆம் ஆண்டு ராஜா வேதகாவ்ய பாடசாலையை நிறுவினார். வேதபாடசாலை இருந்ததை பெருமைப்படுத்தவே இவ்வீதி யாகசாலைத்தெரு என்று அழைக்கப்படுகிறது.

கோவிந்த தீட்சிதர் பற்றி கோவில் சாசனம், தென்னிந்திய கோயில் சாசனம், தரங்கம்பாடி கல்வெட்டு, விஜயநகரப்பேரரசு சரித்திரம், ரகுநாத விலாச நூல், சதுர்தண்டி பிரகாசிகா உள்பட பல நூல்களில் கூறப்பட்டுள்ளது.

நெற்களஞ்சியம் என அழைக்கப்படும் தஞ்சை பகுதி கோவில்களை விரிவுபடுத்தி கட்டிடம் கட்டுவது, புதுப்பிப்பது போன்ற பல காரியங்களில் முழுமூச்சாக ஈடுபட்டுச் செயல்பட்டவர் இவர். திருப்பாலத்துறை கோபுரக் கட்டுமானம், நெற்சேமிப்புக் கிடங்கு, ஆதிகும்பேசுவரர் கோவிலின் புதிய சன்னதி ராஜகோபுரம், ராமசாமி கோவில், புராதன வேத கல்விச்சாலை இவை அனைத்தும் கோவிந்த தீட்சிதரின் முயற்சியால் உருவாக்கப்பட்டவையாகும்.

**தானத்தால் உயர்ந்தவர்**

தனக்குத் தானமாகக் கிடைத்த பொன்னும், பொருளும் கொண்டு மகாமகக் குளத்தில் படிக்கட்டுகளைச் சீர் செய்யும்படி செய்தார் தீட்சிதர். நாயக்க மன்னர்கள் தனக்கு தந்த 16 வகை தானங்களின் பெயர்களை கொண்ட 16லிங்கங்கள் வைத்து மகாமகக்குளத்தில் மண்டபம் உருவாக்கிட உதவின.

குளத்தைச் சுற்றி இருந்த மணல், சேற்றுப் பகுதிகளை தூய்மைப்படுத்தி குளத்தின் உள்ளே ஏறி இறங்கும் வகையில் படித்துறைகளை அமைக்கச் செய்தார். கோவிந்த தீட்சிதர். குளத்தைச் சுற்றிலும் அமைத்த 16 மண்டபங்களிலும் சிவன் கோவில்களை அழகாக அமைத்திட வழி செய்தார்.

**உலகம் வியக்கும் உன்னத குளம்**

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமகக் குளத்தை அனைவரும் கண்டு ரசிக்கும் வகையில் அமைத்த கோவிந்த தீட்சிதரின் புகழ் இன்றளவும் பரவிவருகிறது. சுந்தர அழகில் சொக்க வைக்கும் சுற்று மண்டபங்கள் எழில் தோற்றங்களுடன் அமைய காரணமான கோவிந்த தீட்சிதருக்கு உடனிருந்து ஒத்துழைப்பு நல்கியவர் அவரது மனைவி நாகாம்பிகா. இவரது வழித்தோன்றல்கள் இன்றும் கும்பகோணம் கல்யாணராமன் தெருவில் வசித்து வருகின்றனர். அவர் வாழ்ந்த வீடு கும்பகோணம் சங்கர மடத்திற்கு தென்புறம் உள்ளது. அந்த வீடு தற்பொழுது வேங்கடமகி அவதார இல்லம் என்று அழைக்கப்படுகிறது.

*****

# திவ்யப் பிரபந்தப் பாசுரங்களில் குடந்தை

முனைவர் **பா. நடராசன்,**

உலக அளவில் தோன்றி வளர்ந்துள்ள மதங்கள் பலவற்றுள் இந்து மதமும் ஒன்றாகும். அது குறிப்பிட்ட சமயப் பெரியாரால் தோற்றுவிக்கப் பெற்றதில்லை என்பது அதன் தனிச் சிறப்பாகும். இந்து மதத்தில் ஆறு உட்பிரிவுகள் உண்டு. அவை சௌரம், சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம் என்பனவாகும். திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு ஒழுகப்பெறுவது வைணவம் ஆகும். தமிழகத்தில் மிகப் பழங்காலம் முதலே வைணவம் இருந்து வந்துள்ளது. வைணவச் சமயத்தை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்களுள் ஆழ்வார்களுக்கு முக்கிய பங்கு உண்டு. இறைபக்தியில் ஆழ்ந்தவர்கள் ஆனதால் ஆழ்வார்கள் எனப்படுகின்றனர். பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார்., குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார் என ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். இவர்கள் பாடிய பாடல்களின் தொகுதிக்கு “நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்” என்று பெயர். இதனைத் தொகுத்தவர் நாதமுனிகள் என்பவராவார். ஆழ்வார்கள் பாடிய திவ்யதேசங்கள் நூற்றெட்டு ஆகும். அவற்றுள் ஒன்று குடந்தை நகரம் ஆகும். குடந்தை நகரத்துள்



இராமர் பட்டாபிஷேகக்காட்சி

முனைவர் **பா. நடராசன்,** முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், டி. ஜி. வைணவக் கல்லூரி சென்னை-16.

வைணவத் திருக்கோயில்கள் நிறைய இருந்தாலும் சாரங்கபாணி கோவில் ஒன்று மட்டுமே ஆழ்வார்களால் பாடப்பெற்றதாகும். இத்திருக்கோயில் உள்ள குடந்தை நகரம் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களில் எங்ஙனம் போற்றிப் புகழப்பெறுகிறது என்பது குறித்து இனிக்காணலாம்.

சோழநாட்டில் தெய்வ நலம் சிறக்கப்பெற்ற ஊர் குடமூக்கு என்பதாகும். அது குடந்தை என்று ஆழ்வார் பாசுரங்களிலும் தேவாரப் பாடல்களிலும் குறிக்கப்பெறுகிறது. தற்காலத்தில் 'கும்பகோணம்' என்று மக்கள் வழக்கில் இருந்து வருகிறது. இவ்வூரின் பெயர்க்காரணம் குறித்து டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை தம்முடைய ஆற்றங்கரையினிலே என்ற நூலில் விளக்கியுள்ளார். அதாவது பண்டைத் தமிழிலே கிழக்கைக் குணக்கு என்றும் மேற்கைக் குடக்கு என்றும் வழங்கினர். அதனடிப்படையில் குடமூக்கு என்பது மேற்கு மூலையில் அமைந்த ஊரைக் குறித்தது போலும் என்கிறார் அவர். மேலும் அவர், குடமூக்கு என்ற பெயரைக் குறுக்கிக் குடந்தை என்று வழங்குவது உண்டு என்றும், அதனைப் புராணம் இயற்றிய புலவர்கள் கும்பகோணம் என்று வடமொழியில் பெயர்த்தனர் என்றும் (பக்கம்:114) குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றிலிருந்து குடமூக்கு என்னும் பெயர் பழமையானது என்பதும், குடந்தை என்பது இடைக்காலத்தில் குறுக்கி வழங்கப்பெற்ற பெயர் என்பதும், கும்பகோணம் என்பது வடமொழிப் பெயர் என்பதும் பெறப்படுகின்றன.

திவ்யப்பிரபந்தப் பாசுரங்களுள் ஐம்பது பாடல்கள் குடந்தையைப் பற்றியதாக உள்ளன. அப்பாடல்களைப் பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை யாழ்வார் ஆகிய எழுவர் பாடியுள்ளனர். திவ்யப்பிரபந்தப் பாசுரங்களுள் குடமூக்கு என்று ஒரே ஒரு இடத்தில் மட்டும் பயின்று வந்துள்ளது. மற்ற இடங்களில் குடந்தை என்ற பெயரே பயின்று வந்துள்ளது. பூதத்தாழ்வார் "குடமூக்குக் கோயிலாகக் கொண்டு" (பாடல் எண். 2278) என்று குடமூக்கு என்ற பெயரைப் பதிவு செய்திருக்கிறார். ஆழ்வார்களுள் காலத்தால் முற்பட்டவர் பூதத்தாழ்வார் என்பதால் 'குடமூக்கு' என்பது பழங்காலத்திய தாக இருக்க இடம் இருக்கிறது. பேயாழ்வார், "மண்ணகத்த தென் குடந்தை" (பாடல் எண்.2343) என்று பாடியுள்ளார். அதாவது பூமியின் நடுநாயகமான திருக்குடந்தை என்று உரையாசிரியர்கள் அதற்கு உரை வகுத்துள்ளதிலிருந்து குடந்தை பிற ஊர்களுக்கெல்லாம் முதன்மை இடம்பெறுகிறது என்று பூதத்தாழ்வார் குறித்துள்ளார் எனலாம்.

ஆழ்வார்கள் குடந்தையின் இயற்கையழகையே அதிகம் பாடியுள்ளனர். திருமழிசையாழ்வார், "சாலிவேலி தண்வயல் தடங்கிடங்கு பூம்பொழில், கோலமாடம் நீடு தண் குடந்தை "(பா. எண். 810) என்று பாடியுள்ளார். அதாவது நெல் வளர்ந்த வயல்களும் அகன்ற அகழிகளும், பூந்தோட்டங்களும், உயர்ந்த மாடங்களும் பெருகி நிற்கின்றதும் குளிர்ச்சி யுடையதுமான குடந்தை என்பது அதன் பொருளாகும்.

நம்மாழ்வார், "சீரார் செந்நெல் கவரிவீசும் செழு நீர்த் திருக்குடந்தை" (பா.எண்.3418) என்று பாடியுள்ளார். அதாவது நீர்வளம் மிகுந்த குடந்தைக்குச் செழித்த செந்நெல் பயிர்கள் சாமரம் வீசுகிறது என்று கற்பனை நயம் தோன்ற அழகாகப் பாடியுள்ளார். மேலும் அவர், "செம்மா கமலம் செழுநீர் மிசைக் கண் மலரும் திருக்குடந்தை" (பா.எண்.3419) என்று பாடியுள்ளார். அதாவது திருக்குடந்தையில் செந்தாமரைப் பூக்கள் பூத்துக் குலுங்கும் நீர் நிலைகள் பல உள்ளன என்று அவர் பதிவு செய்திருக்கிறார்.

திருமங்கையாழ்வார், தமது திரு எழு கூற்றிருக்கையில், "குன்றாது மதுமலர்ச் சோலை வண்கொடிப் படப்பை, வருபுனல் பொன்னி மாமணி அலைக்கும், செந்நெல் ஒண்கழனி, திகழவனம் உடுத்த, கற்போர் புரிசைக் கனக மாளிகை, நிமிர்கொடி விசும்பில் இளம்பிறை துவக்கும், செல்வம் மல்கு தென் திருக்குடந்தை" (பா.எண்.2672) என்று குடந்தையைப் பற்றிய பல்வேறு சிறப்புகளைப் பதிவு செய்திருக்கிறார். அதாவது தேன் துளிர்க்கும் பூக்கள் நிறைந்த பூஞ்சோலைகள், வெற்றிலை தோட்டங்கள், மணிகளைக் கொழித்தபடி நெல் வயல்களில் பாயும் காவிரியாறு, கல்வியில் சிறந்தோர்கள் வாழும் பொன் மாளிகைகள், சந்திரனைத் தொடும்படி நிமிர்ந்து நிற்கும் விண்ணை நோக்கிய கொடிகள், செல்வம் நிறைந்திருத்தல் போன்ற அனைத்துச் சிறப்புகளும் ஒருங்கே பெற்றதுதான் திருக்குடந்தை என்று அவர் தம் பாடல் வரிகளின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். இவர் கூறியுள்ள சிறப்புகளில் குடந்தையில் வெற்றிலைத் தோட்டங்கள் நிறைந்துள்ளன என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இன்றும் கும்பகோணம் வெற்றிலை என்று தமிழ் மக்களிடையே குடந்தையை மையப்படுத்தி உரைக்கும் வழக்கம் இருக்கிறது. பாரதியும், "கங்கை நதிப்புரத்து கோதுமைப் பண்டம், காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்" என்று பாடியுள்ளார். ஆக, இன்றைக்குச் சிறப்பித்துக் கூறப்பெறும் கும்பகோணத்து வெற்றிலை, ஆழ்வார்கள் காலத்திலிருந்தே வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது என்பது குடந்தைக்கு உரிய தனிச் சிறப்பாகும். திருமங்கையாழ்வார் வேறொரு பாடலில், "தூவிசேர் அன்னம் துணையொடும் புணரும் சூழ்புனல் குடந்தை" (பா. எண்.949) என்றும் பாடியுள்ளார். அதாவது சிறகுடைய அன்னம் தன் பெடையுடன் கலந்து வாழும் நீர்வளம் உடைய குடந்தை என்பது அதன் பொருளாகும். மேலும் அவரே, "குயில் ஆலும் வளர்பொழில் சூழ் தண் குடந்தை" (பா.எண்.1205) என்றும் பாடியுள்ளார். குயில்கள் பாடும் வளம் மிகு சோலைகள் உள்ள திருக்குடந்தை என்பது அப்பாடல் வரியின் பொருளாகும்.

குடந்தை நகரத்துப் பெண்கள் பற்றித் திருமழிசையாழ்வார், "கொங்கு தங்குவாள் குழல் மடந்தை மார் குடந்தை நீர், பொங்கு தண் குடந்தை" (பா.எண்.808) என்று பாடியுள்ளார். இந்தப் பாடல் வரிகளில் குடந்தை நகரத்துப் பெண்கள் மணம் வீசும் கூந்தலையுடையவர்கள் என்றும், அவர்கள் நீரில் குடைந்து நீராடும் தன்மையுடையவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். வேதியர் பற்றி, "விலங்கு நூலர் வேதநாவர் நீதியான கேள்வியார், வலங்கொளக் குடந்தை" (பா.எண.807) என்று பாடியுள்ளார். அதாவது, பூணூல் அணிந்த நீதி மிக்க வேத விற்பன்னர்கள் வலம் வரும் சிறப்பு கொண்ட குடந்தை என்கிறார். இன்னொரு பாடலில் அவரே, "வேதியர் வரம் கொளக் குடந்தை" (பா.எண்.809) என்று சிறப்பித்துப் பாடியுள்ளார். வேதியர்கள் வரம்பெறக் கூடிய இடமாகக் குடந்தை விளங்குகிறது என்பது அப்பாடல் வரியின் உட்கருத்தாகும்.

நம்மாழ்வார் குடந்தையில் நல்லவர்கள், வல்லவர்கள் நிறைந்து வாழும் சிறப்புப் பற்றிப் பாடியுள்ளார். அதனை "நலத்தார் மிக்கார் குடந்தை" (பா.எண்.3421) என்றும், வாழி தொல்புகழார் குடந்தை" (பா.எண்.3423) என்றும் உள்ள அவருடைய பாடல்வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

குடந்தைக்கு இருக்கும் இத்தனை சிறப்புகளுக்கும் மேலாக ஒரு சுவாரஸ்யமான வரலாற்றுச் சிறப்பும் இருக்கிறது. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை நாதமுனிகள் தொகுப்பதற்குக் குடந்தையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சிதான் காரணம் என்பது அந்தத் தனிச்சிறப்பாகும். நாதமுனிகள் குடந்தையில் உள்ள சாரங்கபாணி கோவிலில் இறை தரிசனம் செய்து கொண்டிருந்தபோது அன்பர் ஒருவர், "ஓராயிரத்துள் இப்பத்தும்" என்று பாடியுள்ளார். அவரிடம் நாதமுனிகள் சென்று, "பத்துப் பாடல்களை இங்குப் பாடினீர்கள்! ஓராயிரம் பாடல்களையும் பாடுங்கள்" என்றார். அதற்கு அவர் "எனக்குத் தெரியாது" என்றும் இருக்கும் இடத்தை அவர் கூற நாதமுனிகள் அங்குத் தேடிச் சென்றபோது ஓராயிரம் அல்லாமல் நாலாயிரம் பாடல்கள் கிடைத்தன என்றும், அவற்றைத் தொகுத்து அளித்தார் என்றும் கூறப்பெறுகிறது.

ஆக வைணவத்தின் நூற்றெட்டுத் திவ்ய தேசங்களுள் குடந்தையும் ஒன்று என்பதும், குடந்தையில் ஆழ்வார்களால் பாடப் பெற்ற திருக்கோயில் சாரங்கபாணித் திருக்கோயில் என்பதும் கண்டோம். நாதமுனிகள் திவ்யப் பிரபந்தத்தைத் தொகுத்த அருஞ்செயலுக்குக் குடந்தையில் நிகழ்ந்த நிகழ்ச்சியே காரணம் என்பதும் பார்த்தோம். அப்பிரபந்தத்தில் குடந்தை பற்றிப் பார்க்கும்பொழுது அங்குச் சீறிப்பாயும் காவிரி, அங்குள்ள இயற்கையழகு, குறிப்பாக அங்கு வெற்றிலைத் தோட்டம் பெறும் பாங்கு, பெண்களின் தனிச்சிறப்பு, வேதியர்கள் நிறைந்து வாழும் சூழல், நல்லோரும், வல்லோரும் மிகுந்து வாழும் பெற்றி ஆகியன குறித்தும் காணப்பெற்றன.

*****

# தஞ்சை மாவட்டத்துத் தேவாரத் திருத்தலங்கள்

க. மனோகரன்,

தேவாரம் பாடியருளிய மூவர் பெருமக்களால் பாடப்பட்ட சிவத்தலங்களில் தஞ்சை மாவட்டத்தில் 54 தலங்கள் அடங்குகின்றன. இத்தலங்கள் பற்றியும் செல்லும் வழிகள் குறித்தும் காண்போம்.

1. **திருக்கடைமுடி (திருச்சென்னம்பூண்டி)** : திருவையாற்றிலிருந்து கல்லணை செல்லும் சாலையில் கல்லணைக்கு முன்னர் உள்ள கோயிலடியை அடுத்து இத்தலம் உள்ளது. இங்குள்ள சிவாலயமே திருஞானசம்பந்தர் பாடிய திருக்கடைமுடி எனக் கல்வெட்டுச் சாசனங்களின் துணைகொண்டு அறிஞர்கள் நிறுவியுள்ளனர். ஆனால் இதுகாறும் மக்கள் வழக்கில் திருக்கடைமுடியை மயிலாடுதுறை-பூம்புகார் சாலையில் உள்ள கீழையூராகப் போற்றுகின்றனர்.



அடியவர்

2. **திருக்காட்டுப்பள்ளி:** திருவையாறு- கல்லணை சாலையில் திருக்காட்டுப்பள்ளி உள்ளது. இத்தலத்தை மேலைத் திருக்காட்டுப்பள்ளி என அழைப்பர். இறைவன் பெயர் தீயாடியப்பர், இறைவி அழகம்மை. திருஞான சம்பந்தரும், அப்பரும் பதிகம் பாடியுள்ளனர்.

3. **திருஆலம்பொழில்:** கண்டியூர்- திருக்காட்டுப்பள்ளி சாலையில் திருப்பூந்துருத்தியை அடுத்து இத்தலம் உள்ளது. இறைவன் ஆத்மநாதன், இறைவி ஞானாம்பிகை. அப்பர் திருப்பதிகம் பாடியுள்ளார்.

4. **திருப்பூந்துருத்தி:** கண்டியூர்- திருக்காட்டுப்பள்ளி சாலையில் கண்டியுரினை அடுத்து உள்ளது. அப்பர் சுவாமிகள் இவ்வூரில் இருந்த திருமடத்தில் சிலகாலம் தங்கி இருந்தார். இறைவன் பொய்யிலியர், இறைவி சௌந்தரநாயகி.

5. **திருநெய்த்தானம்:** இத்தலம் திருவையாறு-கல்லணை சாலையில் உள்ளது. இறைவன் நெய்யாடியப்பர், இறைவி பாலாம்பிகை. திருஞான சம்பந்தர், அப்பர் சுவாமிகள் பதிகம் பெற்றது.

6. **திருவையாறு:** தஞ்சாவூருக்கு வடக்காக 11 கி. மீ. தொலைவில் உள்ளது. இறைவன் ஐயாறப்பர், இறைவி அறம்வளர்த்த நாயகி. மூவர் திருப்பாட்டும் பெற்ற தலம்.

7. **திருச்சோற்றுத்துறை:** கண்டியூர்-பசுபதிகோயில் சாலையில் உள்ளது. இறைவன் சோற்றுத்துறை நாதர், இறைவி ஒப்பிலாம்பிகை. மூவர் திருப்பாட்டும் பெற்ற தலம்.

8. **திருக்கண்டியூர்:** இத்தலம் தஞ்சாவூர்-திருவையாறு சாலையில் உள்ளது. அட்ட வீரட்டங்களில் ஒன்று. இறைவன் வீரட்டேஸ்வரர். இறைவி மங்களநாயகி. சம்பந்தர், அப்பர் பாடல்பெற்ற தலம்.

**க. மனோகரன்,** கம்பாசிடர் (ஓய்வு), சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

**9. திருப்பழனம்:** கும்பகோணம்-திருவையாறு சாலையில் திருவையாற்றுக்கு அண்மையில் உள்ளது. இறைவன் ஆபத்சகாயர், இறைவி பெரியநாயகி. சம்பந்தர், அப்பர் திருப்பாடல்கள் பெற்றது.

**10. திருவேதிகுடி:** கண்டியூர்-பசுபதிகோயில் சாலையில் உள்ள வீரசிங்கம்பேட்டையிலிருந்து பிரியும் கிளைச்சாலையில் உள்ளது. இறைவன் வாழைமடுநாதர், இறைவி மங்கையர்க்கரசி. சம்பந்தர், அப்பர் பதிகம் பெற்ற தலம்.

**11. திருப்புள்ளமங்கை:** கும்பகோணம்-தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் பசுபதிகோயிலுக்கு அருகே கண்டியூர் செல்லும் கிளைச்சாலையில் உள்ளது. திருஆலந்துறை எனத் தேவாரத்தில் குறிக்கப்பெறுகின்றது. இறைவன் ஆலந்துறைநாதர், இறைவி அல்லியங்கோதை. சம்பந்தர் பதிகம் பெற்ற தலம்.

**12. திரு வடகுரங்காடுதுறை:** கும்பகோணம்-திருவையாறு சாலையில் உள்ளது. இவ்வூருக்கு ஆடுதுறைப் பெருமாள் கோயில் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இறைவன் தயாநதீஸ்வரர், இறைவி ஜடாமகுடேஸ்வரி. சம்பந்தர் பதிகம் பெற்றது.

**13. சக்கராப்பள்ளி:** மக்கள் இத்தலத்தை ஐயம்பேட்டை எனக் கூறுவர். தஞ்சாவூர்-குடந்தை சாலையில் உள்ளது. இறைவன் சக்கர வாகேஸ்வரர், இறைவி தேவநாயகி. சம்பந்தர் பதிகம் பெற்ற தலம்.

**14. திருக்கருகாவூர்:** பாபநாசம்-சாலியமங்கலம் சாலை வழியாகவும், தஞ்சாவூரிலிருந்து மெலட்டூர் வழியாகக் கும்பகோணம் செல்லும் சாலை வழியாகவும் இத்தலத்தையடையலாம். இறைவன் முல்லைவனநாதர், இறைவி கருக்காத்த நாயகி. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

**15. திருப்பாலத்துறை:** கும்பகோணம்-தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் உள்ளது. இறைவன் பாலைவனநாதர், இறைவி தவள வெண்ணகையாள். அப்பர் பதிகம் பெற்ற தலம்.

**16. திருத்தென்குடித் திட்டை:** தஞ்சாவூர்-திருக்கருகாவூர் (மெலட்டூர் வழி) சாலையில் உள்ளது. இறைவன் வசிஷ்டேஸ்வரர், இறைவி உலகநாயகி. சம்பந்தர் பதிகம் பெற்ற தலம்.

**17. பரிதி நியமம்:** தஞ்சாவூர் - பட்டுக்கோட்டை சாலையில் மேல உளூர் சென்று இத்தலத்தை அடையலாம். பருத்தியப்பர் கோயில் என இவ்வூரினை மக்கள் அழைப்பர். இறைவன் பரிதியப்பர், இறைவி மங்கலநாயகி. சம்பந்தர் திருப்பதிகம் பெற்ற தலம்.

**18. வெண்ணி:** தஞ்சை-நீடாமங்கலம் சாலையில் கோயில்வெண்ணி என்ற பெயரோடு திகழ்கிறது. இறைவன் வெண்ணி நாதர், இறைவி சௌந்தரநாயகி. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

**19. திருநல்லூர்:** தஞ்சாவூர்-கும்பகோணம் சாலையில் வாழைப்பழக் கடை எனும் இடத்திலிருந்து பிரியும் கிளைச்சாலை வழியே இத்தலத்தை அடையலாம். இறைவன் கல்யாணசுந்தரேஸ்வரர், இறைவி கல்யாணசுந்தரி. ஞானசம்பந்தர், அப்பர் பாடல்பெற்றது.

*20. திருவலஞ்சுழி:* கும்பகோணம்-தஞ்சை சாலையில் உள்ளது. இறைவன் வலஞ்சுழிநாதர், இறைவி பெரியநாயகி. சம்பந்தர், அப்பர் பாடல்பெற்றது.

**21. திருவிசைய மங்கை:** திருவைகாவூரிலிருந்து ஆற்றோரமாகச் செல்லும் கிளைச்சாலையில் உள்ளது. இறைவன் விஜயநாதர், இறைவி மங்கைநாயகி. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம்.

**22. திருப்புறம்பியம்:** கும்பகோணம்-திருவையாறு சாலையில் புளியஞ்சேரியிலிருந்து பிரியும் கிளைச்சாலையில் உள்ளது. இறைவன் புன்னைவன நாதர், இறைவி கரும்பன்னசொல்லி. மூவர் பாடல் பெற்றது.

**23. திருஇன்னம்பூர்:** கும்பகோணம்-திருவையாறு சாலையில் புளியஞ்சேரியிலிருந்து பிரியும் கிளைச்சாலையில் உள்ளது. இறைவன் எழுத்தறி நாதர், இறைவி சுகந்தகுந்தளாம்பிகை. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

**24. திருவைகாவூர்:** கும்பகோணத்திலிருந்து சுவாமிமலை வழியாகத் திருவைகாவூர் அடையலாம். இறைவன் வில்வநாதர், இறைவி வளைக்கை நாயகி, சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

**25. திருக்கொட்டையூர்:** கும்பகோணம்-திருவையாறு சாலையில் உள்ளது. இறைவன் கோடீஸ்வரர், இறைவி பந்தாடுநாயகி. அப்பரால் பாடல் பெற்றது.

**26. ஆவூர்:** கும்பகோணத்திலிருந்து மெலட்டூர் வழியாகத் தஞ்சை செல்லும் சாலையில் உள்ளது. திருக்கோயில் ஆவூர்ப் பசுபதீச்சரம் என அழைக்கப்பெறும். இறைவன் பசுபதிநாதர், இறைவி மங்களாம்பிகை. சம்பந்தரால் பாடல் பெற்றது.

**27. பட்டீச்சரம்:** கும்பகோணம்-ஆவூர் சாலையில் உள்ளது. இறைவன் பட்டீச்சுரர். இறைவி ஞானாம்பிகை. சம்பந்தரால் பாடல் பெற்றது.

**28. திருச்சத்திமுற்றம்:** பட்டீச்சரம் கோயிலையடுத்து உள்ளது. இறைவன் சிவக்கொழுந்தீசர், இறைவி பெரியநாயகி. அப்பரால் பாடல் பெற்றது.

**29. பழையாறை வடதளி:** கும்பகோணம் ஆவூர் சாலையில் முழையூர் சென்று இத்திருத்தலத்தை அடையலாம். இறைவன் தர்மபுரீஸ்வரர், இறைவி விமலநாயகி. அப்பரால் பாடல் பெற்றது.

**30. பழையாறை:** இத்திருக்கோயில் கீழைப்பழையார் என்ற சிற்றூரில் (முழையூருக்கு அருகே) உள்ளது. இறைவன் சோமேசர், இறைவி சோமகமலாம்பிகை அப்பரால் பாடல் பெற்றது.

**31. கருக்குடி:** கும்பகோணம்-மன்னார்குடி சாலையில் மருதாநல்லூர் என்ற பெயரில் உள்ளது. இறைவன் கருக்குடி நாதர், இறைவி அத்வைத நாயகி. சம்பந்தரால் பாடல் பெற்றது

**32. நறையூர் சித்தீச்சரம்:** கும்பகோணம்-நாச்சியார்கோயில் சாலையில் திருநறையூர் என்ற பெயரில் இவ்வூர் திகழ்கிறது. இறைவன் சித்த நாதேஸ்வரர், இறைவி சௌந்திரநாயகி. சம்பந்தர், சுந்தரரால் பாடல் பெற்றது.



**நறையூர் சித்தீச்சரம்**

**33. பேணுபெருந்துறை:** கும்பகோணம்-காரைக்கால் சாலையில் (நாச்சியார்கோயில் வழி) எரவாஞ்சேரியையடுத்து இவ்வூர் உள்ளது. இறைவன் சிவானந்தேஸ்வரர். இறைவி மங்களாம்பிகை. சம்பந்தரால் பாடல் பெற்றது.

**34. திருச்சேறை:** கும்பகோணம்-திருவாரூர் சாலையில் உள்ளது. இறைவன் செந்நெறி அப்பர். இறைவி ஞானவல்லி. சம்பந்தர், அப்பர் ஆகியோரால் பாடல் பெற்றது.

**35. திருநாலூர் மயானம்:** கும்பகோணம்-திருவாரூர் சாலையில் திருச்சேறையை அடுத்து உள்ளது. இறைவன் ஞானபரமேஸ்வரர், இறைவி ஞானாம்பிகை. சம்பந்தரால் பாடல் பெற்றது.

**36. அரிசிற்கரைப்புத்தூர்:** கும்பகோணம்-நாச்சியார்கோயில் சாலையில் அழகாபுத்தூர் என்ற பெயரில் உள்ளது. இறைவன் படிக்காசு அளித்த நாதர், இறைவி அழகாம்பிகை. மூவர் பாடல்.

**37. சிவபுரம்:** கும்பகோணம்-நாச்சியார்கோயில் சாலையில் உள்ளது. இறைவன் சிவபுரநாதர், இறைவி சிங்காரவல்லி. சம்பந்தர், அப்பர் பாடியது.

**38. திருக்கலயநல்லூர்:** கும்பகோணம்-நாச்சியார்கோயில் சாலையில் சாக்கோட்டை என்ற பெயரில் உள்ளது. இறைவன் அமிர்தகலசநாதர், இறைவி அமிர்தவல்லி. சுந்தரரால் பாடல் பெற்றது.

**39. திருக்குடமூக்கு:** கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயில். இறைவன் கும்பேஸ்வரர், இறைவி மங்களாம்பிகை. அப்பர், சம்பந்தரால் பாடல் பெற்றது.

**40. குடந்தைக் கீழ்க்கோட்டம்:** கும்பகோணம் நாகேஸ்வரசுவாமி திருக்கோயில். இறைவன் நாகநாதர், இறைவி பெரியநாயகி. அப்பர் பாடல் பெற்ற தலம்.

**41. குடந்தைக் காரோணம்:** கும்பகோணம் மகாமகக் குளத்தின் வடகரையில் உள்ள காசி விஸ்வநாதர் கோயில். இறைவன் விஸ்வநாதர், இறைவி அன்னபூரணி. சம்பந்தரால் பாடல் பெற்றது.

**42. திருநாகேச்சுரம்:** கும்பகோணத்திற்கு கிழக்கே 5 கி. மீ. தொலைவில் காரைக்கால் பெருவழியில் உள்ளது. இறைவன் நாகநாதர், இறைவி குன்றாமாமுலையம்மை. மூவரால் பாடல் பெற்றது.

**43. திருவிடைமருதூர்:** கும்பகோணம்-மயிலாடுதுறை நெடுஞ் சாலையில் உள்ளது. இறைவன் மகாலிங்கேஸ்வரர், இறைவி பெருநல முலையம்மை. மூவரால் பாடல் பெற்றது.

**44. தென்குரங்காடுதுறை:** கும்பகோணம்-மயிலாடுதுறை நெடுஞ் சாலையில் உள்ளது. இறைவன் ஆபத்சகாயேஸ்வரர், இறைவி பவளக் கொடியம்மை. சம்பந்தர், அப்பரால் பாடல் பெற்றது.

**45. திருநீலக்குடி:** கும்பகோணம்-காரைக்கால் சாலையில் உள்ளது. இறைவன் நீலகண்டேஸ்வரர், இறைவி அனுபமஸ்தனி. அப்பரால் பாடல் பெற்றது.

**46. திருவியலூர்:** திருவிடைமருதூர்-வேப்பத்தூர் சாலை வழியாகவும், குடந்தையிலிருந்து காவிரி, வடகரை வழியாக மயிலாடுதுறை செல்லும் வழியாகவும் இத்தலத்தை அடையலாம். இறைவன் யோகாநந்தீஸ்வரர், இறைவி சாந்தநாயகி. சம்பந்தரால் பாடல் பெற்றது.

**47. திருந்துதேவன்குடி:** குடந்தை-மயிலாடுதுறை வடகரை சாலையில் நண்டாங்கோயில் என்ற பெயரில் உள்ளது. இறைவன் அருமருந்தீஸ்வரர், இறைவி அருமருந்தம்மை. சம்பந்தரால் பாடல் பெற்றது.

**48. திருமங்கலக்குடி:** கும்பகோணம்-மயிலாடுதுறை (காவிரி வடகரை) சாலையில் உள்ளது. இறைவன் பிரணவரதேஸ்வரர், இறைவி மங்களநாயகி. சம்பந்தர், அப்பர் ஆகியோரால் பாடல் பெற்றது.

**49. திருக்கோடிக்கா:** கும்பகோணம்-மயிலாடுதுறை காவிரி வடகரை சாலையில் திருக்கோடிக்காவல் என்ற பெயரில் உள்ளது. இறைவன் கோடீஸ்வரர், இறைவி திரிபுரசுந்தரி. சம்பந்தர், அப்பர் ஆகியோரால் பாடல் பெற்றது.

**50. கஞ்சனூர்:** கும்பகோணம்-மயிலாடுதுறை வடகரைச்சாலையில் திருக்கோடிக்காவை அடுத்து உள்ளது. இறைவன் அக்னீஸ்வரர், இறைவி கற்பகாம்பிகை. அப்பரால் பாடல் பெற்ற தலம்.

**51. பந்தணைநல்லூர்:** திருப்பனந்தாள்-மயிலாடுதுறை சாலையில் பந்தநல்லூர் என்ற பெயரில் உள்ளது. இறைவன் பசுபதீஸ்வரர், இறைவி வேணுபுஜாம்பிகை. சம்பந்தர், அப்பர் ஆகியோரால் பாடல் பெற்றது.

**52. சேய்ஞலூர்:** கும்பகோணம்-திருப்பனந்தாள் சாலையில் சேய்ஞலூர் சாலை பிரிகிறது. இறைவன் சத்தியகிரீஸ்வரர், இறைவி சகிதேவி அம்மை. சண்டேசர் அவதரித்த பதி. சம்பந்தரால் பாடல் பெற்றது.

**53. திருஆப்பாடி:** கும்பகோணம்-திருப்பனந்தாள் சாலையில் பிரியும் சேய்ஞலூர் சாலையில் உள்ளது. இறைவன் பால் உகந்தநாதன், இறைவி பெரியநாயகி. அப்பரால் பாடல் பெற்றது.

**54. திருப்பனந்தாள்:** கும்பகோணம்-அணைக்கரை சாலையில் உள்ளது. இறைவன் செஞ்சடையப்பர், இறைவி தாலவனேசுவரி. சம்பந்தர் பாடல். இவ்வூரில் ஸ்ரீகாசி மடம் உள்ளது.

**55. அவளிவநல்லூர்:** அம்மாப்பேட்டை-கும்பகோணம் சாலையில் உள்ளது. இறைவன் சாட்சிநாதர், இறைவி சௌந்திரவல்லி. சம்பந்தர், அப்பரால் பாடல் பெற்றது.

**56. அரதைப்பெரும்பாழி:** அம்மாப்பேட்டை-கும்பகோணம் சாலையில் அரித்துவாரமங்கலம் என்ற பெயரில் உள்ளது. இறைவன் பாதாளேஸ்வரர், இறைவி அலங்காரவல்லி. சம்பந்தரால் பாடல் பெற்றது..

**57. இரும்பூளை:** கும்பகோணம்-நீடாமங்கலம் சாலையில் ஆலங்குடி என்ற பெயரில் உள்ளது. இறைவன் காசி ஆரண்யேஸ்வரர், இறைவி ஏலார்குழலி. சம்பந்தரால் பாடல் பெற்றது.

**58. திருஉசாத்தானம்:** முத்துப்பேட்டைக்கு அண்மையில் உள்ள இத்தலம் கோயிலூர் என்று வழங்குகின்றது. இறைவன் மந்திரபுரீஸ்வரர், இறைவி பெரியநாயகி. சம்பந்தரால் பாடல் பெற்றது.

*****

# கும்பகோணம் மகாமகம் திருவிழாவில் காணும் ஆன்ம நேய ஒருமைப்பாடு

**சம்பத் நிரங்காரி,**

பஞ்சதத்துவத்தால் ஆன பதுமை தனித்தனி மனிதர் ஆனது காண்
சிலதோ இந்து சீக்கியர் கிறிஸ்து சிலதோ முஸ்லீம் ஆனது காண்.
-சம்பூரண அவதார் வாணி-91

ஆன்மாவிடத்து பிறிதொரு ஆன்மா பேதபாவமற்றது. அது மெய், சத்தியமானது. அழிவற்றது. ஆனால் அந்த மெய்யினை தாங்கி நிற்கும் உடல் அல்லது அந்த உடலால் அறியப்படும் மனிதர்களிடையே இந்த பூவுலகில் பேதபாவம் பேணப்படுகிறது. வெளி, வளி, நெருப்பு, நீர் மற்றும் மண் என்ற ஐம்பூதத்தின் கலப்பிலான பதுமைகளே மனிதர்கள். மனித உடல் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப விதவிதமாய் வடிவம் தாங்கி நிற்கிறது. அந்த வடிவிற்கேற்ற பெயரினை தன் விருப்பம்போல் சூட்டிக்கொள்கிறது. உண்மையில் எந்நிலையிலும், மனிதருக்கும் பிரிதொரு மனிதருக்கும் இடையே வேறுபாடுகள் எதுவும் இல்லை என்பதை அறியவேண்டும். அதனையொத்தே இறைவனும் எந்நிலையில் நின்று வணங்குவோர்க்கும் அந்நிலைக்கு இறங்கிவந்து அருள் செய்கிறான். ஈசன், பரமாத்மபரமபிதா, அல்லா என பலவாறாக விளித்து அழைக்கப்படும் பரம்பொருள் ஒன்றே.

ஆகம விதிகள் வகுத்துறைக்கும் வழியினில் சென்று அந்த ஈசனை வணங்குதல் சிறப்பானது வேத ஆகமங்கள் இதனை உறுதிசெய்கின்றன. உண்மை. அதே வேளையில் அனன்ய பக்தியில் திளைத்து தன்னிலை மறந்து நின்ற 63 நாயன்மார்கள் உள்ளிட்ட சிவனடியார்களையும், பன்னிரு ஆழ்வார்கள் முதலாய் பக்தி உணர்வு மேலோங்கிய நிலையில் மெய்யன்பைத் தவிர பிற அறியா பாமரர்கள் மீதும் பரமன் தனது பேரருளை பெய்வித்தான் என்பதும் உண்மைக்கு மிகைந்தது அல்ல. அத்தகைய இறையோன் ஈசனே ஆகமம் அறியா பாமரனும் பாவம் தொலைத்து புண்ணியம் தேட வழிசெய்யும் முகத்தான் கும்பகோணம் மகாமகம் தீர்த்தவாரியினையும் அருளிச்செய்தனர்.

பக்தி என்ற ஒற்றை நிலையில் நின்று செயல்படும் அத்தனை கருமங்களும் பரமனால் அங்கீகரிக்கப்படுகின்றன. யார், எந்த முறையில் தன்னை வணங்கினர் என்பதை விடவும் யார் யாரெல்லாம் மெய்யான பக்தியில் திளைத்து நின்றனர் என்பதே இங்கு முக்கியமாகிறது. மெய்பக்தியுடையோரே ஈசனின் சன்னிதியில் இடம்பெறுகின்றனர். அவர்களது பாவம்

**சம்பத் நிரங்காரி,** தஞ்சாவூர்.

அகற்றப்படுகிறது. எண்ணங்கள் ஈடேறுகின்றன. சூடிக்கொடுத்த சுடர்கொடியாள் திருப்பாவை தந்த ஆண்டாள், ஈசன் கண்ணில் பட்ட புண்ணை போக்க தன் கண்ணை ஈந்த வேடன் கண்ணப்பன், தான் புசித்தவற்றில் அதிக ருசியுடன் கண்டு இராமபிரானுக்கு உண்ணக் கொடுத்து மகிழ்ந்த சபரி அன்னை இவர்களின் வரலாறும் நமக்கு தெரிவிக்கும் உண்மை இதுவே.

எங்கெல்லாம் பாமரனின் பக்தி அங்கீகரிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் ஈசன் எழுந்தருள்புரிகின்றான். அத்திரு தீர்த்தங்களில் மக்கள் பெருந்திரள் கூட்டம் தம்மை மறந்த நிலையில் கூடி களிக்கின்றது. இந்நிலை வடக்கே கும்பமேளாவிலும், தெற்கே நமது கும்பகோணம் மகாமகத் திருவிழாவிலும், வெள்ளிடை மலையாய் வெளிப்படுகின்றது. இதுவே, ஆன்மநேய ஒருமைப்பாடு அங்கே இலங்குகின்றது என்பதற்கு சான்றாய் அமைகின்றது. பக்தர்கள் ஒருவர் இருவராய் தனித்து செல்லுங்கால் தன்னுடைய தகுதி மற்றும் தன்னருகே நிற்பவர் தகுதியினை எண்ணி மனம் ஐயங்கொள்கிறது. ஆனால் அதே வேளையில் பக்தர்கள் ஆயிரமாயிரம்பேர் இலட்சோபலட்சமாய் கூடிச்சென்று திருமுழுக்கு செய்யுங்கால் அருகிலிருப்பவர் பற்றி மட்டும் அல்ல வேறு எதனையும் கூட உள்ளம் எண்ணுவது இல்லை. தன்னை மறந்த நிலையில் ஒருமையுடன் ஈசன் திருவடியை நினைந்து இறைவனை, ஈசனை, அவனது கருணை என்னும் அருள் மழையை மட்டுமே மனம் நாடி நிற்கிறது. பக்தர்களிடையே பேதபாவமற்ற நிலை மேலோங்குகிறது. இங்கே மனிதர்கள் மனிதர்களாக அல்ல ஆன்மாக்களாக அறியப்படுகின்றனர். இதுவே ஆன்மநேய ஒருமைப்பாடு. இதுவே பரமானந்தம். பாவம் கழுவி புண்ணியம் சேர்க்கும் புனித தீர்த்தம் இது. ஆனால் இந்த ஆனந்தம் தற்காலிகம் ஆனதே. மனிதர்கள் மீண்டும் மீண்டும் சம்சார சாகரத்தில் மூழ்கும்போது மெல்ல மெல்ல இந்த ஆனந்தம் மறைந்துபோகிறது. அவ்வாறெனில் நிலைத்த பேரின்பமாம் நித்யானந்தத்தினைப் பெற என்ன வழி. பரமாத்மாவின் நிலைத்த அன்பு, கருணையினை பெற ஏது வழி என மனம் தேடும் வேளையில் பகவத்கீதையில் பரமாத்மா ஸ்ரீகிருஷ்ணர் அருளியதை நினைவு கூறலாம். மக்கள் என்னை அவரவருக்கு தெரிந்த வகையிலும், வடிவிலும் வணங்கி மகிழ்கின்றனர். நான் அவர்களது வேண்டுதலை ஏற்று பலனளிக்கின்றேன்.ஆனால் எவரொருவர் எனது மெய்யான அழிவற்ற சத்திய வடிவை அறிந்து வழிபடுகிறார்களோ அவரே எனது அன்பிற்குரியவர். எனவே நிலையான பேரின்பம் என்ற நித்யானந்தத்தினை பெற நமக்கு முன்னே உள்ள ஒரே உபாயம், அந்த ஒன்றான பரம்பொருளை முக்காலும் அழியாத சத்தியத்தினை, ஏங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் நிரங்காரத்தினை அறிந்து பக்தி செய்வது **ஒன்றே.**

அப்பொழுதுதான் ஒருமை நமது உள்ளத்தில் ஓங்கும் என சற்குரு மகாசன்னிதானம் நிரங்காரி பாபா அருள்மொழிகின்றார்கள்.

திருவருட்பாபிரகாச வள்ளலாரும் இதனை வலியுறுத்தியதை இங்கே காணலாம்.

**காற்றாலே புவியாலே ககன மத னாலே**
**கனலாலே புனலாலே கதிராதி யாலே**
**கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே**
**கோனாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்களாலே**
**வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்**
**மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே**

ஆன்ம நேயம் ஓங்கும் குடந்தை மகாமக திருவிழா தீர்த்தமாடினோர், அவர்தம் குடும்பத்தினர், உற்றார் சுற்றம் அனைவரின் பாவம் நீங்கி புண்ணிய ஆத்மாவாக பொலிவுபெற எல்லாம் வல்ல ஈசன், நிரங்காரம் அருள்மழை பொழியட்டும்.

*****



**மகாமகக்குளம்**

Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Libraray is one among the few medieval Libraries that exist in the world. It is an unbounded repository of culture and inexhaustible treasure house of knowledge built up by the succesive dynasties of Nayaks and Marathas of Thanjavur. It contains very rare and valuable collection of manuscripts, books, maps and paintings on all aspects of Arts, Culture and Literature. The Encyclopedia of Britannica in its survey of Libraries of World mentions this as **the most remarkable Library in India.**



குடந்தை இராமசாமி கோயில் சிற்பத்தூண்

## அக்கமாதேவி

ஸ்ரீசைலத்துச் சென்ன மல்லிகார்ஜுனனைச் சிறு பிராயத்திலிருந்தே காதலித்து வாழ்ந்தவள் அக்கமாதேவி. கன்னட நாட்டில் உடுதடி என்பது அவள் பிறந்த ஊர். அரசன் ஒருநாள் ஊர்வலம் செல்லுகையில் அவளது அழகைக்கண்டு அவளை மணக்க விரும்பினான். நான் என் விருப்பப்படியே சிவபெருமானைத் தொழுவேன். சிவனடியார்களை வழிபடுவேன். குருவுக்குப் பணிவிடை செய்வேன். இவற்றுக்குத் தடை நேர்ந்தால் எந்தக் கணமும் விலகுவேன் என்று அவள் விதித்த நிபந்தனையை ஏற்று அரசன் கௌசிகன் அவளை மணந்தான். சிவனடியார்கள் அரண்மனைக்கு எந்நேரமும் வந்தபடி இருப்பார்கள். அரசனுக்கு இது பொறுக்கவில்லை. ஒருநாள் மாதேவி கணவனுடன் இருக்கையில், குரு அவளைக் காண வந்தார். அவன் தடுத்தும் கேளாமல் அவள் குருவைத் தரிசிக்க விரைந்தாள். அன்றே அவள் தனியாக ஸ்ரீசைலத்தை நோக்கிப் புறப்பட்டாள். பொன்னணி பூண்டு, நறுமணங் கமழ, நல்லாடையுடுத்து என்னை மணம் புரிய வருவாய் நாதனே! என்று அவள் பாடிச்சென்று, சிவபிரானை அடைந்து பேரின்பமெய்தினாள்.

– மலர்க்குழு

# கும்பேசர் குறவஞ்சி நாடகம் ஒரு பார்வை

கு. டேனியல்

**முகவுரை**

குறவஞ்சி என்பது பலவகையான பிரபந்தங்களுள், நாடக வகையைச் சார்ந்தது. பண்திறம் முதலிய பண்டைத் தமிழிசை வகையாலமைந்த இலக்கியங்களும், அவற்றிற்குரிய இலக்கணங்களும் இப்பொழுது அருகி விட்டமையாலும், இப்பிரபந்தங்கள் அமைப்பும் இதன்பாற் காணப்படும் இசைப்பகுதிகளும் வடமொழி முறையைப் பின்பற்றி இருத்தலினாலும் இம்முறை பிற்காலத்ததெனக் கருத இடம் தருகின்றது.



குறத்தி குறி சொல்லும் காட்சி

கு. டேனியல், தஞ்சாவூர்

பன்னிரு பாட்டியலில் 'குறத்திப்பாட்டு' என்னும் ஒரு பிரபந்தத்தின் இலக்கணமாக "இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமும், திறம்பட உரைப்பது குறத்திப்பாட்டே" என்னும் சூத்திரமொன்று உள்ளது. அவ்விலக்கணம் குறத்தி குறி கூறுவதாக இயற்றப்படும் நூலுக்கு உரியதாகத் தோன்றுகின்றது. 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகிய கலம்பகத்துள் 'குறம்' என்ற ஓர் உறுப்பு உண்டு. அதன் கண்ணே குறத்தி குறி கூறுதலொன்றே காணப்படும்.

இக்காலத்து வழங்கும் மீனாட்சியம்மை குறமென்னும் நூலைப் போன்றே சிலவற்றில் குறத்தி குறி சொல்லுதற்கு முன்னும், பின்னும் சில செய்திகள் காணப்படுகின்றன. எனவே பன்னிருபாட்டியல் இயற்றப்பட்ட காலத்துக் குறத்தி பாட்டொன்று ஒருவகைப் பிரபந்தம் மட்டும் வழங்கி வந்ததென்றும், அதனைப் பின்பற்றி ஒருறுப்புக் கலம்பகத்துள்ளே அமைக்கப்பட்டதென்றும் அவ்விரண்டையும் தழுவி இசைப்பாட்டும் கலந்து குறமென்னும் பிரபந்தம் எழுந்ததென்றும், அவற்றைப் பின்பற்றி நாடக முறையில் குறவஞ்சியென்னும் பிரபந்தம் இயற்றப்பட்டதென்றும் கூறலாம்.

குறத்தியின் இயல்பு, அவள் குறி கூறுதல், அவளைக் குறவன் தேடி வந்து காணல் முதலிய குறத்தியின் திறத்திலமைந்த செய்திகளே பெரும்பாலும் இதன்கண் அமைத்திருத்தலின் இஃது இப்பெயர்பெற்றது போலும்.

'கும்பேசர் குறவஞ்சி' நாடகமென்னும் இந்நூல் கும்பகோணத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கும்பேசர் மீது முத்தமிழ் கவிராஜசேகரர் என்றழைக்கப் பெற்ற குடந்தை பாபநாச முதலியாரால் இயற்றப்பெற்றது ஆகும். இடையிடையே வெண்பா, அகவல், விருத்தம், கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை முதலிய செய்யுட்களை விரவுவித்துக் கீர்த்தனை ரூபமாக அமைந்துள்ளது இந்நூல்.

கும்பேசர் மீது ஒரு நாயகி காதல் கொண்டு விரகதாபத்தால் துன்பப்படுகிறாள். நிலவையும், தென்றலையும், மன்மதனையும் வெறுத்து புலம்புகிறாள். அப்போது ஒரு குறத்தி வந்து, தன் நாட்டு வளத்தையும், மலை வளத்தையும் சொல்லிக் குறி கூறுகிறாள். 'கும்பநாதர் உனக்கு அருள் செய்வார்' என்று சொல்லுகிறாள். அப்போது அவளைத் தேடிக்கொண்டு அவள் நாயகனாகிய குறவன் வருகிறான். குறத்தியும் குறவனும் சேர்ந்து கும்பேசனை வணங்குகிறார்கள்.

நூலில் பாயிரம் தொடங்கி இறுதியாக வாழ்த்துரை வரை 144 பாடல்களால் கும்பேசர் குறவஞ்சி நாடகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. காப்பு- தோடயம்- மங்களம்-கட்டியக்காரன் வருகை-செகன் மோகினி வருகை-செகன் மோகினி துதித்தல்-காதல் வேட்கை-சகி வருகை- தலைவி கூற்று-சகி இரங்கல்-சகியின் கூற்று-குறத்தி வருகை-வாசல் வளம்- குறத்தி சாதிவளம் கூறுதல்-செகன் மோகினி வினவுதல்-குறத்தி மலைகளைக் கூறுதல்-செகன் மோகினி மலைவளம் வினவுதல்-குறத்தி மலைவளம் கூறுதல்-

செகன் மோகினி தேசங்கள் வினவுதல்-குறத்தி தேசங்களைச் சொல்லுதல்- செகன் மோகினி அண்டகோளத்தின் அதிசயங்கள் வினவுதல் - குறத்தி அண்டகோளத்தின் அதிசயம் கூறுதல் - செகன் மோகினி நதிகளை வினவுதல்-குறத்தி நதிகளைக் கூறுதல்-செகன் மோகினி தலங்களை வினவுதல்-குறத்தி தலங்கள் கூறல்-செகன் மோகினி குறத்தி கற்ற வித்தையை வினவுதல்-குறத்தி தன் வித்தை கூறல்-செகன் மோகினி குறிதேற வினவுதல்-குறத்தியின் மறுமொழி-குறத்தியின் செயல்-குறத்தி குறி சொல்லத் தொடங்கல்-செகன் மோகினி தன் காதலன் அடையாளம் வினவுதல்- குறத்தி அடையாளம் கூறல்-செகன்மோகினி சன்மானம் கொடுத்தல்- குழுவன் வருகை-சிங்கன் வருகை-புள் வரவு கூறல்-கண்ணி பதித்தல்-பறவை படுத்தல்- சிங்கன் குறத்தியைத் தேடி வருந்தல்-சிங்கனும் குறத்தியும் உரையாடல்- கும்பேசர் பவனி வரல்-ஸ்ரீகும்பேசர் தரிசனம்-அருளுதல்-வாழ்த்து. குறத்தியும், குறவனும் சேர்ந்து கும்பேசரைத் துதிக்கிறார்கள். இதனோடு நாடகம் முடிகிறது.

இந்த நாடகம் எளிய நடையில் சங்கீத அமைப்புக்கு ஏற்ற கீர்த்தனைகளையும் நாடக அமைப்புக்கு ஏற்ற பாடல்களையும் கொண்டுள்ளது. குறத்தி தான் கண்ட மலைகளையெல்லாம் அடுக்கிச் சொல்லும்போது பல ஸ்தலங்களின் பெயர்கள் வருகின்றன. இறுதியில் ‘தெரிசனம் பாபநாச மென்ற அசலகிரிக ளின்னஞ் சொல்லித் தொலையாதே, யடிமாதே நான்’ என்று முடிக்கிறாள். இதில் பாவநாசம் என்ற முத்திரை வருகிறது.

இந்நூலில் வரும் குறத்தி சாதாரணமானவள் அல்லள். மிகப் பழங்காலம் முதல் இருந்து வருபவள். அவள் சுபத்திரைக்குக் குறி சொன்னவளாம். இவன் சந்நியாசியல்ல அரசன் என்ற உண்மையைச் சொல்லிப் பரிசு பெற்றவளாம்.

**திரிதண்டு சன்யாசியல்ல ராச னென்று**
**திருச் சுபத் திரைக்குரைத் தேனந்தத்**
**தெள்ளமுது மெய்தா னுள்ள தென்று நல்ல**
**வெள்ளி பொன் னள்ளித்தந்தாள் பார்.**

என்று அவள் தன் பெருமையைச் சொல்லிக் கொள்கிறாள். குந்திதேவிக்குக் கூட குறிசொல்லி ‘வர்ணச் சேலையுமாமுத்து மாலையும் கொந்தளவோலையும்’ பரிசாகப் பெற்றாளாம்.

குறச்சாதியரின் வழக்கங்கள் பல இதனால் அறியப்படுகின்றன. அவள் மாத்திரைக்கோலும் வற்றாப் பாத்திரமான பருங்குறக் கூடையும் வைத்திருப்பாளென்றும் அவள் கைக் குறிகளையும், மெய்க்குறிகளையும் பார்த்துப் பலன் கூறுவாளென்றும், குறி கூறுவதற்கு முன் பல தெய்வங்களையும் தன் குலதெய்வத்தையும வேண்டிக்கொள்வாள் என்றும், பல தலங்கள், மலைகள், நதிகள் முதலிய இடங்களில் சஞ்சரிக்கிறவள் என்றும் பல வித்தைகளில் தேர்ந்தவள் என்றும் அறியலாம்.

குடந்தை சம்பந்தமாக இந்நூலில் வந்துள்ள பெயர்கள், அரிசிலாறு, ஆராவமுதர், ஈழந்திறை கொண்டார், காசிபன் மடு, காயாரோகணம், காவேரி, குலோத்துங்க காளி, சப்த கன்னிகைகள், நவநதிகள், பகவதீர்த்தம், பேராரவாரப் பிள்ளையார், பொற்றாமரைக் குளம், மங்கை நாயகி, மகாமகதீர்த்தம் முதலியன.

இத்தல சம்பந்தமான செய்திகளில் எலும்புகள் தாமரை மலர்களாக மாறினமை, சோதமரின் கோஹத்தி தவிர்ந்தமை, ஒரு நாய் பேறு பெற்றது, இராமபிரான் கும்பேசரை அருச்சித்து இராவணனைக் கொல்லத்தக்க வலிமை பெற்றது, பிரகஸ்பதி வழிபட்டுத் தேவக் குருவானது, ஆதிசேடன் சேவை செய்து பூபாரத்தை ஒரு தலையில் சுமக்கும் வலிமை பெற்றது, ஏம மாமுனி இத்தலத்தில் தவம் செய்து முக்தி அடைந்தது, இந்திரன் பிள்ளைப் பேற்றைப் பெற்றது, காசிபர் அலித்தன்மை நீங்கியது, நவநதிகள் தம் பாவங்களைத் தீர்த்துக்கொண்டது. கும்பேசர் உற்பவித்த வரலாறு, மாந்தாதா அருச்சித்து ஏக சக்கராதிபதியானது முதலியன.

இந்த குறவஞ்சி நாடகத்தைக் கும்பகோணத்திலிருந்த தோப்பு நடராஜ செட்டியார் என்பவர் நாட்டியக்காரர்களைக் கொண்டு மாசிமக திருவிழாவின்போது மிகச்சிறப்பாக நடைபெறச் செய்தாரென்று பாயிரச் செய்யுள் தெரிவிக்கின்றது.

இந்நூல் ஏட்டுப்பிரதியின் ஈற்றில் நடராஜ செட்டியாரைப் பற்றி கலித்துறை யொன்று காணப்படுகிறது.

**நம்மலைக் குந்துயர் தீர்த்தாண் டிடுகும்ப நாயகர்மேல்**
**எம்மலைப் புந்தவிர்த் தின்பப் பணிகள் இயற்றவல்லோன்**
**செம்மலைக் குப்பின் வருஞ்செம் மலையப்பன் சேரியன்மன்**
**விம்மலைத் தீர்க்கும் நடராச பூப விதரணனே.**

ஸ்ரீ பாபநாச முதலியார் கும்பகோணத்தில் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வசித்தவர். அந்நகரத்தில் வாணாதுரை வடக்கு வீதியில் ஸ்ரீமான் திருவேங்கடம்பிள்ளை என்பவர் வசித்திருந்த வீடு இவர் வீடென்று சில பத்திரங்களால் தெரியவந்தது. இவர் காலத்தில் தஞ்சையில் மகாராஷ்டிர அரசு இருந்தது. ஏகோஜி மன்னரை இவர் இந்நூலில் பாராட்டியுள்ளார்.

இவர் சிவபக்திச் செல்வர். தமிழில் அருமையான பல கீர்த்தனங் களைப் பாடியவர். 'நடமாடித் திரிந்த உமக்கு' என்ற காம்போதி ராகக் கீர்த்தனம் இவர் இயற்றியது. இடையிடையே கீர்த்தனங்களில் சில சரணங்கள் தெலுங்கு மொழியில் உள்ளன. கீர்த்தனங்களின் நடை சாதாரணமாக இருந்தாலும், அவற்றின் சங்கீத அமைப்பு உயர்ந்ததென்பதைச் சங்கீத வித்துவான்கள் நன்கு அறிவார்கள். இவருடைய கீர்த்தனங்களைக் கனம் கிருஷ்ணையர், மதுரகவி, அனந்தபாரதி, கோபாலகிருஷ்ண பாரதியார் முதலிய சங்கீத சாகித்திய வித்துவான்கள் பாடி இன்புற்றார்கள் என்று தெரிகிறது.

*****

# தஞ்சை மாவட்ட ஆட்சியரலுவலக அருங்காட்சியகம்

**ம. சங்கரநாராயணன்**

தஞ்சை-திருச்சி சாலையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அருகில் மாவட்ட ஆட்சியரலுவலகம் புதியதாக கட்டப்பட்டு செயல்பட ஆரம்பித்ததையடுத்து, இம்மாவட்டத்தில் பல்லாண்டு காலமாக சீரோடும் சிறப்போடும் நடைபெற்று வந்துள்ள நல்லதொரு நிருவாகம் இன்றும் மாறாத அதே சிறப்புடன் தொடர்ந்து நடந்து வந்துள்ளதற்கு அடித்தளமான-அடையாளமாக இருந்துள்ளதும், அழகும், கலையம்சமும் பொருந்தியதும், மற்றும் மிக நுணுக்கமான கட்டிடக்கலை வடிவமைப்புகளுடன் கூடியதுமான தஞ்சையின் பழைய மாவட்ட ஆட்சியரலுவலக கட்டிடத்தை வேறு எக்காரியங்களுக்காகவும் பயன்படுத்தப்படுவதைவிட இதன் சிறப்பான நிருவாக வரலாற்றுப் பின்னணியின் முக்கியத்துவம் மாறாத வண்ணம் அனைவரின் மனத்திலும் என்றென்றும் நிலைத்திருக்கும் வகையிலும், அனைவருக்கும் பயனுள்ள வகையிலும் சிறப்பான நல்லதோர் அருங்காட்சியகமாக அமைத்திடவேண்டுமென்னும் பேரவா கொண்ட தற்போதைய மாவட்ட ஆட்சியர் **டாக்டர் என். சுப்பையன்,** இ. ஆ. ப., அவர்களால் அதற்கான முழு முயற்சிகளும் விரைந்து மேற்கொள்ளப்பட்டு அரசின் ஒப்புதலுடன் பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் பொலிவுறும் இக்கட்டிடத்தில் மிகவும் அற்புதமான ஓர் அருங்காட்சியகமாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பார்வைக்காக கடந்த 19-08-2015 அன்று திறந்து வைக்கப்பட்டு தஞ்சையில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.



மாவட்ட ஆட்சியரலுவலகஅருங்காட்சியகம்

**ம. சங்கரநாராயணன்,** மேலாண்மை இயக்குநர், கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுரை..

மிகச் சிறந்த அழகிய வேலைப்பாடு மற்றும் கட்டிட கலையம்சத்துடன் கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கட்டிடம் 1896 முதல் 1900 முடிய நான்காண்டுகள் காலத்தில் அப்போதைய மதிப்பீடான ரு.1,90,000/-ல் கட்டி முடிக்கப்பட்டதாகும். உலகப்புகழ் வாய்ந்த தஞ்சை பெரியகோவிலுக்கு அருகில் கல்லணைக் கால்வாயின் தென்கரையில் 115 ஆண்டுகால பழமையான வரலாற்றுப் பின்னணியுடன் பரந்து விரிந்துள்ள இவ்வழகிய கட்டிடம், இதன் எழிலார்ந்த கட்டிட வடிவமைப்பு,கட்டிடத்தின் மேல் உச்சியிலுள்ள வித்தியாசமான உருண்டை வடிவிலான அமைப்புகள் (Domes), சுவர் மாடம் (Niches), மையத்தில் கருங்கற்களாலான சுழற் படியமைப்பு, கட்டிடத்தின் கிழக்கு-மேற்கு இருபுறங்களிலுமான மாடிப்படி பாதைகளில் பக்கவாட்டு கண்காணிப்பு வசதிக்காகவுள்ள திறந்த மாடங்கள் இவையனைத்தும் இதன் வகையில் வேறெங்கும் காணமுடியாத வியத்தகு- வித்தியாசமான தனித்துவம் வாய்ந்த சிறப்பம்சங்களாகும்.

தற்போது அருங்காட்சியமாக மாறியுள்ள, காண்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் வகையிலான கலையம்சமும் எழிலும் நிறைந்த நம் பழைய மாவட்ட ஆட்சியரலுவலகக் கட்டிடம் இந்தியாவின் புகழ்வாய்ந்த பல கட்டிடங்களுடன் ஒப்பு நோக்கக் கூடிய வகையிலான சிறப்புகளுடன் விளங்குகின்றது. உலக அதிசயங்களில் ஒன்றான **தாஜ்மகால்** யமுனை நதிக்கரையில் அமைந்துள்ளதைப்போல் கல்லணை கால்வாயின் தென்கரையில் அமைந்துள்ள இக்கட்டிடத்தின் உச்சியிலுள்ள உருண்டை வடிவிலான மூன்று அமைப்புகள் தாஜ்மகாலின் உச்சியிலுள்ள உருண்டை வடிவங்களை (Domes) நினைவுபடுத்தக்கூடியதாகவுள்ளது. இக்கட்டிடத்தின் நான்கு புறங்களின் உச்சியிலுமுள்ள மினார் தோற்றத்திலான ஒடுங்கிய கோபுர ஸ்தூபி போன்ற வடிவங்கள் ஹைதராபாத் **சார்மினாரின்** உச்சியிலுள்ள **மினார்** வடிவங்களை நமக்கு ஞாபகப்படுத்துவதாக உள்ளன. ஜெய்ப்பூர் மாநகரின் மிகுந்த பரபரப்பும் ஜனசந்தடியும் நிறைந்த வணிக கேந்திரமான பெரும் கடைவீதியில் காற்றுவரும் தென்திசை நோக்கியுள்ள பெரிய சன்னல்களுடன் கூடிய **ஹவா மகால்** என்னும் அழகிய புராதன கட்டிடத்தில் அமைந்துள்ள ராஜஸ்தான் அரசின் முக்கிய அலுவலகங்களில் எப்பொழுதுமே குறைவில்லாத இதமான காற்று நிறைவாக வந்துகொண்டிருப்பதற்கு ஒப்பான அதேபோன்று தென்திசை நோக்கியுள்ள பெரிய சன்னல்களுடன் கூடிய நம்முடைய இந்த அருங்காட்சியக கட்டிடத்திலும் நல்ல சுகமான காற்றோட்டத்தை உணரலாம். (இந்தி மொழியில் "**ஹவா**" என்றால் "**காற்று**" என்று பொருள்படும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்) இவ்வாறான மிகுந்த சிறப்புகளும் பெருமைகளுமுடைய இக்கட்டிடத்தில்தான் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அறந்தாங்கி வட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்து விரிந்த ஒருங்கிணைந்த பழைய தஞ்சை மாவட்டத்தின் ஆட்சியரலுவலகம் இயங்கிவந்துள்ள தென்பதை நினைத்துப் பெருமைப்படலாம்.

இம்மாவட்டமானது முதன் முதலாக வடக்கு மற்றும் தெற்கு என்று இரண்டு பகுதிகளாக முறையே திரு. கிராண்ட் மற்றும் திரு. ஹாரிஸ் என்பவர்களை மாவட்ட ஆட்சியர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் 1800-ம் ஆண்டு

ஏப்ரல் மாதம் கடலூரரையும் உள்ளடக்கிய தஞ்சை மாவட்டம் என உருவாக்கப்பட்டு, அம்மாவட்டத்திற்கு மேலே குறிப்பிடப்பட்ட இருவரில் ஒருவரான திரு. ஹாரிஸ் மாவட்ட ஆட்சியராக இருந்துள்ளார். ஆனால் மறு வருடமே தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து கடலூர் பிரிக்கப்பட்டுவிட்டது. பின்னர் 1805-ம் ஆண்டில் தஞ்சாவூருடன் திருச்சிராப்பள்ளி இணைக்கப்பட்டு திரு. வாலஸ் என்பவர் மாவட்ட ஆட்சியராக இருந்துள்ளார். சில காலத்திற்கு பின்னர் இம்மாவட்ட அமைப்பும் பிரிக்கப்பட்டு இரு தனி மாவட்டங்களாக்கப்பட்டுள்ளன. 1799-ல் நாகப்பட்டிணமும் 1845-ல் தரங்கம்பாடியும், 1860-ல் தஞ்சாவூரும் மாவட்ட தலைமையிடங்களாகவும் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் வசிப்பிடம் வல்லத்திலுமாக இருந்துள்ளது. பின்னர் சமீப காலங்களில் 1991-ல் நாகப்பட்டிணம் மாவட்டம் என்றும், 1997-ல் திருவாரூர் மாவட்டம் என்றும் ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து நாம் அறிய பிரிக்கப்பட்டு மூன்று மாவட்டங்களாக தற்போது இயங்கிவருவதை அறிவோம்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்கதும் பழமையான, புராதன கலையம்சம் நிறைந்ததுமான இக்கட்டிடத்தில் தற்போதைய மாவட்ட ஆட்சியர் **டாக்டர் என்.சுப்பையன்,**இ.ஆ.ப., அவர்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த



**அருங்காட்சியகப் பொருட்கள்**

அருங்காட்சியகத்தில் தஞ்சை மாவட்டத்தின் வரலாறு, நீர் நிலை பயன்பாடு, விவசாயம், தொழில், கல்வி, கலை, பண்பாடு குறித்த தகவல்கள் அனைத்தும் பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும், வரலாற்று ஆய்வாளர்களும் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. தஞ்சை மாவட்டத்தின் பெருமைகளை விளக்கக்கூடிய வகையில் இங்கு அனைத்து துறைகளின் சார்பாக 17 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியக பராமரிப்பினை மட்டுமே கருதி பார்வையாளர்களிடம் மிகக் குறைவான நுழைவுக் கட்டணமே வசூலிக்கப்படுகின்றது. அருங்காட்சியகத்தின் மேற்கூரையிலிருந்து வசதியான முறையில் கல்லணைக் கால்வாயின் பக்கவாட்டு நீரோட்ட காட்சியுடனும், கம்பீரத்துடனும் பாங்குற அமைந்துள்ள ராஜராஜசோழனின் தஞ்சை பெரியகோவிலின் அழகினை சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வகையில் "**பார்வை மாடம்**" அமைக்கப் பட்டுள்ளது. வாரந்தோறும் சனிக்கிழமைகளில் பாரம்பரிய கலைகள் குறித்த "**பண்பாட்டுப் பலகணி**" என்னும் கலை நிகழ்ச்சி கலை மற்றும் பண்பாட்டுத்துறை ஆதரவில் சிறப்புற நடைபெற்று வருகின்றது.


பழைய மாவட்ட ஆட்சியரக அருங்காட்சியகம்

வண்ண மீன்கள் அரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி கண்காணிப்பிலிருக்கும் இந்த அருங்காட்சியகத்திற்கு மேலும் எழிலூட்டும் வகையிலும், இன்னும் அதிகமானவர்களை ஈர்க்கும் வகையிலும் சிறுவர் பூங்கா, இசை நீரூற்று மற்றும் வண்ண மின்னொளி அலங்காரம் போன்ற மேம்பாட்டுப் பணிகளை விரைவில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் தங்களிடமுள்ள பழங்கால கலைப்பொருட்கள் மற்றும் வரலாற்றுத் தகவல்களை மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைத்தால் பொதுமக்களின் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ள இவ்வருங்காட்சியகத்தில் அவை மிகச் சீரான முறையில் காட்சிப்படுத்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சையில் காணத் தகுந்த முக்கியமான இடங்கள் என்றால் அவை பெரியகோவில் மற்றும் அரண்மனை வளாகத்திலுள்ள கலைக்கூடம், சரபோஜி மன்னரின் சரசுவதி மகால் நூலகம் என்னும் நிலைப்பட்டியலில் தற்போது தஞ்சை மாவட்ட ஆட்சியரலுவலக அருங்காட்சியகமும் இடம்பெற்றுவிட்டதென்றால் அது மிகையாகாது.

*****

# மகிமை மிக்க மகாமகம்

**சி. பாபாஜிராஜா பான்ஸ்லே,**

திருத்தலத்திற்குப் பெருமை சேர்ப்பது மாசி மகத் திருவிழா. இதற்குக் காரணம் முன்னோர் காலத்தில் பிரளயம் சூழ்ந்தது. கும்பம் ஒன்றில் அமுதத்தை நிரப்பி படைப்பு கலன்களையும் அதனுள் வைத்து நீரில் மிதக்கவிடு, உலகம் அழியும் நேரத்தில் அது எங்கு கரை ஒதுங்குகிறதோ அங்கு சென்று எடுத்து மீண்டும் உலகைப் படைக்கலாம் என சிவன் பிரம்மனிடம் கூறினார். கும்பம் மட்டும் பிரளயத்தில் அடித்துவரப்பட்டு ஓரிடத்தில் தட்டுப்பட்டு நின்றது. கும்பம் நின்ற இடமே கும்பகோணம் என அழைக்கப்படுகிறது. வேடன் உருவில் சிவபெருமான் அம்பு எய்தி கும்பத்தின் மீது எரிந்தார். கும்பத்தின் மூக்கு சிதைந்தது. அதிலிருந்து அமுதம் நான்கு புறமும் பரவியது. அதுவே தற்போது மகாமகக் குளம் எனப்படுகிறது. அமுதம் அங்கு சிதறிக்கிடந்த வெண் மணலுடன் கலந்து ஒரு லிங்கம் உருவானது. இந்த லிங்கமே கும்பேஸ்வரர் எனப்பெயர் பெற்றது. கும்பேஸ்வரர் லிங்கத்தின் சிறப்பு கீழே பருத்தும் மேலே செல்லச்செல்ல ஊசி வடிவத்திலும் காணப்பெறும். இக்கோயிலின் பிரகார அமைப்பு சுவாமியையும், அம்பாளையும் சேர்த்துச் சுற்றிவரும் வகையில் உள்ளது. அம்மை அப்பனே உலகம் என்பதை




மகாமகக்குளத்தின் மாதிரி தோற்றம்

**சி. பாபாஜிராஜா பான்ஸ்லே,** உசூர்மாடி, அரண்மனை, தஞ்சாவூர்.

மெய்ப்பிக்கும் வகையில் உள்ளது. கும்பேஸ்வரர் லிங்கம் மணலால் ஆனது. அம்பாளுக்கு மந்திரபீடேஸ்வரி என்ற திருநாமம் இட்டு அழைக்கின்றனர். அம்மனுக்குரிய சக்தி பீடங்களில் இத்தலம் முதன்மையானது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குரு சிம்மராசியில் இருக்க சூரியன் கும்பராசியில் இருக்க மாசி மாதத்தில் பௌர்ணமி தினத்தன்று மகம் நட்சத்திரம் கூடி இருப்பதான சேர்க்கை நடைபெறும். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறையே இந்தச் சேர்க்கை வரும். அன்றைய தினமே மகாமகம் எனக்கொண்டாடப்படுகிறது. இத்தினத்தன்று ஈரேழு பதினான்கு லோகத்தில் வசிப்பவரும் இத்திருக்குளத்தில் நீராட வருபவராகவும் கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி, கோதாவரி, சரயு, பொருனை ஆகிய புண்ணிய நதிகள் கன்னிகைகளாக (நவகன்னிகை) இங்கு வந்து நீராடியதாக ஐதீகம்.

மகாமகக் குளம், மண்டபம் அனைத்தும் விஜயரகுநாத மன்னர் அளித்த சோடச மகாதானத்தின் வாயிலாகக் கட்டப்பட்டன. இப்பணியை முன்னின்று நடத்தியவர் அவருடைய மந்திரியான கோவிந்த தீட்சிதர் ஆவார். சோடசம் என்பது பதினாரைக் குறிக்கும் இக்குளக்கரையில் 16 கோயில்கள் மண்டபங்கள் காணப்படுகின்றன. இக்குளத்தின் நடுவே அமைந்துள்ள தீர்த்தக் கிணறுகள் புனிதத்தன்மை வாய்ந்தமையாகக் காணப்படுகின்றன.

வருணபகவானின் பிரும்மகத்தி தோஷம் நீங்கியது இந்த திருத்தலத்தில்தான். பார்வதிதேவி தாட்சாயணியாக அவதரித்த தினம் மாசி மகம். பெருமாள் வராக அவதாரம் எடுத்து பாதாளத்திலிருந்து பூமியை வெளிக்கொணர்ந்த நாளும் மாசிமகம்தான். அதனால், வைணவத் தலங்களிலும் தீர்த்தவாரி நடைபெறும். அவ்வகையில் ஒரே நேரத்தில் 12 சைவ கோயில்களின் சுவாமிகள் ஒரே இடத்தில் எழுந்தருளி தீர்த்தவாரி கொடுப்பது இக்குளத்தில் மட்டுமே. இந்நிகழ்வு வேறு எங்கும் கிடையாது.

மகாமகத்தன்று கும்பகோணத்தில் உள்ள மகாமகக் குளத்தில் நீராட மக்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்து கும்பகோணம் வருவார்கள். 1909ஆம் ஆண்டு கும்பகோணம் காஞ்சி மடத்தின் நிருவாக பீடமாக இருந்தது. கலவையில் ஆச்சாரிய பீடம் ஏறிய பரமாச்சாரியார் கும்பகோணம் நோக்கி பயணம் தொடங்கினார். மகாமகத் தினத்தன்று சுவாமிகள் யானை மீது அமர்ந்தவாறு மகாமகக் குளத்திற்கு நீராடச் சென்றார். தஞ்சை மராட்டிய அரச குடும்பத்தினரும், அரசு அதிகாரிகளும் முன்சென்றனர். அது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

1897ஆம் ஆண்டு மாசிமாதம் 12மகாமக புண்ணிய கால ஸ்நானம் கருதி பாம்பன் சுவாமிகள் கும்பகோணம் வந்தார்கள். 1921ஆம் ஆண்டு நடந்த மகாமகம் குறித்து மகாகவி சுப்பிரமணிய பாரதி ஒரு அரிய கட்டுரையை எழுதியுள்ளார். இந்த மகாமகத்தின் போது சென்னை இஸ்லாமிய பெருமக்கள் சங்கத்தைச் சேர்ந்த 200 இளைஞர்கள் வருகை தந்து பொதுமக்களுக்குச் சீரிய தொண்டாற்றியுள்ளனர். அப்போது பட்டீஸ்வரத்தில்

முகாமிட்டிருந்த மகாபெரியவர் அத்தனை இஸ்லாமிய பெருமக்களையும் அழைத்து அகம் மகிழ்ந்து அவர்களுடைய சங்கத்திற்கு அன்புப்பரிசாக வெள்ளிக் கோப்பைகளை வழங்கியுள்ளார்.

வடக்கே கொண்டாடும் கும்பமேளாப் போல தெற்கே கொண்டாடப்படும் **தென்னகக் கும்பமேளா** எனப்படுவது இந்த மகாமகம் ஆகும். ஏறக்குறைய 20 இலட்சம் மக்கள் கூடுகின்ற ஒரு பெரிய விழா. மக்கள் வேற்றுமையில் ஒற்றுமை காணும் மகாமக விழா இது. மகாமகத் திருவிழா நீர்நிலைகளின் மேன்மையைப் போதிக்கிறது. நீர் நிலைகளைப் பாதுகாக்கவே அவற்றைத் தெய்வத்திற்குச் சமமாக முன்னோர் மதித்தனர். அதேபோல் நம் ஊரில் உள்ள ஆறு குளங்களைச் சுத்தப்படுத்திப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதே மாசி மகம் கற்றுத் தரும் பாடம். நீர் நிலைகளைப் பாதுகாக்க உறுதி எடுப்போம். இனமொழி வேறுபாடின்றி ஒற்றுமையைக் காண்போம். மகாமகம் இனிதே நிறைவேற எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

*****

## நங்கைப்பெண்

திருப்புளித் துறையில் வடக்கெடுத்த இல்லம் என்ற மலையாளி அந்தணக் குடும்பத்தில் தோன்றிய நங்கைப் பெண், அறியாப் பருவத்திலேயே அவ்வூர்க் கோயிலில் எழுந்தருளியிருக்கும் திருமாலிடம் அன்பு கொண்டாள். அவளுக்கு வயது வந்ததும் பெற்றோர் ஒரு பணக்கார இளைஞனுக்கு அவளைமணம் செய்து கொடுக்க நிச்சயித்தார்கள். திருமண நாள் வந்ததும் மணமகன் ஊர்வலம் வந்தான். நங்கைப் பெண் கோயிலில் திருமாலை வழிபடச் சென்றாள். விக்கிரகத்திலிருந்து வெளிவந்து, திருமால் அவள் கையைப் பிடித்து அழைத்துப்போனான். இந்தச் செய்தி ஊரெங்கும் பரவியதும் மணமகன் வீட்டார் இதைக் கேட்டுத் திரும்பிப் போனார்கள். ஆனால் ஊரார், நங்கைப்பெண்ணின் பெற்றோர் பெற்ற பேற்றைப் புகழ்ந்தார்கள். இன்றும் கோவிலில் ஆண்டுதோறும் நங்கைப்பெண் மணவிழா நடைபெறுகிறது. நங்கைப் பெண் வாழ்ந்திருந்த வீட்டுக்குத் திருமால் எழுந்தருளி, அந்தக் குடும்பத்தினிடமிருந்து ஆடை ஆபரணங்களையும் விருந்தையும் ஏற்றருளுகிறார்.

– மலர்க்குடி



குடந்தை இராமசாமி திருக்கோயில்
சிற்பத்தூண்கள்



உமையொருபங்கன் மகாமகக்குளக்கறை மண்டபம்

# இந்தியாவும் புனித நீராடலும்

**சிவாஜிராஜா து. போஸலே,**

இந்திய திருநாட்டில் பண்டு தொட்டு, இன்றுவரை இயற்கையாகக் கிடைக்கும் ஆறு, கடல் நீரில் மக்கள் மகிழ்ச்சியாகவும், உடல்சோர்வு நீங்கவும், உடல் சுத்தமடைவதற்கும் குளித்து மகிழ்வர். அவற்றிலும் குறிப்பாக, விழாக்காலங்களில் நீரில் மூழ்கி எழுவது அவர்களது பாவங்களைப் போக்கும் என்பது அசைக்கமுடியாத நம்பிக்கை. அவ்வகையில், சங்க கால மக்கள் காவிரியிலும், வைகையிலும் நீராடிய நிகழ்ச்சிகளைப் புலவர்கள் பரிபாடல், பட்டினப்பாலை ஆகிய நூல்களில் பாடிவைத்துள்ளனர். தற்காலத்திலும், புனித நீராடல் இந்தியாவின் முக்கியமான ஐந்து இடங்களான கும்பகோணம், அலகாபாத், அரித்வார், உஜ்ஜைன் மற்றும் நாசிக் ஆகிய ஊர்களில் உள்ள ஆற்றுப்படுகையில் நடைபெறுகிறது. வேத நம்பிக்கைகளின்படி, சாகாவரம் தரக்கூடிய அமிருதம் என்ற பானத்தின் துளிகள் வானில் கடவுள் திருமாலின் வாகனமான கருடன் சுமந்து சென்ற பானையிலிருந்து (கும்பம்) இந்த இடங்களில் விழுந்ததாக இந்துக்கள் நம்புகிறார்கள். இதனால் அவ்விடங்களில் கும்பமேளா நேரத்தில் நீராடுவது தங்கள் அகப்புற அழுக்குகளை நீக்கும் என்றும் நம்புகிறார்கள்.

**கும்பகோணம்**

மாசிமாதமன்று வியாழன்கோள் சிம்மராசியில் இருக்கும்பொழுது மகம் நட்சத்திரமும் பூராடண நட்சத்திரமும் பொருந்தி வரும் காலம் மகாமகம் ஆகும். இந்நிகழ்வு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகிறது. மகாமகத்தை பேச்சு வழக்கில் மாமாங்கம் என்று கூறுகின்றனர். பொதுவாக நதிக்கரைகளில் மட்டுமே காணப்படும் புனித நீராடல் கும்பகோணத்தில் மட்டுமே மகாமகக் குளத்தில் நீராடுவதைக் குறிக்கும். இக்குளத்தில் நீராடுவதால் தங்களது பாவங்கள் தொலைவதாக நம்பப்படுகிறது.

**கும்பமேளா**

கும்பமேளா (கிண்ணத் திருவிழா) பிரயாக்கில் (அலகாபாத்) மாக மாதத்தில் நடைபெறுகின்றது. அதாவது ஜனவரி அல்லது பெப்ரவரியில் இது நடைபெறும். பலர் அமாவாசை நாளில் நீராடுவது மிகுந்த பலனை அளிப்பதாக நம்புகின்றனர். வியாழன் கோள் ரிஷப இராசியில் உள்ள போது சூரியனும் சந்திரனும் மகர இராசியில் இருக்கின்றது. இவ்வமைப்பே அமாவாசை நாளாகும். திரிவேணி சங்கமம் என்பது கங்கை, யமுனை, ஆறுகளும் கண்ணுக்கு புலப்படாத சரசுவதி ஆறும் கூடும் இடமாகும்.

**சிவாஜிராஜா து. போஸலே,** சதர்மகால், அரண்மனை, தஞ்சாவூர்

இந்த மூன்று ஆறுகளின் கூடல் அலகாபாத்தில் (பிரயாகை) நடைபெறுகிறது. மற்ற இடங்களில் நடைபெறும் கும்பமேளாவை விட இது புகழ்பெற்றது. பன்னிரண்டாவது முழு (பூர்ண) கும்பமேளா அதாவது 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும். கும்பமேளா மகா கும்பமேளா எனப்படும். மகா கும்பமேளாவே உலகில் அதிகளவு மக்கள் ஒன்று கூடும் திருவிழாவாகும்.

ஹரித்வாரில் பால்குன் மற்றும் சைத்ரா ஆகிய மாதங்களில் (பெப்ரவரி மார்ச், ஏப்ரல்) சூரியன் மேஷ இராசியில் செல்லும்பொழுது சந்திரன் தனுசு இராசியிலும் வியாழன் கும்ப இராசியிலும் உள்ள போது கும்பமேளா நடைபெறுகின்றது. அதிகாலையில் கங்கை ஆற்றின் பிரம்மகுண்ட் என்ற இடத்தில் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வந்த இந்துக்கள் நீராடுவர்.

உஜ்ஜெயின் பகுதியில் இவ்விழா வைகாசி மாதத்தில் அதாவது மே மாதத்தில் நடைபெறும். சூரியனையும் சந்திரனையும் தவிர மற்றைய கோள்கள் துலா ராசியில் உள்ள



கும்பமேளா - ஹரித்வார்

போது சூரியனும் சந்திரனும் மேஷ இராசியிலும் வியாழன் கோள் சிம்ம இராசியிலும் இருக்கும்.நாசிக் பகுதியில் நடைபெறும் கும்பமேளாவானது சிரவண மாதத்தில் அதாவது ஜூலையில் சூரியனும் சந்திரனும் கடக இராசியில் உள்ளபோது வியாழன் கோள் விருட்சிக இராசியில் உள்ள பொழுது நிகழும். இரண்டரை மாதகாலம் நடைபெறும். இந்த விழாவில் பல லட்சம் சாதுக்களும் பக்தர்களும் கோதாவரி நதியில் புனித நீராடுவர். ராம்குட் என்னும் இடத்தில் சாதுக்கள் முதலில் நீராட அனுமதிக்கப்படுகின்றனர். சாதுக்கள் பின்னர் ஆற்றில் வெங்கல நாணயங்களை எறியும்பொழுது மக்கள் கூட்டம் அந் நாணயங்களைப்பெற முட்டி மோதுவதும் குறிப்பிடத்தக்கது. சாதுக்களினால் வழங்கப்பட்ட அந்நாணயமானது அரிய சக்திகளை உடையதாக மக்கள் இன்றளவிலும் கருதுவது குறிப்பிடத்தக்கது.

வட இந்தியாவில் கடும் குளிர் நிலவும் நேரத்திலும், ஆயிரக்கணக்கான சாதுக்கள் உட்பட லட்சக்கணக்கான மக்கள் அப்பகுதியில் நீராடுவர். உடல் முழுவதும் திருநீறு பூசியபடி மலர் மாலை மட்டுமே அணிந்த நிர்வாண நாகா சாதுக்கள் இங்கு புனித நீராட வருவது கும்பமேளாவின் போது மறக்க முடியாத ஒரு நிகழ்வாகக் கருதப்படும். வண்ணமயமான ஊர்வலத்தில் வரும் நிர்வாண நாகா சாதுக்கள் மந்திர உச்சாடனங்களைச் செய்தவாறே கங்கை, யமுனை சங்கமத்தில் குதித்து நீராடுவர். கும்பமேளா காலத்தில் சங்கமத்தில் குளித்தால் தமது பாவங்கள் கழுவப்பட்டுவிடும் என்று இந்துக்கள் நம்புகிறார்கள். அங்கு நீராட வரும் பெரும்பாலான யாத்ரிகர்கள் சிறிதளவு கங்கை நீரை உட்கொண்டு தமது உற்றார் உறவினர்கள் அதைப் பருகும் நோக்கில் சிறிய புட்டிகளில் அடைத்துச் செல்வதும் வழக்கமாக உள்ளது.

*****

## பட்டீசுரம்

கும்பகோணத்திலிருந்து தென்மேற்கே 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதற்கு கிழக்கே 1½ கி.மீ. தொலைவில் வைப்புத் தலமாகிய முழையூர் இருக்கின்றது.

காமதேனுவின் புத்திரிகள் நால்வரில் பட்டி என்பவள் பூசித்தத் தலமாகும். சிவபெருமான் திருஞானசம்பந்த பெருமானுக்கு முத்துப்பந்தர் நிறுவிய ஸ்தலம். ஸ்ரீராமருக்கு சாயைஹத்தி தோஷம் தீர்த்த ஸ்தலம். கோயிலில் நந்திகளெல்லாம் விலகியிருக்கின்றன, ஞானசம்பந்த சுவாமிகள் வெளியிலிருந்து தரிசனம் செய்யும் பொருட்டு அமைந்துள்ளது. கோவிந்த தீட்சிதரின் உருவமும் அவரின் மனைவியாரின் உருவமும் தேவிசந்நிதியில் இருக்கின்றன. இவ்வூரில் திருமலைராயன் ஆறு ஓடுகிறது.

– மலர்க்குழு







நவநதிகள்

# 11 ஆண்டுகளில் மகாமகம்

**மலர்க்குழு**

மகாமகம் என்பது பொதுவாகப் பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரவேண்டியது. இந்த இருபத்தோராம் நூற்றாண்டுகளில் அவ்வாறு ஒன்பது மகாமகங்கள் வந்துள்ளன. அவை முறையே.

| | | | |
|---|---|---|---|
| *1.* | *06-03-1909* | சனிக்கிழமை | *(கீலக மாசி 23)* |
| *2.* | *22-02-1921* | செவ்வாய் | *(ரௌத்ரி மாசி 11)* |
| *3.* | *10-03-1933* | வெள்ளி | *(ஆங்கிரஸ மாசி 27)* |
| *4.* | *26-02-1945* | திங்கள் | *(தாரண மாசி 15)* |
| *5.* | *25-02-1956* | சனி | *(மன்மத மாசி 13)* |
| *6.* | *14-02-1968* | புதன் | *(பிலவங்க மாசி 2)* |



உமையொருபாகன்

| | | | |
|---|---|---|---|
| 7. | 01-03-1980 | சனி | (சித்தார்த்தி மாசி 18) |
| 8. | 18-02-1992 | செவ்வாய் | (பிரஜோத்பத்தி மாசி 6) |
| 9. | 06-03-2004 | சனி | (சுபானு மாசி 23) |

என்னும் தேதிகளில் வந்தன.

இவற்றுள் நான்காவது மகாமகம் 1945ஆம் ஆண்டும் ஐந்தாவது 1956ஆம் ஆண்டும் அதாவது பதினோராவது மகாமகம் வந்துவிட்டது. இது எப்படி?

**மகாமகத்தைத் தீர்மானிக்கும் முறை**

சூரியன் கும்ப ராசியிலும் (தமிழ் மாசி மாதம்) குரு சிங்க இராசியிலும் இருக்கும்போது வருகின்ற மக நட்சத்திர நாள் மகாமகம் ஆகும். மாசி மாதம் மக நட்சத்திரம் எனவே சந்திரன் சிங்கத்தில் இருப்பதும் அந்த இராசி ஆதலால் அந்நாள் பௌர்ணமியாதலும் தானே பெறப்படும். சுருக்கமாக மாசி மாதத்தில் எப்போது சிங்க ராசியில் குரு சந்த்ரயோகம் ஏற்படுகிறதோ அப்போது மகாமகம் வருகிறது.

**தொடர்புடைய கோள்களின் இயக்கம்**

சூரியன் பொதுவாக ஒரு ராசியில் ஒரு மாதம் இருக்கும். சந்திரன் ஒரு ராசியில் இருப்பது சற்றேறக்குறைய இரண்டேகால் நாள் (54 மணிநேரம்) ஆகும். வியாழன் எனப்படும் குரு பொதுவாக ஒரு இராசியில் ஒரு வருடம் இருக்கும். இது மிகத் துல்லியமான கணக்கு அல்ல, மாறுபடும். எனினும் தோராயமாகச் சரியானது.

**1945-1957க்கு இடையில் குருவின் இயக்கம்**

1945 மாசியில் வந்த மகாமகம் அடுத்து 1957 மாசியில் தான் பொதுவாக எதிர்பார்க்கப்படும். ஆனால் 1957 மாசி மாதத்தில் குரு சிம்ம ராசியை விட்டுவிட்டு அடுத்ததாகிய கன்னிக்கு வந்துவிட்டது. 15-02-1956இல் சிம்ம இராசிக்கு வந்த குரு அந்த இராசியில் ஒரு முழுவருடம் இருக்காமல் 28-10-1956இலேயே (அதாவது ஐப்பசி 12ஆம் தேதியே) அடுத்த இராசியாகிய கன்னி இராசிக்குப் போய்விட்டது. இவ்வாறு வருவதை வான நூலார் அதிசாரம் (Accelerated motion of a planet from one sign to the next one) என்பர்

இதனால் 1956 மாசியிலேயே குருவும் சந்திரனும் சிங்க ராசியில் கூடிவிட்டனர். எனவே அந்த ஆண்டே-பதினோரு ஆண்டுகளே இடைவெளி ஆகியிருந்த போதிலும்-மகாமகம் ஏற்பட்டுவிட்டது.

# தீர்த்தங்களும் மண்டபங்களும்

**மலர்க்குழு**

விஜயரகுநாத நாயக்க மன்னன் சோடச மகாதானம் செய்வித்தான். அவனால் வழங்கப்பெற்ற தானத்தைக கொண்டு பதினாறு மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன. இப்பணியை முன் நின்று நடத்திய பெருமை கோவிந்ததீட்சிதர் அவர்களையும் அவர்தம் மூத்த மகனையும் சாரும். மகாமகக் குளத்திலுள்ள பதினாறு மண்டபங்களையும் பதினாறு தானங்களுக்குரியதாக அமைத்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. துலா புருஷதான மண்டபத்தை அடுத்து தொடர்ச்சியாக வருகின்ற மண்டபங்கள் வருமாறு.

**ஸ்ரீ பிரம்ம தீர்த்தேச்சுரர்**

துலாபுருஷமண்டபம் துலாபுருஷ தானத்தினைச் செய்வதற்குரிய ஆகம முறைப்படி பதினாறு தூண்களை அமைத்தும் $7 \times 7$ அடி அளவுள்ள வேதிகை ஒன்றமைக்கப் பட்டிருப்பதையும் அறியமுடிகின்றது. இவ்வாறு அமைக்கப் பட்ட மண்டபங்களில்தான் யாகம் செய்யவேண்டுமென விதியுள்ளது. எனவே இங்குள்ள பதினாறு மண்டபங்களில் முதலில் கட்டப்பட்ட மண்டபம் துலாபுருஷ மண்டபமாகும், இம்மண்டபத்தைத் தொடர்ந்து பிற மண்டபங்களும் கட்டப்பட்டுள்ளன

**ஸ்ரீ முகுந்தேச்சுரர் மண்டபம்**

சித்த மண்டபமாகிய துலாபுருஷதான மண்டபத்தை அடுத்து அமைந்துள்ளது இம்மண்டபமாகும். இம்மண்டபம் 'இரண்யாசீவதானம்' செய்யும்பொழுது வைக்கப்பெறும் ஒரு சைத்தியத்தை வழங்கியமையால் கட்டப்பட்ட மண்டபமாகும். இதனை இம்மண்டபத்து விதான உத்திரத்தின் மீது செதுக்கப்பட்டுள்ள புடைப்புச் சிற்பத்தொகுதி காட்டுகின்றது. இரண்யாசீவதானம் செய்பவர் தேவர்களால் பூசிக்கப்பட்டு இந்திரபதம் அடைவர்.

**ஸ்ரீ தானேச்சுரர் மண்டபம்**

இரண்யகர்ப்பதானம் செய்யும்பொழுது வைக்கப்படும் பொன்னால் செய்யப்பட்ட தாமரை மலரைப் போன்ற வடிவமுடைய கும்பத்தை தானமாக வழங்கியமையால் கட்டிவிக்கப்பட்ட மண்டபமாகும். உத்திரப் பகுதியில் தாமரை மலர் போன்ற கும்பத்தை வழங்கும் காட்சி இடம்பெற்றுள்ளது. இரண்யகர்ப்பதானம் செய்பவர் கோடி கல்பம் பிரம்மலோகத்தில் வசித்துத் தனது பித்ருக்களை நரகத்திலிருந்து நீக்குபவராவார்.

**ஸ்ரீ இடபேச்சுரர் மண்டபம்**

கோசகஸ்ரதானம் செய்யும்பொழுது பொன்னால் செய்யப்பட்ட 10பசுக்களையும், ஒரு பொன் விருக்ஷத்தையும் கொண்டு கட்டப்பெற்றது இம்மண்டபமாகும். பசுக்களும் விருக்ஷமும் இம்மண்டப விதான உத்திரத்தில் இடம்பெற்றுள்ளது. இவ்வகைத்தானம் செய்வதால் பாபம் நீங்கித் தன்னுடைய நூற்றியொன்று கோத்திரங்களுடன் தானும் கையிலையில் வசிக்கும் வாய்ப்பைப் பெறுவான்.

**ஸ்ரீ பாணேச்சுரர் மண்டபம்**

இரண்யாச்வரததானம் செய்யும்பொழுது பொன்னால் தன் இஷ்ட தேவதையைச் செய்து வைப்பர். இவ்வாறு செய்யப்பட்ட இஷ்ட தேவதைக்குரிய மண்டபமாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகை தானத்தைச் செய்பவர் பாபம் நீங்கித் தேஜோ சரீரனாய்ச் சிவபதமடைவர்.

**ஸ்ரீ கோணேச்சுரர் மண்டபம்**

உபயகோமுகதானம் செய்பவர் பசுவின் பிரசவகாலத்தில் பசுங்கன்றின் பாதி உடம்பு தாயின் வயிற்றிலும் மீதமுள்ள பகுதி வெளியிலும் உள்ள நிலைகண்டு பசுவை தானமாக வழங்குவர். அப்பசுவினைப் போலவே பொன், வெள்ளி, முத்து முதலானவற்றில் செய்துவைப்பர். இத்தானத்தின் பெயரால் அமைந்ததுவே இம்மண்டபம். இத்தானம் செய்பவர் தரணிதான பலனடைவதன்றிப் பித்துருக்களையும் திருப்தி செய்தவராவார். இப்பசுவின் தோற்றம் உத்திரத்தில் இடம்பெற்றுள்ளது.

**ஸ்ரீ தினேச்சுரர் மண்டபம்**

இரண்யாச்வரதானம் செய்விக்கும் பொழுது தன் இஷ்ட தேவதை குதிரையுடன் இருப்பது போன்று பொன்னால் செய்வர். இத்தானத்தின் பெயரால் அமைக்கப்பட்டது இம்மண்டபம்.

**ஸ்ரீ பைரேச்சுரர் மண்டபம்**

ஹேம ஹஸ்திர தானம் செய்விக்கும் பொழுது பொன்னால் புஷ்பரதம் செய்து நான்கு பொன் யானைகளையும் இரண்டு உயிர் யானைகளையும் பூட்டியவாறு வடிவம் செய்து வைப்பர். இத்தேர் வடிவம் மண்டப உத்திரப்பகுதியில் செதுக்கப்பட்டுள்ளதால் இத்தானத்திற்குரிய கருத்து உறுதியாகின்றது.

**ஸ்ரீ அகத்தீச்சுரர் மண்டபம்**

இரத்னபர்வததானம் என்பது இரத்தினத்தினால் மலை போன்று செய்வித்து அதனை தானமாக அளிப்பதாகும். இத்தானத்தை செய்பவர் ‘பிரமகத்தி தோஷம்’ நீங்கி

விஷ்ணுபதம் அடைவர். இரத்தினத்தினால் செய்யப்பட்ட மலையைப் போன்ற சிற்பவடிவம் இம்மண்டபத்திலுள்ளது.

**ஸ்ரீ வியாசேச்சுரர் மண்டபம்**

பஞ்ச லாங்கல தானம் என்பது மரத்தாற் செய்யப்பட்ட ஐந்து கலப்பைகளையும் பொற்கொம்பால் அலங்கரிக்கப்பட்ட பத்து எருதுகளையும் ஐந்து முதல் ஆயிரம் வரை பலம் உள்ள பொற்கலப்பைகளையும் கன்றோடு கூடிய பசுக்களையும் கொண்ட வடிவங்களாகும். இவ்வகை தானம் செய்பவர்கள் விமானமேறிச் சிவபதம் அடைவர்.

**ஸ்ரீ உமாபாகேச்சுரர் மண்டபம்**

மகாபூதகடதானம் என்பது நூறு அங்குல நீளமுள்ள ரத்தினங்கள் இழைத்த கும்பத்தைப் பால், நெய் முதலியவைகளால் நிறைத்து அதில் ஒரு சுவர்ண கற்பவிருக்ஷத்தை நிறுத்தியுள்ளவாறு அமையும் வடிவமாகும். இத்தானத்திற்குரிய மண்டபமே இதுவாகும். இத்தானத்தைச் செய்பவர்கள் கோடி சூர்யப் பிரகாசமுள்ள விமானமேறி வைகுண்டபதம் அடைவர்.

**ஸ்ரீ நைருதீஸ்வரர் மண்டபம்**

திலபர்வததானம் என்பது எள்ளினைப் பர்வதம் போல் குவித்து அதன் பின்னர் அதனை மண்டலஞ் செய்து பூசை செய்வர். இத்தானத்திற்குரிய மண்டபமாக இது திகழ்கின்றது. எள் எமனுக்குரியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஸ்ரீ பிரம்மேச்சுரர் மண்டபம்**

கல்பவிருக்ஷதானம் என்பது பொன்னால் கிளைகளுடன் பழங்கள் நிறைந்த கற்பகதரு செய்வித்துப் பூசிப்பதாகும். இத்தானத்தைச் சுட்டுவது போன்று ஒன்பது வாழை மரங்கள் பழங்களுடன் இருப்பது போன்ற வடிவமைப்பை இம்மண்டபத்தில் காணமுடிகின்றது.

**ஸ்ரீ கங்கேச்சுரர் மண்டபம்**

சப்தசாகரத்தானம் என்பது 7 கும்பங்களைச் செய்வித்து அதில் (சரஸ்வதியுடன் கூடிய) பிரமன், விஷ்ணு, சிவமூர்த்தி, சூரியன், சந்திரன், லக்ஷ்மி, பார்வதி ஆகிய எழுவரின் திருவுருவங்கள் செய்து வைப்பதாகும். எழுவரது திருவுருவங்களும் இம்மண்டபத்தின் விதான உத்திரத்தில் காணமுடிகின்றது. இவ்வகை தானம் செய்பவர்கள் விஷ்ணு பதமடைவர்.

**ஸ்ரீ முக்தேச்சுரர் மண்டபம்**

கனககல்பலதிகாதானம் என்பது பொன்னாற் செய்து வைக்கப்பட்ட நீர்க்காக்கை, அன்னம் முதலிய பறவைகளுடன் செடி, கொடிகளுடன் வடிவம் செய்து

வழங்கியதாகும். இத்தானத்திற்குரிய மண்டபமாக இது அமைகின்றது. இவ்வகை தானம் செய்பவர்கள தேவர்களால் பூசிக்கப்பட்டுச் சிவபதம் அடைவர்.

**ஸ்ரீ க்ஷேத்திர பாலேசர் மண்டபம்**

கோதானம் என்பது மற்றொரு வகை தானமாகும். பசுக்களைத் தானமாக வழங்கி சிறப்புச் செய்தமையால் இம்மண்டபம் கோதானத்திற்குரியதாகின்றது.

இவ்வாறு விஜயரகுநாத மன்னன் செய்வித்த மகாதானங்களைத் தனித்தனியே பிரித்து அளிக்கப்பட்ட தானங்களைக் கொண்டு கட்டப்பட்டதே இப்பதினாறு மண்டபங்களாகும்.

*****

**மகாமகத் தீர்த்தப் பாலகர்கள்**

மகாமகக் குளத்தின் நான்கு கரைகளிலும் பதினாறு மண்டபங்களை மன்னன் இரகுநாத நாயக்கன் கட்டுவித்தான் இப்பதினாறு மண்டபங்களும் பதினாறு பாலகர்களுக்குரியதாக கட்டப்பட்டிருக்கின்றன. அவை முறையே:

1. பிரம்மதீர்த்தேச்கரர்
2. முகுந்தேச்சுரர்
3. தானேச்சுரர்
4. இடபேச்சுரர்
5. பாணேச்சுரர்
6. கோணேச்சுரர்
7. தினேச்சுரர்
8. பைரவேச்சுரர்
9. அகத்தீச்சுரர்
10. வியாசேச்சுரர்
11. உமாபாகேச்சுரர்
12. நைருதேச்சுரர்
13. பிரம்மேச்சுரர்
14. கங்கேச்சுரர்
15. முக்தேச்சுரர்
16. க்ஷேத்திரபாலேச்சுரர்



# மகாமகம் 2016 - திட்டப் பணிகள்

**டாக்டர் என். சுப்பையன்,** இ.ஆ.ப.,

வரலாற்று சிறப்பும், பாரம்பரியமும் மிக்க தஞ்சை மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் கோபுர நகரமான கும்பகோணம் அமைந்துள்ளதும், அங்கு பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மிக உயரிய மகாமகம் திருவிழா நிகழ்வதும் மிகச்சிறந்த ஒன்றாகும். இத்தகைய மகாமகம்-2016இல் கொண்டாடப்பட உள்ளதை முன்னிட்டு பல்வேறு முன்னேற்பாடு நடவடிக்கைகள் தொலை நோக்கு பார்வையில் செயல்படுத்த வேண்டி 2013ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் கோரப்பட்டது. அதன் நேர்வில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 13-12-2013 பாலிசி எண். 327 வரிசை எண். 139இல் இவ்விழாவை மிகச்சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்த வழிவகை செய்யப்பட்டது.

2016 மகாமகத்திறகு அடிப்படை வசதி கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் திருக்கோயில்களின் திருப்பணிகள். மகாமகத்திற்கான முன்னேற்பாடுகள் போன்ற அனைத்து பணிகளையும் கண்காணிக்கவும் அப்பணிகளை விரைந்து உரிய காலத்திற்குள் செய்து முடிக்கும் வகையிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவாக இம்மகாமகம் அமைந்திடவும். தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் பல்வேறு துறைச்செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் உள்ளடங்கிய உயர்மட்டக்குழு (நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 24 நாள். 11-02-2015) அமைக்கப்பட்டும், மேலும் மாவட்ட அளவிலான குழுவும் (நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 12 நாள். (04-02-2015) மற்றும் இரண்டு துணைக்குழுக்களும் (நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (2ப) எண்.5 நாள்.27-01-2015) "மகாமகம் 2016" பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட முடுக்கிவிடப்பட்டது.

அதனை தொடர்ந்து ஒவ்வொரு துறைகளின் சார்பாக மாநில உயர்மட்டக்குழு மூலம் அரசுக்கு பல முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. இதன் மூலம் துறைவாரியாக நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதையடுத்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் மகாமகம் மாவட்ட குழுவானது ஐம்பதிற்கும் மேற்பட்ட முறை கூட்டங்கள் நடத்தியும், பலமுறை நேரடி கள ஆய்வுப் பணிகள் மேற்கொண்டும் மகாமகப்பணிகள் தொடர்ந்து முன்னேறுவதற்கு உறுதுணையாக இருந்தது.

டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

**சிறப்பம்சங்கள்**

* திருக்கோயில்கள், திருக்குளங்கள் மற்றும் சாலைகள் ஆகியவற்றை ஒட்டியிருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

* தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் குளங்கள் தூர்வாருதல் படிக்கட்டுகள் அமைத்தல் உள்ளிட்ட பற்பல பணிகள் செவ்வனே முடிக்கப்பட்டுள்ளன.

* மகாமகக் குளம் மற்றும் பொற்றாமரைக் குளத்திற்கு நீர் உள் வரவும் வெளி செல்லவும் வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டுள்ளன.

* மகாமகம் 2016இல் புனித நீராடலுக்காக சுமார் ஐம்பது லட்சம் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்தி தர மாவட்ட நிருவாகம் தயார் நிலையில் உள்ளது.

* தற்கால தொலைதொடர்புகள், சமூக வலைதளங்கள் மூலம் (பேஸ்புக், டிவிட்டர்) மகாமக நிகழ்வுகள் பணிகளின் நிலைகள் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

* தற்காலிக பேருந்து நிலையங்கள், சிறப்பு ரயில்கள் மற்றும் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

**இந்து சமய அறநிலையத்துறை**

* இந்து சமய அறநிலையத்துறையின் பராமரிப்பின் கீழ் 12-சிவாலயங்கள் மற்றும் 5 விஷ்ணு ஆலயங்கள் என மொத்தமுள்ள 17திருக்கோயில்கள் மகாமகத்திற்கு முன் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும் என்ற ஆகம விதிப்படி அவ்வனைத்து திருக்கோயில்களிலும் குடமுழுக்கு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

* 17 திருக்கோயில்களிலும் CCTV கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. தனியாக Wireless சாதனங்கள் பயன்படுத்தப் படவுள்ளன.

* பொற்றாமரைக்குளம், சாரங்கபாணி தீர்த்தவாரி மண்டபம் ஆகியவற்றிற்கு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* பக்தர்களுக்கு பிரசாதப்பெட்டி (தீர்த்தம், திருநீறு, குங்குமம், கல்கண்டு, மஞ்சள்) 17 திருக்கோயில்களிலும் வழங்குவதற்கு ஏற்பாடு

செய்யப்பட்டுள்ளது.

* தற்காலிக பேருந்து நிறுத்தங்கள் மற்றும் முக்கிய சந்திப்புகளில் அன்னதானம் வழங்குவதற்கென விண்ணப்பித்துள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் குறித்த நேரத்தில் அன்னதானம் வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

* மகாமகக்குளம் செம்மையான முறையில் தூர்வாரப்பட்டு பின் மணல் பரப்பி பக்தர்கள் புனித நீராடுவதற்கேற்ப மகாமகக் குளத்தில் உள்ள 20 புண்ணிய தீர்த்தவாரி ஊற்றுக்கிணறுகளிலும் Rain Gun அமைக்கப்பட்டுள்ளது.

**கும்பகோணம் நகராட்சி**

* திருக்கோயில்களின் திருத்தேர்கள் வலம் பாதைகள் மற்றும் 121சாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

* கும்பகோணம் நகராட்சியில் குடிநீர் வழங்கலுக்காக மூன்று புதிய நீர் உறிஞ்சி கிணறுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

* 500 LED விளக்குகள் நகரமெங்கும் உள்ள தெருக்களில் அமைக்கப்பட்டுள்ளன.

* திடக்கழிவு மேலாண்மைக்கென தேவையான உபகரணங்கள் (வண்டிகள், கூடைகள், காம்பக்டர் போன்றவை) வாங்கப்பட்டுள்ளன.

* தேப்பெருமாள்நல்லூரில் உள்ள திடக்கழிவு மேலாண்மை இடத்திலும் ஏற்கனவே உள்ள 110 பொதுக் கழிப்பிடங்களிலும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* சுகாதாரப்பணிகள் மேற்கொள்வதற்கான தேவையான பொருட்கள், மருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.

* 16 Sanitary Lane பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* 7 இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்கள் மற்றும் வாகனம் நிறுத்தும் இடம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* நகராட்சி நிருவாகத்தின் சார்பில் தனியாக Wireless சாதனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

* பச்சையப்பன் குளம், சேக்குளம், வைராகிக்குளம், பிடாரிக்குளம், ஆயிக்குளம், பாணாத்துறை குளங்கள் தூர்வாரப்பட்டு நீர் நிரப்பப்பட்டுள்ளது.

# மகாமகம்-2016

- மகாமகம் பெருவிழாவிற்காகப் பல ஊர்களிலிருந்தும் வரும் பக்தர்களின் வசதிக்காக 2800 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.
- தற்காலிகப் பேருந்து நிறுத்தங்கள் குடந்தையில் 7 வெவ்வேறு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.
- 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட குடி தண்ணீர் தொட்டிகள் குடந்தையில் 168 இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.
- தற்காலிகக் கழிவறை வசதி 147 இடங்களில் செய்யப்பெற்றுள்ளது.
- நகரின் 120 இடங்களில் சுகாதார சிறப்பு முகாம் அமைக்கப்பட்டுள்ளது.
- 500 LED ஒளி விளக்குகள் 20 இடங்களிலும், 5 விளக்குகள் உயர் கோபுரங்களிலும் அமைக்கப்பெற்றுள்ளது.
- 36 தற்காலிகக் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பெற்று 28,215 காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்
- மகாமக நாளன்று பொதுமக்களுக்கு வழங்க 16 லட்சம் குடிதண்ணீர் பாட்டில்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- முன் எச்சரிக்கை நடவடிக்கையாக தீயணைப்பு வீரர்கள் 1000 பேர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
- மகாமகத்தில் 36 லட்சம் மக்கள் கலந்து கொள்வார்கள் எனும் எதிர்பார்ப்பில் அதற்கான பணிகள் முடுக்கிவிடப்பட்டு தயார் நிலையில் பணியாளர்கள் வைக்கப்பட்டுள்ளனர்.



மகாமகத் திருவிழாவை முன்னிட்டு டாக்டர் என். சுப்பையன், இஆ.ப., அவர்கள், காவல்துறை துணைத்தலைவர் திரு.செந்தில்குமார் இ.கா.ப. அவர்களுடன் ஆய்வு மேற்கொண்ட பொழுது.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 2016ல் நடைபெற்றவுள்ள மகாமக வளர்ச்சிப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் என். சுப்பையன், இ. ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



முதன்மை செயலர் திரு.கே. இராஜாராமன் இ.ஆ.ப. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் ம. வீரசண்முகமணி ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்ட பொழுது.



முதன்மை செயலர் திரு.கே. இராஜாராமன் இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் ம. வீரசண்முகமணி, கும்பகோணம் சார் ஆட்சியர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்ட பொழுது.



மகாமகத் திருவிழாவை முன்னிட்டு டாக்டர் என். சுப்பையன், இஆ.ப., அவர்கள், காவல்துறை துணைத்தலைவர் திரு.செந்தில்குமார் இ.கா.ப., காவல்துறை கண்காணிப்பாளர் திரு.மயில்வாகணன் இ.கா.ப., ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்ட பொழுது.



மகாமகத் திருவிழாவை முன்னிட்டு டாக்டர் என். சுப்பையன், இஆ.ப., அவர்கள், கும்பகோணம் சார் ஆட்சியர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., திருச்சி மின்வாரிய தலைமை பொறியாளர் திரு. சிவசாமி ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்ட பொழுது.



மகாமகத் திருவிழாவை முன்னிட்டு டாக்டர் என். சுப்பையன், இஆ.ப., அவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர் திரு.மயில்வாகணன் இ.கா.ப., கும்பகோணம் சார் ஆட்சியர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்ட பொழுது.



மகாமகத் திருவிழாவை முன்னிட்டு டாக்டர் என். சுப்பையன், இஆ.ப., அவர்கள், கும்பகோணம் சார் ஆட்சியர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்களுடன் ஆய்வு மேற்கொண்ட பொழுது.



மகாமகத் திருவிழாவை முன்னிட்டு டாக்டர் என். சுப்பையன், இஆ.ப., அவர்கள், கும்பகோணம் சார் ஆட்சியர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்களுடன் ராமசாமி திருக்கோயிலில் நடைபெற்றும் வரும் பணி குறித்து ஆய்வு மேற்கொண்ட பொழுது.



மகாமகத் திருவிழாவை முன்னிட்டு டாக்டர் என். சுப்பையன், இஆ.ப., அவர்கள், அரசு தலைமைச் செயலாளர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்களுடன் ஆய்வு மேற்கொண்ட பொழுது.



மகாமகத் திருவிழாவை முன்னிட்டு டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., அவர்கள், அரசு தலைமைச் செயலாளர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., கும்பகோணம் சார் ஆட்சியர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்ட பொழுது.



மகாமகத் திருவிழாவை முன்னிட்டு டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., அவர்கள், அரசு தலைமைச் செயலாளர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., கும்பகோணம் சார் ஆட்சியர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்ட பொழுது.

* விழாவிற்கு வரும் மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இலவசமாக வழங்குவதற்கு ஏற்ப கும்பகோணம் நகரப்பகுதிகளில் 168இடங்கள் தேர்வு செய்யப்பட்டு 1000லிட்டர் கொள்ளலவு கொண்ட நீர்த்தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது.

* 147 இடங்களில் தற்காலிக கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* மகாமகக்குளத்தில் நீர் உள் வரவும், வெளி செல்லவும் குழாய் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

* நகராட்சிக்குரிய கால்வாய்களான ஓலைப்பட்டினம், பெருமாண்டி, மோரி, உளூர் மற்றும் பழவத்தான் கட்டளை ஆகிய கால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளன.

* சுத்தமான மற்றும் தரமான உணவுப்பொருட்கள் வழங்கப்படுவதை கண்காணிக்க குழுக்கள் அமைக்கப்பட்டு அனைத்து உணவகங்கள் மற்றும் தேநீர் விடுதிகள் காலமுறை ஆய்விற்கு உட்படுத்தத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**நெடுஞ்சாலைத்துறை**

மகாமக சாலைப்பணிகளுக்காக நெடுஞ்சாலைத்துறை அரசாணை நிலை எண். 73 நாள். 14-07-2015ன் படி 10 மாநிலச் சாலைகள், 9 முக்கிய மாவட்ட சாலைகள் மற்றும் 3 மற்ற மாவட்ட சாலைகள் போடப்பட்டுள்ளது.

**தேசிய நெடுஞ்சாலைத்துறை**

* விக்கிரவாண்டி-மீன்சுருட்டி-அணைக்கரை (NH 45C) தேசிய நெடுஞ்சாலை போடப்பட்டுள்ளது.

* சீர்காழி-நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலை (NH 45A) முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

**பொதுப்பணித்துறை**

* மகாமகக்குளம், பொற்றாமரைக்குளம், காவேரி ஆறு மற்றும் அரசலாற்றில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளுக்காக 63பணிகளை செயல்படுத்திட அரசாணை (நிலை) எண். 196. பொதுப்பணித்துறை(க்யூ-2) நாள். 27-10-2015ல் ஆணை வெளியிடப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* மகாமகக்குளம் மற்றும் பொற்றாமரைக் குளத்தினுள் உள்ள மாசு கலந்த நீரினை அகற்றி மண்திட்டு, சேறு சகதிகளை அப்புறப்படுத்தி, புதிய ஆற்று மணலை நிரப்பும் பணி மகாமகக்குளம் மற்றும் பொற்றாமரைக் குளத்தில் செவ்வனே செய்து முடிக்கப்பட்டுள்ளன.

* பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் நீராடும் வசதிக்காக கும்பகோணம் நகர எல்லைக்குட்பட்ட காவேரி ஆற்றில் 20 படித்துறைகளும், அரசலாற்றில் 16 படித்துறைகளும் புதுப்பித்து வர்ணம் பூசப்பட்டுள்ளது.

* காவேரி ஆறு மற்றும் அரசலாற்றில் மண்திட்டுகள், மண் படிமங்கள், புதர்கள், நெய்வேலி காட்டாமணக்குச்செடி, கொடிகளை அப்புறப்படுத்தி ஆறு தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது.

* பொதுப்பணித்துறையின் திட்ட இல்லத்தில் முக்கிய பிரமுகர்கள் தங்குவதற்கான திட்ட இல்லத்தினை விரிவாக்கம் செய்து அதன் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

* பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கும்பகோணம் நகரின் காவேரி ஆற்றின் குறுக்கே பூம்புகார், கல்லணை சாலை மற்றும் டாக்டர். மூர்த்தி சாலை இணைப்பதற்காக இரும்பு நடைபாலம் அமைக்கப்பட்டுள்ளது.

**மின்சார வாரியம்**

* மகாமகக்குளத்தைச் சுற்றிலும் 35 கி.மீ. தொலைவிற்கு நிலத்திற்கு அடியில் கேபிள்கள் பதிக்கப்பட்டுள்ளன. 780 மின்கம்பங்கள், 231 மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன.

* கும்பகோணம் நகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தங்கு தடையின்றி 24மணி நேரமும் மின்சாரம் கிடைக்கத் தக்க முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**மருத்துவப் பணிகள் மற்றும் பொதுச் சுகாதாரம்**

* சுகாதாரத்துறையின் அனைத்து கட்டிடங்களிலும் கழிப்பறைகள் புணரமைத்தல் மற்றும் தற்காலிக வார்டுகள் அமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* விழாவிற்கு வரும் பக்தர்களுக்கு தற்காலிக சுகாதார முகாம்கள், மகாமகம் நடைபெறும் அனைத்து நாட்களிலும் 24 மணிநேரமும் தொடர்ந்து மருத்துவர்கள் உள்ளிட்ட இதர பணியாளர்கள் மூன்று சுழற்சிகளாக பணியாற்றுவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

* 137 மருத்துவ முகாம்கள் தேவையன மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

* 108 ஆம்புலன்ஸ் மொத்தம் 28 எண்ணிக்கைகள் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

* பொது சுகாதாரத்தை பேணி காத்திட மகாமகக் குளத்தை சுற்றிலும் மூன்று நிலைகளில் (உள்-8 மண்டலங்கள், நடு-6 மண்டலங்கள், வெளி-1 மண்டலம்) வளையங்களாக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* புனித நீராடும் குளங்களில் மணலுடன் ப்ளீச்சிங்பவுடர் கலந்து தொற்று நீக்கம் செய்யும்பணி முடிவடைந்துள்ளது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள்**

* குடிநீர் வசதிகள், கழிவறைகள், வாகன நிறுத்தும் இடங்கள், தெரு விளக்குகள், சாலை வசதிகள், கட்டிடங்கள், சிறுபாலங்கள் மற்றும் பிற அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 50க்கும் மேற்பட்ட பணிகள் சிறப்பாக முடிக்கப்பட்டுள்ளன.

**பேரூராட்சிகள்**

* பேரூராட்சிகளில் தற்காலிக சிறு சிண்டெக்ஸ் குடிநீர் தொட்டிகள் மற்றும் தற்காலிக கழிப்பிட வசதிகள் 51 இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

* தேவையான இடங்களில் சாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

**காவல்துறை**

* மொத்தம் 24 இடங்களில் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்துவதற்கென மகாமகக் குளத்தை சுற்றிலும் ரயில் நிலையங்கள் மற்றும் சாலை சந்திப்புகளிலும் Crowed Control Gate அமைக்கப்பட்டுள்ளது.

* சுமார் 28,000 காவல்துறை பணியாளர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ளார்கள்

* போக்குவரத்தினை நெறிப்படுத்துவதற்காக உரிய சாதனங்கள் Ham Rodios, காவல் உதவி மையங்கள், சிறப்பு கட்டுப்பாட்டறைகள் உருவாக்கப்பட்டுள்ளது.

* 36 தற்காலிக காவல் நிலையங்கள், 36 குற்றவியல் நீதிபதிகளுடன் தயார் நிலையில் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை**

* தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையில் கூட்ட நெரிசல்களுக்கு தகுந்தாற்போல் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு மிகச்சிறந்த திட்டமிடலுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

* தீயணைப்பு உபகரணங்கள் ஸ்டெக்சர்ஸ் (Stretchers), கயிறு, தீயணைப்பு வாகனங்கள், அவசர ஊர்திகள் போன்றவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

* கும்பகோணம் நகர முக்கிய இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் படைகள், தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள் அறிவிப்பு பலகைகளாக வைக்கப்பட்டுள்ளன.

**போக்குவரத்து**

* மொத்தம் 2800 சிறப்பு பேருந்துகள் இயக்குவதற்கு பல்வேறு கோட்டங்களிலிருந்தும் பேருந்துகள் வரவழைக்கப்பட்டுள்ளன.

* மகாமகத்திருவிழாவையொட்டி இயக்கப்படும் அனைத்து பேருந்துகளுக்கும் தேவையான எரிபொருள் உரிய காலத்தில் கிடைப்பதற்கும், அவற்றை இருப்பு வைப்பதற்கும் தக்க முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* இயக்கப்படும் பேருந்துகள் அனைத்திலும் மகாமகம் 2016 இலட்சினை (LOGO) ஒட்டப்பட்டுள்ளது.

* தற்காலிக பேருந்து நிலையங்கள் மற்றும் அப்பேருந்து நிலையங்களில் இருந்து புனித நீராடல் குளங்களுக்கு செல்வதற்கு சிறப்பு சிற்றுந்துகள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

* 24 தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் போன்ற தன்னார்வர்களிடமிருந்து 100 சிற்றுந்துகள் பெறப்பட உள்ளது.

* மாற்றுத்திறனாளிகளில் மற்றும் வயதான முதியோர்களுக்காக ஏழு சிறப்பு நிறுத்தங்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரயிருக்கின்றன.

**ரயில்வே**

* வெளி மாநிலங்களில் இருந்தும் தொலைவில் இருந்து வரும் பக்தர்களுக்கு சிறப்பு ரயில்களும் இயக்கப்படுகிறது.

* கும்பகோணம் ரயில் நிலையத்திலும், ஆடுதுறை குததாலம் ரயில் நிலையங்களிலும் நடைபாதை நீட்டிக்கப்பட்டுள்ளது.

* தேவையான குடிநீர் ரயில் நிலையங்களில் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தொலை தொடர்பு நிறுவனங்கள்**

* தொலைபேசி தகவல் தொடர்புகளுக்கென கும்பகோணம் நகரப்பகுதிகளில் மூன்று செல்போன் கோபுரங்கள் புதிதாக வைக்கப்பட்டுள்ளன.

* தனியாக தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தொலை தொடர்பு சாதனங்களுக்கு தற்காலிக கோபுரங்கள் அமைக்கும்பணி நடந்து வருகின்றன.

**செய்தி மக்கள் தொடர்புத்துறை**

* செய்தியாளர்கள், பத்திரிக்கை நிருபர்கள், புகைப்படக் கலைஞர்கள் ஆகியோர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

*மகாமக நிகழ்ச்சிகள் அனைத்தையும் நேரலையாக DD தூர்தர்ஷனில் ஒளிபரப்பவும் தனியார் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* பத்திரிக்கைகள் அனைத்திலும் மகாமகம் குறித்த தகவல்கள் அவ்வப்போது வெளிவர தக்க நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளன.

* சக்தி விகடன், கல்கி போன்ற இதழ்களில் மகாமக நிகழ்வுகள் குறித்த கட்டுரைகள், குறிப்புரைகள் வெளிவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சுற்றுலா**

* மகாமகத் திருவிழா நடைபெறும் நாட்களில் கலைப்பண்பாட்டு மற்றும் சுற்றுலாத்துறை மற்றும் தென்னகப்பண்பாட்டு மையம் மூலம் கலை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

* மகாமகத்திற்கென இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டு அவ்வப்போது நடைபெறும் முன்னேற்றப்பணிகள், தகவல் தொடர்பு எண்கள், தங்கும் அறைகள், மகாமகம் குறித்த தகவல்கள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

மேலும் சமூக வலைதளங்களான பேஸ்புக், டிவிட்டர், கூகுள் ப்ளஸ், வாட்ஸ்அப் மூலம் மக்களின் குறைகள் மற்றும் ஆலோசனைகள் கேட்கப்பட்டு அவற்றின் தன்மையறிந்து குறைகள் களையப்படவும், ஆலோசனைகள் செயல்படுத்தவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| இணையதள முகவரி | - | http://mahamahamfestival.in/ |
| பேஸ்புக் முகவரி | - | https://www.facebook.com/mahamaham-2016 |
| டிவிட்டர் முகவரி | - | https://twitter.com/mahamaham-2016 |
| வாட்ஸ்அப் | - | 9942266996 |

கும்பகோணம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் 97 தங்கும் விடுதிகளின் அறைகள் முக்கிய சிறப்பு விருந்தினர்கள் மற்றும் உயர்நிலை அலுவலர்களுக்காக மாவட்ட நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளன.

இம்மகாமகத்தை மாசில்லா மகாமகமாக கொண்டாடுவதற்கு விழிப்புணர்வு பேரணி 07-01-2016 அன்றும் கருத்தரங்கு 22-01-2016 அன்றும் மனிதச்சங்கிலி 28-01-2016 அன்றும் நடத்தப்பட்டுள்ளது. 500 தன்னார்வலர்களைக் கொண்டு பசுமைப்படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

செம்மையாகவும், சிறப்பாகவும் நடைபெறும் மகாமகத் திருவிழா பற்றிய செய்திகள், தகவல்கள் பல்வேறு அறிஞர்கள் மற்றும் மாணவர்களின் படைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய குறிஞ்சி மலர் போன்றதொரு இதழ் படைப்புப்பணி மூலம்



## மகாமகக் குளத் தீர்த்தங்களும் பலன்களும்



| | | |
|---|---|---|
| 1. வாயு தீர்த்தம் | - | துன்பத்தினின்றும் விடுதலை |
| 2. கங்கை தீர்த்தம் | - | கைலையை அடையும் பயன் |
| 3. பிரம்ம தீர்த்தம் | - | நூற்றொரு தலைமுறை செய்த பாவம் நீங்குதல் |
| 4. யமுனை தீர்த்தம் | - | செல்வம் பெருகுதல் |
| 5. குபேர தீர்த்தம் | - | எல்லாச் செல்வங்களும் பெறுதல் |
| 6. கோதாவரி தீர்த்தம் | - | செயல் திட்டங்களின் வெற்றி |
| 7. ஈசானிய தீர்த்தம் | - | பாபத்திலிருந்து விடுதலை மனதில் நினைப்பதை அடைதல் |
| 8. நருமதை தீர்த்தம் | - | பாபத்தினின்றும் விடுதலை |
| 9. இந்திர தீர்த்தம் | - | சொர்க்கத்தை அடைதல் |
| 10. சரஸ்வதி தீர்த்தம் | - | மெய்ஞானம் அடைதல் |
| 11. அக்கினி தீர்த்தம் | - | பாபத்திலிருந்து விடுதலை |
| 12. காவேரி தீர்த்தம் | - | தீயசிந்தனை நீங்கி சுத்தம் அடைதல் |
| 13. யம தீர்த்தம் | - | காலனது தண்டனையிலிருந்து விடுதலை |
| 14. குமரி தீர்த்தம் | - | பதினாயிரம் அஸ்வமேத யாகம் செய்த பலன் |
| 15. நிருதி தீர்த்தம் | - | பேய் பிசாசுகளின் பிடியிலிருந்து விடுதலை |
| 16. பயோடினி தீர்த்தம் | - | காமதேனுவைப் பெற்றிருக்கும் பலன் |
| 17. தேவ தீர்த்தம் | - | எல்லா பாப விமோசனம் |
| 18. வருண தீர்த்தம் | - | முக்தியை அடைதல் |
| 19. சரயு தீர்த்தம் | - | சகல துன்பங்களிலிருந்தும் விடுதலை |
| 20. அறுபத்தாறு கோடி தீர்த்தம் | - | புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதால் ஏற்படும் பலன் |




## சரபேந்திர பூபாலக் குறவஞ்சி

தமிழ்ச்சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று குறவஞ்சி. இது நாடக வகையைச் சார்ந்தது. இறைவன் அல்லது மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்படுவது. இந்நூல் குற்றாலக் குறவஞ்சிக்கு அடுத்தபடியாக வைத்துப் போற்றப் படுகிறது. தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு, கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரால் இயற்றப்பட்டதுதான் இக்குறவஞ்சி நூல். இவர் தண்டபாணி தேசிகரின் மகனாவார். இந்நாடகம் தஞ்சைப் பெரியகோயிலில் நடைபெற்ற திருவிழாக் காலங்களில் ஆடப்பெற்று வந்துள்ளது. அஷ்டக்கொடி விழாக்காலத்தின் போது ஆடப்பெற்று வந்ததால், இது அஷ்டக்கொடி குறவஞ்சி எனவும் வழங்கப்பெறும். இக்குறவஞ்சி மூலம் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் வளம் சேர்த்துள்ளார் சிவக்கொழுந்து தேசிகர்.

இக்குறவஞ்சியின் தலைவி மதனவல்லி, சரபோஜி மன்னன் உலா வரும்போது, அவனைக் கண்டு அவன் மீது கொண்ட காதலால் விரகதாபத்தில் துடிக்கிறாள். தன்னை அம்மன்னனோடு சேர்த்து வைக்காத மன்மதன், மதி, தென்றல் ஆகியவற்றைப் பழிக்கிறாள். தன் தோழியை தூது போகச் சொல்கிறாள். தூது சென்றவள் வரவில்லையே என்று இரங்கியிருக்கும் வேளையில் அங்கு ஒரு குறத்தி வருகிறாள். அவளிடம் குறி கேட்கிறாள். இப்படியாக குறவஞ்சி இலக்கணத்துக்கே உரிய அனைத்தும் கூறப்பட்டுள்ளன.

சிறப்புப் பாயிரம், கடவுள் வாழ்த்து, கட்டியக்காரன் வருகை, மதனவல்லி தோழியருடன் பந்தாடுதல், சரபோஜி உலா வருதல், அவன் நாட்டின் சிறப்பு, மன்மதன் மலரம்பு, மலைவளம், சந்த வளம், தேச வளம், சிங்கன வருகை, சிங்கியைத் தேடுதல், அவளைக் காணல், இருவரும் உரையாடுதல் முதலிய நாடகப் பாங்குகள் அனைத்தும் அமைந்துள்ளன.

குறிவகைகள், நிமித்தங்கள், கைரேகை, கால்ரேகை, மரு, தழும்பு, சுழிகள், கவுளி, விரிச்சி, ஆந்தையின் சொல், குறவர்கள் வேட்டையாடுதல், பறவைகளைத் தந்திரமாக வலைவீசிப் பிடித்தல் முதலிய பண்டைய தமிழர்தம் பழக்க வழக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இச்சுவடி நூல் இந்நூலகத்தில் உள்ளது.

– மலர்க்குழு

# சரசுவதி மகால் நூலகத்தின் வளர்ச்சியும் மகாமகப் பங்களிப்பும்

**மலர்க்குழு**

தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று போற்றப்படுகின்ற தஞ்சாவூர் பழம்பெருமை வாய்ந்த நகரங்களுள் ஒன்றாகும். தஞ்சாவூர் 'இஞ்சிசூழ் தஞ்சை', 'வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை', 'கடிமதிள் தஞ்சை' என்றெல்லாம் இலக்கியத்தின் வாயிலாகப் போற்றப்படுகின்றது. "தண்செய்" என்ற சொல்லின் மருவு வடிவுமே தஞ்சாவூர் என்பர். தண்செய் என்பதற்கு குளிர்ந்த அழகிய சோலை, வயல் நிறைந்த பகுதி என்பது பொருள்.

தஞ்சை மவாட்டம் தொன்மையான வரலாற்றைக் கொண்டது. இம்மாவட்டத்தில் பாயும் காவிரியைப் பற்றிப் பல இலக்கியங்கள் அழகாக எடுத்தியம்புகின்றன. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் காவிரிப்பூம்பட்டினத்தை அழகுற வருணிக்கின்றது. கம்பர் இம்மாவட்டத்தில் உள்ள தேரெழுந்தூர் என்னும் ஊரினர் ஆவார். பல்லவர்களின் ஆட்சிக்குட் பட்டிருந்த இப்பகுதியை விசயாலய சோழன் கி. பி. 850இல் கைப்பற்றிச் சோழர் ஆட்சியை ஏற்படுத்தினான்.

தஞ்சாவூர் சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. சோழர்கள் ஆட்சியும் அதற்குப்பின் விசயநகரப் பேரரசின் பிரதிநிதிகளான நாயக்க மன்னர்களும், பிறகு மராட்டியர்களும் தஞ்சாவூரை ஆண்டனர். தஞ்சை நாயக்க மன்னனான விசயராசவ நாயக்கன் "இரகுநாத நாய்க்க அப்யுதயமு" என்ற நூலை எழுதியுள்ளான். அந்நூல் தஞ்சை அரண்மனையைப் பற்றிய முழு விவரத்தினையும் எடுத்தியம்புகின்றது.

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சை நாயக்கர் காலத்தில் எழுப்பப்பட்ட அரண்மனைப்பகுதிகளே இப்போது காணப்படுகின்ற அரண்மனைப் பகுதிகளாகும். தஞ்சை அரண்மனையில் காணப்படும் சரசுவதி மகால் நூல் நிலையம் அமைந்த பகுதி நாயக்கர் ஆட்சி காலத்தில் விஜய விலாசம், விஜயராகவ விலாசம் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலுள்ள நூலகங்களிலேயே சரசுவதி மகால் நூலகம் மிகச் சிறப்பு வாய்ந்த ஒன்று. ஏனெனில், அந்நூலகம் எல்லோருக்கும் அறிவுப்பசியைத் தோற்றுவிப்பதற்குத் தேவையான அரிய பொக்கிஷங்களான ஆவணங்கள், அரிய நூல்கள் ஆகியவற்றின் கருவூலமாகத் திகழ்ந்து வருகிறது. இதை ஆதாரமாகக் கொண்டுதான்

“பிரிட்டானிகா” என்னும் கலைக்களஞ்சியம் இந்தியாவிலேயே இது ஒரு குறிப்பிடத்தக்க நூலகம் என்று குறிப்பிட்டுள்ளது.

சோழ மன்னர்களின் ஆட்சிக்காலத்திய நூல்களும் இங்கே கிடைக்கப் பெறுவதோடு நாயக்க மன்னர்களின் ஆட்சியில் இது “சரசுவதி பண்டார்” எனவும் பெயர் பூண்டு திகழ்ந்திருக்கின்றது. நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலம் கி. பி. 1535-1675வரை ஆகும். அதற்குப் பின் மராட்டிய மன்னர்கள் கி. பி. 1675-1855 வரை தஞ்சாவூரை ஆட்சிபுரிந்தனர்.



பள்ளிக்கல்வித்துறை அசைச்சர் மற்றும் பள்ளிக்கல்வித்துறை முதண்மை செயலாளர் புதிய நூல்கள் வெளியிடுதல்

கி. பி. 1868இல் சரசுவதி மகால் நூலகத்தின் சுவடிகளை சென்னை அரசு கட்டளையின் பேரில் பரிசீலனை செய்து பட்டியல் தயாரிக்க முற்பட்ட அறிஞர் பிக்வேர்ட் என்ற வடமொழிப் பேராசிரியர் இந்த நூலகத்தை போன்றதொரு ஒரு நூலகம் இந்தியாவில் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த சரசுவதி மகால் நூலகத்தை பர்னல் காலத்திய வடமொழி அறிஞர் ஒருவர் “சரசுவதி துர்கம்” என்று அழைத்துள்ளார். அறிவுக் களஞ்சியமாகிய இதற்கு சரசுவதியின் கோட்டை என்பது இதன் பொருளாகும்.

சகஜிபுரம் எனும் மற்றொரு பெயர்கொண்ட திருவிசநல்லூரில் 46பண்டிதர்களை குடியமர்த்தி பற்பல சுவடி நூல்கள் இயற்றக் காரணமாய் இருந்தவர்கள் மராட்டிய மன்னர்கள். ஆகவே அவர்களது ஆட்சிக்காலமான 1918ஆம் ஆண்டில் இது "தஞ்சை மாமன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம்" ஆயிற்று.

சரசுவதி மகால் நூலகத்தில் **Dr. A. C..பர்னல்** அவர்களின் காலத்தில் சுவடி விவரப்பட்டியல் தயார் செய்த பணி குறிப்பிடத்தக்க ஒன்று. Dr. A. C..**பர்னல்** அவர்களின் காலத்திற்கு முன்பும் இப்பணி நடந்துள்ளது. அதன் பிறகும் சுவடி விவரப்பட்டியல் பணி தொடர்ந்து நடைபெற்றுள்ளது. வடமொழிப் பேராசிரியர் பி. பி. சாஸ்திரி அவர்கள் In Sanskrit alone there are 24,432 Manuscripts written in various scripts. In respect of quantity and richness of material the Sanskrit section of this Library is easily the biggest manuscripts Library in the world the Sanskrit section of the Government Oriental Library Madras with its 22,270 manuscripts ranking second என்கிறபடி இது உலகத்திலேயே பெரிய சுவடி நூலகமென்று புகழ்ந்துள்ளார்.



நடுவண் அரசு கலைப்பண்பாட்டுத் துறை முதண்மை செயலர் ஆகியோரின் வருகை

சரசுவதி மகால் நூலகம் உலகப்புகழ் வாய்ந்தது. உலகிலேயே மிகுதியான ஓலைச்சுவடிகளைக் கொண்டுள்ள நூலகம் இதுவாகும். நாயக்க, மராட்டிய மன்னர்களின் காலங்களில் மேலும் விரிவடைந்துள்ளது. இரகுநாத நாயக்கரின் ஆட்சிக்காலத்தில் தமிழ். தெலுங்கு, கிரந்தம், நாகரி, கன்னடம், வடமொழிச்சுவடிகள் ஆகியவை இடம்பெற்றன. இரண்டாம் சரபோசி மன்னரால் சேகரிக்கப்பட்ட ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், பிரெஞ்சு, இத்தாலி ஆகிய மொழி நூல்கள் இந்நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இலக்கியம், தத்துவம், இசை, மருத்துவம், அறிவியல், தாவரவியல் தொடர்பான மராட்டியச் சுவடிகளும், பலவகையான புகைப்படங்களும் சேகரிக்கப்பட்டு இந்நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

**சரசுவதி மகால் நூலகத்தின் வளர்ச்சி**

பணடைக்காலத்தில் பணிபுரிந்த அறிஞர்களெல்லாம் மரமேசை, மர நாற்காலி கொண்டு எப்படி கஷ்ட்டப்பட்டு சுவடிகளை எழுதுவார்களோ அவ்வாறு நூலகத்தில் பணியாற்றுகின்ற பணடிதர்களும் நல்ல மகிழ்ச்சியான சூழ்நிலையில் சுவடிகளை நன்முறையில் ஆய்ந்து செம்பதிப்பாகக் கொணருவதின் பொருட்டு தக்க வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கத்திட்டமிட்டு சரசுவதி மகால் நூலகத்தில் பற்பல பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




மாதாந்தர இலக்கிய கூட்டம்

சரசுவதி மகால் நூலகத்தை உலகத் தரம் வாய்ந்த நூலகமாகச் செய்யவேண்டும். மன்னர்கள் காலத்தில் புலவர்களுக்கும், பேரறிஞர்களுக்கும் எத்தகைய மதிப்பு வழங்கப்பட்டதோ அத்தகைய வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற பேரார்வத்தோடு சரசுவதி மகால் நூலகத்தை மின்மயமாக்குதல், உட்காருவதற்கு உயர்தர இருக்கை அமைத்தல், ஒவ்வொருவருக்கும் கணினி வசதி ஏற்படுத்துதல், இந்நூலகத்தைப் பயன்படுத்தும் ஆய்வாளர்கள் தத்தம் இருப்பிடத்திலிருந்தே சுவடிகளைப்பற்றி அறிய, நகல்பெற வசதியாக, நவீன முறையில் சுவடிகளை அழியாது பாதுகாத்திடவும் அவற்றை உருப்படமெடுத்தல் பணி, பதிவிடப்பட்ட நூல்களின் பாதுகாப்புமுறை, தொன்மை நூற்பதிவுகளைப் பலரும் பயன்படுத்தத் துணையாகக் கணினியில் நூல்களின் பதிவுகளைப் பொருத்துதல், வளரும் மாணவச்செல்வங்களின் உள்ளத்தை நன்கு பண்படுத்தவும், பல போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பெறத்துணையான பல்வேறு வகைப் போட்டித் தேர்வுக்கான புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து இந்நூலகத்தில் சேர்த்தல், பழமையும் அரியதுமாகிய நூல்களை உருப்படம் ஆக்குதல், நேரில் வரும் ஆய்வாளர்களின் நேரம், ஆய்வாளர்களின் ஆவல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு எளிதில் கண்டறியத் தானறியும் நூற்பதிவு இயந்திரம் அமைத்துக்கொடுத்தல், சுற்றுலாப்பிரியர்கள், ஆர்வலர்கள், அன்பர்கள், மாணாக்கர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அனைவரும் அறிந்து மகிழ ஏதுவாக சோழ மண்டலத்தின் புகழ் விளக்கும் ஒலி, ஒளிச் சித்திரம், குறும்படம் காண்போர் ஆற அமர இருந்து பார்ப்பதற்கு வசதியாக குளிர்சாதனத் திரையரங்கு அமைத்தல், அருங்காட்சியகத்தினை அதிநவீன முறையில் சீர்படுத்துதல் போன்ற வளர்ச்சிப் பணிகள் சரசுவதி மகால் நூலகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் நூல் வெளியீடுகளை கண்கவர் வண்ண அட்டைகளோடும் இதுவரை மறுபதிப்பே காணாத சிறந்த நூல்களையும் வெகு விரைவாக அச்சிட்டு வெளிக்கொண்டுவரும் பணியும், பதிப்புப்பணிக் கூட்டம், அதற்கான நூல்களைத் தேர்ந்தெடுக்கும்பணி, பதிப்பாசிரியர், சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்களை விரைவாக இப்பணியில் ஈடுபடுத்துதல், சிறந்த சுவடிப் பதிப்பாசிரியர்களை உருவாக்கும் நோக்கத்தோடு மாணவர்களிடமும், ஆர்வலர்களிடமும் தமிழ்ச்சுவடியியல், கிரந்த எழுத்துப் பயிற்சி, தெலுங்கு மொழி, மராட்டிய மொழி, மோடி எழுத்துப்பயிற்சி ஆகியன நூலக மொழிப்பண்டிதர்கள் மற்றும் தக்க அறிஞர்களைக்கொண்டு போதிக்கும் பணியும் நூலகத்தின் வளர்ச்சிப்பணிகளாக சரசுவதி மகால் நூலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கு வெளியிடப்பெறும் சுவடி நூல்களைப் அச்சுப்பணி செய்து பிரிண்டரில் அச்சடித்த பிறகு வண்ண அட்டைப்படம் தயார் செய்ய வெளியிடத்திலுள்ள அச்சகத்தை நாடவேண்டிய சூழல்தான் இதுவரை என்ற காலம் மாறி கணினியிலிருந்தே நேராக அச்சடிக்க, அச்சுப்பணிக்கு தேவையான பல்லாயிரம் பிரதிகளைக் குறுகிய காலத்தில்

அச்சிட்டுத்தரும் தொழில் நுட்ப வசதிகளோடு கூடிய அச்சு இயந்திரம் மற்றும் வண்ண அச்சு இயந்திரம் ஆகிய அனைத்து உபகரணங்களும் கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்துப் பணிகளையும் செய்துகொடுக்கவல்ல மிகச்சிறந்த நூலகமாக இந்த சரசுவதி மகால் நூலகம் விளங்குகின்றது என்றால் மிகையல்ல.

சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தை உலகத்தரம் வாய்ந்த நூலகமாக மேம்படுத்துவதன் பொருட்டு தமிழக அரசு வல்லுநர் குழு ஒன்றை அமைத்து அக்குழுவின் முதல் கூட்டம் 11-06-2013 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நூலக ஆளுமைக்குழுத் தலைவர் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இந்நூலகத்தை சர்வதேச அளவில் தரம் உயர்த்துவதன் பொருட்டு நடுவண் அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டது. இக் கருத்துருவை நடுவண் அரசின் கலை மற்றும் பண்பாட்டுத்துறை தேசீய நூலக மையம் (Government of India, Department of Culture; National Mission on Libraries) (NML) ஏற்று கருத்துரு பட்டியலில் இருந்த



ஒளி ஒலி காட்சியகம்

முக்கிய பணிகளை மேற்கொள்ள ரூ. 6. 91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அதன் முதல் தவணையாக 50% தொகையான ரூ. 3,45,50,000/- சரசுவதி மகால் நூலகத்திற்கு வழங்கி உள்ளது.

இந்நூலகத்திற்கு வருகை தரும் ஆய்வாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் வாசகர்கள் ஆகிய அனைவரும் தமிழ், சமஸ்கிருத, தெலுங்கு, மராட்டி ஆகிய மொழிகளிலுள்ள அரிய சுவடிகள், நூல்கள் ஆகியவற்றைப் பற்றி தெரிந்துகொள்ளவும், தஞ்சாவூர் மாவட்டம் தொடர்பான அனைத்து செய்திகளையும் ஆவணப் படமாகக் காண்பதற்கும், தமிழ் மற்றும் இதர மொழிகள் தொடர்பாக உலகத்தரம் வாய்ந்த அளவில் ஆங்காங்கு நடைபெறும் கருத்தரங்கங்கள், ஆய்வு மாநாடுகள் போன்றவற்றை இந்நூலகத்திலிருந்தபடியே பார்ப்பதற்கும்-கலந்துரையாடலில் பங்கேற்கவும், அரிய நூலகங்களின் ஆவணப்படங்கள் உலக அளவில் உள்ள அரிய இடங்கள்/சுற்றுலாத் தலங்கள் தொடர்பான ஆவணப்படங்கள் (பன்மொழிகளில்) காண்பதற்கு ஏதுவாக 150 நபர்களுக்குமேல் அமர்ந்து பார்க்கும் வண்ணம் குளிரூட்டு வசதியுடன் சுமார் ஒருகோடி ரூபாய் செலவில் ஒளி ஒலி காட்சியகம் (AUDIO VISUAL LIBRARY)வசதியுடன் தமிழக அரசு பொதுப்பணித்துறை மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமின் மூலம் பணிகள் நிறைவு செய்யப்பட்டு 31-12-2015 முதல் பார்வையாளர் களும், மாணவர்களும் கண்டுகளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இந்நூலகத்தில் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மராட்டி மொழிகளிலுள்ள தொன்மை



மின்னுருவாக்கம் (DIGITAL)

வாய்ந்த விலைமதிப்பற்ற அரிய பனை ஓலை மற்றும் காகிதச்சுவடிகளையும், பல மொழிகளில் இங்குள்ள அச்சு நூல்களில் 100 ஆண்டுகளுக்கு முன்பு அச்சிட்டு வெளிவந்த நூல்களையும் அழியாமல் பாதுகாப்பதன் பொருட்டும், சாதாரண மக்கள் முதல் ஆய்வு மாணவர்கள் வரை அனைவரும் எளிதில் கணினியின் உதவியுடன் பார்த்து பயன்படுத்தும் வகையில் ஆவணங்கள் அனைத்தையும் மின்னுருவாக்கம் (DIGITAL) செய்து பாதுகாக்கும் பணிக்காக ரூ. 7.5 லட்சம் நிதியை 2014-15ஆம் ஆண்டுடிற்கான பள்ளிக் கல்வித்துறை மானியக்கோரிக்கை மூலமாக ஒதுக்கீடு செய்து தமிழக அரசு அறிவித்தது. இந்த நிதி அரசாணை எண். 141 பள்ளிக் கல்வித்(பொ.நூ.1) துறை-நாள்: 15-09-2014ன்படி 24-12-2014 அன்று இந்நூலகத்திற்கு வரப்பெற்றது.

இதனடிப்படையில் முறைப்படி குறைவான விலைப்புள்ளி வழங்கிய நிறுவனமான Servenargy It Consultancy, Kolhapur என்ற நிறுவனத்திற்கு மேற்படி பணி செய்வதற்கான பணி ஆணை வழங்கப்பட்டு 13--03-2015ஆம் தேதி முதல் பணி தொடர்ந்து நடைபெற்று-தமிழ்மொழிச் சுவடிகள் 1035 தலைப்புகள், சமஸ்கிருத மொழிச்சுவடிகள் 1637 தலைப்புகள், தெலுங்குமொழிச் சுவடிகள் 906 தலைப்புகள் ஆக கூடுதல் 3578 தலைப்புகள்-2,50,000 பிரேம்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தமிழ் மொழியில் இதுவரை அச்சு நூல்களாக வெளிவந்து தற்பொழுது கிடைக்காமல் அரிய நிலையிலுள்ள நூல்கள் அரிய சுவடிகள் ஆகியவற்றை ஆய்வாளர்களும், மாணவர்களும் பயன்படுத்த ஆவன செய்வதன் பொருட்டு உலகிலுள்ள அரசு மற்றும் தனியார் நூலகங்களுடன் தொடர்புகொண்டு அரிய தகவல்கள் அனைத்தையும் மின்னுருவாக்கம் செய்து சேகரித்து சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகம், கோட்டூர்-ல் தமிழ் இணைய பல்கலைக்கழகம் ஒன்று துவங்கப்பட்டு தற்பொழுத தமிழ் இணைய கல்விக்கழகம் என்ற பெயரில் இயங்கிவரும் அரசு சார்ந்த நிறுவனம் மூலம் வெளிக்கொணர அரசு ஆவன செய்து வருகின்றது.

இதனடிப்படையில் மிகப் பழமையான நூலகங்களுள் ஒன்றான சரசுவதி மகால் நூலகத்திலுள்ள அரிய தமிழ்ச் சுவடிகள் 100 ஆண்டுகளுக்கு முன்பு அச்சாகி வெளிவந்த தமிழ் நூல்கள் ஆகியவற்றை மின்னுருவாக்கம் செய்யும் பணி தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் கல்விப் பணிகள் கழகத்தின் மூலம் 28-11-2015ஆம் தேதி முதல் துவங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை 487 நூல்கள் 1, 02, 247 பிரேம்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்நூலகத்தில் சுமார் 45,000க்கும் மேற்பட்ட தலைப்புகளில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராட்டி ஆகிய மொழிகளில் அரிய பனை ஓலை மற்றும் காகிதச் சுவடிகளும் பல மொழிகளில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களும் உள்ளன. இவை அனைத்தையும் உலகில்




எங்கிருந்து எப்பொழுது பார்த்து பயன்படுத்தும் வண்ணம் தலைப்புகளையும் கணினியில் அனைத்து மொழி அனைத்தும் நிறைவுபெற்று ஆராய்ச்சி மாணவர்கள், விரைவாகவும், வேண்டுமானாலும் கணினி மூலம் மேற்படி அனைத்து பதிவு செய்யும் பணி துவங்கப்பெற்று நூல்களுக்கான பட்டியல் நூலகத்திற்கு வரும் ஆய்வாளர்கள், வாசகர்கள் ஆகிய அனைவரும்




பிரஸ் பிரிண்டர் துவக்கி வைத்தல்

எளிமையாகவும் பயன்படுத்தும் வண்ணம் (KIOSK) தொடுதிரை அமைக்கப் பட்டுள்ளது. பன்மொழி சுவடிகளுக்கான விவர அட்டவணையைப் பதிவு செய்யும்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை மின்னுருவாக்கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வரும் தகவல்களை கணினி மூலம் அனைத்து ஆய்வாளர்களும் மாணவர்களும் பார்ப்பதற்கும், குறிப்புகள் எடுத்துக்கொள்வதற்கும் தேவை எனில் பிரதிகள் பெற்றுக் கொள்வதற்கும் ஏற்ற வகையில் E.Learning Centre, விரைவில் துவங்கப்பட உள்ளது.

இந்நூலகம் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராட்டி ஆகிய மொழிகளில் அரிய சுவடிகளைப் பாதுகாத்து வருகின்றது. இச்சுவடிகளிலுள்ள தகவல்கள் அனைத்தும் ஆய்வாளர்கள், மொழி ஆய்வாளர்கள், வல்லுநர்கள் மற்றும் வாசகர்கள் ஆகிய அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்ற நோக்கத்துடன் நூலகத்திலுள்ள மொழிப் பண்டிதர்கள் மற்றும் துறை சார்ந்த வல்லுநர்களை சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்களாக நியமித்து மேற்படி மொழிச்சுவடிகளை நூல்களாகப் பதிப்பித்து அவற்றை நூல்களாக அச்சிட்டு வெளியிடும் பணியைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றது. இதுவரை 560 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவை பொதுமக்களிடமும் நல்வரவேற்பைப் பெற்றுள்ளதால் பல நூல்கள் மறுபதிப்பைக் கண்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு, வாசகர்களுக்கு நூல்களை விரைந்து தொடர்ந்து வழங்குவதன் பொருட்டு அதிநவீன அச்சு இயந்திரமான டிஜிட்டல் பிரிண்டர் ரூ. 25 லட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு இதன் அச்சுப்பணி 23--1-2016 முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மேலும் கலர் அட்டை, கலர் படங்களுடன் நூல் இங்கேயே அச்சிடும் பணிக்காக ரூ. 2, 20, 000/- மதிப்பில் கலரில் அச்சிடும் எந்திரம் புதிதாக நிறுவப்பெற்று பணிகள் தொடங்கியுள்ளது.

**மகாமகத்தில் நூலகத்தின் பங்களிப்பு**

பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை சிறப்புத் திருவிழாவாக கொண்டாடப்பெறும் புண்ணிய தீர்த்தமாடும் மகாமகப் பொன்னாளாம் இந்நன்னாளில் புண்ணியத்தோடு அதன் மகிமை, வரலாறு, இலக்கியம், சிற்பம் ஆகிய பொருண்மைகளில் அறிவு வேட்கைக்கும், அறிஞர்களுக்கும் அன்பர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் அரிய விருந்து படைக்கும் முகமாக சரசுவதி மகால் நூலகம் மகாமகம் 2016 என்ற கட்டுரைத் தொகுப்பு மலராக வழங்குகின்றது. அனைவரும் இதனைப்பெற்றுப் பயனடைவோமாக.

*****


BUS ROUTE MAP
MAHAMAHAM 2016


CAR & TWO WHEELER PARKING
MAHAMAHAM 2016
CAR PARKING
CONTINGENCY CAR PARKING
TWO WHEELER PARKING


DEVOTEES ENTRY & EXIT ROUTE MAP
MAHAMAHAM 2016
TO CHENNAI
Govt. Hospital
Balaji Nagar


MINI BUS / MAXI CAB ROUTE MAP
MAHAMAHAM 2016
TO CHENNAI
Govt. Hospital
Balaji Nagar



# MAHAMAHAM

## 2016



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

மற்றும் ஆய்வு மையம்

தஞ்சாவூர்